2926

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: 22 NO: 2

April 16th 1986

D
V211,31 N86
N86.22.9.1
136473

96/86

வெளியீடு 9-4-1986]

[Issued 9-4-1986

2926

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 16, 1986 - தொகுதி 22 எண் 2
Wednesday, 16th April 1986 - Volume 22 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George.
Madras - 600009

விலை ரூ. 3-00]

[Price Rs. 3-00

D
V211,31 N86
N86.22.231

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136473
சென்னை-600 008.

உள்ளடக்கம். பக்கங்கள்

16–4–1986

1. வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள். 177—215

2. தகவல் கோரல்—
(அ) மூடியிருக்கின்ற பஞ்சாலைகளைத் திறப்பது குறித்து. 215—216
(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை தொடங்கி இருப்பதற்குப் பாராட்டு. 216
(இ) சத்துணவு மையங்களைச் சோதனையிடுவது. 216—817
(ஈ) தர்மபுரி மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமை. 218—219

3. அறிவிப்பு—
பேரவை அலுவல் 219

4. அறிக்கை அளித்தல்—
112-வது விதியின்கீழ் சட்ட அமைச்சரின் திருத்த அறிக்கை. 219—220

5. கவன ஈர்ப்புகள்—
(அ) முதியோர் உதவித்தொகை வழங்கப்படுவது குறித்து. 220—223
(ஆ) ஒட்டேரி நல்லா கால்வாய் மராமத்து செய்யப்பட வேண்டியது. 223—225

8. வரவு–செலவுத் திட்டம் 1986–87
வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். 226

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் 226—227
301—329
திரு. கி. ராமன் 227—234
திருமதி இரா. சரோஜா 234—237
திரு. ரா. சின்னச்சாமி 237—243
திரு. மு. சந்திரசேகர் 243—246
திரு. அ. ஆறுமுகம் 246—250

| | |
|---|---|
| திரு. எம். செல்லமுத்து | 250—256 |
| திருமதி பி. லட்சுமி | 256—260 |
| திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம் | 260—266 |
| திரு. பொ. உத்திராபதி | 267—275 |
| திரு. சைதை சா. துரைசாமி | 275—281 |
| திரு. கே. உச்சி | 282—285 |
| திரு. ஆர். ஈஸ்வரன் | 285—289 |
| திரு. எஸ். வேணுகோபால் | 289—295 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 295—301 |

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 330


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986 ஏப்ரல் 16, புதன் கிழமை.

சித்திரை 3, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு.

தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு, அவர் ஆராயாமலேயே அச்செயல் தானே நிறைவேறும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### மாநில அரசு அலுவலகங்களில் ஒற்றைக் கோப்பு முறை.

*460—(*வினா எண். 864)* மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் *(பேரவைத் துணைத் தலைவர்)* : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசு அலுவலகங்களின் பணியை துரிதப் படுத்திட ஒற்றைக் கோப்புமுறையை (Single File System) அமல்படுத்த மாநில நிர்வாக சீர்திருத்த கமிஷன் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அப் பரிந்துரை மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) செயலகத் துறைச் செயலாளர்கள், அவரவர்கள் துறைகளில் துறைத் தலைவர்களின் (Heads of Departments) பரிந்துரைகளை எந்தெந்த பொருள்களில் ஒற்றைக் கோப்பு முறையில் பரிசீலனை செய்யலாம் என்று முடிவு செய்து இத் திட்டத்தை அமல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஏற்கனவே, நடைமுறையிலுள்ள திட்டத்தினால் ஏற்படும் அனுபவத்தின் மூலம் இத்திட்டத்தினை மேலும் விரிவு படுத்த அவர்கள் தக்க சமயத்தில் ஆவன செய்வார்கள்.

[1986 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலக அளவில், செயலாளர்கள் மட்டத்தில் இந்த ஒற்றைக் கோப்பு முறையை அமல்படுத்த அனுமதித்துள்ளார்கள் என்கிற விவரங்களை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாவட்ட நிர்வாகத்திலே, தாலுக்கா நிர்வாகத்திலே ஒரே ஒரு பிரச்சனைக்கு பல இடங்களில் கோப்பு இருக்கிற காரணத்தினால் எங்கே காலதாமதம் ஏற்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாமல், அந்த அலுவலகத்திலிருந்து பதில் வரவில்லை, இந்த அலுவலகத்திலிருந்து பதில் வரவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே தாலுக்கா அளவிலும், மாவட்ட அளவிலும் இந்த ஒற்றைக் கோப்பு முறையைப் பயன்படுத்துவதன் மூலம் யாரால் காலதாமதம் ஏற்படுகிறது என்பதைக் கண்டுபிடிக்கிற வாய்ப்பும், விரைவாக கோப்புகளை பைசல் பண்ணுகிற ஒரு வாய்ப்பும் இருக்கிறது. எனவே, தமிழகத்திலே, ஒரு வருவாய் வட்டத்தையோ, அல்லது ஒரு மாவட்டத்தையோ உதாரணமாக எடுத்துக்கொண்டு மாவட்ட அளவிலே எல்லா அலுவலகங்களிலும் இந்த முறையைச் செயல்படுத்த அரசு தீவிர முயற்சிகளை மேற்கொள்ளுமா. என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொல்லியபடி, இந்த அரசு நடவடிக்கைகளையெல்லாம் விரைவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இந்த ஒற்றைக் கோப்பு முறை நடைமுறைப்படுத்தவேண்டுமென்ற ஒரு செயற்குறிப்பு தரப்பட்டது. அதனுடைய அடிப்படையில், செயலாளர் உட்பட பலர் உட்கார்ந்து சிந்தித்து சிலபல முடிவுகளை மேற்கொண்டார்கள். அந்த வகையிலே, அதை நடைமுறைப்படுத்துவதிலே, சென்னையைப் பொறுத்தவரையிலும், தலைமைச் செயலகத்தில், சென்னையில் இருக்கின்ற தலைமைத் துறைகளின் இடங்களில் நடைமுறைப்படுத்துவதிலே அதிகக் கஷ்டம் இல்லை என்றும் வெளியிலேயிருந்து வருகின்ற கோப்புகளை கவனிப்பதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்றும், அந்தச் சிக்கல்களைப் போக்கவேண்டுமென்றும் அவர்கள குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே இதை எல்லா இடங்களிலும், அதனுடைய அனுபவத்தினுடைய அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம், விரைவாகக் கோப்புகளை நகர்த்துவதற்கு வழி வகை செய்யவேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம். இந்த ஒற்றைக் கோப்புமுறை பின்வரும் பொருள்களிலே பொதுவாகப் பின்பற்றப்படுகிறது.

(1) பணியாளர்களுக்கு எல்லா வகை விடுப்புக்கள் வழங்கல்.



1986 ஏப்ரல் 16]

(2) அனுமதி அளிக்கப்பட்ட பணியிடங்களை நீட்டித்தல், நிரந்தரமாக நிறுத்திக் கொள்ள அனுமதி வேண்டல்.

(3) அலுவலகக் கட்டிடங்களுக்கு வாடகைக் கொடுப்பது பற்றி.

(4) பொது வருங்கால சேமநிதி விதிகளைத் தளர்த்தல் சம்பந்தமாக.

(5) அலுவலகங்களுக்குத் தளவாடச் சாமான்கள் வாங்கல், அரசிதழ் மற்றும் புத்தகங்கள், தட்டச்சுப் பொறிகள் வழங்கல், நமுனாக்கள் அச்சிட்டு வழங்கல் சம்பந்தமாக.

(6) ஓய்வுத் தொகை மற்றும் பணிக்கொடை வழங்குவது குறித்து.

(7) அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிமுறைகள். அதாவது பரிசுகள் ஏற்பது, வானொலிப் பேச்சு, நிறுவனங்களுக்குச் செல்வது, பள்ளி ஆய்வாளராக பணி ஏற்பது, வினாத்தாள் தயாரித்தல் சம்பந்தமாக.

(8) அனுமதித் தொகை (லைசன்ஸ்·ஃபீ ) திருப்பி அளித்தல்.

(9) நிலுவைத் தொகை அளித்தல் சம்பந்தமாக.

(10) கூடுதல் பொறுப்புப்படி அளித்தல் சம்பந்தமாக.

(11) பணித் தேர்வில் தேர்ச்சியடையாததால் தகுதிகாண் பருவத்தை நீட்டல் சம்பந்தமாக.

(12) வெளியிடங்களில் பணிபுரிய அனுப்புதல் சம்பந்தமாக,

(13) திருமண முன்பணம் அளித்தல்.

(14) கட்டாயக் காத்திருத்தலை வரை முறைப்படுத்தல்.

(15) வாகனங்களின் செலவினம்.

(16) விருப்ப ஓய்வு அளித்தல் சம்பந்தமாக.

(17) பணம் ஈடுபெற விடுப்பு ஒப்புவிப்பு அளித்தல்.

(18) அடிப்படை விதிகள் 26(பிபி) மற்றும் 26(டி)-ன்கீழ் சான்றிதழ் வழங்குதல்.

(19) தமிழ்நாடு பயண விதிமுறைகளைத் தளர்த்தல் போன்றவைகளிலே இப்போது இந்த ஒற்றைக் கோப்பு முறை பயன்படுத்தப்படவேண்டுமென்ற அளவிற்கு ஆணை இடப் பட்டிருக்கிறது.

இவைகளை மேலும் விரிவாக்க வேண்டும் என்ற எண்ணம்தான் அரசுக்கு இருக்கிறது. நாளடைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தை எடுத்து, அதை நடைமுறை செய்தால் சிக்கல் இல்லாத அளவுக்கு செம்மையாக நடத்துவதற்கு வழிவகை பிறக்குமானால் அதை எடுத்துக்காட்டாக வைத்து மற்ற பல மாவட்டங்களுக்கும் விரிவு படுத்த முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒற்றைக் கோப்பு முறையை அமல் செய்வதால் கோப்புகள் காணாமல் போய்விடுகிற வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தை மட்டும்தான் அதிகாரிகள் சொல்லிக்கொண்டிருக் கிறார்கள் என்று கருதுகிறேன். அவைகளை எளிதில் தவிர்ப் பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல், ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டு, மராட்டிய மாநிலத்தில் அகமது நகர் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த Tottenham system த்தை ஒழித்து விட்டு Lakn[illegible]n Pie[illegible]nயைக் கண்டு பிடித்து ஆண்டர்சன் ஆடுகட்டு முறை என்று கொண்டுவந்து எப்படி தஸ்தாவேஜுகளை வைக்க வேண்டும் என்றும் இந்த கோப்பு முறையை மாற்ற வேண்டும் என்றும் அந்த மாவட்டத்தில் அமல் செய்து, பி[illegible] நம் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் சொல்லப்படுகி[illegible]ற சிகப்பு நாடா முறை அங்கே ஒழிக்கப்பட்டு இருக்கிறது என்றும் அலுவலகங்களில் சொல்லப்படுகிற ஒரு சில லஞ்சம் என்பது கூட முழுமையாக ஒழிக்கப்பட்டிருக்கிறது என்றும் அகமது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தனியார் நிறுவனங்கள்' தேசியமயமாக்கப்பட்ட வங்கியின் ஊழியர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள் என்றும் அங்கே, சென்று வந்தவர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே நிர்வாக சீர்திருத் தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் இந்த மாநிலத் திலிருந்து சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அனுப்பி அது எப்படி செயல்படுகிறது, அதை எப்படி இங்கே செயல்படுத்த முடியும் என்று பயிற்சி பெறுவதற்கு அரசு பரிசீலிக்குமா? அதேபோல் அதிகாரிகள் ஒரு குழுவாகவும், இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து —மராட்டிய மாநிலத்தில் ஒரு ஆண்டு காலமாக அது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்திய நாட்டு பிரதமர் அவர்கள்கூட





அங்கு பாராட்டியிருக்கிறார்கள்—அனுப்புவதற்கு இந்த கோப்பு முறை அங்கே எப்படி செயல்படுகிறது, அதை இங்கே எப்படி செயல்படுத்த முடியும் என்று பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்கித் தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மராட்டிய மாநிலத்தில் அகமது மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிர்வாக சீர்திருத்த முறை கடைப் பிடிக்கப்பட்டு வருகிற செய்தி தெரிய வந்திருக்கிறது. அது பற்றி ஏற்கனவே பரிசீலனைச் செய்யப்பட்டு இருக்கிறது. அங்கே போய் அதை சில அதிகாரிகள் பார்த்து விட்டு வந்ததாக எனக்கு நினைவு. ஆனால் அதைப் பற்றிய முழு விவரமான குறிப்புகள் இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அது ஏற்கனவே பல ஆண்டு காலமாக, பல நூற்றாண்டு கால மாக வெள்ளைக்காரன் நிர்வாக வசதியை ஒட்டி, நாட்டின் சூழ்நிலையை ஒட்டி, மக்கள் மனப்போக்கை பழக்க வழக்கங் களை ஒட்டி சில பல திட்டவட்டமான நடைமுறை, விதிமுறை களை எல்லாம் அவர்கள் வகுத்துக்கொண்டு நடத்திக் கொண்டு வந்தார்கள். காலம் செல்லச் செல்ல இப்போது பொதுமக்க ளுடைய விருப்பம், அவர்களுடைய வேண்டுகோள்களை நிறை வேற்றி வைக்கின்ற முறைகள் மற்றவைகள் மாறி வருகின்ற காலத்தில் இந்த நிர்வாகத்தை சீர்படுத்துவது இன்றி யமையாததாக ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் சொல்லுவது போன்று அகமது நகர் முறை நம்முடைய மாநிலத்திற்கு ஏற்ற தாக அமையுமானால் இப்போது இருக்கின்ற முறையை விட அது சீரிய முறையாக, சிறந்த முறையாக அமையுமானால், அதனைப்பின் பற்றி தமிழகத்தைப் பொறுத்தவரையில் நடை முறைப்படுத்தலாமா என்பதைப் பற்றி பார்க்கலாம். முதலிலே அவர்கள் சொல்லிய மாதிரி இதுவரையில் அங்கே அதிகாரிகள் அனுப்பப்பட்டு நிலைமைகள் கண்டறியப்படாமல் இருக்கு மானால் குறிப்பிட்ட நிர்வாகத்தை நன்கு அறிந்த தெரிந்த அதிகாரிகளை அனுப்பிவைத்து அவர்கள் எல்லாம் அந்த முறை களை ஆராய்ந்து தெரிந்து வந்ததற்குப் பிறகு இங்கே நடை முறைப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள லாம். அவையெல்லாம் நடந்து முடிந்தபிறகு வேண்டுமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவை அங்கே அனுப்பிவைக்கலாம்.

(முற்பகல் 9-10)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒற்றைக் கோப்பு முறை அமல்படுத்தப்பட்டாலும் கோப்புகள் தாமதம் ஆவதற்கு மிக முக்கியமான காரணம் என்ன என்றால் அதிகாரிகள், ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு கோப்புகள் அனுப்புகிறபோது கொரிஸ் என்ற முறையிலே ஒரே பொருள் சம்பந்தப்பட்ட கொரிகளை 7, 8 தடவைகள்

போட்டு அனுப்புகிறார்கள். அதனாலேதான் அதிகமான காலதாமதம் ஆகிறது என்ற நிலை இருக்கிறது. ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கோ ஒரே துறையிலே இன்னொரு செக்ஷனுக்கோ கோப்புகளை அனுப்புகிறபோது எத்தனை சந்தேகங்கள் இருந்தாலும் அதை ஒரே தடவையில் போட்டு அனுப்புகிற முறையை துறைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற அறிவுரையை அமைச்சர் அவர்கள் துறைகளுக்கு அளிப்பார்களா? அதோடு ஒரு கோப்பு மேலதிகாரிகளுக்கு அனுப்பப்படுகிறபோது அந்த அதிகாரிகள் 'ஸ்பீக்' என்று போட்டு தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். பிறகு 4, 5 நாட்கள் வைத்திருந்துவிட்டு 'ஸ்போக்கன்' என்று போட்டு அனுப்புகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட முறைகளினாலே ஏற்படுகிற காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக தகுந்த அறிவுரைகளை வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோப்புகள் நகர்வதிலே அதைப் பற்றிய முடிவுகளை எடுப்பதிலே காலத் தாழ்வு ஏற்படக்கூடாது என்பதிலே அரசு அக்கறையாக இருந்து வருகிறது. தலைமைச் செயலகத்திலேயும் பிற துறைகளிலேயும் கோப்புகள் இன்னின்னார்களிடம் இவ்வளவு காலம்தான் தங்கலாம் என்ற நடைமுறைகள் விதிகள் ஏற்கனெவே வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அந்தக் காலத்திற்குள்ளாக கோப்புகளை நகர்த்தி காலத் தாழ்வு ஏற்படாத வகையிலே அவைகளின்மீது முடிவுகளை எடுப்பதற்கான அளவுக்கு அதிகாரிகளும் அலுவலர்களும் செயல்பட வேண்டும் என்பதுதான் அரசினுடைய முக்கியமான குறிக்கோளாகும். ஆனால் சிலபல நேரங்களிலே சில கோப்புகளிலே வருகிற பொருள்கள் பற்றியெல்லாம் விளக்கங்கள் பெறுகிற அளவுக்கு என்று திருப்பியனுப்புகிற அவசியம் ஏற்படத்தான் செய்யும். சில இடங்களில் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற மாதிரி கொரிஸ் என்று முறையிலே போட்டு விளக்கங்களைப் பெற்றால்தான் சிலபல முடிவுகளை எடுப்பதற்கான வாய்ப்பைப் பெறமுடியும் என்ற நிலை ஏற்படுகிறது. சில சமயங்களிலே தங்களுக்குப் பாதகமாக இருக்கிற கருத்துக்களையும் மற்றவைகளையும் கோப்புகளிலே காட்டாமல் விட்டுவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களிலே, 'இன் பிட்வீன் திலைன்ஸ்' என்ற முறையிலே நாம் தான் என்ன காட்டாமல் விடப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு பிடித்துக் கேட்கிற நிலைமை ஏற்படுகிறது. உதாரணத்திற்காக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு அதிகாரி வெளிநாட்டிற்குச் செல்வதற்கான கோப்பு வருகிறபோது ஏற்கெனவே அந்த அதிகாரி வெளிநாட்டிற்கு படிப்புக்கோ அல்லது வேறு வகையிலோ சென்றிருப்பார். அப்படி அவர் சென்றிருந்தால் அவரை விட்டு விட்டு வேறு ஒருவரை அனுப்ப வேண்டுமென்ற முறை இருக்கிறது. ஆனால் ஏற்கெனவே சென்றதைப்பற்றி கோப்பிலே சொல்லாமல் இவரையே அனுப்பலாம் என்று வரும்போது நமக்கு ஒரு சந்தேகம் வருகிறது. ஏற்கெனவே அவர் வெளிநாட்டிற்குப் போனாரா, எத்தனை தடவைகள் போனார் என்று நாம் கேட்டதற்குப் பிறகு அவர்கள் உண்மையை எழுதி அனுப்புகிறார்கள். ஏற்கெனவே அவர் 2 தடவை ஜப்பானுக்கும் பிரிட்டனுக்கும் போய் இருக்கிறார் என்று வருகிறது. அதற்குப் பிறகு அதை வைத்துக் கொண்டு அவர் வேண்டாம் வேறு ஒருவரைத் தேர்ந்து எடுக்க வேண்டுமென்ற அவசியம் ஏற்படுகிறது. உதாரணத்திற்காகத் தான் நான் இதைச் சொன்னேன். கொரிஸ் இல்லாமல் முடியாது. சில பல விவரங்களைச் சொல்லாமல் இருக்கிற நிலை கீழ் மட்டங்களிலும் நடு மட்டங்களிலும் இருக்கிறது. விரைவாக கோப்புகள் நகரவேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். தேவையற்ற தன்மைகளில் காலத்தாழ்வு ஏற்படக்கூடாது, அப்படி ஏற்பட்டால் அதன் காரணமாக பணிகளும் கெடுகின்றன, செலவுகளும் மிகுதியாகின்றன. எனவே இந்தக் காரியத்திலே அரசு முனைப்புள்ளத்தோடு செயல்பட்டு வருகிறது.



நெல்லை மாவட்ட தாலுக்காக்களை உட்பிரிவு செய்தல்.

461—(*வினா எண் 5037) திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் உள்ள தாலுக்காக்களை உட்பிரிவு செய்யும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) கடையநல்லூர் பகுதியினை தனித் தாலுக்காவாக அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

விளவங்கோடு தாலுக்காவைப் பிரித்தமைத்தல்.

462—(*வினா எண். 5701) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள விளவங்கோடு தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், புதிதாக உருவாகும் தாலுக்காவிற்கு என்ன பெயர் சூட்டப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

[1986 ஏப்ரல் 16

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே விளவங்கோடு தாலுக்காவையும் கல்குளம் தாலுக்காவையும் இரண்டாகப் பிரிக்கப்படுவதாகப் பேசப்படுகிறதே, அதுசம்பந்தமான விவரங்களை இந்த அவைக்கு அறிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே கல்குளம், விளவங்கோடு வட்டங்களைப் பிரித்து இரணியல் வட்டம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. புதிய இரணியல் வட்டத்திற்கு கல்குளம் வட்டத்திலிருந்து 12 கிராமங்களும் விளவங்கோடு வட்டத்திலிருந்து 5 கிராமங்களும் இணைக்கப்படும் என்றும் இரணியல் அதனுடைய தலைமை இடமாக இயங்கும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குளச்சல், மண்டைக்காடு பகுதிகளிலே சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளைக் கருதியும் இரணியல் நகரத்தின் வரலாற்று முக்கியத்துவம், நிர்வாகம் வணிக வசதிகளை முன்னிட்டும் இரணியல் வட்டத்தை உருவாக்குவது இன்றியமையாதது என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துத் தெரிவித்தார்கள். 1986–87 ஆம் ஆண்டு 2 ஆம் பகுதித் திட்டத்தின் கீழ் செயல்படுத்த வருவாய் நிர்வாக ஆணையர் கருத்துருவை அரசுக்கு அனுப்பியிருக்கிறார். அரசு அந்தக் கருத்தை இப்போது பரிசீலனை செய்து வருகிறது.

### உதகை வட்டத்தைப் பிரித்தமைத்தல் ..

463—(*வினா எண். 5959) திரு. கே. உச்சி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகை வட்டத்தை உதகை-குந்தா வட்டங்களாகப் பிரிக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்பு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் வருவாய் பின்தொடர் பணிகள் முடிவடைந்ததும் இச்செயற்குறிப்பை புதுப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறா



1986 ஏப்ரல் 16]

திரு. கே. உச்சி : பேரவைத் தலைவர் அவர்களே, உதகை வட்டத்தை உதகை வட்டம் என்றும், குந்தா வட்டம் என்றும் பிரிக்க வேண்டுமென்று நீண்ட நாட்களுக்கு முன்பிருந்தே கோரிக்கை விடப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கோரிக்கையைச் செயல்படுத்துவதிலே சற்றுக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இப்பொழுதாவது அதைத் துரிதமாகச் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதையும், அது எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும் என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் உதகை வட்டத்தை, உதகை மற்றும் குந்தா வட்டங்களாகப் பிரிக்கக் கோரும் முன்மொழிவு நீலகிரி மாவட்ட ஆட்சியரால் முதலில் முன்னாள் வருவாய் வாரியத்திற்கு அனுப்பப்பட்டது. முன்னாள் வருவாய் வாரியம் பரிந்துரைத்ததன்பேரில் அச்செயற்குறிப்பினை நீலகிரி மாவட்டத்தில் மறு நில அளவை அமுலுக்குப்பின் அனுப்பிவைக்குமாறு அரசு கேட்டுக்கொண்டது. ஆனால் தற்போது மறு நில அளவைக்குப் பதிலாக, வருவாய் பின் தொடர்பணிகள் நடைபெற்று வருகின்றமையாலும், இப்பணிகள் 1986 ஏப்ரல் திங்களில் முடிவுறும் என நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் தெரிவித்திருக்கிறார்கள். இச்செயற்குறிப்பை ஜூன் 1986-க்குப்பின் புதுப்பிக்கும்படி, நீலகிரி மாவட்ட ஆட்சியரை வருவாய் நிருவாக ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். எனவே 1986 ஜூனுக்குப் பிறகு அந்தச் செயற்குறிப்பு வந்ததற்குப் பிறகு அரசு பரிசீலித்து தக்க முடிவெடுக்கும்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இரண்டு வினாக்களைத் தொடுத்துள்ளேன். கூடலூர் வட்டத்தைப் பொறுத்தவரையில், கூடலூர் வட்டம் என்றும், பந்தலூர் வட்டம் என்றும் பிரிக்க வேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, பந்தலூர் வட்டம் என்றும், கூடலூர் வட்டம் என்றும் இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு முன் வருமா அதற்கான தேதியை உடனடியாக அரசு அறிவிக்க முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய நோக்கம் அதுவாக இருந்தால், கேள்வியிலேயே அதையும் சேர்த்திருக்க வேண்டும். அதிலேயே அவர்கள் அதையும், குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் கேள்வியிலே கேட்டது, '' நீலகிரி மாவட்டம் உதகை வட்டத்தை உதகை-குந்தா வட்டங்களாகப் பிரிக்கக்கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து குறிப்பு ஏதேனும் வந்துள்ளதா ? ' என்று. அதற்கான காரணங்களைச் சொன்னேன். மீண்டும்

பரிசீலிப்போம் என்றும் சொன்னேன். கூடலூர் வட்டத்தைப் பிரிப்பதைப்பற்றி கேள்வி வரவில்லை. ஆகவே, அதுபற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதன் நிலைமைகளை அறிந்து எடுத்துச் சொல்லலாம். கூடலூர் வருவாய்க் கோட்டமாக இருக்கிறது: கூனூர் வருவாய்க் கோட்டமாக இருக்கிறது. கூடலூர் வருவாய்க் கோட்டத்தில் ஒரு வட்டம் இருக்கிறது—கூடலூர் வட்டம் என்று. கூனூர் வருவாய்க் கோட்டத்தில் உதகமண்டலம், கூனூர் கோத்தகிரி என்று மூன்று வட்டங்கள் இருக்கின்றன. எனவே, கூடலூர் பற்றித் தனிக் கேள்வி போட்டால் அதன் நிலைமைகளை அறிந்து சொல்லலாம்.

**வேலை வாய்ப்பு அலுவலகங்களின் மூலம் காலி இடங்களை நிரப்புதல்**

கு. கா. வி. எண். 4—

*வினா எண். 8896—திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு துறைகளுக்கு வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் வேலைக்கு எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஊனமுற்றோர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) அரசுத் துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிகளுக்கு மட்டும் தற்காலிகமாக வேலை வாய்ப்பகம் மூலம் பணி நியமனம் செய்தல் 25—6—1984 முதல் நிறுத்தப்பட்டது. சுருக்கெழுத்துத் தட்டச்சர்களைப் பொறுத்தவரையில் தேர்வாணையத்தில் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பட்டியலில் தகுதி வாய்ந்த நபர்கள் இல்லாததால், வேலை வாய்ப்பகம் மூலம் தற்காலிக நியமனம் செய்ய 7—3—1986-லிருந்து மீண்டும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) தற்காலிக நியமனத்தைத் தவிர்க்க வேண்டும் என்பது அரசின் கொள்கை என்பதால் ஊனமுற்றோர்க்கு விதி விலக்கு அளிப்பதற்கில்லை.



**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி வாய்ந்த பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தட்டச்சர்களை நியமிப்பதில் ஆட்கள் எடுக்கப்படவில்லை என்ற விவரத்தைச் சொன்னார்கள். நான் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, உடல் ஊனமுற்ற அந்தத் தோழர்களுக்கு—உதாரணமாக கண்பார்வை இழந்தவர்கள், செவி இழந்தவர்கள் போன்றவர்கள் உடல் ஊனமுற்றோர் பட்டியலில் இருந்தாலும், தகுதி வாய்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு இந்த நிரந்தரப் பணிகளில் வேலை வாய்ப்புகள் கொடுக்கப்படுவதில்லை. அவர்களை அந்த வேலைகளில் நிரந்தரமாக்குகின்ற செயற் குறிப்பு இப்பொழுது இல்லை என்றாலும் இனிமேலாவது அந்த வாய்ப்பை ஏற்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசுத் துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் போன்ற பதவிகளைத் தேர்வாணைக் குழு மூலம்தான் நாம் நிரப்பிக் கொண்டு வருகிறோம். தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத்து பட்டியலை வைத்துக் கொண்டிருக்கிறது. நமக்குத் தேவைப்படுகின்ற பொழுதெல்லாம் அந்தப் பட்டியலிலிருந்து எடுத்து நிரப்பிக் கொண்டு வருகிறோம். அந்தப் பட்டியல் தீர்ந்து விடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு, நமக்குப் பணியாளர்கள் நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது, வேலை வாய்ப்புத் துறையிலிருந்து அவர்களை நாம் நியமிக்கிறோம், தற்காலிகமாகத் தான். மறுபடியும் தேர்வாணைக் குழு இதற்கென்று ஒரு தேர்வு நடத்தி, தேர்ந்தெடுக்கிற சூழ்நிலை வந்தால், அந்தத் தற்காலிக மாணவர்களும் முறைப்படி விண்ணப்பித்துக் கொள்ளலாம். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் மறுபடியும் வருவார்கள். தேர்வாணைக் குழு தேர்ந்தெடுத்தோர் பட்டியலிலிருந்து முறைப்படி நாம் நியமித்துக் கொண்டு வரமுடியுமே தவிர, தற்காலிகமாக நியமிக்கப்படுபவர்கள் வேலையை இழக்கும்படியான ஒரு சூழ்நிலைதான் ஏற்படும். இந்தத் தட்டச்சர் சுருக்கெழுத்தர் வேலைகளுக்கெல்லாம் திறமையை முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

ஏற்கனவே, ஊனம் உள்ளவர்களுக்கென்று சில பல சலுகைகளும் மற்றவைகளும் தரப்பட்டிருக்கின்றன. திறமைகள் எல்லாம் இருந்து, அவர்களுக்கென்று தனியாக, வயது அதிகமாகவோ, வேறு குறைபாடுகளோ இருக்குமானால், அதைத் தளர்த்துவதற்குத் தேர்வாணைக் குழு சில பல விதிமுறைகளை

வைத்திருக்கிறது. அப்படிப்பட்ட சலுகைகளைத் தரலாமே தவிர, முன்னுரிமையை ஊனமுற்றோர் என்றவுடனேயே அவர்களுக்குத் தந்து விடவேண்டுமென்ற விதி பொருந்தாது. அவர்களுக்கென்று சில பல சலுகைகள் இருக்கின்றன. தட்டச்சர் என்பது திறமையின் அடிப்படையிலே இருப்பது. சுருக்கெழுத்தரையும் நாம் திறமையின் அடிப்படையிலே வைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, ஊனமுற்றவர்களுக்கென்று இருக்கிற தனிச் சலுகைகளை மட்டும் தான் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள இயலும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் பெற விரும்பியது, இந்தப் பார்வை இழந்தோர், செவி கேளாதோர் போன்ற உடல் ஊனமுற்றவர்கள் அரசுப் பணிகளில் பெரும் அளவு நியமிக்கப்படுவதில்லை. ஆகவே, அவர்களை தகுதி வாய்ந்த, உரிய இடங்களில் நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத்தான் முதல் கேள்வியில் கேட்டிருந்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நடவடிக்கை இல்லை என்றாலும், பார்வை இழந்தோரும், செவி கேளாதோரும், உடல் ஊனமுற்றோர் பட்டியலில் இருந்தாலும், அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்பு வழங்கப்படாததைக் கவனித்து, அவர்களுக்குத் தகுதியிருப்பின் அந்த அடிப்படையில் வழங்குகின்ற நடவடிக்கையை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர், கண் பார்வையற்றோர், போன்றவர்களுக்கு எவ்வளவு பர்சன்டேஜ் எல்லா இடங்களிலும் ஒதுக்க வேண்டுமென்று விதிமுறைகள் இல்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பழங்குடியினருக்கு 18 சதவீதம் ஒதுக்க வேண்டுமென்று இருக்கிறது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவீதம் ஒதுக்க வேண்டுமென்று இருக்கிறது. அந்த வகையிலே, உடல் ஊனமுற்றவர்களுக்கு இடங்கள் ஒதுக்குவது என்பது இயலாது. ஆகவே, பார்வையற்றோர், மற்றவர்கள், திறமை பெற்று, தேர்வாணைக் குழுவின் மூலமாக விண்ணப்பித்துக் கொள்ளும் பொழுது அவர்களுக்கென்று சில பல சலுகைகள் இருக்கின்றன. சலுகைகளின் அடிப்படையில், திறமையை அடிப்படையாக வைத்து, தேர்வாணைக் குழு தேர்ந்தெடுக்கும். தேர்ந்தெடுக்கின்றவர்களை அரசு நியமிக்கும். அதைப் போன்று வேலை வாய்ப்பகத்திலேயிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கலாம் என்ற நிலைமை வந்து, அப்படித் தற்காலிகமாக நியமிக்கும்போது, அவர்களுக்கு உரிய திறமைகள் மற்றவைகள் இருக்குமானால், உடல் ஊனமுற்றவர்கள், கண்பார்வை இழந்தவர்கள், காதுகேளாதவர்





களைச் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை. அப்படிப் பட்டவர்களுக்குத் திறமையும் அதற்கான தகுதியும் இருக்குமானால் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தரும்போது, தட்டச்சர் போன்றவர்களுக்குத் திறமை, தகுதி அடிப்படை என்றார். ஆனால், பொறியாளர், மருத்துவர் போன்ற பதவிகளுக்குக் கூட, இட ஒதுக்கீடு செய்து, அதன்படி காலி இடங்களைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில், இத்தகைய தட்டச்சர் நியமனங்களுக்கு உடல் ஊனமுற்றோர்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதைப் பற்றி அரசு பரிசீலிக்குமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி முழு விவரக் குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. பொறியியல் துறை, மருத்துவத் துறை மற்றவைகளிலே கூட, உடல் ஊனமுற்றவர்களுக்கென்று ஒரு சில இடங்கள் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அது போன்று தமிழ் பயின்றவர்களுக்கு. தமிழ் பரம்பரையிலிருந்து வந்தவர்களுக்குச் சில இடங்கள் இருக்கின்றன. இரண்டு இடமோ, மூன்று இடமோ ஒதுக்கி வைத்திருக்கிறார்கள், விழுக்காடு கணக்கில் இல்லை. நான் முதலில் சொல்லியபடி, தாழ்த்தப்பட்டோருக்கு அல்லது பிற்படுத்தப்பட்டோருக்கு உரிய முறையில் இல்லை. அவர்களுக்கென்று சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போன்று வெளி நாடுகளில் இருக்கிற தமிழர்களுக்கு என்று சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே உடல் ஊனமுற்றவர்களுக்கு இருப்பதாக எனக்கு நினைவு. தனிக் கேள்வி போட்டால் விளக்கிச் சொல்லலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பில் சலுகை அளிப்பது போல் வரதட்சணைக் கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு, கணவனால் கைவிடப்பட்ட நிராதரவான பெண்களுக்கு சலுகைகள் அளிப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கென்று ஒரு திட்டவட்டமான, தெளிவான சட்ட முறைகளை நாம் வைத்துக்கொண்டிருக்க முடியாது. ஆனால் அவ்வப்போது அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் அவர்கள் ஒரு இரங்கத்தக்க நிலையில் இருந்து அவர்களுக்கு திறமை, தகுதி எல்லாம் இருந்து வேலை பார்த்தால் தான் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற சூழ்நிலை ஏற்படும்போது அவர்களுக்கு, பொது ரெம்ப சில நேரங்களில் கல்வித் தகுதி மற்றவைகளில் சலுகை தந்து ஒரு தனி

நேர்வாகக் கருதி அரசாங்கம் அவர்களை எடுத்துக் கொள்கிறது. அந்த வகையில் திடீரென்று ஒரு அரசு அலுவலர் இறந்து விட்டால் அந்த விதவை தவிக்கிற நிலையில் அந்த விதவையின் நிலை, அல்லது அந்த வீட்டில் யாருமே சம்பாதிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு ஒருவர் படித்திருந்து வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பாரேயானால் அப்படிப்பட்டவர்க்கு தனி நேர்வாகக் கருதிச் செய்கிறோம். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்ற நிலைமைகளில் தனி நேர்வாகக் கருதலாம். இதற்கு என்று திட்டவட்டமாக சட்டங்களை நாம் இயற்ற இயலாது.

**திரு. கூடலூர் இ. வி. வேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாவினுடைய பெயரால் ஆட்சி அமைத்திருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் அரசில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு தங்கப்பதக்கம் அளிப்பது போல் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன் உரிமை அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கு ஊக்கம் தருகிற முறையில் அவர்களுக்கு பெரும் தொகை தருவதும், தனி பாண்டாகத் தருவதும் ஏழு ஆண்டுக் காலத்தில் அதை இரட்டிப்பாக்கித் தருவதும், திருமணச் செலவுக்கு ரூ. 300 தருவதும், வேட்டி புடவை தருவதும், தங்கப்பதக்கம் தருவதும் என்றிருக்கிறது. அவர்கள் பெற்றெடுத்தவர்களுக்கெல்லாம் சலுகை தருவது என்று சொன்னால் கணக்கு வழக்கு இல்லாமல் பெற்றெடுப்பதற்கு அவர்கள் முயற்சி செய்து விடுவார்கள். ஆகவே அதில் எல்லாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே சில குறிப்பிட்ட கொள்கைகளை நிறைவேற்றுகிறவர்களுக்கு, ஒரு சமுதாயத்தில் இருக்கிற பிற்போக்குத் தன்மையை மாற்றுகிறவர்களுக்கு, முயற்சி செய்கிறவர்களுக்கு ஊக்கம் தருவதற்காக இதை வைத்துக் கொண்டிருக்கிறோமே தவிர பரம்பரை பரம்பரையாக வருகிறவர்களுக்கு தருவது என்று வைத்து விட்டால் மற்றவர்கள் யாரும் எந்த இடத்தையும் பெற முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

### ஆவடி நகரியப் பகுதிகளில் குடிநீர் வழங்கல்.

464—(*வினா எண். 4889)—**திரு. ஜி. ஆனந்தகிருஷ்ணா :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி நகரியத்தில் குடிநீர்க் குழாய்கள் மூலம் மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?



(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) மற்றும் (ஆ); ஆம். ஆவடி நகரியத்திற்கு குடிநீர் வழங்க ரூபாய் 47.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றுக்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டு அத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஆவடி நகரியத்தில் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை கூட தண்ணீர் வருவதில்லை. புழலேரியிலிருந்து எவ்வளவு தண்ணீர் அந்த நகரியத்திற்கு கொடுக்கப்படுகிறது ? புதிதாக அமைக்கப்படுகிற திட்டத்தில் எவ்வளவு தண்ணீர் அந்த நகரியத்திற்கு கொடுக்கப்படும் ? இன்று அந்த நகரியத்தில் பாதுகாப்புத் துறைக்கும் தனியார் நிறுவனமான ட்யூப் ப்ராடக்ட்ஸ்க்கும் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. இந்த ட்யூப் ப்ராடக்ட்ஸ்க்கு தண்ணீர் கொடுக்கப்படும் உரிமை—அந்த கான்ட்ராக்ட் முடிவு அடைந்ததாகச் சொல்கிறார்கள். அது முடிவடைந்துவிட்டதா ? அந்தத் தண்ணீரை மக்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ? அந்தக் கான்ட்ராக்டை மீண்டும் ரென்யூ செய்யாமல் அந்தத் தண்ணீரை மக்களுக்குக் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆவடி நகரியத்திற்கு சூரப்பேட்டை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் காலன் வீதம் குடிதண்ணீர் எடுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. புதிதாகப் போட்டிருக்கிற மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு ஐந்து இலட்சம் காலன் தண்ணீர் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த நீரை நீரேற்றுக் குழாய்கள் மூலம் முறையே மூன்று இலட்சம் லிட்டர் மற்றும் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த் தேக்கத் தொட்டிகளில் ஏற்றி அவைகளின் மூலம் 400 பொதுக் குழாய்கள் மூலம் மக்களுக்கு குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பதிவு செய்யப்பட்டுவிட்டன. பணி ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. திட்டப் பணிகள் 1986 டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பாதுகாப்புத் துறைக்கும் ஒரு தனியார் நிறுவனத்திற்கும் தண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். மக்களுக்கு தண்ணீர் கிடைக்காத நிலையில் இந்தத் தனியார் நிறுவனத்திற்கு தண்ணீர் வழங்குவது நியாயமா ? அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கான்ட்ராக்ட் முடிவடைந்து விட்ட

தாகச் சொல்கிறார்கள். அதை மீண்டும் நீட்டிக்காமல் இருப்பார்களா ? இன்று பல சிறு சிறு கிராமங்கள் இருக்கின்றன. இந்த புதுத் திட்டத்தின் கீழ் அந்தக் கிராமங்களுக்கு தண்ணீர் எடுத்துச் செல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா ? அல்லது அந்தக் கிராமங்களுக்கு மாற்றுத் திட்டம் ஏதாவது இருக்கிறதா ? இந்த இரண்டு கேள்விகளுக்கும் சேர்த்து அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு தண்ணீர் வழங்குவதுதான் முக்கியமானது, முதன்மையானது. அதற்காக அங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற அந்த நிறுவனத்திற்கு நாம் தண்ணீர் வழங்காவிட்டால் அதுவும் சரியல்ல. முறையும் அல்ல. அந்த வகையில் அவைகளை முறைப்படுத்தி, வகைப்படுத்தி குடிநீர் சீராக விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

**சைதாப்பேட்டையில் மேடான பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல்.**

465—(*வினா எண். 3776) : **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை தொகுதியில் மேடான பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறையினை போக்க தண்ணீர் அழுத்தம் அதிகரிக்கும் நிலையம் (பூஸ்டர்) அமைக்கும் பணி அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-30)

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டுவரை 146-வது வட்டத்தில் வி. வி. கோவில் தெரு, காந்தி பூங்கா, கொத்தவால்சாவடி தெரு, துரைசாமி நாயகர் தெரு, ராமானுஜம் தெரு, ராமபுரம், ராமசாமி தெரு, போன்ற பகுதிகள் எல்லாம் மேடான பகுதிகள். அங்கே பூஸ்டர் வைத்து, தண்ணீர் வழங்கிக் கொண்டிருந்தார்கள். அது இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது. எனவே, அந்த பூஸ்டர் முறையை மீண்டும் கொண்டுவர சாத்தியக்கூறு இல்லையென்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிலே நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதிகளுக்கு தண்ணீர்





வழங்க ஏற்பாடு செய்வார்களா ? அதேபோல், ஜாபர்கான் பேட்டை, கங்கையம்மன் கோவில் தெரு, ஜோன்ஸ் ரோடு போன்ற மேடான பகுதிகளில், கோடை காலத்தில் மட்டுமல்ல, மற்ற நேரங்களிலும் தண்ணீர் சரியாக வருவதில்லை. அதை கவனத்தில்கொண்டு, பூஸ்டர் முறையைக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, பூஸ்டரை அமைத்து அழுத்தத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம் நன்மையை விட தீமையே அதிகம் விளையும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அழுத்தத்தை அதிகரிப்பதினால், பாதகம் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்கூட நிறுத்தப்பட்டிருக்கக் கூடும். இருந்தாலும் மேட்டுப் பகுதிகளுக்கு குடிநீர்த் தொட்டிகள் மூலமாகவும், மற்றப் பகுதிகளிலுள்ள தேவைகளுக்கு இந்தியா மார்க பம்ப் மூலமாகவும் வாரியம் தண்ணீர் வழங்கி வருகிறது. தொடர்ந்து குடிநீர் பற்றாக்குறை இருக்கின்ற பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க உரிய முயற்சிகள் எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூஸ்டர் முறை பயனளிக்கவில்லை என்றால் ஏதாவது மாற்று முறையில் குழாய்களை ஆழப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? சென்னை மாநகரத்தில் வீடுகளுக்கெல்லாம் மீட்டர் உபயோகப்படுத்துகின்ற முறையை வைத்திருக்கிறார்கள். ஆனால், இந்த முறை, ஒரே தெருவில் 10 வீடுகளுக்கு மீட்டர் இருக்கிறது ; மற்ற வீடுகளுக்கு இந்த மீட்டர்கள் இல்லை. இந்த முறை கொண்டு வரப்பட்டதன் நோக்கமே தண்ணீரை வீணாக்கக் கூடாது என்பதுதான். ஆனால் இவைகளை இல்லங்களில் வைப்பதினால் பலன் இல்லை என்பதால், ஓட்டல்களிலும், மற்ற நிறுவனங்களிலும் வைத்து, இல்லங்களுக்கு வைத்திருக்கும் மீட்டர் முறையை ரத்துசெய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கின்ற இரண்டு கருத்துக்களைப்பற்றியும் வாரியம் ஆராயும்.

**திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்திலும் மேட்டுப் பகுதிகளில் குடிநீர் செல்வதில்லை. அதனால், அங்குள்ள மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். இந்த பூஸ்டர் முறை சரியில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருதினால், வேறு முறைகள்

மூலமாவது இந்த வறட்சிக் காலத்தில் தண்ணீர் வழங்க உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டைக்கு அருகிலுள்ள ஆதம்பாக்கம் செகரடேரியட் காலனி, பெரியார் நகர் போன்ற பகுதிகளில் தண்ணீர் வராததால், அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள். இதை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில், ஏதாவது நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

### பட்டுக்கோட்டையில் தென்னை சார்புத் தொழில்.

466—(*வினா எண் 4758) **திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் ரூபாய் 10 கோடி செலவில் தென்னை சார்பு தொழில் தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு அடமில்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு பட்டுக்கோட்டையில் வணிக வரித்துறை அமைச்சர், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர், ஊரகத் தொழில் துறை அமைச்சர், அரசு கொறடா, மூன்று செயலாளர்கள் ஒரு விழாவிற்கு வந்திருந்தார்கள். இரண்டு நாட்கள் கருத்தரங்கு நடந்தது. அதன் அடிப்படையில் 10 கோடி ரூபாய் செலவில் தொழில் துவங்குவதற்கு ஒரு செயற் குறிப்பை அரசிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்து அனுப்பியிருந்தார்கள். நான் தொழில் துறையிரா கேட்டிருந்த கேள்வி, எப்படியோ வேளாண்மைத்துறைக்கு மாற்றப்பட்டு இப்போது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். ஆகவே, அரசு தொழில் துறையின் மூலம்





இந்த 10 கோடி ரூபாய் திட்டத்தில் தொழில் தொடங்குவதற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்து நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, தொழில் துறையின் மூலமாக அவர்கள் தனியாக கேள்வி கேட்டு நடவடிக்கை எடுக்க முடியும். என்றாலும், வேளாண்மைத் துறை மூலம் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், தொழில் துறையின் மூலம் மட்டுமே இப்படிப்பட்ட தொழில்களைத் தொடங்குவதாக இருந்தாலும், வேளாண் தொழில் கழகம் தொழிற் கூடங்களை அமைக்கிறது.

பட்டுக்கோட்டை தென்னை வளர்ப்போர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக கீழ் குறித்த நிதி உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன :

(1) கொப்பரை தயாரிப்புப் பகுதி நிறுவ ரூ. 7.955 இலட்சம் திட்டத்திற்கு ரூ. 4.520 இலட்சம் கடனாகவும், ரூ. 1.809 இலட்சம் அரசு பங்குத் தொகையாகவும் தென்னை வளர்ச்சி வாரிய மானியமாக ரூ. 1.00 இலட்சம் வழங்கப்பெற்றது.

(2) வியாபார அபிவிருத்திக்காக அரசுப் பங்கு தொகை உதவி ரூ. 2.00 இலட்சம் வழங்கப்பெற்றுள்ளது.

(3) எண்ணெய் தயாரிப்பு பகுதி நிறுவ ரூ. 5.00 இலட்சம் திட்டத்திற்குத் தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனக் கடன் உதவி ரூ. 3.77 இலட்சம் மற்றும் அரசுப் பங்குத் தொகை உதவி ரூ. 1.508 இலட்சம் கேட்டு மனு அனுப்பப்பட்டுள்ளது. தேசீய கூட்டுறவு வளர்ச்சி நிறுவன அனுமதி எதிர்பார்க்கப்பெறுகிறது. ஆகவே, இந்தத் துறையின் மூலமாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பட்டுக்கோட்டைப் பகுதியில் அதிகமாக தேங்காய் உற்பத்தியாகிறது. அங்கிருந்து 'டெசிடேட்டட் கோக்கனட்' என்ற ஒரு பொருள் தேங்காயிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு, அது மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. அந்த அடிப்படையில் உற்பத்தி செய்கிற ஒரு தொழிற்சாலையை வேளாண் துறையிலிருந்து நிறுவுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, வேளாண் துறை அதுபற்றி ஆராய்ந்து, முழுமையான கருத்தினை அரசுக்கு அனுப்பும்.

[1986 ஏப்ரல் 16

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, பட்டுக்கோட்டையில் 10 கோடி ரூபாய் செலவில் தென்னை சார்பு தொழிற்சாலை ஒன்று தொடங்கப்படும் என்று சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் அங்கே வந்திருந்தபோது விழாவில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மட்டுமல்லாமல் அதையொட்டி இருக்கிற தம்பிக்கோட்டை, சாம்பாநோடை, இரும்பாவனம், பேராவூரணி போன்ற பகுதிகளிலும் தேங்காய் ஏராளமாக உற்பத்தியாகிறது. அதில் இருந்து வரக்கூடிய தேங்காய் நார் கயிறு தயாரிப்பதற்குப் பயன்படுகிறது. இப்படிப்பட்ட பல்வேறு பொருள்கள் உற்பத்தியாகின்ற காரணத்தால் 1986–87 ஆம் ஆண்டில் இல்லாவிட்டாலும் 1987–88 ஆம் ஆண்டிலாவது இந்தத் தொழிலைத் தொடங்க அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் குறிப்பிட்டது வேளாண் துறை மூலமாக எடுக்கப்படக் கூடிய நடவடிக்கை. இது தவிர, ஏற்கனவே ஒரு கூட்டம் போட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துரு அனுப்பியிருந்தால் அது தொழில் துறையின் ஆய்வில் இருக்கும் என்று கருதுகிறேன். அப்படி இருந்தால் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. மு. இராமநாதன் : தலைவரவர்களே, தென்னை சார்பு தொழில் என்பதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல கொப்பரை மட்டுமல்ல. தேங்காயை எடுத்த பின்னால் அதனுடைய மட்டையிலிருந்து கயிறு தயாரிக்க நார் எடுக்கும்போது, அதிலிருந்து மற்றொரு கழிவுப் பொருள் வருகிறது. தென்னை பெரும்பாலும் இருக்கிற பகுதிகளில் அந்தக் கழிவுப்பொருளை எதற்கும் பயன்படுத்தாமல் வீணாகப் போட்டுக் கொளுத்தி சாம்பலாக்கிவிடுகிறார்கள். ஆனால் அரசுத் துறையிலே சில இரசாயன பொருள்களை கலந்து லீக்கோ கரி போன்று எரிப்பதற்கு ஒரு கரியை தயாரிக்கலாம் என்ற ஒரு குறிப்பு இருக்கிறது. ஆகவே, இந்த தென்னை சார்பு தொழில் என்பதிலே தேங்காய் மட்டை கசடிலிருந்து லீக்கோ கரி போன்று எரிபொருள் தயாரிப்பது பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா, அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் கயிறு திரித்தல், கரி தயாரித்தல் பற்றி குறிப்பிடுகிறார்கள். அவை பற்றி அரசு உரிய வகையிலே ஆராயும்.



1986 ஏப்ரல் 16]

தென்னை வளர்ச்சிக் கழக வட்டார அலுவலகம்.

467—(*வினா எண் 7419) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சை மாவட்டத்தில் கொச்சியிலுள்ள இந்திய அரசின் தென்னை வளர்ச்சிக் கழகத்தின் ரீஜினல் அலுவலகம் ஒன்றைத் துவக்க தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தஞ்சை மாவட்டத்தில் கொச்சியிலுள்ள இந்திய அரசின் தென்னை வளர்ச்சிக் கழகத்தின் ரீஜினல் அலுவலகம் ஒன்றைத் துவக்க, மைய அரசை கோருவது சம்பந்தமாக கருத்துரு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, இந்திய அரசுக்கு இதுபற்றி பிரேரணை அனுப்ப இருப்பதாகத் தெரிவித்தார்கள். உடனடியாக இந்த ரீஜினல் அலுவலகத்தைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, எடுக்கும்.

உசிலம்பட்டியில் உரிமையியல் நீதிமன்றம்.

468—(*வினா எண். 4388) திரு. பி. கே. எம். முத்து ராமலிங்கம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உசிலம்பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9–40)

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நீதி நிர்வாகத்தினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில் கூட 28 உரிமையியல் நீதிமன்றங்கள் நிறுவப்படுவது என்று சொல்லி அதிலே 27-க்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. உசிலம்பட்டி விடப்பட்டிருக்கிறது என்று சொல்லித்தான் இதை நாங்கள் கேட்டோம். இது முக்கியமானது. எனவே உசிலம்பட்டியில் ஏற்படுத்தித் தருவதற்கு மாண்குபுமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தற்போது ப்ரஹிபிஷன் கேஸஸ் எல்லாம் கூட அதிகமாகி 1979–80-லிருந்தே அவை கிடப்பில் இருக்கின்றன. இதனால் அரசுக்கு அதிகமான நஷ்டம் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. அதிலே சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் எல்லாம் அதாவது அப்போது சப் இன்ஸ்பெக்டர்களாக இருந்தவர்கள் இன்ஸ்பெக்டர்களாகவும், இன்னும் மென்மேலும் பதவி உயர்வுகளைப் பெற்றுப் போய்க்கொண்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளை நடத்த முடியாத நிலைமையில் அதிகமான அளவுக்கு அவை தேங்கிக் கிடக்கின்றன. எனவே இப்படி கிரிமினல், சிவில் வழக்குகள் அதிகமாக உள்ள பகுதி என்ற முறையில் 28 சிவில் நீதிமன்றங்களில் ஒன்றை உசிலம்பட்டியில் கட்டாயம் அமைக்க வேண்டும். அந்த வகையில் அதுவும் சேர்க்கப்பட வேண்டும். அது இந்த ஆண்டில் சேர்க்கப்படுமா என்பதை அமைச்சரிடத்திலிருந்து நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. தொடராச் செலவினமாக 2,13,000 ரூபாயும் தொடரினச் செலவாக 4,25,000 ரூபாயும் நிதி ஒதுக்க வேண்டுமென்றும் அதை நிறுவவேண்டுமென்றும் சொல்லி நிதித்துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நிதித்துறை பரிசீலித்து வருகிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் தற்போது இயங்கி வருகிற மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அண்மையில் கட்டப்பட்ட கட்டடமாக இருந்தாலும் போதுமான வெளிச்சம் இல்லாமலும் காற்றோட்ட வசதி இல்லாமலும் கழிப்பிட வசதி போதுமான அளவுக்கு இல்லாமலும் இருக்கின்ற காரணத்தால் சிரமமாக இருக்கிறது. மேலும் வழக்கறிஞர்கள் தங்க ஓய்வறைகள் இல்லாத நிலைமையும் இருக்கிறது. இதன் காரணத்தால் வழக்கறிஞர்களும், அங்கே வருகின்ற பொதுமக்களும் மிகுந்த அல்லல் படுகிற நிலைமை இருப்பதால் அந்தக் கட்டிடங்களைச் சீரமைத்து, நல்ல வெளிச்சம், காற்றோட்ட வசதி ஆகியவற்றுடன் நவீன வசதிகளையும் சேர்த்து புதுப்பிக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள பல்வேறிடங்களில் உள்ள நீதிமன்றங்களுக்குக் கட்டிடங்கள் போதாது என்றாலும், கட்டிடங்களில் இன்னும் சில மேம்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது என்றாலும் நிதிப்பற்றாக்குறை அதற்குத் தடையாக இருக்கிறது. 8-வது நிதிக் குழுவினைப் பொறுத்தவரையில் தமிழகத்தை சர்ப்ளஸ் ஸ்டேட் என்ற முறையில் கருதி நிதித்துறைக்கென ஒரு காசு கூட நிதி ஒதுக்கவில்லை. இதனால் மாநில நிதியிலிருந்துதான் ஈடுகட்ட வேண்டி இருக்கிறது. நிதித்துறை இதைப் பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டிப் பகுதி என்பது பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற ஒரு பகுதியாகும். அது வருவாய்க் கோட்டத் தலைநகரமும் ஆகும். வட்டத் தலைநகரத்தில் எல்லாம் உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்படுகிறபோது வருவாய்க் கோட்டத் தலைநகரத்தில் நீண்டகாலமாக உரிமையியல் நீதிமன்றம் செயல்படாதது உள்ளபடியே பெரிய குறையாகும். எனவே இந்தக் குறையை போக்குகிற அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அதைச் சேர்ப்பதற்கான வகையில் உரிய முயற்சி மேற்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு உரிமையியல் நீதிமன்றம் தேவை என்பதை அரசு உணர்ந்து இருப்பதால்தான் விரைவில் அந்த நீதிமன்றத்தை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ஆண்டு அந்தப் பகுதிக்கு நீதிமன்றம் வருவதற்குரிய நடவடிக்கை எடுக்க நிதித்துறைக்கு நாம் பரிந்துரை செய்வோம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தின் தலைநகர் விருதுநகரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது எப்போது அமைக்கப்படும் ? அது விருதுநகரில் அமைக்கப்படுமா ? அங்கே சி. ஜே. எம். கோர்ட் இல்லை. பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் தான் இருக்கிறது. ஜாமின் கேஸஸ் வருகின்ற நேரங்களில் வேறு மாவட்டமான சிவகங்கைக்குத்தான் செல்ல வேண்டி இருக்கிறது. அந்த பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை சி. ஜே. எம். கோர்ட்டாக மாற்றினால் அங்கேயுள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது குறித்த பதிலை கூறுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மாவட்ட நீதிமன்றம் விருதுநகரில் இருக்கவேண்டுமா அல்லது ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்க வேண்டுமா என்ற பிரச்சினை எழுந்தது. உயர்நீதிமன்றம் அதுபற்றிப் பரிசீலித்து விருதுநகரிலேயே அதை அமைக்கலாம் என்று அண்மையில் பரிந்துறை செய்திருக்கிறது. அரசு விரைவில் நடவடிக்கை எடுத்திருக்கிறது. சி. ஜே. எம். கோர்ட்டைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவை என்ற அடிப்படையில் புதிதாகத் துவக்கப்பட்ட மாவட்டத்திற்கு சி. ஜே. எம். கோர்ட் அமைத்துக் கொடுக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

[1986 ஏப்ரல் 16

கோவில்பட்டியில் துணை நீதிமன்றம்.

469 — (*வினா எண். 5518) திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரத்தில் சப்கோர்ட் ஒன்று ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி நகரில் சப்கோர்ட் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, கோவில்பட்டியிலே சப்–கோர்ட் ஏற்படுத்துகின்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுவதாக உள்ள சூழ்நிலையில், மாவட்டத்தைப் பிரித்த பிறகு இது அமுலுக்கு வருகிறதா அல்லது இப்போது இருக்கிற நிலைமையிலேயே அந்தத் திட்டம் அமல் செய்யப்படுமா ? அப்படி அமல் செய்யப்பட்டால் தென்காசி சப்–கோர்ட்டின் அதிகார வரம்பில் உள்ள பகுதிகள் கோவில்பட்டிக்கு மாற்றித் தரப்படுமா என்ற சில விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி பகுதியிலுள்ள அந்த சப்-கோர்ட்டின் பகுதிகள் கோவில்பட்டிக்கு கண்டிப்பாக மாற்ற வேண்டிய அவசியம் தான் ஏற்படும். நெல்லை மாவட்டம் பிரிக்கப்படுகின்ற பிரச்சினை வேறு, இது வேறு. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் நெல்லை மாவட்ட பிரிவினையைப் பொறுத்த வரைக்கும் அது விரைவிலே நடப்பதாக இருந்தால், இதையும் அதையும் ஒருங்கிணைந்து செய்து செயல்படுத்துவதுதான் உகந்ததாக இருக்கும். அது குறித்து அரசு பரிசீலிக்கும்.



1986 ஏப்ரல் 16]

திருச்சியில் சர்வதேச விமான நிலையம்.

470—(*வினா எண். 4633) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள விமான நிலையத்தை ஒரு முழுமையான சர்வதேச விமான நிலையமாக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை ஏதும் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.
(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரம் இந்த மாநிலத்தினுடைய முக்கியமான பகுதியிலே இருப்பது. அது மட்டும் அல்லாமல் தொழில் ரீதியாக எடுத்துக் கொண்டாலும் அல்லது வரலாற்று ரீதியாக எடுத்துக் கொண்டாலும் தமிழ்நாட்டினுடைய கேந்திரமான பகுதியிலே திருச்சி இருப்பதனால், அமைச்சர் அவர்கள் திருச்சி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுகின்ற செயற்குறிப்பே இல்லை என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டாலும், திருச்சி நகரின் முக்கியத்துவத்தைக் கருதி, தமிழ்நாட்டின் கேந்திர பகுதியில் அது இருப்பதை மனத்திலே இருத்தி, அதை மறுபரிசீலனை செய்வார்களா? அதற்கான ஒரு ஏற்பாட்டை மத்திய அரசின் மூலம் இந்த மாநில அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய நகரம் எவ்வளவு பெரிய நகரமாக இருந்தாலும் எப்படி இருந்தாலும், எவ்வளவு பிளைட்ஸ் வருகிறது. அதனுடைய வித்தியாசம் ஒவ்வொன்றிற்கும் இடையில் என்ன, அவைகள் செல்கிறபோது டிராபிக் எப்படி இருக்கும் என்பது போன்ற பல பிரச்சனைகளைப் பார்த்துத்தான் இதில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் தான் அதைப்பற்றி அதிகாரிகளிடத்திலே பேசுகிறபோது, அப்படிப்பட்ட ஒரு எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை என்று உணரப்பட்டது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் நம்முடைய முயற்சியை எடுப்பதிலே எந்த விதமான தடையும் இல்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட திருச்சி நகரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் என்னவோ,

தமிழகத்திற்கு தலைநகரமாகவே திருச்சியை ஆக்க வேண்டும் என்று ஒரு சந்தர்ப்பத்தில் கருத்து தெரிவித்தார்கள். அது மட்டும் அல்லாமல், திருச்சியில் இருக்கிற விமான நிலையத்தை கேந்திர மான விமான நிலையமாக ஆக்கி விட்டால், அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, கூடுதலான விமானங் கள் வந்து போகவும், பல வெளிநாட்டினர்கள் வந்து போகவும், சுற்றுலா பயணிகள் வந்து போகவும், வரலாற்று சிறப்பின் அடிப்படையில் தமிழகத்தின் பெருமை உயரவும் அந்த விமான நிலையம் பயன்படும். ஆகவே அதில் ஆழ்ந்த கவனம் செலுத்து வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரின் எண்ணத்தை முழுமையாக மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் இப்போதாவது வரவேற்றதற் காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அந்த நடவடிக்கையை எடுப்பதற்கு அரசாங்கம் நிச்சயமாக தயாராக இருக்கிறது.

**திரு. ச. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலே விமான நிலையம் அமைக்கும் பணி இப்போது எந்த நிலையிலே இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது.

### இரெட்டணை வராக நதியில் மேம்பாலம்.

471—(*வினா எண். 5119) **திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, மயிலம் ஊராட்சி ஒன்றியம் இரெட்டணை கிராமத்தின் அருகே ஓடும் வராக நதியில் மேம் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எப்போது செயல்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.



### எடப்பாடி கும்பகோணம் பேருந்துப்பணி.

472—(*வினா எண். 5128) **திரு. ச. கோவிந்தசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து சேலம் வழியாக கும்பகோணத்திற்கு பேருந்து விட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. ச. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடியிலிருந்து கும்பகோணத்திற்கு பேருந்து விட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று பேருந்து விட்டதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

அதேபோல கும்பகோணத்திலிருந்து எடப்பாடிக்கு வேறொரு பேருந்து விட அரசால் இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அது தனியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும். காரணம் கிலோ மீட்டர் தூரத்தை வைத்து எந்த போக்கு வரத்துக் கழகம் அதனை இயக்க வேண்டுமென்ற நிலை இருக் கிறது. 250 கிலோமீட்டருக்கு மேலே போனால் திருவள்ளு வர் போக்குவரத்துக் கழகம் தான் இயக்க வேண்டும். அதற்கு குறைவாக இருந்தால் மற்ற சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் இயக்க வேண்டும். ஆகவே தேவைக்கேற்ப நட வடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ச. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, தற்போது நகரப் பேருந்துகளை இயக்க போதுமான ஓட்டுநர், நடத்து நர் இல்லாத காரணத்தால் நிறைய பேருந்துகளை இயக்க முடியாமல் தடைப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. அந்த நிலையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் உறுப்பினர் அவர்களுக்கு சொல்லப்பட்டது தவறான செய்தியாகும். தேவையான அளவிற்கு ஓட்டுநர்களும், நடத்துநர்களும் இருக்கிறார்கள். மேலும் எப்போதெல்லாம் தேவைப்படுகிறார்களோ அப்போதெல்லாம் அவர்கள் புதியதாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற பகுதியில் அண்ணாப் போக்கு வரத்துக் கழகத்தில் கூட இப்போது புதியதாக ஓட்டுநர்கள் நடத்துநர்கள் தேர்ந்தெடுக்க இண்டர்வியூ செய்திருக்கிறார்கள். ஆகவே வரிசையாக தொடர் வேலையாக இது நடந்து கொண்டே இருக்கிறது.

குளச்சல் துறைமுகம்

473—(*வினா எண் 7604) திரு. ஜே. ஹேமச்சந்திரன்: திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளச்சலில் ஆரம்பித்துள்ள கப்பல் துறைமுகத்தின் நிர்மாணப் பணியின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு முதற்கட்டமாக அணுகுசாலை வேலை நடந்து வருகிறது. இது முடிந்ததும் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான மற்ற கட்டுமான பணிகள் தொடங்கப்படும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குளச்சலில் உள்ள துறைமுகத்தை ஒரு நேச்சுரல் ஹார்பர் என்ற காரணத்தால் இந்தியன் மினரல்ஸ் என்ற ஸ்தாபனம் வெளிநாடுகளுக்கு விலை மதிப்புள்ள பல மினரல்களை ஏற்றுமதி செய்வதால் அதிகமாக வியாபாரத்தை பெருக்குவதற்கு வாய்ப்புள்ள துறைமுகமாக இருக்கிறது. ஆகவே அதன் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமா? அந்தத் துறைமுகத்திற்காக அனுமதிக்கப்பட்டிருக்கிற பணம் எவ்வளவு? போதுமான அளவிற்கு பணம் ஒதுக்கப்படவில்லையென்று கேள்விப்படுகிறோம் ஆகவே, அதற்கு தேவையான பணத்தை ஒதுக்க நடவடிக்கையெடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதை விரைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆரம்ப கட்டத்தில் ஒதுக்கிய பணம் போதவில்லையென்ற நிலை இருந்தது. தற்போது விரிவாக ஆய்வு செய்து அதற்கு 77 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இது போதவில்லையென்றால் மீண்டும் ஒதுக்கப்படும்.



1986 ஏப்ரல் 16]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே. மொத்தமாக அந்தத் துறைமுகத்திற்கு அரசால் ஒதுக்கப்படுகிற பணம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதைத் தான் ஏற்கனவே சொன்னேன். 77 லட்சம் ரூபாய்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டு மனைகளுக்கான ஒதுக்கீடு

474—(*வினா எண். 4561) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984-85-ல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டுமனைக்காக ஒதுக்கிய தொகையில் செலவிடப்பட்டது எவ்வளவு?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (1) 1984–85 நிதியாண்டு தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டுமனைக்காக ஒதுக்கிய தொகை ரூ. 125 லட்சம்.

(2) செலவிடப்பட்ட தொகை—ரூ. 115.91 லட்சம்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, ஒரு ஆண்டிற்கு குடியிருப்புகளுக்காக ஒதுக்கப்படுகிற பணத்தில் ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் சரண்டர் செய்கிற அளவிற்கு இந்த அரசாங்கத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்படி சரண்டர் செய்து விடுவதால் அடுத்த ஆண்டில் கூடுதலாக பணிகளை செய்ய முடியாமல், அதன் டார்கெட்டை அச்சீவ் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. இப்படி சரண்டர் செய்வது என்பது வாடிக்கையாகவே இருக்கிறது. ஆகவே அரசாங்கம் ஒரு கட்டுப்பாடாக அந்த ஆண்டின் பணத்தை அந்த ஆண்டிலேயே செலவழிக்க வேண்டுமென்ற வகையில் நடவடிக்கையெடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா? அடுத்து தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற நிலம் நஞ்சை நிலமாக இருக்கிறது. அங்கே நிலம் கையகப்படுத்துகிறபோது சுடுகாடு போடுவதற்கு மட்டும் நிலம் கையகப் படுத்த முடிகிறது. குடியிருப்புகளுக்கும், சாலை போடுவதற்கும் நிலம் கையகப்படுத்த வேண்டுமென்றால் அரசாங்கத்தில் சீப் மினிஸ்டர் கையெழுத்து போட்டால்தான் முடியும். எனவே, தஞ்சை மாவட்டத்திற்கு விதிவிலக்கு கொடுத்து, நிலம் கையகப் படுத்துவதற்கு கலெக்டருக்கு அதிகாரம் வழங்கி நிலம் கையகப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்த பணம் ஒதுக்கப்பட்டு குறைவாக செலவு செய்வதற்கு காரணம் மத்திய அரசு நிலயெடுப்புச் சட்டம் திருத்தப்பட்டதின் பேரில் அமல் செய்வதற்கு 1–10–1984 முதல் 19-1-1985 வரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆகவே திருந்திய பிரசுரம் 19–1-85–ல் தான் அரசிடம் இருந்து வெளி வந்தது. ஆகவே, முழுத் தொகையை செலவழிக்க இயலவில்லை. எனவே, கையகப்படுத்தும் நிலப்பரப்பு கணிசமாக குறைந்து உள்ளது. அதனால்தான் தாமதம் ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நஞ்சை நிலமாக இருப்பதால், அங்கே ஒரு தனியாக சட்டம் கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நஞ்சை நிலத்தை எடுப்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய உத்தரவும், அதுபோன்று மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களுடைய உத்தரவும் பெற்றதற்குப் பிறகு நஞ்சை நிலத்தை எடுக்கும் திட்டம் நடைமுறையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நஞ்சை நிலத்தை கையகப்படுத்துவதில் உள்ள சிரமத்தின் காரணமாக வீட்டு மனைகளுக்கு நிலம் வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, ஒரு சிறப்புத் திட்டத்தை தீட்டி, நீங்கள் எல்லாம் கையெழுத்துப் போட்டதற்குப் பின்னால் அங்கே அதிக அளவில் நிதி ஒதுக்கி அதிக குடியிருப்பு மனைகளை வழங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாக நிதி ஒதுக்கித்தான், அந்த மக்களுடைய வாழ்வு வளம் பெறுவதற்காக நில ஆர்ஜிதம் எடுத்து கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நஞ்சை நிலமாக இருக்கின்ற காரணத்தால் அங்கும் நிறைய நிலத்தை எடுத்து, அங்கே பட்டா வழங்கப்பட இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

475—(*வினா எண். 6629) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட மக்களுக்காக வீட்டுமனை வழங்குவதற்காக நிலங்களை கையகப்படுத்த 1983–84-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?



(ஆ) அதில் செலவிடப்படாமல் அரசுக்கு ஒப்படைக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (அ) 1983–84-ம் நிதியாண்டில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 125 இலட்சம்.

(ஆ) ஒதுக்கப்பட்ட தொகையை விட ரூ. 27.27 லட்சம் அதிகமாகவே செலவிடப்பட்டுள்ளது.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் எவ்வளவு பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்காக 1983-84 ஆம் ஆண்டு 125 லட்சம் ஒதுக்கப்பட்டது. அதிலே செலவிடப்பட்ட தொகை 152 லட்சத்து 27 ஆயிரம் ஆகும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொத்தமாக 1986 பிப்ரவரி வரையில் கிட்டத்தட்ட கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் பரப்பு 28,936 ஏக்கர் 60 சென்ட் ஆகும். இதிலே 4,23,481 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே மொத்தம் செலவிட்ட தொகை 1,534 லட்சத்து, 62 ஆயிரம் ரூபாய் மொத்தமாக செலவிடப்பட்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்ய முடியாமல், பணத்தை செலவழிக்க முடியாமல், உயர்நீதி மன்றத்தில் எவ்வளவு வழக்குகள் இருக்கின்றன. நில ஆர்ஜிதத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையை செலவழிக்கின்ற வகையில் நில ஆர்ஜிதம் சட்ட விதிமுறைகளை போதிய அளவிற்கு திருத்துவதற்கு மத்திய அரசுக்கு நமது அரசு பரிந்துரை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்கின்ற நேரத்தில் இதைப்பற்றிய எத்தனை வழக்குகள் நிலுவையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதுபற்றி விளக்கக் குறிப்பு என்னிடத்தில் தற்போது இல்லை. இருந்தாலும் நில ஆர்ஜிதம் செய்வதற்காக 1984-ம் ஆண்டு தனிச் சட்டத்தை வகுத்து, அதன் மூலம், நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொண்டு வந்தோம். எனினும் துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 ஏப்ரல் 16

## செயற்கை முறையில் முத்து உற்பத்தி :

*476—(*வினா எண் 3163)* திரு. இரா. தாமரைக்கனி, திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயற்கை முறையில் முத்து உற்பத்தி செய்ய தமிழக அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை ஒன்று @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற விவர அறிக்கையில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும், தூத்துக்குடியில் உள்ள 'ஸ்பிக்' நிறுவனமும் இணைந்து, தமிழ்நாடு முத்து நிறுவனம் என்ற ஒரு கூட்டு நிறுவனத்தை தொடங்கி இருப்பதாகவும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தெற்கு மனப்பாட்டிலிருந்து வடக்கு வைப்பார் வரையிலுள்ள ஆளித்திடலில் செயற்கை முறையில் முத்து வளர்ப்பு திட்டம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்றும் இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. நான் அறிந்து கொள்ள விரும்புவது, மீன் குஞ்சுகளை வளர்ப்பது போல், முத்துக் குஞ்சுகளை வளர்ப்பதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகிறதா ? அல்லது இயற்கைச் சூழ்நிலையில் முத்துச் சிப்பிகள் எப்படி தயாரிக்கிறார்களோ, அதைப்போல ஒரு ஏற்பாடு நடைபெறுகிறதா ? இந்திய நாட்டில் வேறு ஏதாவது பகுதியில் இது போன்ற செயற்கை முறையில் முத்துச் சிப்பிகள் தயாரிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சூழ்நிலையில் முத்துச்சிப்பியினுள் தற்செயலாகப் புகுந்த மண்ணோ அல்லது சிறிய பூச்சியோ, முத்துச் சிப்பியின் உள்பகுதியிலிருந்து வெளிப்படும் திரவகமும் ஊற்றப்படுவதால் ஓரிரண்டு ஆண்டுகளில் முத்து விளைகிறது. ஆனால் வளர்ப்பு முத்துக்களில் இருந்து மண், பூச்சி முதலியவைகளுக்குப் பதிலாக நாமே ஒருவகையிலே கருவை முத்துச்சிப்பியினுள்ளே செலுத்தி அதன்மூலம் செயற்கைமுத்து வளர்க்கப்படுகிறது. இந்த முத்து வளர்ப்பு வேறு பகுதிகளில் இல்லை.

---

@ 331ம் பக்கத்தில் இணைப்பு I ஆக **அச்சிடப்பெற்றுள்ளது.**



1986 ஏப்ரல் 16]

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செயற்கை முத்து உற்பத்தி ஆராய்ச்சியை தூத்துக்குடியில் பல ஆண்டுகளுக்கு முன்னதாக ஆரம்பித்து, அது வெற்றிகரமாகவும், முத்துக்கள் கிடைப்பதாகவும் சொல்லப்பட்டது. ஆனால் அதற்குத் தேவையான நியூக்ளிஸ் என்ற கருப்பொருள் வெளிநாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்யவேண்டும். அது சரியான முறையில் கிடைக்கவில்லை. ஆகவே அதிக அளவில் முத்துக்கள் உற்பத்தி செய்யப்படவில்லை என்று சொல்லப்பட்டது. இந்த நியூக்ளிஸ் என்றம் கருப்பொருள் இப்போது அதிக அளவில் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டு முத்து வளர்ப்பு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையில் 1986 ஆம் ஆண்டினுடைய இறுதியில் ரூபாய் 50 இலட்சம் மதிப்புள்ள சுமார் 60 ஆயிரம் காரட் முத்து தயாரிக்கப்படும் என்று சொன்னார்கள். இப்படி தயாரிக்கப்படுகிற முத்துகளெல்லாம் எந்த நாட்டில் விரும்பி வரவேற்கப்படுகிறது ? ஒருவேளை வரலாற்று ரீதியாக எகிப்து நாட்டு பேரழகி கிளியோப்பாட்ரா கொற்கை முத்துக்களை விரும்பிப் பெற்றதாக வரலாற்றுக் குறிப்பு இருக்கிறது. அதைப்போல இந்தச் செயற்கை முத்துக்களை வேறு யாரேனும் விரும்பி வாங்க தமிழ்நாடு அரசுக்கு ஏதேனும் மனு செய்து இருக்கிறார்களா அல்லது வேறு எந்த நாட்டுக்காகவாவது ஏற்றுமதி செய்கின்ற திட்டம் இருக்கிறதா எனபதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தெளிவான விளக்கம் இன்னொரு கேள்வி போட்டால்தான் பதில் சொல்லமுடியும். என்றாலும், இந்தியா தற்போது சுமார் 9 கோடி பெறுமானமுள்ள வளர்ப்பு முத்துக்களை ஜப்பான், சீனா போன்ற நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் இறக்குமதி செய்து வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இந்தியநாடு சில ஆண்டுகளில் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கணிசமான அந்நிய செலாவணியைப் பெற்றுத்தர இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை முத்து வளர்வதற்கு எவ்வளவு நாளாகும்? இயற்கை முத்துக்கும், செயற்கை முத்துக்கும் என்ன வேறுபாடுகள் உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

[1986 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கருவைச் செலுத்திய 30 நாட்களுக்குள்ளேயே, முத்துத் திரவகம் படிய ஆரம்பிக்கிறது. சுமார் ஓராண்டில் மூலக்கரு பொருத்தப்பட்ட முத்துச்சிப்பிகளிலிருந்து முத்து எடுக்கப்படுகிறது. வளர்ப்பு முத்துக்கும், இயற்கை முத்துக்கும், நிலங்களில் கிடைக்கும் முத்துக்கும் எந்த விதமான வேறுபாடும் கிடையாது. ஆனால் வளர்ப்பு முத்தானது இயற்கை முத்தைவிட மிக அழகாகவும், நன்றாகவும், நேர்த்தியாகவும் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒரு குழப்பம் இருக்கிறது. இயற்கை முத்து, செயற்கை முத்து என்கிறார்கள். அதுவும் இயற்கை முத்துதான். செயற்கை முறையிலே கருவூட்டப்படுகிறதே தவிர, கடைசியிலே இயற்கை முத்தாகத்தான் வரும். செயற்கை முத்தை ஜப்பானில் உருவாக்குகிறார்கள். அது பிளாஸ்டிக் போன்ற வகைகளிலே உருவாக்கப்படுகிறது. சின்தெடிக் ஜெம் மாதிரி செயற்கையாக வரும். இது இயற்கை முத்துதான். ஆகவே மாடு கன்று போடுகிறபோது இயற்கையிலேயும் கன்றுபோடும்; செயற்கைக் கருவூட்டுவதன் மூலமும் கன்றுபோடும் கன்று இயற்கையான கன்றுதான். அதுமாதிரி இந்த முத்து இயற்கையான முத்தே தவிர, இதைப்போய் செயற்கை முத்து என்று சொல்லக்கூடாது. ஆக, வெற்றிகரமாக செயற்கை முறையில் கருவூட்டப்படுகிறது. ஸ்பிக் நிறுவனமும், ஃபிஸரீஸ் டிபார்ட்மெண்டும் சேர்ந்து ஒரு கூட்டு முயற்சியிலே செய்கிறார்கள். அதுவும் ஒரு அளவுக்கு நமக்கு வெற்றிகரமாக ஆகி இருக்கிறது. இந்தியா முழுவதும் நாம் கணக்குப்போட வேண்டுமானாலும் கூட, ஜெம்ஸ் என்ற அளவிற்கு மற்ற மாணிக்கங்கள், நவரத்தினங்கள், வைரங்கள் எல்லாம் சேர்த்து மொத்த ஏற்றுமதியில் மூன்றாவது இடத்தை இந்த ஜெம்ஸ் பெருகிறது. அதிலே முத்து எவ்வளவு என்று தெளிவாகக் கணக்குப்போட முடியாவிட்டாலும்கூட 1,130 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியில் இந்த ஜெம்ஸ் நவரத்தினங்கள், முத்து உள்பட, வைரம் உள்பட ஏற்றுமதி ஆகிறது என்ற கணக்கு மட்டும் இருக்கிறது.

போயர் சமூகத்தவர்களுக்கு வீட்டுமனை வழங்கல்.

477—(*வினா எண் 5237) திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம்—சேந்தமங்கலம்—படத்தையான் குட்டை ஆகிய பகுதியிலுள்ள போயர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பட்டோர் நலத்துறை மூலம் நில ஆர்ஜிதம் செய்து வீட்டுமனை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: இல்லை.



1986 ஏப்ரல் 16]

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம்—சேந்தமங்கலம், படத்தையான் குட்டை ஆகிய பகுதிகளிலுள்ள போயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே வருகின்ற ஆண்டுகளிலாவது இந்தப் பகுதிகளில் வசிக்கின்ற போயர் சமூகத்தைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரஸ்தாபித்த இடத்தை தணிக்கை செய்ததில் படத்தியான் குட்டை போயர்கள் குடியிருப்பில் 258 வீடுகள் இருக்கின்றன என்று தெரிவதாகவும், புல தணிக்கையின்போது மொத்தம் 37 குடும்பங்கள் இருந்தன என்றும் மற்ற குடும்பங்கள் சொந்த தொழில் காரணமாக சென்னை நகரம் மற்றும் கேரளா போன்ற இடங்களுக்குச் சென்று விட்டதாகவும் இதனால் வீடு கட்டுகிற நிலம் கையகப்படுத்துகிற திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது. அங்கே எவ்வளவு பேர் குடியிருக்கிறார்களோ அவ்வளவு பேர்களுக்கும் நிலம் கையகப்படுத்த அரசு பரிசீலிக்கும்.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட நலத்துறை மூலமாக எந்த எந்த இனங்களுக்கு பிற்படுத்தப்பட்ட நலத்துறை வீட்டு மனை பட்டா நிலம், வழங்கி வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிக்குறவர், நாவிதர், ஒட்டர், வண்ணார் ஆகிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வீட்டு மனை இல்லாத நலிந்த ஏழைகளுக்கு 1981–82 முதல் இலவச வீட்டு மனை வழங்கப்பட்டு வருகிறது. 1981–82 முதல் 1984–85 வரையில் 60 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டு 15 ஆயிரத்து 525 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் நலிந்த பிரிவினர்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்கும் நேரத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் புதிதாக அறிவித்து இருக்கிற இலவச வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக இவைகளுக்கு முன்னுரிமைக் கொடுத்து அங்கே வீடுகள் கட்டுகிற முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நாம் எதிர்ப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். எதிர்பாராமல் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். எனவே இப்படிப் பட்டவர்களுக்கு நிச்சயமாக வீடு கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழுவணி கிராமத்தில் ஆயகுளம் கண்மாய் சீரமைப்பு.

478—(*வினா எண். 7412) திரு. க. பாரமலை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம், திருச்சுளி வட்டம், ஏழுவணி கிராமம் ஆயகுளம் கண்மாய், மேடுபட்டு தண்ணீர் சேமித்து வைக்க லாயக்கற்ற நிலையில் உள்ளது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த கண்மாயை திரும்ப அமைத்து பாசன வசதி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தின் வறட்சி நிலையைக் கருதியும், ஏராளமான கண்மாய்கள் மூலமாகத்தான் பாசன வசதி பெறுகின்ற நிலையில் இருப்பதாலும் எதிர்பாராத வகையில் வெள்ளப் பெருக்கினால் அவ்வப்போது மேடிட்டுப் போகின்ற கண்மாய்களை சீர்திருத்தம் செய்வதற்கு மனித முயற்சியின் மூலம் செய்வதை விட பெரிய இயந்திரங்களைக் கொண்டு (எர்த் மூவர்ஸ்) போன்ற இயந்திரங்களைக் கொண்டு செய்தால் அந்த பகுதி விவசாயிகளுக்கு உதவியாக இருக்குமே அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா, முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய நிலைமைகள் முகவை மாவட்டத்தில் மட்டும் அல்லாமல் வேறு இடங்களிலும் இருக் கின்றன. ஆனால் மூலக் கேள்வியைப் பொறுத்த வரையில் அது ஒரு குறிப்பிட்ட கண்மாயைக் குறிக்கிறது. இந்த கண் மாயைப் பற்றி விவரம் கோருகிறபோது இந்த கண்மாய் பொதுப்பணித் துறை பராமரிப்பில் இல்லை என்றும், ஊராட்சி





ஒன்றிய பராமரிப்பிலும் இல்லை என்றும் சொல்லுகிறார்கள். அதோடு மட்டும் அல்லாமல் வருவாய்த் துறையை கேட்டோம் என்றால் அந்த கண்மாய்க்கு ஆயக்கட்டு நிலங்களே இல்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு பின் சர்வே எண் பதிவேட்டை வைத்துப் பார்த்தால் அத்தகைய ஒரு சிறிய கண்மாய் கூட இருப்பதாக தெரியவில்லை. ஆகவே இதை புதைப் பொருள் ஆராய்ச்சி செய்து தான் கண்மாய் இருக்கிறதா? இல்லையா என்பதை கண்டுபிடிக்க முடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாகவும் ஆண்டுதோறும் பருவ மழை பொய்க்கின்ற பகுதியாகவும் இருப்பதால் இந்த கண்மாயைப் பற்றி இங்கே கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்த கண்மாய் எந்த இனத்திலும் வராமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு கண்மாய் இருக்க முடியுமா என்ற ஐயம் எங்களுக்கு எழுகிறது. அதை எண்ணிப் பார்த்து ஏதாவது ஒரு துறையில் அதாவது பொதுப்பணித்துறையிலோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திலோ அது இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஒரு கண்மாய் இருக்கிறது என்று சொன்னால் நாம் அதை உரிமை கொண்டாட முடியாது, மக்களும் உரிமை கொண்டாட முடியாது. அதைப் பார்த்து அந்த கண்மாயை மறுபடியும் உருவாக்குவதற்கு உண்டான முயற்சிகளை அரசு எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்னது போல் அத்தகைய ஒரு கண்மாய் இருப்பதாக அந்தப் பகுதி மக்களுக்கே தெரியவில்லை. ஏதோ ஒரு காலத்தில் அந்த கண்மாய் இருந்ததாக சொன்னார்கள். அதற்காகத்தான் மூலக் கேள்வியில் தந்த விவரங்கள் சரியாக இல்லை என்று தான் நான் சொன்னேன்.

நிலையூர் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம்.

479—(*வினா எண். 7842) திரு. என். எஸ். வி. சித்தன் : திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் நிலையூர் கால்வாய் மேம்பாட்டுத் திட்டத்திற்கான பணி எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : ரூ. 1,807 இலட்சம் மதிப்பீட்டில், நிலையூர் கால்வாயை மேம்பாடு செய்வதற்கான திட்டத்தின் முதன் நிலை ஆய்வு அறிக்கை அரசுக்கு வந்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

[1986 ஏப்ரல் 16

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையூர் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் என்பது திருமங்கலம் தொகுதி, திருப்பரங்குன்றம் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய, ஏன், மதுரை மாவட்டம், காமராஜர் மாவட்டத்திலே இருக்கின்ற மிக வறண்ட பகுதி களைச் சார்ந்த பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால், இந்த நிலையூர் கால்வாய் மேம்பாட்டுத் திட்டத்தினாலே [நிறைய பொருளாதாரத் துறையிலே பின் தங்கியிருக்கிற கிராமங்கள் பயன் அடைகின்ற காரணத்தினாலும், முதல் நிலை ஆய்வு அறிக்கை வந்து இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர் கள் சொன்னார்கள். அந்த ஆய்வறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டு இந்த ஆண்டே அந்தப் பணியைத் தொடங்கிடுவதற் கான உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே இந்த நிலையூர் கண்மாயை மேம்பாடு செய்வது குறித்த முதல் நிலை ஆய்வு அறிக்கை அரசுக்கு வந்திருக்கின்றது. அந்த அறிக் கையில் தந்துள்ள தகவலின்படி தேவையான அளவுக்கு நிலங்கள் பாசன உறுதியும், நிலத்திலே இருக்கக் கூடிய பாசன இடைவெளி நிரப்பப்படக் கூடிய அளவுக்கு பல நிலங்கள் பயன் அடைகின்றன. அந்த முறையில், இந்தத் திட்டம் விரைந்து செயல் படுத்தப் பட்டால் அது பயன் உள்ளதாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்திருந்தாலும் கூட ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முதல் நிலை ஆய்வு அறிக்கை வந்தாக வேண்டும். அதற்குப் பிறகு அரசு அதை ஏற்றுக் கொண்டு, விவரமான அறிக்கை தயாரிக்க அதிகாரிகள் பணிக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் விவரமான அறிக்கை தந்த பிறகு, அந்த அறிக்கையின் அடிப்படையில் தான் அரசு திட்டத்தில் முடிவு மேற்கொள்ள முடியும். அதற்காகத் தான் விவரமான அறிக்கையைப் பெறு வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு உத்தரவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையூர் கால்வாய் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக திருமங்கலம் தொகுதியிலே இருக்கின்ற வலையன் குளம், வலையப்பட்டி, நெடுமதுரை, எலியார்பட்டி, பாரப்பட்டி, கூடக்கோயில், உப்பிலிக்குண்டு, விலகாணி, விரிசன் குளம், இடத்தகுளம் போன்ற ஊர்களிலே இருக்கின்ற கண்மாய் கள் மூலமாக ஒருபோக சாகுபடி உறுதியாக்கப்படுகின்ற நிலை இருக்கிற காரணத்தினாலும், இந்தக் கால்வாய் வருகின்ற வழி யிலே இருக்கிற சில ஊர்களிலே சில கண்மாய்கள் விடுபட்டிருக் கின்றன. எனவே, அவைகளையும் சேர்த்துக் கணக்கில் எடுத் துக் கொண்டால், அந்தப் பகுதியில் இருக்கின்ற எந்த ஊரும்



1986 ஏப்ரல் 16]

விடுபடாத சூழ்நிலை ஏற்படும் என்ற காரணத்தினால், அங்கு விடுபட்ட கண்மாய்களையும் சேர்த்துக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதன் மூலம் பூரணமான ஒரு திட்டத்தைக் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது முதல் நிலை ஆய்வு அறிக்கையின்படி, வலையன்குளம் பகுதி மற்றும் கம்புக்குடி பகுதியைச் சேர்ந்த, தற்போது வைகை பாசன அமைப்பில் இல்லாத 77 குளங்களுக்கு பாசன வசதி அளிப்பதற்கான திட்டம் தான், இந்த முதல் நிலை ஆய்வறிக்கையிலே தரப்பட்டிருக்கிறது. அந்த 77 குளங் களுக்கு உட்படாத குளம் ஏதாவது இருக்குமானால், அங்கே தண்ணீர் கொண்டு செல்லக்கூடிய அளவுக்கு சாத்தியக் கூறுகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த பெய ரைத் தந்தால், அது பற்றி ஆய்வு செய்து அரசு உத்தரவிட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) மூடியிருக்கின்ற பஞ்சாலைகளை திறப்பது குறித்து

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11 ஆம் தேதி அன்றைக்கு தொழிற் சங்கத் தலைவர்களோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தியபோது, தமிழகத்திலே மூடியிருக்கின்ற பஞ் சாலைகளைத் திறப்பது குறித்து, சட்ட மன்றத்திலே அறிவிப்ப தாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது அறிவிக்கப்படுமா என் பதை அறிய விரும்புவதோடு, மிக முக்கியமான இன்னொரு விஷயத்தையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். வருகிற 31 ஆம் தேதியுடன் புதுக்கோட்டை, காவேரி மில்லைப் பொறுத்த வரையில் '' டீ நோட்டிபிகேஷன் '' அரசாங்கத்தால் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த மில், 31 ஆம் தேதியோடு மூடிவிட இருக் கிறது. அரசாங்கம் தன்னுடைய நிர்வாகப் பொறுப்பை வாபஸ் பெற்றுக்கொண்டு இருப்பதால் அந்த மில்லை தேசிய உடைமை யாக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று எடுத்த முடிவுக்கு இணங்க அந்த முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனு

மதியைப் பெற்று நாளையோ அல்லது நாளை மறுநாளோ இந்த அவைக்கு அறிவிப்பேன். நான் நேற்று இரவுதான் இங்கே வந்தேன். உரிய அதிகாரிகளைக் கலந்து அந்த அறிக்கையைத் தயாரித்து நாளையோ அல்லது நாளை மறுநாளோ கோயம்புத்தூரில் மூடியிருக்கிற ஆலைகளைப்பற்றிய முடிவை அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றவை பற்றி விசாரித்து அறிந்து நிலைமையைப் பின்னாலே விளக்குவேன்.

**மாண்புமிகு முதல்மைச்சர் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை தொடங்கி இருப்பதற்குப் பாராட்டு.**

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலே வாழ்கிற நம்முடைய தமிழர்களுக்கு எல்லாம் பயன்படுகிற விதத்திலே உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கியிருக்கிற தமிழகத்தின் வரலாற்றிலே புதிய வரலாற்றைப் படைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மன்றத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையின் சார்பிலேயும் என் சார்பிலேயும் சர்வ கட்சிகளின் சார்பிலேயும்சர்வ கட்சித் தலைவர்களின் சார்பிலேயும் தமிழக மக்களின் சார்பிலேயும் எல்லாருடைய வாழ்த்துக்களையும் உலகத் தமிழ்ச் சங்கம் கண்ட நம்முடைய தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (உறுப்பினர்கள் மேசையைத் தட்டும் ஒலி)

**(இ) சத்துணவு மையங்களை சோதனையிடுவது.**

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்கள் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து விடைபெற விரும்புகிறேன்.

நகராட்சித் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சத்துணவு மையக் கூடங்களிலே சோதனையிடக் கூடாது என்று தஞ்சை மாவட்டக் கலெக்டர் ஒரு உத்திரவு போட்டு அந்தத் தலைவர்கள் சோதனை செய்து வைக்கிற குறிப்புகள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று உத்திரவிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. நான் தெரிந்துகொள்ள விரும்புவது தமிழ்நாடு பூராவும் அமல்செய்ய உத்திரவிடப்பட்டு இருக்கிறதா ? நியமன உறுப்பினர்களாகிய உயர்மட்டக் குழுவைச் சேர்ந்தவர்கள் சத்துணவு மையக் கூடங்களைச் சோதனை செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது. அமைச்சர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அப்படியிருக்கும்போது மக்கள் பிரதிநிதிகள் ஆகிய அந்தத் தலைவர்களுக்கு அதிகாரம் இல்லையா ? ஏற்கனவே நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். பல கோடி ரூபாய் முதலீட்டுடன்





இது நடைபெறுகிறது என்று. ஆடிட் ரிப்போர்டிலே சில தவறுகள் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் மதிச்சியத்திலே சென்று அங்கே அரிசி சரியில்லை, சாம்பார் சரியில்லை' என்று கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று பத்திரிக்கையிலே செய்தி வந்திருக்கிறது. அந்த அதிகாரம் சட்டத்திலே இல்லை என்று சொல்லமுடியாது. காரணம் நகராட்சித் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் அதிகாரத்தின்கீழ் தான் பள்ளிக்கூட நிர்வாகம் சானிடேஷன் வருகிறது. ஆகவே அதைப்பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ.சண்முகம் :** தலைவர் அவர்களே, இன்று உள்ளாட்சி மானியம் நடைபெறுகிறது. அப்போது இந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருந்ததால் இறுதியில் நான் பதில் சொல்கிறபோது அதைச் சொல்கிற வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் இப்போது பிரச்சினை கிளப்பியிருக்கிறார்கள். நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் இதைப்பற்றி என்னிடத்திலே கேட்டார்கள். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படிப்பட்ட ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்களா என்று என்னிடத்திலே கேட்டார்கள். ஏற்கெனவே ஒரு ஆணையைப் பிறப்பித்து இருக்கிறோம், இப்போதல்ல, ஒன்றரை ஆண்டுக் காலத்திற்கு முன்பாக ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சத்துணவுக் கூடங்களிலே யார் யார் சோதனையிடலாம் என்பதற்கு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அந்த ஆணைப்படி அங்கே போகமுடியும். சத்துணவுக் கூடங்களுக்கு எல்லோரும் சென்று சோதனையிட முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் போய் அரிசி சரியாக இல்லை, சாப்பாடு சரியாகப் போடவில்லை என்று கேட்டால் பதில் கிடைக்கும். ஆனால் சோதனை இடுகிறேன் என்று சொல்லி அங்கே போய் அரிசியை எடைபோடுவது, பதார்த்தத்தை எடைபோடுவது எண்ணெய்யை எடைபோடுவது என்றும் அது என்ன இது என்ன என்று கேட்டுக் கொண்டு இருப்பதும் வேலைகளுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதால் ஏற்கெனவே ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே உள்ளவர்கள்தான் சோதனையிடலாம். மற்றவர்கள் எல்லாம் அதிகாரம் அற்றவர்கள் தான். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இத்தனை பேர்கள், பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டால் இன்று பூராவும் இதுதான் இருக்கும். என்னுடைய அறையிலே வந்து யாரும் கேட்கவில்லை. திரு. தமிழரசன் என்னுடைய அறையில் வந்து கேட்டபோது நான் வேண்டாமென்று சொல்லிவிட்டேன். திரு. வெங்கட ரெட்டியை மட்டும் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு).

**தர்மபுரி மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமை :**

Thiru T. R. VENKATA REDDY :—Mr . Speaker Sir, Dharmapuri district, where water scarcity is acute, has not been announced a drought affected area; whereas in Karnataka, a neighbouring State, all the districts have been announced as drought affected areas. But in our Tamil Nadu, only Periar and other four districts have been announced as drought affected areas. Unfortunately Darmappuri, Hosur, Dangkanikottah areas where scarcity is very very acute, have not been announced as drought affected areas. I have been requesting the Hon. Chief Minister from February onwards that something has to be done to save the people from water scarcity but nothing has bean done so far and the people are suffering very much.

*(முற்பகல் 10-20.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கவனத்தை ஈர்த்து விட்டீர்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தந்த மாவட்டத்தினுடைய சூழ்நிலையைப் பொறுத்து அரசுக்கு அறிவிப்பு தருகிறார்கள். 1982-83 ஆம் ஆண்டில், 1983-84 ஆம் ஆண்டில் நிலவியதைப்போன்ற கடுமையான, கொடுமையான வறட்சி நிலை பரவலாகத் தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டது என்று இப்பொழுது சொல்வதற்கில்லை. ஆனால் ஆங்காங்கு அப்படிப்பட்ட சூழ்நிலைகளைப் பொறுத்து என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற்கு ஏற்கனவே உள்ள அதற்கான வாய்ப்பாட்டு முறைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த அடிப்படையில் எடுக்கப்பட்டு அறிக்கை அனுப்புகிறார்கள். தர்மபுரி மாவட்டம் ஓசூர் பகுதி, மற்றவைகளின் நிலை என்ன என்பதைப்பற்றி, கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாகக் கேட்டால் உள்ள நிலைமைகளையும், எடுக்கின்ற நடவடிக்கைகளையும் மற்றவற்றைப் பற்றியும் அரசு அறிவிக்க முடியும். மற்றொன்று, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வறட்சி ஏற்பட்டு—முக்கியமாக குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிற நிலைகளை மாற்றியமைக்க வேண்டுமென்றும், அங்கே குடிநீர் வசதி வாய்ப்புகளைச் செய்ய வேண்டுமென்றும் ஐந்தாறு நாட்களுக்கு முன்னால் மாண்புமிகு முதல்வரவர்கள் உரிய அதிகாரிகளையெல்லாம் அழைத்து வைத்து ஒரு தனிக் கூட்டம் கூட்டி, எல்லா மாவட்டங்களிலும் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி, இதற்கு முன்னுரிமை தர வேண்டுமென்று சொல்லி அதற்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறது நிதியை ஒரு காரணமாகக் காட்டி இந்தப் பணி செய்யப்படாமல்விடப்படக் கூடாது என்று



சொல்லி, அதற்கான திட்டங்களைத் தீட்டும்படியாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளைப் போர்க்கால முயற்சியின் அடிப்படையிலே எடுத்துக்கொள்ள வேண்டும். எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அதே நேரத்தில், குடிநீர் வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அந்தத் துறையினரும் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் ஐந்தாறு நாட்களுக்கு முன்னால் கூட்டிய கூட்டத்தில் தெளிவுபட, தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், உரிய துறையினர்களுக்கும் தெளிவுபட அறிவுறுத்தி இருக்கிறார்கள். அவர்களுடைய செயற்குறிப்பெல்லாம் வந்தபிறகு எடுக்க வேண்டிய நடவடிக்கையெல்லாம் முறைப்படி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி :** தலைவரவர்களே, நான் ஒரு விஷயத்தைப்பற்றிக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். என்னுடைய முன் அனுமதியை நீங்கள் பெறவில்லை. உங்களுக்கு அனுமதி வேண்டாமென்று சொல்லிவிட்டேன். வேறு யாரையும் அனுமதிப்பதாகவும் இல்லை.

**3. அறிவிப்பு.**

**பேரவை அலுவல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நடப்பு கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில், கீழ்க்கண்ட மாற்றங்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் ஒப்புதலின் பேரில் செய்யப் பட்டுள்ளன என்பதைப் பேரவைக்கு அறிவிக்கின்றேன்: —

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை எண்கள் 24, 51 ஆகியவை 23-4-1986 (புதன்கிழமை) அன்றும், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை எண்கள் 12, 25, 45, 47 மற்றும் 56 ஆகியவை 25-4-1986 (வெள்ளிக்கிழமை) அன்றும் எடுத்துக் கொள்ளப் பெறும்.

**4. அறிக்கை அளித்தல்.**

**112-வது விதியின் கீழ் சட்ட அமைச்சரின் திருத்த அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 112-வது விதியின் கீழ் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 7–4–1986 அன்று நீதி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு என்னுடைய பதிலுரையில் சில திருத்தங்களைக் கொடுத்து அவையில் விவரமான அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, நான் சொல்வதைத் தயவு செய்து கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முன் அனுமதி பெறாமல் கொண்டு வருவது நல்லது அல்ல. (குறுக்கீடு) அதை நான் பார்த்துக்கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்புகள்

### (அ) முதியோர் உதவித் தொகை வழங்கப்படுவது குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' சென்னை மாநகரில் பெருமளவு முதியோர், விதவைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் உதவித்தொகை வேண்டி மனுச் செய்து நீண்ட காலமாகியும் இதுவரை உதவித் தொகை கிடைக்காமலிருப்பது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

முதியோர் உதவித் தொகை மனுக்கள் வரப் பெற்றதும் அவைகள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியான நபர்கள் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு வகையின் கீழ் (முதியோர் உதவித் தொகை சாதாரணம், ஆதர வற்ற உடல் ஊனமுற்றோர். ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்கள்) அனுமதிக்கப்பட்ட இடங்களை (Sanctioned Strengtn) அதிகமாக இருக்கும் தகுதியான நபர்கள் காத்திருப்போர் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர்.. ஏற் கனவே உதவித் தொகை பெறுபவர்களில், இறப்பு முதலிய கார ணங்களினால் காலியிடங்கள் ஏற்படும்போது. அந்த காலியிடங் களை காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களைக் கொண்டு அவ்வப்போது பூர்த்தி செய்து உதவித் தொகை அளிக்கப்படு கிறது.

*335-333ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் சென்னை மாவட்டத்தில் தற்போது அனுமதிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :

| வகை. | | எண்ணிக்கை. |
|---|---|---|
| (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) | .. | 5,470 |
| (ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்). | | 510 |
| (இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவைகள்). | | 5,250 |
| (ஈ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்கள்). | | 100 |
| மொத்தம் | .. | 11,330 |

காலியிடங்கள் இன்மையால், மேலும் 1–5–1985 ஆம் நாள் நிலவரப்படி உதவித் தொகை பெறத் தகுதியான கீழ்க்கண்ட எண்ணிக்கையினர் சென்னை மாவட்ட காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர் :—

| வகை. | | எண்ணிக்கை. |
|---|---|---|
| (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) | .. | 370 |
| (ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்). | | 30 |
| (இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவைகள்). | | 890 |
| (ஈ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள்). | | .. |
| மொத்தம் | .. | 1,290 |

இதுபோல முதியோர் உதவித் தொகை அளிப்பதற்கு ஏதுவாக 1–5–1985-ல் உள்ள நிலவரப்படி மாநிலம் முழுவதும் காத்திருப்போர் பட்டியலிலுள்ள 26,268 தகுதியான நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை அளிக்க கூடுதல் இடங்களை ஏற்படுத்த முன்மொழிவுகள் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இதற்காக ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ. 2.24 கோடி செலவாகும். இதற்கான அரசாணை வெளியிடப்பட்டதும் இவர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 1–5–1986-ல் காத்திருப்போர் பட்டியலில் உள்ள எண்ணிக்கை விவரங்களைத் தெரிவிக்குமாறும் தற்போது மாவட்டாட்சியர்கள் கோரப்பட்டுள்ளனர்.

நிலுவையாக உள்ள மனுக்களை உடனடியாக முடிவு செய்யவும், மரணம் முதலிய காரணங்களினால் அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களை உடனுக்குடன் காத்திருப்போர் பட்டியலிலிருந்து பூர்த்தி செய்யுமாறு சென்னை மாவட்டாட்சியர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

*திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 1985 ஆம் ஆண்டு வரையில் 1,290 பேர்கள் என்றும், 1986 ஆம் ஆண்டு வரையில் இந்த விவரம் இல்லை என்றும், அதுவும் காலி இடங்களுக்கு இவர்கள் நிரப்பப்படுவார்கள் என்றும் குறிப்பு வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மாண்புமிகு முதல்வரவர்கள், விண்ணப்பித்து நிலுவையில் இருக்கின்ற அனைவருக்கும் முதியோர் உதவித் தொகையும், அனாதைகள், விதவைகள் போன்றவர்களுக்கு உதவித்தொகையும் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆக, அப்படி இந்த நிலுவையில் இருக்கிற 1,290 பேர்களையும், 1986 முடிய இருப்பவர்களையும் சேர்த்து. இந்தக் காலி இட பட்டியலுக்குப் பதிலாக அத்தனை பேர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து எவ்வளவு பேர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும்முதியோர் உதவித்தொகை பெறுவதற்கானதகுதியான நபர்கள் இருக்கிறார்கள் என்று அரசின் மூலமாகக் கேட்கப்படுகிறது. அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விவரங்களைக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அதை வைத்து, ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசு பரிசீலித்து, அதற்கேற்றவாறு இந்த அறிக்கையிலேயே விவரமெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1985 ஆம் ஆண்டு எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், அதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் என்று பார்த்தால், 1985 ஆம் ஆண்டு 26,268 தகுதியான நபர்கள் இருக்கிறார்கள். அதற்காக ரூ. 2.24 கோடி செலவாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நடவடிக்கை மிக விரைவில் எடுக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுள்ள, நிலுவைப் பட்டியலில் இருக்கிற அனைத்து நபர்களுக்கும் முதியோர் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இன்னொன்று, இந்த முதியோர் விண்ணப்பிக்கின்றபோது, வயதானவர்கள், அநாதைகள் தாசில்தார் அலுவலகத்திற்கு அடிக்கடி சென்று வர முடியவில்லை. தாசில்தார் அலுவலகத்தில் காலம் கடத்தி, நாளைக்கு வா, அடுத்த மாதம் வா என்று காலம் கடத்துகிறார்கள். எனவே, முதியோர் விண்ணப்பித்தால் 30 நாட்களுக்குள் அவர்களை விசாரணை செய்து, நிலுவைப் பட்டியலில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? பெறுகின்ற விண்ணப்பத்திற்கு சீரியல் நெம்பர்



போட்டு, அந்த விதவைகளின் இல்லங்களுக்கே சென்று ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து விவரங்கள் வந்தபிறகு ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான் ஒவ்வொரு ஆண்டும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் 1986 ஆம் ஆண்டுக்கான விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது. மொத்தம் 19 மாவட்டங்கள் இருக்கின்றன. எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கொடுத்த பிறகுதான் தகுதியான நபர்கள் எவ்வளவு பேர்கள் என்று தேர்வு செய்து, அதற்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்து, பிறகு எல்லா மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து, முதியோர் உதவித் தொகை கொடுக்கப்படும்.

முதியோர் உதவித் தொகைக்கான மனுக்களை தாசில்தாரிடம் கொடுக்கின்றபொழுது சரியான முறையில் விசாரிக்கவில்லையென்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் தாசில்தார்கள் முதியோர் உதவித் தொகை மனுக்களை விசாரிக்க வேண்டும். அதைப் பரிசீலனை செய்து தகுதியானவர்களைத் தேர்வு செய்ய வேண்டும். அதுதான் நடைமுறையில் நடந்து வருகிறது. எந்தத் தாசில்தார் சரியான முறையில் தேர்வு செய்யவில்லை, விசாரிக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவார்களானால் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) ஓட்டேரி நல்லா கால்வாய் மராமத்து செய்யப்பட வேண்டியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சு. பாலன், பரிதி இளம்வழுதி, சோ. மா. இராமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, '' ஓட்டேரி நல்லா கால்வாயின் ஆழம் மண் நிரம்பி மேடாக இருப்பதால், பெருமழை பெய்கிற நேரத்தில் கால்வாயில் தண்ணீர் போக முடியாமல் கல்யாண மேஸ்திரி தோட்டம், கொசப்பேட்டை, ஓட்டேரி, புளியந்தோப்பு, எம். எம். கார்டன், வியாசர்பாடி போன்ற குடிசைப் பகுதிகளில் ஆண்டு தோறும் வெள்ளத்தால் பாதிக்கப்படுவது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டேரி நல்லாவின் தண்ணீர் வடக்கு பங்கிங்காம் கால்வாயில் விழுந்து கூவம் வழியாகக் கடலை அடைகிறது. இப் பகுதியில் சுமார் 1.5 மீட்டரிலிருந்து 2.00 மீட்டர் வரை தூர் சேர்ந்து இருப்பதால் தண்ணீர் தங்கு தடையின்றி கூவத்தில் விழவில்லை. எனவே தண்ணீர் தேங்கி நிற்கிறது. தண்ணீர் தேங்காமல் இருப்பதற்காக கி.மீ. 5.30-லிருந்து கி.மீ. 10.84 வரை மண் திட்டுக்களை எடுப்பதற்கான வேலைகளுக்காக ரூ.2.30 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மேற்கண்ட வேலைகள் வருடாந்திர பராமரிப்புத் தலைப்பின்கீழ் மேற்கொள் ளப்பட்டுள்ளது. இப்பணியை மேற்கொண்டுள்ளதால், ஓரளவு வெள்ளப் பாதிப்பு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.. மேலும், ஓட்டேரி நல்லாவின் கரைகளைப் பலப்படுத்துவதற்கு ரூ. 22 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது. இம்மதிப்பீட்டை நடப்பு விலை வீதத்திற்கு மாற்றி அரசுக்கு அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் கேட்கப்பட்டுள்ளார்.

(முற்பகல் 10—30.)

திரு. ஈ, பாலன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1.5 கிலோ மீட்டரிலிருந்து 2.00 கிலோ மீட்டர் வரையில் மண் நிரம்பி இருக்கிறது என்று சொன்னார்கள். இதன் காரணமாக ஆண்டுதோறும் பெரும் மழை பெய்கிறபோது அந்தப் பகுதியிலுள்ள குடிசைகள் எல்லாம் தண்ணீர் நிரம்பி மக்கள் கஷடப்படுகிறார்கள். வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களை பள்ளிக்கூடங்களில் தங்க வைப்பதும், மாநகராட்சி உணவு வழங்குவதும் போன்ற ஏற்பாடுகளால் பணம் விரையம் ஆகிறது. ஆகவே, உடனடியாக அந்தப் பகுதி மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, தூர்ந்திருக்கிற மண்ணை அகற்றி, தூர் வாரி, தண்ணீர் தேங்காமல் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் இத்தகைய இடர்ப்பாடுகள் தவிர்க்கப்பட தீவிர திட்டங்கள் தீட்டப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றுதான் இந்த ஓட்டேரி நல்லாவில் தண்ணீர் தங்குதடையின்றி போய்ச் சேரவேண்டும் என்பதற்கான பணி. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல 1.5 கிலோ மீட்டரிலிருந்து 2.00 கிலோ மீட்டர் வரையில் மண் சேர்ந்திருக்கிறது. அந்த சேற்றையும் தூரையும் களைவதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே அரசு வருடாந்திர பராமரிப்புத் தலைப்பின்கீழ் மேற்கொண்டிருக்கிறது. அது போதாது என்று சொல்லி, கூடுதலாக ஓட்டேரி நல்லாவின் கரைகளை வலுப்படுத்தி





குடிசை வாழ் மக்களுக்கு பாதுகாப்பு தரக்கூடிய அளவுக்கு நிலைமைகள் உருவாகி, 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மதிப்பீடு கடந்த ஆண்டு விலை வீதத்தில் போடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு விலை உயர்ந்திருக்கும். ஆகவே, நடப்பு ஆண்டு விலை வீதத்திற்கு மதிப்பீட்டை திருத்தி அனுப்புமாறு உரிய அதிகாரியிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு அரசு மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவரவர்களே, தாதாசாகிப்கான் பாலம் முதல் டாக்டர் அம்பேத்கார் பாலம் வரையில் பி. அன் சி. மில் உள்ளடங்கிய கால்வாய் முழுமையாக மண்ணால் மூடப்பட்டு மேடிட்டு இருப்பதால் உடனடியாக அந்தப் பகுதியில் மட்டுமாவது தூர் வார ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல 5.30 கிலோ மீட்டரிலிருந்து 10.84 கிலோ மீட்டர் வரையில் இப்போதுள்ள மண் திட்டுகளை அகற்றுவதற்கு ஏற்கெனவே 2.30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதி இந்த இடத்திற்குள் வருகிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியவில்லை. அந்த இடத்திற்குள் உட்பட்டிருந்தால் தூர் வார உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த ஓட்டேரி நல்லா கால்வாய் அண்ணா நகரிலிருந்து புறப்பட்டு செம்மப்பேட்டை வழியாக வந்துகொண்டிருக்கிறது. இதற்கு முன்பு குடிசைமாற்று வாரியத் தலைவராக திரு. அரங்கண்ணல் அவர்கள் இருந்தபோது அங்கே போடப்பட்டிருந்த மதில் சுவர் உடைந்துவிட்டது. நான் சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் கூட இதைப்பற்றி எடுத்துச் சொன்னேன். இதுவரையில் உடைந்த பகுதி புதுப்பிக்கப்படவில்லை, இப்போதாவது உடனடியாகப் புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** தலைவரவர்களே, இங்கே என்னுடைய கவனத்தை ஈர்த்திருப்பது வேறு ஒரு காரியத்திற்கு. ஓட்டேரி நல்லாவில் மண் மேடிட்டு, தண்ணீர் செல்ல முடியாமல் இருக்கிறது; அந்த மண்மேடு அகற்றப்படுமா என்பது பற்றி கேட்டிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய விவரம் ஒன்றை தந்திருக்கிறார்கள். அதுபற்றி அவர்கள் தனியாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ அல்லது கேள்வியாகவோ போட்டால் உரிய பதில் இந்த மன்றத்திற்குத் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. வரவு செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

### கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,77,32,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் ஜெய்வாய்பாய் நகராட்சி மேனிலைப்பள்ளியின் சிலவகுப்பறை மேற்கூரைகள் இடிந்து விழும் நிலையிலுள்ளது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,77,32,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பள்ளிகளை அரசே எடுத்துக்கொண்டதால் பள்ளிகளின் பராமரிப்புக்காக விதிக்கப்படும் லோக்கல் செஸ் சர்சார்ஜ் மூலம் வசூலாகும் தொகையை அந்தந்த ஊராட்சிகளுக்கே பிரித்து வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,32,61,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நாகை வட்டத்தில் ஊராட்சிகளுக்கு ஒரு சமுதாய மண்டபமும் கிராமப்புற இணைப்புச் சாலைகளை தார் சாலைகளாக மாற்றுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,32,61,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''



திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சத்துணவு அமைப்பாளர்களை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு பயன்படுத்தக்கூடாது என்று ஆணை இருந்தும், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் அமைப்பாளர்களை பயன்படுத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,77,32,61,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளுக்கான விளக்கவுரைகள்* ஏற்கெனவே அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. காலத்தைக்குறித்து அவைகளை நான் படித்தாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஏதேனும் கருத்துக்களைத் தெரிவிப்பார்களானால் இறுதியிலே அதற்கான விளக்கத்தை நான் பதிலுரையிலே சொல்ல வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. கி. ராமன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம் ஆகிய இந்த இரண்டு துறைகளும் பெரிய துறைகளாகும். ஆனால் இந்த இரண்டு துறைகளைப் பற்றி விவாதிக்க ஒருநாள்தான் கொடுத்திருக்கிறீர்கள். ஒரு நாள் போதாது என்று நினைக்கிறேன். அவசியமானால் இன்று மாலையும் சபையைக் கூட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கவேண்டும். இல்லை என்றால் அடுத்த கூட்டத்திலாவது இது பற்றி விரிவாக விவாதிக்கின்ற வகையில் இரண்டு நாட்கள் இதற்காக ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற இந்த மானியக் கோரிக்கையைப் பற்றி சில கருத்துக்களை நான் தெரிவிக்கிறேன். வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழை மக்களுக்கு ஏற்றம் தரும் வகையில் சில வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

---

* 333–418-ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV ஆக அச்சிடப்பெற்றுள்ளன

[திரு. கி. ராமன்] [1986 ஏப்ரல் 16

சீரிய முறையில் திட்டமிட்டு பல திட்டப் பணிகளைச் செயல் படுத்துவதோடு, கண்காணிப்பையும் முனைப்புடன் செய்து சிறந்த முறையில் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்றும், ஏற்கெனவே அவ்வாறு நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது என்றும் கொள்கை விளக்கக் குறிப்பு தெரிவிக்கிறது.

வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களைப் பொறுத்த வரையில் 6-வது ஐந்தாண்டுத் திட்ட தொடக்க காலத்தில் 52.8 சதவீதம் இருந்ததாகவும் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் அதாவது 1984–85 முடிவில் 39.6 சதவீதமாக குறைந்துள்ளதாகவும், 7-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 23 சதவீதமாக குறைக்கும் நோக்கம் உள்ளதாகவும், 8-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 10 சதவீதமாக குறைப்பது நம்முடைய குறிக்கோள் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பு கூறுகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

6-வது ஐந்தாண்டுத் திட்ட தொடக்க காலத்தில் 52.8 சதவீதமாக இருந்தது 39.6 சதவீதமாகக் குறைந்துள்ளது என்பதைப் பொறுத்த வரையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை இவ்வளவு கணிசமாகக் குறைந்துள்ளது என்று சொல்கிறபோது இந்தப் புள்ளி விவரம் எந்த அடிப்படையில் சேகரிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுடைய பதிலுரையில் விளக்குமாறு நான் வேண்டிக் கொள்கிறேன். இந்தப் புள்ளிவிவரம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனை குடும்பங்களுக்குக் கடன் உதவி செய்யப்பட்டது என்ற அடிப்படையில் சேகரிக்கப்பட்டிருக்கிறது என்று என்னைப் பொறுத்த வரையில் நான் எண்ணுகிறேன். ஆனால் கடன் உதவி வாங்கிய குடும்பத்தினர் எல்லாம் வறுமைக் கோட்டைத்தாண்டி விட்டார்களா என்பது சர்ச்சைக்குரிய விஷயமாகும்.

நடைமுறையில் நாம் பல குறைபாடுகளைக் காண்கிறோம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பார்க்கும் போது நடைமுறையில் எத்தனையோ குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் வண்டி, வண்டி மாடுகள், கறவை மாடுகள் வாங்கவும், ஆட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை அமைக்கவும், சிறிய கடைகள், சைக்கிள் கடைகள் போன்றவை வைக்கவும், வெட் கிரைண்டர், சைக்கிள் ரிக்ஷா போன்ற பொருட்கள் வாங்கவும் அரசு மானியத்துடன் கடனுதவி கொடுக்கப்படுகிறது.

(முற்பகல் 10-40)

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அதாவது 1–4–1980 முதல் 31–3–1985 முடிய, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தம் 13 இலட்சத்து 96 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவிகள் அளிக்கப்பட்டன என்றும், இக் குடும்பங்களுக்கு



1986 ஏப்ரல் 16] [திரு. கி. ராமன்]

உதவியாக அளிக்கப்பட்ட தொகை ரூ. 14,661 இலட்சம் என்றும் கொள்கைக் குறிப்பில், 7வது பக்கத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் எவ்வளவு குறைபாடுகளுடன் செயல்படுகிறது என்பதை நான் மிகவும் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1–10–1985 ஆம் நாளிட்ட 'இந்து' இதழில் மிக விவரமாக, தெளிவாக, ஆழமாக ஒரு கட்டுரை வந்திருந்தது. அந்தக் கட்டுரையைப் பற்றி ஆளுநர் உரையிலே பேசும்போதுகூட, நான் அதன் அடிப்படையில் சில கருத்துக்களை தெரிவித்துள்ளேன். இப்போது பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் அதிலிருந்து சில விவரங்களைப் படிக்க விரும்புகிறேன். அதாவது ஐ.ஆர்.டி.பி. திட்டம் எந்தவகையில் செயல்பட்டு வருகிறது. மக்களுக்கு உண்மையாக பயன்படுகிறதா அல்லது இடையிலுள்ள தரகர்கள் மற்றவர்கள் அதனைப் பயன்படுத்துகிறார்களா என்ற விவரம் இந்தக்கட்டுரையில் விபரமாக காணப் படுகிறது. முதலாவதாக

"Bankmen have their tale of woe. They have little say in the selection of beneficiaries. Often they are unhappy that not every person recommended by the B.D.O. is eligible for help. A banker in Ramanathapuram district confessed that he had issued IRDP loans to the wives of many government employees. "They will not be caught because they are repaying the loans promptly," he said.

என்பது முதல் குறிப்பு. அதாவது சர்க்கார் ஊழியர்கள் தங்கள் மனைவி பெயரில் ஐ.ஆர்.டி.பி. லோன் வாங்கியிருப்பதாக கூறப் பட்டிருக்கிறது.

இரண்டாவதாக,

"....A banker in Valliyoor area (Tirunelveli district) was struck by the promptness in the payment of loan instalments by 29 beneficiaries who were supposed to have been helped to buy bullock carts. On investigation, he found that a rich man in the locality had taken all the 20 loans after paying a paltry sum to the poor beneficiaries and used the loan amounts for his own needs. He, however, regularly paid the instalments in the names of those for whom the loans were issued. Quite a few cases of this nature have been detected in Kanyakumari district also....

இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ஒரு வசதி படைத்த பணக்காரர் 20 பேர்கள் பெயரில் கடன் வாங்கி அவருடைய சொந்தக் காரியங்களுக்கு உபயோகித்துக் கொண்டதாக குற்றச்சாட்டு. மூன்றாவதாக,

"....Shocking was the case of 'ghost beneficiaries' in Pasumpon Muthuramalingam district. Here, the bank which had advanced the loans under the IRDP found that most of th

reminders to defaulters were being returned by the postal authorities with the remark 'addressee not traceable'. The B-D.Os. concerned plead helplessness because most of the beneficiaries were either 'transferees' from other ; blocks or had given false particulars with the intention of cheating."

இதிலுள்ள சுருக்கம் என்னவென்றால், தப்பான, பொய்யான முகவரிகளை கொடுத்து பல பேர்கள் கடன் உதவிகளை பெற்று இருக்கிறார்கள். பேங்கிலிருந்தும் பணம் திருப்பிக் கேட்டு ரிமைண்டர் போகும்போது போஸ்டல் அத்தாரிட்டீஸ் அந்தக் கவரை திருப்பி அனுப்பியபோது விலாசதாரர்கள் காணப்படவில்லை என்ற குறிப்புடன் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள்.

நான்காவதாக, "

....A bank in Karaikudi found that its cycle shop loans were not being utilised for the purpose for which they were issued. There had been cases where cycle dealers cashed the cheques drawn in their favour for a 10 per cent commission and handed over the balance amount, instead of the cycles, to the loaness who, in turn, used the money for consumption purposes,"

சைக்கிளை வாங்குவதற்காக கொடுக்கப்பட்ட கடன் தொகையில் சைக்கிளை கொடுப்பவர்களுக்கும், கடன் உதவி வாங்குபவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக பத்து சதவிகிதம் கமிஷன் சைக்கிள் கடைகாரருக்கும் பாக்கியுள்ள தொகையை கடன் உதவி பெற்றவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அதோடு, கறவை மாடுகள் வாங்குவதில் மிக மிகப் பெரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. அதை ஐந்தாவதாக சொல்ல வருகிறேன்....

".... Most of the irregularities reported are in the assistance granted for acquiring mileh animals, sheep and goats, Several beneficiaries have talked of a 'colleetive loot' of the loan and subsidy by the bank manager, the rural welfare officer, the milk society president and the veterinarian. The beneficiaries are aware of the loot, but they rarely protest as they got some ready money by reselling the substandard animals supplied to them...."

இந்த ஐந்து குறிப்புகளை இந்துப் பத்திரிகை சொல்கிறது. கடைசியாக எப்படி முடிக்கிறார்கள் என்றால் 'Political influence, corruption, irregularities in assistance and collusion among bankmen officials and sometimes even the beneficiaries themselves are obstacles to the goal of lifting famaites above the poverty line.





The answer lies perhaps in making the orientation economic and the aid substantial through a comprehensive machinery enlisting the co-operation of voluntary agencies'

இதுதான் இந்துப் பத்திரிகையின் கட்டுரையின் சுருக்கம் ஆகவே இதனுடைய அடிப்படையில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் அரசினுடைய வறுமை ஒழிப்புத் திட்டங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களை உயர்வடையச் செய்வதற்காகத்தான் என்றாலும் நடைமுறையில் இந்தத் திட்டங்கள் எந்த ஏழைகளுக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. இந்த விவரம் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா? அப்படி கொண்டு வரப்பட்டதென்றால் என்ன நடவடிக்கை அதன்மீது எடுக்கப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

இதே தவறுகளை நானே கண்கூடாகக் கண்டிருக்கிறேன். இந்த தவறுகளை முழுமையாக வெற்றிகரமாகச் செய்கிற விதத்தில் என்னுடைய தொகுதியில் தெற்குவெங்காநல்லூர் கிராம நிர்வாக அதிகாரி திரு. பகவதிபெருமாள் பிள்ளை என்பவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நபர்களுக்கு காமராசர் மாவட்டத்தைச் சேர்ந்த கூனங்குளம் என்ற கிராமத்தில் பொய்யான முகவரிகளைக் கொடுத்தும், இராஜபாளையம் நகரில் வாழும் மக்களுக்கு பல பொய்யான கிராம முகவரிகளைக் கொடுத்தும் "சிறு விவசாயிகள், விவசாயக் கூலிகள்" என்று சான்றிதழ்கள் அளித்து இருக்கிறார்கள். அவருக்கு எதிராக இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நானே பலமுறை வாய்மூலமாகவும், எழுத்து மூலமாகவும் இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் புகார்கள் கொடுத்தும் திரு. பகவதிபெருமாள் பிள்ளை மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இவரைப் போல இன்னும் எத்தனை பேர்கள் செயல்பட்டிருப்பார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இதுபோன்ற பொய்ச்சான்றிதழ்கள் கொடுக்கப்படுவதால் உண்மையாகவே வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஏழை எளியவர்களுக்கு அரசினுடைய திட்டங்கள் பலனளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்துப் பத்திரிகையில் வந்திருப்பதைப் போல சமீபத்தில் 20—3—1986-ல் வைக்கப்பட்டிருக்கிற

Report of the Comptroller and Auditor General of India for 1983-84.

51-ம் பக்கம் ('Selection of beneficiaries') என்ற தலைப்பிலே சில கருத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிக

நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லையென்பதால், அது பற்றி சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன். உண்மையாகவே Poorest of poor) அதாவது ஏழைகளிலும் ஏழைகள் வருடத்திற்கு 175 ரூபாய் வருமானமுள்ள ஏழைகளைப் பற்றி அரசாங்கம் கவலைப் படவேயில்லை. ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக செயல்படுகிற இந்தத் திட்டங்கள் ஏழைகளுக்குப் போய் சேரவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல 57-ம் பக்கம் கொடுக்கப்பட்டிருப்பது தான் மிகமிக முக்கிய மானது. அதாவது, கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுத்திருக் கிற புள்ளிவிவரம் சரியானதா இல்லையா என்ற சந்தேகத்தைக் கிளப்பக்கூடிய வகையில், மிகமிக அழுத்தமாக ஆதாரத்தோடு இந்த ரிப்போர்ட் தெரிவிக்கிறது. 57 ஆம் பக்கம்.

With the permission of the Chair, I would like to read.

'Test check in Audit of the reports of detailed household survey of the families assisted during 1980-81 to 1982-83 conducted in 5 blocks in 2 districts by the respective B.D.O.s disclosed that out of the total of 4,997 beneficiaries, only 2 families crossed the poverty line'.

(முற்பகல் 10–50)

இதைவிட ஆதாரம் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அதாவது 4,997 கடன் உதவி பெற்ற குடும்பங்களில், இரண்டே இரண்டு குடும்பங்கள்தான் வறுமைக் கோட்டைத் தாண்டி உள்ளன என்று இந்த ரிப்போர்ட் கூறுகிறது. அடுத்து

Information received from 14 out of 34 blocks under the jurisdiction of one Agency in response to instructions of Government, showed that of 20,615 families assisted till 1982-83, only 1011 families had crossed the poverty line by December 1983.'

20,615 குடும்பங்களில் 1,011 குடும்பங்கள்தான் வறுமைக் கோட்டைத் தாண்டி உள்ளனர் என்று இந்த ரிப்போர்ட்டிலே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் ஏட்டில் காணும் சமுதாய நல வளர்ச்சி பற்றிய புள்ளி விவரங்கள் உண்மையானது அல்ல என்று தெரிகிறது. ஆகவே சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் உண்மையாக ஏழை எளிய மக்களுக்குப் பிரயோசனப்படவேண்டும் என்றால், தற்போது காணப்படும் குறைகள் தவிர்க்கப்படவேண்டும். சம்பந்தப் பட்ட அதிகாரிகள், அலுவலர்கள் They should function wih a sense of dedication.





அடுத்ததாக, ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் குடிநீர் பிரச்சனை மிகமிகக் கடுமையாக இருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமீபத்தில் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக 13 கோடி ரூபாயை அனுமதித்து இருக்கிறார்கள். இது மிக மகிழ்ச்சிகர மான காரியம். நான் ஒரு குறிப்பிட்ட கிராமத்தை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். இராசபாளையம் ஒன்றியம் சொக்க நாதபுத்தூர் என்ற கிராமத்தில் 5 வருடங்களுக்கு முன்னால் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு அது பயன்படாத வகையில், பழுதடைந்த நிலைமையில் அதைக் கைவிடவும் முடியாமல், புதிய தொட்டி கட்டவும் முடியாமல் யாருக்கும் பிரயோசனப்படா மல் இருந்து கொண்டு இருக்கிறது. அதனால் அந்தக் கிராம மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

அடுத்ததாக கிராம சுகாதார நிலையங்கள். ராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டே இரண்டு கிராம சுகாதார நிலையங்கள் உள்ளன. ஜமின் கொல்லிங்கொண்டான் மற்றும் சத்திரப்பட்டி. மேலும் கிழவிகுளம் என்ற கிராமத்தில் 1981-ல் 5 ஏக்கர் நிலமும், 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டும், இது வரையில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை மிக வருத் தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளில் நடத் தப்படும் சத்துணவு மையங்களைப் பற்றிச் சொல்ல விரும்பு கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட கடந்த 2 நாட் களுக்கு முன்பு, மதுரையில் சோதனை செய்ததில் அரிசி சரி யில்லை, சாம்பார் சரியில்லை என்ற குறைபாடுகள் காணப் பட்டன. நான் மிகச் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள விரும்பு வது என்னவென்றால், இந்தச் சத்துணவு மையங்களுக்கு காய் கறிகள் சப்ளை செய்யும் காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்பை உடனடியாக நீங்கள் ஒழிக்கவேண்டும். இந்த சங்கத்தில், உண்மையாக காய்கறி உற்பத்தி செய்யும் நபர்கள் யாரும் இல்லை. யாரோ வியாபாரிகள் எல்லாம் சேர்ந்து மார்க்கெட்டிலே இருந்து காய்கறிகளை வாங்கி 1 ரூபாய் விற்கக் கூடிய காய்கறிகளை 2 ரூபாய்க்கு பில்போட்டு தருகிறார்கள். சில சமயங்களில் அதிகமான விலைக்குப் பில் கொடுத்தும் காய் கறிகள் சப்ளை செய்யப்படுவதில்லை என்ற விவரத்தை நான் மிக வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரை யில், குடிசைக்கு ஒரு விளக்கு என்ற இலவச திட்டத்தை என். ஆர். இ. பி., ஆர். எல். இ. ஜி. பி., தாட்கோ அடிப்படையிலே கட்டப்படும் வீடுகளுக்கும் இலவசமாக கொடுக்கவேண்டும் என் பதை ஆதி திராவிட மக்கள் சார்பில் மிகப் பணிவன்போடு

வேண்டிக்கொள்கிறேன். பொதுவாக, ஊராட்சி ஒன்றியமானாலும், நகராட்சியானாலும், சுகாதாரக் சீர்கேட்டைக் காண்கிறோம். கிராமங்களிலும் எங்கும் கழிப்பிடங்கள் வசதிகள் கிடையாது. அப்படியே கழிப்பிடங்கள் இருந்தாலும், அதை உபயோகப்படுத்த முடியாத நிலைமையில் சீரழிந்து இருக்கின்றன. அதேபோல் நகர மக்களுக்கும் போதுமான கழிப்பிட வசதிகள் கிடையாது. குறிப்பாக பெண்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். நான் அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்வது, என்னவென்றால் கிராம மக்கள் நகரவாழ் மக்கள் குறிப்பாக பெண்கள் இதனால் அதிகமாக அவதிப்படுவதால் குடிநீர்ப் பிரச்சினைக்கு அடுத்தபடியாக கழிப்பறை பிரச்சனை இருக்கிற காரணத்தால் வேண்டிய கழிப்பிட வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

துப்புரவு தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பது மிகமிக இன்றியமையாததாகும். அடுத்து தன்னிறைவுத் திட்டம். இது ஒரு நல்ல திட்டமாக செயல்பட்டு வந்தது. பல நல்ல காரியங்களைச் செய்து வந்திருக்கிறோம். இன்னும் பிளாக் வாரியாக பிரித்து, இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, என்னை இந்த நிலைக்கு ஆளாக்கி சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த எங்களது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களுக்கும் எனது உளம் கனிந்த பாராட்டினை தெரிவித்துக்கொண்டு உள்ளாட்சி மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள அனைத்து கோரிக்கைகளையும் இங்குவைக்கிறேன். எனது உப்பிலியாபுரம் தொகுதி எல்லா வளங்களிலும் பின்தங்கி இருந்தாலும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் பெருங்கருணையினால் பல நற்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஏழை எளிய மக்கள் சுதந்திரத்தின் மகிமையை செவ்வனே அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். என்பதை பெருமழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குடிதண்ணீர் பற்றாக்குறை ஒவ்வொரு கிராமத்தையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தாலும் இவ்வரசு அதை அறிந்து தக்க நடவடிக்கை எடுத்ததன் பேரில் போர்வெல்கள் போடப்பட்டு ஓரளவு தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. இருந்தாலும் பருவ மழை தவறிய காரணத்தால் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் அவதிக்குள்ளாகி உள்ளார்கள். விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதை அறிந்து இந்த





நல்ல அரசு என்னுடைய தொகுதியை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சி சகோதரர்கள் குறை சொல்லவாய்ப்பு கொடுக்காமல் தமிழக சாம்ராஜ்யத்தின் முதல்வராக திகழ்ந்து வரும் இதய தெய்வம் மேலும் பல நன்மைகளை பாமர மக்களுக்கு வழங்கும்பொருட்டு தீவ்ர திட்டங்களை தீட்டி வருகிறார். எனது தொகுதியிலே பச்சமலையில் மூன்று பஞ்சாயத்துக்கள் அடங்கியுள்ளன. பச்சமலையில் சேலம் மாவட்டத்தை சேர்ந்த தலைவாசல் தொகுதியிலும் பச்சமலை அடங்கியுள்ளது. எனவே இந்த பச்சமலைப் பகுதியை ஒரு தனி ஊராட்சி ஒன்றியமாக்கித் தரவேண்டும் என்றும், தனி ஊராட்சி ஒன்றியமாக பச்சமலை அமைந்தால்தான் அங்கு வாழும் மலைவாழ் மக்கள் முன்னேற்றம் அடைய முடியும் என்பதை நான் பணிவோடு வேண்டி விரும்பி தெரிவித்துக் கொள்கிறேன்.

பச்சைமலையிலே உள்ள 35 கிராமங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே அந்த கிராமங்களுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பச்சைமலையில் 40க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சாலை வசதியே இல்லாமல் இருக்கின்றன. உடனே அந்த கிராமங்களுக்கு ஆர்.எல்.ஈ. ஜி.பி. திட்டத்தின் மூலமாக சாலைவசதி அமைத்துக் கொடுக்க இந்த அரசினை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலே விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே அய்யாற்றிலே--கொல்லிமலை, அய்யாறு அணையைக் கட்டிக்கொடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே மின் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. இந்த மின் பற்றாக்குறையைப் போக்க கொப்பம்பட்டியிலுள்ள 33 கே.வி. மின் உற்பத்தி நிலையத்தை 110 கே.வி.யாக மாற்ற அரசு உத்தரவினை பிறப்பிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க காவிரியிலிருந்து குடிநீர் வழங்க வேண்டுகிறேன். இத்துடன் தங்கநகர் பகுதியில் குடிநீர் வாரியம் ஒரு ஆய்வு செய்துள்ளது இதனைச் செயல்படுத்துவதால், அதனைச் சுற்றியுள்ள ஆங்கியம், அழகாபுரி, ஆர். கோம்பை, கோனேரிப்பட்டி பச்சபெருமாள்பட்டி, நடுப்பட்டி, ஆல்துடையான்பட்டி, நெட்ட

வேலம்பட்டி, சாலக்காடு, ஏரகுடி, ஆகிய கிராமங்கள் பயனடையும். எனவே இந்தத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த இவ்வரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அரசு கொடுக்கும் நல்ல திட்டக் கடன்களை, அதிகாரிகள் செய்யும் தவறினால் அத்தொகை அம்மக்களுக்கு சரிவர போய் சேருவதில்லை. எனவே இவ்வாறு தவறு செய்யும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பச்சமலைக்கு பஸ் விடுவதாக புதிய மினி பஸ் ஒன்றைக் கட்டி, பச்சமலை ரோடு பழுதடைந்துள்ளதால் அந்த மினி பஸ் 8 மாதங்களாக, தற்போது மலை அடிவாரம் வரை சென்று வருகிறது. சோபனாபுரத்தில் இருந்து டாப் செங்காட்டுப்பட்டி செல்லும் ரோட்டை, உடனடியாக தார் ரோடாக மாற்றியமைக்க ஆவனசெய்து கொடுக்குமாறு நான் இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11—00)

பச்சை மலைப் பகுதியிலுள்ள கிராமங்களுக்கு எந்த விதமான பாதை வசதியும் இல்லை. எனவே மலை வாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின் கீழ் அனைத்து கிராமங்களுக்கும் இணைப்புப் பாதை போட்டுக் கொடுத்து, போக்குவரத்து வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையினை சரிவர அம்மக்களுக்கு பயன்படுத்தாமல், மற்றவர்களுக்கு பன்படுத்துவது வருத்தத்திற்குரியது. உதாரணமாக தற்பொழுது கீரம்பூர் செங்காட்டுப்பட்டி கிராமத்தில் சாக்கடை அமைக்கப்படுவது இதற்கு காரணமான அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் உதவித் தொகை மலை வாழ் மக்களுக்கு பயன்பெறும் வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைப் பகுதியிலே வாழும் மக்கள் வானம் பார்த்த பூமியையே பயிர் செய்து உண்ண உணவின்றி கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு கிணறு வெட்டி பம்புசெட் வைக்க மின்சார முன்னுரிமை கொடுத்து, கடன் உதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். துறையூருக்கு பைபாஸ் ரோடு அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். துறையூரிலே இருக்கும் பெண்கள்



பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் ஒரு ஐ.டி.ஐ ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் எந்த ஒரு தொழிலும் செய்ய இயலாத நிலையில் முன்னேற்றம் அடையாத நிலையில் இருப்பதால் அங்கே கல்வி கற்கும் மாணவ மாணவியர்களுக்கு அங்கே ஒரு ஐ.டி.ஐ. ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

பச்சைமலையில் தோணூர் கிராமத்தில் கால்நடை ஆஸ்பத்திரி கட்ட அந்த ஊர் பொது மக்களால் சர்வே.எண். 111-ல் உள்ள 2 ஏக்கர் 85 சென்ட் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமிட்டுள்ள இந்த இடத்தினை விட்டுவிட்டு கீழே உள்ள பல மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள வேங்கடத்தாணூர் கிராமத்திற்கு இந்த மருத்துவ மனையை கொண்டு போவதாக பேரூராட்சி மன்ற பெருந்தலைவர் கூட்டத்தில் தீர்மானம் போட்டதாக தெரியவருகிறது அதனை தவிர்த்து பழைய சர்வே எண். 111 லேயே இந்த மலைவாழ் மக்களுக்காக அந்த கால்நடை மருத்துவ மனையை அந்த தோணூர் கிராமத்திலேயே அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்குள்ள ஆடு, மாடு, கோழி, பன்றி போன்றவைகளை நோய் தடுக்கும் பொருட்டு இந்த கால்நடை மருந்தகத்தை தோணூர் கிராமத்திலேயே அமைத்துத் தரவேண்டும் என்று அரசை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் பல நன்மைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மக்களுக்கு செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டு கொண்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ரா. சின்னச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அரசின் சார்பாக வைக்கப்பட்டுள்ள சமுதாய நல வளர்ச்சிப் பணிகள், நகராட்சிகள் என்ற தலைப்பின்கீழ் உள்ள மானிய கோரிக்கை எண் 28ன் கீழ் நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பல கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க முன் வருகிறேன். குறிப்பாக முதலில் பல ஆண்டு காலமாக உள்ளாட்சித் தேர்தல் நடத்தாமல் இருந்த இந்த ஆட்சியாளர்கள் குறிப்பாக உள்ளாட்சித் துறை அமைச்சராக பொறுப்பு ஏற்ற நீண்ட நெடு ஆண்டுகளாக எங்களுடைய ஆட்சியில் அமைச்சராக இருந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. உ. ச. அவர்கள் வந்த உடனே இப்போது உள்ளாட்சிகளுக்கு தேர்தலை நடத்தியதற்காக நான் அவருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விளையாடும் இடம் என்று இருப்பதை மாற்றி, பேருந்து நிலையத்திற்காக, அரசாங்கத்தினுடைய அறிவிப்பு ஆணை எண். 606, நாள் : 4–4–1979இன்படி மாற்றிக் கொடுக்கப் பட்டுவிட்டது. மீதமுள்ள 4 ஏக்கர் நிலத்தை, வணிகப் பகுதியாக மாற்றித் தரவேண்டும் என்று தர்மபுரி நகராட்சியிலிருந்து, நகர மக்கள் நலத் திட்டக் குழு மூலமாக தீர்மானம் நிறைவேற்றி, தீர்மான எண். 52, நாள் : 24–11–1984 அன்று நிறைவேற்றப்பட்டு, 27–11–1984-இல் அரசாங்கத் துறை செயலாளர் அவர்களுக்கு, உள்ளாட்சித் துறை செயலாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது.

அந்த நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில், பூங்கா என்பதை மாற்றி, குறிப்பாக, வணிகப் பகுதியாக மாற்றி அமைத்தால் தான் தர்மபுரி நகராட்சியின் வருவாய் பெருவாரியாக பெருகும்.

(முற்பகல் 11–10).

இப்போது அது பூங்காவாகவும் இல்லை, விளையாட்டு இடமாகவும் இல்லை, வானொலித் திடலாகவும் இல்லை. அந்த இடத்தைப் பலபேர் ஆக்கிரமித்துக் கொண்டு ஆங்காங்கே சிறுசிறு கட்டிடங்களைக் கட்டி பெரிய அளவில் வாடகைக்கு விடுகிற அளவுக்கு துர்ப்பாக்கியமான சூழ்நிலை தர்மபுரி நகராட்சியிலே இருந்துக் கொண்டிருக்கிறது. அவர்களையெல்லாம் வெளியேற்றி, அந்த ஆக்கிரமிப்புக்களையெல்லாம் அகற்றிட உத்திரவிடுவார்களானால் இலட்சக்கணக்கான ரூபாய் அளவிலே கடைகளை அங்கே கட்டி வாடகைக்கு விட்டால் தர்மபுரி நகராட்சியின் வருவாய் பெருகும் வாய்ப்பு இருக்கிறது. ஒன்றரை ஆண்டுக் காலமாக தர்மபுரி நகராட்சியிலிருந்து அரசிற்கு அனுப்பப்பட்ட அந்தக் கடிதம் அரசாங்கத்தினிடத்திலே தூங்கிக் கொண்டிருக்கிறது. தர்மபுரி நகராட்சிப் பகுதியை வணிகப் பகுதியாக மாற்ற வகை செய்யும் முறையில் உத்திரவிட வேண்டுமென்று நான் பேரன்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி நகராட்சியில இருக்கிற சாலைகளைப் பற்றி நிறையச் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் எங்கு பார்த்தாலுங் குண்டும் குழியுமாகத்தான் காட்சியளிக்கிறது. அந்தச் சாலைகளுக்காக எவ்வளவு பணத்தைச் செலவிட்டிருக்கிறார்களோ தெரியவில்லை. எவ்வளவு பணத்தை தன்னிறைவுத் திட்டத்தின் கீழே செலவிட்டிருக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் சாலைகள் ஒழுங்காக இல்லை. நான் சட்டமன்ற உறுப்பினராக வந்ததற்குப் பிறகு பல்வேறு அதிகாரிகளைச் சந்தித்து சாலைகள் இருக்கிற விவரங்களை எடுத்துச் சொன்னேன். ஆனால் இதுவரையிலும் ஏந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.





தர்மபுரியிலே அன்னசாகரம் சாலை இருக்கிறது. அது தர்மபுரி நகராடசி எல்லைக்குட்பட்ட சாலையாகும். எங்கே பார்த்தாலும் அதிலே குண்டும் குழியுமாக இருக்கிறது. அதைப் பற்றி 15 ஆண்டுக் காலமாக எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. பொதுப் பணித் துறையும் குறிப்பாக அந்த நகராட்சியும் ஒன்று கலந்து பேசி அந்த அன்னசாகரம் சாலை ஏரிக் கோடியிலிருந்து வருகிற சாலையில் பாலம் அமைக்கும் பணி 15 ஆண்டுக் காலமாக தூங்கிக் கொண்டிருக்கிறது. அதை உடனடியாக நிறைவேற்ற வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பி வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரியிலே இப்போது ஒரே ஒரு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளிதான் இருக்கிறது. அங்கே 3,000 மாணவர்கள் படிக்கிறார்கள். தர்மபுரி அந்த மாவட்டத்தின் தலைநகராக இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளியை இரண்டாகப் பிரிக்கலாம். இல்லையென்றால் தர்மபுரியில் டவுன் ஸ்கூல் என்று சொல்லக் கூடிய உயர் துவக்கப்பள்ளி ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளியிலே போதிய இட வசதி இருக்கிறது. எனவே அந்தப் பள்ளியை இன்னொரு உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு உத்திரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். 3 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்ற அந்த உயர்நிலைப் பள்ளியில் ஏதோ ஒரு அளவுக்காவது பாதியளவுக்காவது நெருக்கடியைக் குறைப்பதற்கு வாய்ப்பு இருக்கும்.

தர்மபுரியில் உள்ள நகர சுத்தித் தொழிலாளர்களுடைய நிலைமை மிகவும் பரிதாபகரமான நிலைமையாக இருக்கிறது. எவ்வளவுதான் அதுபற்றி அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதினாலும் அனுமதி கிடைக்கவில்லை என்ற குறைபாட்டை அந்த அதிகாரிகள் சொல்கிறார்கள். 15 ஆண்டுக் காலமாக— ஏற்கெனவே மக்கள் தொகை அடிப்படையில் போடப்பட்ட நகரசுத்தித் தொழிலாளர்கள் தான்—இருந்து கொண்டிருக்கிறார்கள். நகரசுத்தித் தொழிலாளர்களை அதிகப் படுத்த வேண்டுமென்று அரசாங்கத்திடம் அனுமதி கேட்டுக் கடிதம் எழுதியும் இதுவரையில் அனுமதி கிடைக்கவில்லையென்ற குறைபாடு இருக்கிறது. தர்மபுரி வளர்ந்து வருகிற மாவட்டத் தலைநகரம் ஆக இருப்பதால் மக்கள் தொகை பெருகிக் கொண்டே வருகிற காரணத்தினாலே நகர சுத்தித் தொழிலாளர்களை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி நகராட்சியில் குடிநீர்ப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது. ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி சார்பிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்தும் அந்த இடத்திலே போதிய தண்ணீர் இல்லாததால் ஹோகனக்கல்லிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்

[திரு. ரா.சின்னச்சாமி] [1986 ஏப்ரல் 16

கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளில் பென்னகரம், தேன்கனிக்கோட்டை, ஓசூர், ஊத்தங்கரை, அரூர், கடத்தூர், கடம்பை நல்லூர், பாப்பாரப்பட்டி பகுதியில் இருக்கிற குடி தண்ணீர்ப் பற்றாக் குறையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு ஒன்றியத்தைப் பிரித்து காரியமங்கலம் வட்டாரமாகவும், ஊத்தங்கரை ஒன்றியத்தைப் பிரித்து மத்தூர் ஒன்றியமாகவும் அமைத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தளி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும். தளி ஒன்றியம் மலைப் பகுதிகள் நிறைந்தது. ஒன்றே கால் இலட்சம் மக்கள் தொகை கொண்டது என்பதை நீங்களே ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிப் பிரிக்கப்படும் ஒன்றியத்தை அஞ்செட்டியைத் தலைமையகமாகக் கொண்டு அமைக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் கடுமையான குடிநீர்ப் பஞ்சம், குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மக்கள் ஒரு மைல் தூரம் நடந்து சென்று கிணறுகளில் தண்ணீர் எடுக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. குறிப்பாக இன்னும் ஒன்றை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஆடிட்டர் ஜெனரல், 1983–84 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில், பக்கம் 67–69 இல், 2,000 இடங்களைப் பார்வையிட்டதில் 724 பம்பு செட்டுகள் பழுதடைந்து இருப்பதாகவும், அதே நேரத்தில் மின்சார மோட்டார்கள் அமைக்கப்பட வேண்டிய அந்த இடங்களில் ஆடுகளை அடைப்பதாகவும், விறகு கட்டி வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமைகளைப் போக்குவதற்கு குறிப்பாக மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, 1986–87 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில், ஊரக மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய வேலையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தர்மபுரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒரு சாலை பல ஆண்டுக் காலமாகப் போடப்படாமல் இருக்கிறது. கருங்கல் போன்ற மலைப் பகுதிகளில் இருப்பவர்கள் பத்து கிலோ மீட்டர் தூரம் சென்று அரசாங்க மருத்துவமனைக்கு நடந்தோ அல்லது பஸ்ஸிலோ செல்ல வேண்டும். இப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, வேப்பலை முத்தம்பட்டி, தொப்பையார் பகுதிகளில் சரளைக் கல் பரப்பிய சாலையை அமைத்து, வாகனங்கள் செல்லக் கூடிய சாலையாக மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 16] [திரு. ரா. சின்னச்சாமி]

இறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். ஆலந்தூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் ஏற்கனவே, உயிரோடு இருப்பவர்களின் பெயரை வைப்பதில்லை என்ற கொள்கை முடிவை எடுத்து, ஏற்கனவே இருந்த பெயர்களையெல்லாம் இந்த அரசு அகற்றியது. ஆனால், ஆலந்தூர் நகராட்சிக்கு, இப்பொழுது மாநிலங்களவை உறுப்பினராக இருக்கின்ற திரு. மோகனரங்கம் அவர்களின் பெயரை வைத்திருக்கிறார்கள். இது எந்த அளவிற்கு நியாயம்? அரசாங்கம் போட்ட அந்த உத்தரவைத் திரும்பப் பெற்று விட்டதா? அல்லது அந்த உத்தரவு அப்படியே இருக்கிறதா? அப்படியே உத்தரவிருந்தாலும், நாங்கள் வைத்துத்தான் தீருவோம் என்ற எண்ணத்தில் அரசாங்கம் இருக்கிறதா என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர அவர்கள் தன்னுடைய பதிலுரையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாநகராட்சி தேர்தலைப் பொறுத்த வரையில் குறிப்பிட விரும்புகிறேன. இவ்வளவு பெரிய மாநிலத்திலே, கோடிக் கணக்கான வாக்காளர்கள் வாக்களித்திருந்தாலும், இந்த மாநகராட்சி மக்கள் மட்டும் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை. அவர்களுக்காக உடனடியாக இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்ற உள்ளாட்சி மன்றங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கின்ற காரணத்தால், இந்த மாநகராட்சியிலுள்ள மக்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தேவை என்பதை உணர்ந்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் பதில் அளிக்கின்ற பொழுது மாநகராட்சித் தேர்தலுக்கான தேதியை அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. மு. சந்திரசேகர்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நலவளர்ச்சி திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் பற்றிய மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைசசர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம இராஜ்யமே இராம இராஜ்யம் என்ற அண்ணல் காந்தியடிகளின் எண்ணப்படி உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகள் திறம்பட செயல்பட வேண்டும் என்று தேர்தல் நடத்திய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் கிராம மக்களின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. நடந்து முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆதிதிராவிட மக்களுக்கும் பெண்களுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு 18 சதவீதம் என்றும் 15 சதவீதம் என்றும் இட ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டிருந்தும், தவிர்க்க முடியாத காரணத்தாலும், வழக்கு மன்றம் தடை விதித்த காரணத்தாலும் மேற்படி கொள்கையை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில், உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளிப் போடக்கூடாது என்ற எண்ணத்தாலும்; பழைய சட்ட முறைப்படி தேர்தலை நடத்தினார்கள்.

(முற்பகல் 11-20)

ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவரின் கொள்கையான ஆதி திராவிட மக்களுக்கும் பெண்களுக்கும் முக்கியத்துவம் தர வேண்டுமென்ற உயரிய நோக்கம் நிறைவேற அரசாங்கத்தின் மூலம், நியமிக்கும் நியமன உறுப்பினர்களாக, ஆதி திராவிடர் மற்றும் பெண்களை நியமிக்க இதய தெய்வம் புரட்சித் தலைவர் உத்தரவு வழங்கியதை மனமாரப் பாராட்டுகிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளில், ஒன்றியப் பேரூராட்சிகளில்; தற்போது கிடைக்கக்கூடிய ஆண்டு வருமானத்தில் 50 முதல் 75 சதவிகிதம் பணியாளர்களுக்கு ஊதியமாகச் செலவிடப்படுவதால், மற்ற அத்தியாவசிய வேலைகளைச் செய்ய நிதிநிலைமை சரியில்லை. எனவே, பேரூராட்சிகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கான ஊதியத்தை அரசே நேரடியாகக் கருவூலம் மூலம் வழங்க வழிவகை செய்ய வேண்டுகிறேன். மேலும் மற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவும் பேரூராட்சிப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதால் பேரூராட்சிகளில் பெருந் தொகையை அவர்களுக்குச் செலவிட வேண்டியுள்ளது. எனவே, இந்த இக்கட்டினை ஈடுகட்ட, பேரூராட்சிகளுக்கு அகவிலைப்படியை இனாமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரூராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. குடிநீர் வடிகால் வாரியத்தினர் ஆய்வுக் கட்டணம்





என்ற பெயரால், பெரும் தொகையை பேரூராட்சியினர் கட்ட வேண்டுமென்று நிர்பந்திக்கிறார்கள். ஊழியர்களுக்குப் பல மாதங்களாகச் சம்பளம் வழங்க இயலாத நிலையிலுள்ள பேரூராட்சிகள் அந்த ஆய்வுக் கட்டணத் தொகையைக் கட்ட சிரமப்படுகின்றன. எனவே, அந்தத் தொகையை அரசே கட்டவும் அல்லது தள்ளுபடி செய்யவும் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புற விவசாயப் பெருமக்கள் வாழ்வு வளம் பெற, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நன்கு செயல்பட்டு வருகிறது. கடன் பெறும் நபர்களைத் தேர்வு செய்யும் குழுக்களில் சம்பந்தப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினர்களையும் உறுப்பினர்களாகப் பணியாற்ற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்றவைகளை இந்த அரசு நன்கு செயல்படுத்தி வருவதைப் பாராட்டுகிறேன். இந்தத் திட்டப் பணிகளைத் தேர்வு செய்யும்போது சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து தேர்வு செய்ய கடந்த காலத்தில் அறிவுரை வழங்கப்பட்டது. தற்போது அது புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஒன்றியப் பெருந்தலைவர்களை மட்டும் கலந்து ஆலோசனை செய்வதால், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் மிகவும் பின்தங்கிய, அல்லது புறக்கணிக்கப்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, இத்திட்டங்களைச் செயல்படுத்த தற்போது வழிவகை இல்லாமல் உள்ளதைப் போக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியிலுள்ள வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட மாதத்திற்கு 50லிட்டர் டீசல் ஒன்றிய ஜீப்புக்கு வழங்கி, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 65 ஊராட்சி மன்ற ஒன்றியத்தில் பயணம் செய்ய இந்தக் குறியீடு போதுமானதாக இல்லாத காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று மாதத்திற்கு 4 அல்லது 5 நாட்கள் ஒன்றிய ஜீப்பை பயன்படுத்தவும் சுமார் 150 லிட்டர் டீசல் வழங்கவும், வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுமக்கள் கோரிக்கைகளைக் கேட்கவும், பொதுமக்களைச் சந்திக்கவும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று அறை ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போது அது பெருந்தலைவருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனி அறை இல்லை. எனவே பெருந்தலைவர் அறையில் பாதி சட்டமன்ற உறுப்பினருக்குத் தர வேண்டும், அல்லது ஏதாவது ஒரு பகுதியில் தனியாக இடம் ஒதுக்கித் தர வேண்டும்.

[திரு. மு. சந்திரசேகர்] [1986 ஏப்ரல் 16

தன்னிறைவுத் திட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட கிராமச் சாலைகளை, தார் சாலைகளாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தில் கிராமங்களில், தெரு விளக்குகள் போடப்பட்டு, 4 அடி குழல் விளக்குகளாக மாற்றப் பட்டுள்ளன. இரவு நேரத்தில் கிராமங்கள் அனைத்தும், நகரங்களைப் போல் காட்சியளிக்கின்றன. அதற்காக அரசைப் பாராட்டுகிறேன். கிராமச் சாலைகளில் பெரிய வண்டிகள் போகிற சூழ்நிலை இல்லை. ஆகவே, பாதைகளை அகலப் படுத்தித் தர அதிகாரிகளுக்கு ஆணை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் பல சரியாக இயங்காமல் உள்ளன. அவற்றை உடனடியாகக் கண்காணித்து, சீர் செய்து, செயல்படும் சூழ்நிலையை ஏற்படுத்தித் தர அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறையில் இந்த ஆண்டு முகையூர் மற்றும் கணையம் ஒன்றியங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். முகையூர் மற்றும் கணையம் ஒன்றியங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒன்றியங்களாகும். கிராம வளர்ச்சிக்கு, நிதி கூடுதலாக ஒதுக்கி உதவிட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முகையூர் ஒன்றியம் 67 பஞ்சாயத்துக்கள் கொண்ட பெரிய ஒன்றியம். அதை இரண்டாகப் பிரித்து, மணல் ஒண்டி மற்றும் முகையூர் ஒன்றியம் என இரண்டு ஒன்றியங்களாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவருக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. அ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவராகவும், எங்களுக்கு எல்லாம் தலைவராகவும் அரசியல் வாழ்விலே மிகச் சிறந்தவராகவும் உள்ளாட்சித் துறையில் ஆட்சியாளராக அமைச்சராக இருக்கின்றவருமான 'அருமை அண்ணா' என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையை நான் வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச சொல்ல விழைகிறேன்.

சமுதாய நலத் திட்டம் என்பது மகாத்மா காந்தி போன்ற பெரும் தேசியவாதிகளாலே எண்ணப்பட்டு, சிந்திக்கப்பட்டு, அதன் காரணமாக வந்தது என்பதை கனம் அங்கத்தினர்களும்



1986 ஏப்ரல் 16] [திரு. அ. ஆறுமுகம்]

மற்றவர்களும் அறிவார்கள். அதனுடைய வேலைகள் இன்றைக்கு கிராமப்புறங்களிலே மிகச சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

நாடு சுதந்திரம் அடைந்துவிட்ட பிறகு, இந்த நாட்டினுடைய எலும்பாக, முதுகெலும்பாக இருக்கிற கிராமப்புற மக்கள் எல்லாம், கிராமங்கள் எல்லாம் பட்டணங்களைப்போல் காட்சியளிக்க வேண்டுமென்பதுதான் இதனுடைய குறிக்கோளாக இருந்து வருகின்றது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லாம் 20, 30 ஆண்டுகளுக்கு முன்னாலே கிராமங்களுக்குப் போவதற்கு வாகன வசதி இருந்தாலும்கூட கிராமங்களுக்குச செல்லாத சூழ்நிலை இருந்தது. அப்போது மக்கள் கேட்பார்கள். எங்கள் ஊருக்கு ரோடு வேண்டும்; எங்கள் ஊருக்கு பள்ளிக்கூடம் வேண்டும்; எங்கள் ஊருக்கு குடிதண்ணீர் வசதி வேண்டும்; எங்கள் ஊருக்கு மின்சார வசதி வேண்டும் என்றெல்லாம் அப்போது கிராம மக்கள் மனு கொடுப்பார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலை என்ன? இப்படிப்பட்ட சமுதாய நலத் திட்டத்தினால் ஏற்பட்ட பலாபலன் என்ன? எங்கள் கிராமத்தில் ரோடு இருக்கிறது; அந்த ரோட்டை தார் ரோடாக மாற்றித் தாருங்கள் என்று கேட்கிறார்கள். எங்கள் ஊரில் தார் ரோடு இருக்கிறது, பஸ் வசதி இல்லை, பஸ் வசதி செய்து தாருங்கள் என்று கேட்கிறார்கள். இப்படி எல்லாம் செய்து கொடுங்கள் என்று கேட்பது மக்கள் நாகரீகத்தின் உச்சிக்கு வந்துவிட்ட நிலையைக் காட்டுகிறது.

The question is a great thing Ordinary people may not put questions அந்த அளவுக்கு இன்றைக்கு மக்கள் எங்களுக்கு வசதி வாய்ப்புகளைச் செய்து தாருங்கள் என்று கேட்கிறார்கள். நாமும் அவற்றை செய்கிறோம்.

ஆனால் 20, 25 ஆண்டுகளுக்கு முன்னாலே பார்த்த சமுதாய நல அலுவலகத்திற்கும் இன்றைக்கு நாம் பார்க்கிற சமுதாய நல அலுவலகத்திற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. இப்போது உயிர் இல்லாத ஒரு ஓவியமாக பஞ்சாயத்து யூனியன்கள் காட்சியளிக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் ஆணையரைக் கேட்டால், ஏதாவது ஒரு சிறிய வசதியை செய்து கொடுங்கள் என்று கேட்டால்கூட, நாங்கள் என்ன செய்ய, பணம் இல்லையே என்று சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த சமுதாய நலத் திட்டத்திற்கு தாராளமாக பணத்தை ஒதுக்கி, தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா கிராமங்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்துதர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 16

இன்றைக்கு கிராமப்புற மக்களின் குடிதண்ணீர் பிரச்சனையைப் போக்கியிருக்கிறோம். ஆனால் மக்கள் என்ன நினைக்கிறார்கள் ? சென்னைக்கு வருகிறார்கள், வேலூருக்குப் போகிறார்கள், திருவண்ணாமலைக்கு வருகிறார்கள். அங்கே எல்லாம் என்னென்ன வசதிகள் இருக்கின்றனவோ அந்த வசதிகள் எல்லாம் தாங்களும் பெறவேண்டுமென்று நினைக்கிறார்கள், அதைக் கேட்கிறார்கள். அது ஒரு நல்ல அறிகுறி. வளர்ந்து வருகின்ற சமுதாயத்திற்கு அது ஒரு நல்ல அறிகுறி. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த சமுதாய நலத் திட்டத்திற்கு கொஞ்சம் தாராளமாக பணத்தை ஒதுக்குங்கள். அவர்களும் நானும் திருவண்ணாமலையிலே, செங்கத்திலே போகாத கிராமங்கள் இருக்காது. அதைப்போல வந்தவாசியிலும் போகாத கிராமம் இருக்க முடியாது. அங்கே மணிமங்கலம் என்ற ஊருக்குப் போய் இருந்தேன்.

Sir, I am going to tell a news to the House. மணிமங்கலம் என்ற ஊர் பாலூர் பஞ்சாயத்தில் ஒரு சின்ன ஊர். அந்த ஊரில் ரோடே இல்லை. அந்த ருக்கு ரோடு இல்லை என்பதை குறைசொல்வதற்காக நான் சொல்லவில்லை. 20, 30 ஆண்டுகளாக நாம் இந்த இயக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருந்தும்கூட இன்னும் சில ஊர்களுக்கு பாதை வசதி இல்லாமல் இருக்கிறது. நானும் அரிசன நலத்துறை அமைச்சரும் அந்த ஊருக்குப் போனோம். அங்கே அரிசன மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் பாதை வசதி இல்லை. இந்த சமுதாய நலத்திட்டத்திலே அவர்களுக்கு ஏன் இந்த வசதி இல்லை ? சமுதாய நலத் திட்டத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் இணைக்கப்படவில்லையா ?

(முற்பகல் 11-30)

அவர்களுக்கென்று ஒரு சமுதாய நலத்திட்டம் இருந்து கொண்டிருக்கிறதா ? அல்லது அதற்கென்று தனியாக ஒரு அமைச்சர் இருக்கிறாரா ? இல்லையே. எனவே இப்படி பல குறைகள் இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன. பல கிராமங்களுக்கு ரோடு வசதி இல்லை. உங்களுடைய பதவிக்காலமாகிய இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக இந்த நிலைமையை மாற்ற வேண்டும். நாம் எத்தனையோ துறைகளுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறோம். மற்றவர்கள் எல்லாம் வந்து பாராட்டுகிறார்கள். இங்கே வந்து, இங்கே நடைபெறுகிற வேலைகளைத் தெரிந்துகொண்டு போகிறார்கள். தமிழகத்தில் திருத்தணியிலிருந்து கன்னியாகுமரி வரையில் உள்ள எல்லா பகுதிகளிலும் ரோடு வசதி இருக்க வேண்டும். அதாவது ரோடு இல்லாத கிராமமே இருக்கக்



1986 ஏப்ரல் 16] [திரு. அ. ஆறுமுகம்]

கூடாது என்ற கொள்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சர்க்காருடைய கொள்கையாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியம் என்று வைத்து அது நலல முறையில் பணிபுரிந்து வருகிறது என்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். எங்கே தண்ணீர் உடனடியாகக் கொடுக்கவேண்டுமோ அங்கே உடனடியாகக் கொடுங்கள். எங்கே ஏற்கெனவே எல்லா வாய்ப்புக்களையும் செய்து இருக்கிறோமோ அங்கே கொஞ்சம் பொறுத்துச் செய்யுங்கள். அதுதான் முக்கியம். எங்கே தண்ணீர் தேவையோ அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டும். 10 வீடு, 20 வீடு, 100 வீடு என்று இருந்தாலும் கூட அந்த மக்களுக்குத் தண்ணீர் கஷ்டம் இல்லாமல் இருக்கின்ற நிலைமையை ஏற்படுத்தவேண்டும். 10, 15 வீடுகள் இருந்தால் கூட அதற்கென்று ஒரு குழாய் போட்டு, மேல்நிலைத் தொட்டி கட்டி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமா என்று கேட்கிறார்கள். அப்படி ஒரு நிலைமை இருந்தால் ஐந்து, பத்து கிராமங்களை ஒன்றாகச் சேர்த்துவிடுங்கள். என்னுடைய அருமை நண்பர் பெரணமல்லூர் தொகுதி உறுப்பினர் திரு. அரிக்குமார் அவர்கள் தொகுதியில் 100 கிராமங்களுக்கு பயனளிக்கிற வகையில் 100 கோடி ரூபாயில் தெள்ளாறு பக்கத்தில் ஒரு திட்டத்தை நிறைவேற்ற அடிக்கல் நாட்டிவிட்டு வந்திருக்கிறார்கள். அதை உடனடியாக நிறைவேற்றுகின்ற வகையில் வேலைகளைத் துவக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த ஒர்க் ரொம்ப ஸ்லோவாக நடக்கிறது. விரைவாகப் பண்ணினால் நல்லது. முதலமைச்சரே வந்து அடிக்கல் நாட்டுகிற வேலைகளிலேயே இவ்வளவு காலதாமதம் ஆகிறது என்று சொன்னால் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா என்று மாற்றார்கள் நம்மைப் பார்த்து வேறு விதமாக நினைப்பார்கள். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது.

வந்தவாசிக்காக நம்முடைய அமைச்சர் அவர்கள் 85 இலட்சம் ரூபாயைக் கொட்டிக் கொடுத்திருக்கிறார்கள். எதற்காக ? அங்கே அழகான பஸ் ஸ்டாண்ட் கட்டுவதற்காக. திருவண்ணாமலையில் பஸ் ஸ்டாண்ட் கட்டி இருக்கிறார்கள். அந்த பஸ் ஸ்டாண்டைப் பார்க்கிறவர்கள் தமிழகத்திலேயே அப்படிப்பட்ட பஸ் ஸ்டாண்ட் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த பஸ் ஸ்டாண்டிற்கு அருமை அண்ணன் திரு. ப.உ.ச. அவர்கள் பெயர் வைக்கவில்லையே தவிர வருகிறவர்களும், போகிறவர்களும் இது அவர் கொண்டு வந்த பஸ் நிலையம், அவர் கொண்டு வந்த பஸ் நிலையம் என்று பாராட்டுவதை நான் காதால் கேட்கிறேன். அதைப்போலவே வந்தவாசிக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற 85 இலட்சம் ரூபாயில் 50 இலட்சம்

ரூபாய் செலவு செய்து அழகான சிறந்த, உயர்ந்த பஸ் நிலையம் கட்டி அங்கே தங்குவதற்கும்கூட அறைகளை எல்லாம் ஒதுக்கி வேலூரிலேயும், திருவண்ணாமலையிலும் கட்டப்பட்டிருப்பதுபோல் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மார்க்கெட் ஒன்று கட்டுவதற்காகப் பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். 30, 35 இலட்சம் ரூபாயில் அதைக் கட்டி, திறப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் பேச வேண்டியதை மீண்டும் ஒருமுறை நன்றாகப் பேசிக் கொள்கிறேன் என்று சொல்லி இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எம். செல்லமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி நிர்வாகமும் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தல் நடைபெற்றிருக்கிறது. இப்படி தேர்தல் நடைபெற்றிருந்தாலும் மாநகராட்சிகளுக்கு இன்னும் தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது. எனவே சென்னை, மதுரை, கோவை போன்ற மாநகராட்சிகளுக்கு உடனடியாக தேர்தலை நடத்துவதற்கான தேதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையை சொல்லுகிறபோதே அறிவிக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்கான செயல்முறைக் குறிப்புகள் எல்லாம், அவர்களுடைய செயற்குறிப்புகளிலேயே இருக்கின்றன. நாகை ஊராட்சி ஒன்றியம் 57 ஊராட்சிகளைக் கொண்ட பெரிய ஒன்றியமாக இருக்கிறது. அதை நீண்ட நெடுங்காலமாக பிரிக்கவேண்டும் என்ற கோரிக்கை, அப் பகுதி மக்களால் விடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர் களிடமும் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நாகை ஒன்றியத்தை தயவுசெய்து கட்டாயமாக இரண்டாகப் பிரித்துத் தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கெல்லாம் தேர்தல் நடைபெற்றிருந்தாலும் இன்றைக்கு மக்கள் அந்த நகராட்சி களிடத்திலேயும், ஊராட்சி ஒன்றியங்களிடத்திலேயும், ஊராட்சிகளிடமும் எதிர்பார்க்கும் பொறுப்புகள் என்பது மிக மிக அதிகமாக இருக்கிறது. ஆனால் அந்த அமைப்புகளில்



நிதி வசதி என்பதே இல்லாத சூழ்நிலையில், எந்த வேலையை எடுத்துக் கொண்டாலும் பணம் இல்லை என்ற காரணத்தாலே, அது குறைபாட்டுடன் அப்படியே நிற்கிறது. குறிப்பாக ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் கூட ஊராட்சி ஒன்றியத் தின் கட்டிடத்தில் இல்லை. அப்படி ஊராட்சிகளில் சில இடங்களில் கட்டிடங்கள் இருந்தாலும் கூட, நீண்ட நெடுங் காலமாக தேர்தல் நடைபெறாத காரணத்தினாலே, ஊராட்சி ஒன்றிய தலைவர்களோ, உறுப்பினர்களோ இல்லாத காரணத்தாலே பெஞ்சு, மேசை, நாற்காலிகள் கூட இல்லாத சூழ்நிலையில் ஊராட்சி அமைப்புகள் எல்லாம் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படிப்பட்ட ஊராட்சிகளுக்கு நல்ல கட்டிட வசதியை யும், பெஞ்சு, மேசை, நாற்காலி போன்றவைகள் வாங்கக் கூடிய அளவுக்கு அரசாங்கமே நிதியை ஒதுக்கித் தந்து அந்த உள்ளாட்சி அமைப்புகள் எல்லா வகைகளிலும் சிறப்பாக நடைபெறுவதற்கு அமைச்சர் அவர்கள் உதவவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அதேபோல சாலைகள். தன்னிறைவு திட்டத்திலும் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்திலும் போடப்பட்ட சாலைகள் எல்லாம்—அதிலும் தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக கீழத் தஞ்சையைப் பொறுத்தவரையில்—போடப் பட்டவைகளை பராமரிப்பதற்கு முடியாமல் பழுது பட்டிருக் கக்கூடிய சூழ்லையில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களும் சரி, ஊராட்சி தலைவர்களும் சரி, அந்த சாலைகளை செப்பனிட முடியாத சூழ்நிலை இருக்கிறது, போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால். அந்தச் சாலைகளை செப்பனிடுவதற்காக அதிக அளவு பணத்தை ஒதுக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு கிராமப்புறங்களில் குடி தண்ணீர் பிரச்சனை என்பது மிகப்பெரிய சிக்கலாக இருக்கிறது. குடிதண்ணீர் சப்ளை செய்கின்ற பம்புகள் அல்லது குழாய்கள் ரிப்பேராகி விட்டால் அவைகளைச் சரி செய்ய முடியாத நிலை இருக்கிறது. காரணம் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு குழாய் பழுது பார்ப்பவர், அல்லது ஒரு பிட்டர் என்று தான் அந்தப் பணியாளர்கள் இருக்கிறார்கள். எனவே அப்படிப் பட்ட பணியாளர்கள் அதிகம் இல்லாத சூழ்நிலையில், அதிக அளவில் அந்தப் பணியாளர்களை நியமித்தால் தான், அந்தக் குழாய்கள் அல்லது பைப்புகளையும், குடிநீர் தொட்டிகளை யும் சரிப்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் நிதி ஆதாரங்களை பெருக்க வேண்டும் என்பதற்காக வீட்டு வரி, சொத்து வரி போன்றவற்றை உயர்த்தவேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருப்பதாக அறிகிறேன். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய தலைவர்கள் அந்த வரிகளை வசூல் செய்கிறபோது, சாதாரண மக்கள், ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் பாதிக்காத அளவுக்கு அந்த வரிகளை விதிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நகராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சிகளிலும் பணிபுரியக் கூடிய ஊழியர்களுக்கு சம்பளத்தைக்கூட கொடுக்க முடியாத அளவுக்கு நிதிநிலைமை இருக்கிற காரணத்தால், அவர்கள் சம்பளம் பெறமுடியாமல் வாழ்க்கை வசதிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக கீவளூர் பேரூராட்சி ஒன்றியத்தில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே பேரூராட்சி நிர்வாகத்தில் இருக்கக்கூடிய ஊழியர்களுக்கெல்லாம், அரசாங்கத்தின் மூலமாகவே சம்பளம் வழங்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் துப்புரவுத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னாலே நியமிக்கப்பட்டவர்கள் தான் இன்றைக்கும் அப்படியே இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப அந்த சுகாதார ஊழியர்களின் எண்ணிக்கை உயராமல் இருக்கிறது. ஆகவே அந்த சுகாதார ஊழியர்களுடைய எண்ணிக்கையை உயர்த்தி நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள சுகாதார கேடுகளை சீர்படுத்தக் கூடிய முயற்சியை செய்ய வேண்டும்.

அரசாங்கம் உத்தரவு மூலம் போடக்கூடிய சலுகைகளைக் கூட அமல் படுத்த முடியாத நிலையில் அந்த உள்ளாட்சி தொழிலாளர்கள் போராடித்தான் தங்களுடைய உரிமைகளைப் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. உத்தரவு போடப்பட்டால்

(முற்பகல் 11-40)

அதனை அமல் நடத்தக் கூடிய காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீண்டகாலமாக வேலை செய்யும் தொழிலாளர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கப்படாமல் தினக்கூலி தொழிலாளர்களாகவே இருக்கிறார்கள். இன்றைக்கு குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அரசு நிறைவேற்றி இருக்கிறது. அந்தக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின் அளவிற்கு கூட அவர்களுக்கு கிடைக்காமல் இருக்கிற சூழ்





நிலை இருக்கிறது. உடன் கிடைக்கச் செய்ய வேண்டும். டெம்பரரி தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பேரூராட்சிகளுக்கு கிடைக்கும் கேளிக்கை வரி மிகவும் குறைவாக இருக்கிறது என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள். இதனை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நகரங்களில் ஆபாச சினிமா வால்போஸ்டர்களை ஓட்டுகிறார்கள். அப்படி அவர்கள் ஓட்டுவதை தடைசெய்ய வேண்டுமென்று ஜனநாயக மாதர் சங்கத்தினர் முன்பு கோரிக்கை வைத்த போது முன்னாள் தலைமைச் செயலாளர் அவர்கள், அதற்காக சட்டம் கொண்டு வரப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்காக காத்திருப்பதாகச் சொன்னார்களாம். அதனை அமல் படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கையெடுத்து, ஆபாச சினிமா போஸ்டர்களை ஓட்டுவதை தடை செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இயற்றும் சட்டத்தை அமுல் நடத்த பெண்களை கொண்ட கமிட்டி அமைக்கப்பட வேண்டும்.

வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் பல்வேறு விவரங்கள் சொல்லப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் வறுமை ஒழிக்கப்பட்டு எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அறவே இல்லாமல் செய்ய வேண்டுமென்ற போராட்டத்தை நடத்த வேண்டுமென்று இந்தக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். இந்த வறுமை ஒழிப்புத் திட்டத்திற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மாடுகள் வழங்குவது, ஆடுகள் வழங்குவது, சைக்கிள் லோன்கள் வழங்குவது, இன்னும் சிறுதொழில்கள் வைப்பதற்காக லோன் வழங்குவது போன்றவற்றிற்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 600 என்று கோட்டா வைக்கப்பட்டிருந்தாலும் அவைகளைப் பெறுவதற்கு அரசாங்கம் மானியம் தான் தருகிறதே தவிர வங்கிக் கடன்களைப் பெறுவதில் மிகப்பெரிய சிக்கல்கள் இருக்கின்றன. வங்கி மானேஜர்களும், பீல்ட் ஆபீசர்களும் வங்கிக் கடனைக் கொடுப்பதில் ஏராளமாக தாமதம் செய்கிறார்கள் . அதனால் கடனைப் பெறமுடியவில்லை. ஆகவே அரசாங்கம் நிச்சயித்திருக்கிற கடனை வங்கிகள் கொடுக்கிற ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். வறுமையை ஒழிக்கக்கூடிய விதத்தில் வழங்கப்படுகிற கடன்கள் எல்லா மக்களுக்கும் போய் சேர வேண்டும். கடனைப் பெறுவதற்கு அதாவது அரசாங்கம் கொடுக்கக்கூடிய மானியத்தைப் பெறுவதற்குத் தான் வங்கிகள் கடன் கொடுக்கிறதே தவிர வேறல்ல. கடனை சாங்ஷன் செய்துவிட்டு, மானியத்தைக் கொடுத்துவிட்டு அவர்களுக்கு எந்த லோனிற்காக பணம் சாங்ஷன் செய்யப்படுகிறதோ அதை

மாற்றி மானியத்தைத் தான் தருகிறார்கள். அந்த மானியத்தைப் பெறுவதில் கூட பல பேர்கள் பங்கு போட்டுக் கொள்ளும் சூழ்நிலை இருக்கிறது. உண்மையிலேயே வறுமை ஒழிக்கிற திட்டமாக இல்லாமல் இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் நன்றாக ஆராய்ந்து வங்கிகள் உடனடியாகக் கடன்களை வழங்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கீவளூர் ஊராட்சி ஒன்றியத்தில் அவர்களுக்கு கடன் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணம் கூட செலவு செய்ய முடியாமல் இருக்கிறது. ஏனென்றால் நாகப்பட்டினம், திருவாரூர் போன்ற ஊர்களில் தான் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் இருக்கின்றன. கீவளூர் ஊராட்சி ஒன்றியத் தலை நகரில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கி இல்லை. அதனால் அந்தப் பணம் செலவு செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே கீவளூரில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கியை ஏற்படுத்தித் தர நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல கடன் பெறுபவர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்கள் இஷ்டப்படி தேர்ந்தெடுக்கிறார்கள். பணம் பெறுபவர் களின் மனுக்களைப் பெற்று, அவர்களின் தகுதி அடிப்படையில் அமைத்து, குலுக்குச் சீட்டு அடிப்படையில் கடன் கொடுப்பதற் கான நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1986-87ம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்கு 25 கோடி ரூபாயில் 25 ஆயிரம் வீடுகளும், 1986-87ம் ஆண்டில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 35 கோடி ரூபாயில் 35 ஆயிரம் வீடுகளும், ஆக மொத்தம் 60 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கான செயல்குறிப்பு இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது அந்த வீடுகளைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் உரிய கால அவகாசத்தில் முடிக்க காலம் நிர்ணயித்து அவைகளைச் செய் வதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்து வீடு கட்டுவதற்கு இப்போது 6,000 ரூபாய் கொடுக்கப் படுகிறது. இந்த 6,000 ரூபாய் என்பது சரியாக விநியோகிக்கப் படவில்லை. மேலும் அவைகளைக் கட்டுவதற்கு கான்ட்ராக்ட் மூலம் விடப்படுகிறது. அவர்கள் கட்டுகிற வீடுகள் கட்டி மூன்று மாதத்திலேயே இடிந்து விழுகிற நிலை இருக்கிறது. 50 ஆயிரம் வீடுகள் என்று சொல்லுகிறபோது ஏராளமாக சிமென்ட் போன்ற மூலப்பொருள்கள் தேவைப்படும். அவைகள் குறிப் பிட்ட காலத்தில் கிடைக்காததால் அந்த வீடுகளை நிர்ணயித்த காலத்தில் முடிக்காத சூழ்நிலை இருக்கிறது. ஒதுக்கக்கூடிய பணங்கள் வீணாகக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது மேலும்





கட்டிக் கொடுக்கக்கூடிய அந்த வீடுகள் எல்லாம் ஒரு வருடம், அல்லது 2 வருடத்திற்குக் கூட நீடிக்காத ஒரு நிலைமை இருக் கிறது. எனவே அந்த வீடுகள் எல்லாம் தரமான வீடுகளாகக் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்சனை என்பது தீராத பிரச்சனை யாக இன்றைக்கு இருக்கிற காரணத்தாலே, அவைகளை எல்லாம் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலே இருந்து செய்வதற்கு, அதிக நிதியை ஒதுக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு கிராமப்புறங்கள் முழுவதும் மின் விளக்கு எரிவது என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாக இருக் கிறது. மின்சார இலாக்காவிற்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் தாவாக்களும் தகராறுகளும் ஏற்பட்டு இருக்கின்றன. போடாத லைட்டுக்கு பணம் கேட்கிறார்கள். இப்படிப் பட்ட சூழ்நிலை களை எல்லாம் மாற்றுவதற்கு அந்தந்த ஊராட்சி ஒன்றியங் களுக்கு மின்சாரப் பராமரிப்புகளைக் கொடுக்கக்கூடிய காரியங் களைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சாலைகளுக்காக அதிக நிதியை தஞ்சை மாவட்டத்திற்கு ஒதுக்கித்தரவேண்டும் என்று நாங்கள் முன்னா லேயும் வாதாடி இருக்குகிறோம். தஞ்சை மாவட்டம் என்பது சதுப்பு நிலமாக இருக்கிறது. களிமண் கரம்பாக இருக்கிறது. மூலப் பொருள்கள் எல்லாம் வெளி மாவட்டங்களில் இருந்து வரவேண்டிய காரணத்தாலே, அங்கே சாலை பராமரிப்புக்கும், புதிதாக சாலை போடுவதற்கும், அதிக நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சத்துணவுக் கூடங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு பல்வேறு முறைகேடுகள் இருந்தாலும் அவைகளை எல்லாம் நிவர்த்தி செய்கிற வகையில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் அந்த நிர்வாகத்தை செம்மையாக நடத்துவதற்கான உத்தரவுகளை வழங்க வேண்டும் என்று நம்முடைய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அந்தக் கழிப்பிடங்களிலே தண்ணீர் வசதி இல்லாமல், கட்டப் பட்ட கழிப்பிடங்கள் இடிந்து, அவைகளில் பன்றி தூங்கவும், விறகு அடுக்கவும் தான் பயன்படுகிறதே தவிர, அந்தக் கழிப் பிடங்கள் எதற்காகக் கட்டப்பட்டனவோ, அதற்குப் பயன்பட வில்லை. எனவே கழிப்பிடங்களைக் கட்டுகிறபோது, அதற்குத்

[திரு. எம். செல்லமுத்து] [1986 ஏப்ரல் 16

தேவையான தண்ணீர் வசதியையும் செய்து கொடுக்கக்கூடிய நடவடிக்கைகளை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தன்னிறைவுத் திட்டம் என்பதின் மூலமாக கிராமப் புற தேவைகள் எல்லாம் நிறைவு செய்யப்பட்டன என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் எல்லாம் பேசியதைப் பார்க்கிறோம். ஆனால் தன்னிறைவுத் திட்டத்தில் போடப்பட்ட சாலைகள் எல்லாம் இன்றைக்கு பழுதாகிவிட்டன. இருக்கக் கூடிய இடங்கள் எல்லாம் தெரியாமல் போய்விட்டது. எனவே மறுபடியும் தன்னிறைவுத் திட்டத்தை கொண்டு வந்து அனைத்து கிராமங்களுக்கும் சாலை வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் திருவாரூர் மேம்பாலம் என்பது 1975-லிருந்து 10, 15 ஆண்டுகாலமாக கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எனவே அதை விரைவு படுத்தி, துரிதமாகக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்றும், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைக்கின்ற காரியத்தைச் செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் அவர்களின் அரசு சம்பத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி, உள்ளாட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் கீழ் நிர்வாகம் நடத்த வழிவகை செய்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது உள்ளாட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கும் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், ஜனநாயக ரீதியாக ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என இரு தரப்பில் இருந்தும் வெற்றி பெற்றிருந்தாலும், மக்களைச் சந்தித்து, அவர்கள் வைத்த கோரிக்கைகள் சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட துறையைச் சேர்ந்த அதிகாரிகளைச் சந்தித்து, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வாதாடி, அவைகளை அந்த அதிகாரிகளும் ஏற்று, பணிகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகளை எடுக்கும்போது, தற்போது உள்ளாட்சித் தலைவர்களாக பொறுப்புக்கு வந்தவர்கள், நாங்கள் குறிப்பிட்ட இடத்திலிருந்து அந்த திட்டங்களை வேறு இடத்திற்கு மாறுதல் செய்து கொண்டு போகும் சூழ்நிலை தற்போது உருவாகி இருக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த அன்னூர் ஒன்றியத்தில் உள்ள பச்சைபாளையம் அரிசன காலனியில் ஆழ்குழாய் கிணறு அமைக்க உத்தரவு பெற்றிருந்தும்,



1986 ஏப்ரல் 16] [திருமதி பி. லட்சுமி]

தற்போது உள்ளாட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர், ஆதி திராவிட மக்கள், தேர்தலில் தனக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி, அங்கே அமைக்க உத்தரவாகியிருந்த அந்த ஆழ் குழாய் கிணற்றை வேறு இடத்திற்கு மாற்றிப் போடுவேன் என்று பகிரங்கமாகச் சொன்னதை எனது தொகுதியில் உள்ள அந்த ஆதி திராவிட மக்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

அதேபோல், அதே ஊராட்சியில் உள்ள பூரிமாபாளையும், குப்பா பாளையம், மற்றும் சேடிசின்னபாளையம் அரிசன காலனியில் அரசின் சார்பில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டு இருந்தது.

(முற்பகல் 11—50.)

இதைக் கட்டியவர், கட்டுமானப் பணியை மிகவும் தரக் குறைவாகச் செய்ததால் கட்டிடங்கள் கட்டிமுடிக்கப்பட்ட ஓரிரு ஆண்டுகளிலேயே மிகவும் பழுதடைந்த நிலமை ஏற்படுகிறதென்று புகார்கள் வந்ததன் காரணமாக இப்படி பணியைத் தரக்குறைவாக செய்பவர்களுக்குத் தரக்கூடாது எனச் சொல்லி தற்போது குப்பையாபாளையம் ஊராட்சி, குப்பையாபாளையம் அரிசனக் காலனியில் கட்டப்படும் குடியிருப்புகள் தரமாகக் கட்டுபவர்களிடம் தருமாறு ஆணையாளரிடம் கூறியிருந்தேன். ஆனால் தற்போது உள்ளாட்சி மன்றத்திற்கு பொறுப்பேற்றிருக்கும் தலைவர், தனக்கு உறவினர் என்பதற்காக மீண்டும் குப்பையாபாளையம் அரிசனக் காலனியை கட்டும் பணியை தரக்குறைவாகச் செய்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்ட நபருக்கே தந்திருக்கிறார். ஆகவே இத்தகைய காரியங்களை உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த மக்களின் பிரதிநிதிகள் செய்யாமல் தவிர்க்க அரசுநடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய அவினாசி தொகுதியில் கடும் வறட்சி பகுதிகள் உள்ளதாலும், கடந்த சில மாதங்களுக்கு முன் தமிழகம் முழுவதும் பலத்த மழை பெய்தும் எனது மாவட்டமான கோவை மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவு மழை இல்லாத காரணத்தாலும், ஏற்கனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட எனது தொகுதியில் நிலத்தடிநீர் மிகவும் குறைந்துவிட்டது. இதனால் தற்போது தொகுதி முழுவதும் கடுமையான குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடத்தில் எனது தொகுதி, அன்னூர், அவினாசி ஆகிய இரு ஒன்றியங்களில், நகர, கிராமப் பஞ்சாயத்துக்களில் எங்கெங்கு தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது என்பதைப் பட்டியல் தயாரித்து ஆழ்குழாய் கிணறுகளை

[திருமதி பி. லட்சுமி] [1986 ஏப்ரல் 16

அமைக்க வேண்டுமென்றும், குடிதண்ணீர் கிணறுகளைப்பட்டியல் எடுத்து அவைகளை ஆழப்படுத்த வேண்டுமென்றும் பட்டியல் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை பரிசீலித்து உடனடியாக குடி தண்ணீர் பிரச்சனையை தீர்க்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டாலும், கிணறுகளின் அடி வெட்டப்பட்டாலும், இவைகளை இந்த கடுமையான வறட்சி காலத்திலே அமைத்துக்கொடுத்தால் எனது தொகுதி மக்களுக்கும் பெரும் உதவியாக இருக்கும் என்பதையும் தெரிவித்து நான் அனுப்பிய பட்டியலை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஐ. ஆர். டி. பி. மூலமாக, நலிந்தவர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும், சுயதொழில் செய்ய அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன்கள் வழங்கப்படுவதில், உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைவர்கள் தாங்களே முழுக்க முடிவு செய்து இன்னாருக்கு கடன் வழங்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யாமல், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் மக்கள் பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து அவர்களிடம் பரிந்துரை பெற்று வருபவர்களுக்கும் கடன் வழங்கப்படவேண்டுமென்ற நடைமுறையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இது போன்ற காரியங்கள், எங்கள் பரிந்துரைகள் செய்யப்பட்டவை நடைமுறைப்படுத்தப்படவில்லையென்றால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வாக்களிக்கும் பொதுமக்களுக்கும் தொடர்பற்றச் சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இதைப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வங்கிக்கடன் பெற வரும் விண்ணப்பத்தை சமபங்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்பவர்களுக்கும் வழங்கப்படவேண்டுமென்று உத்தரவிட வேண்டுகிறேன். மேலும் சட்ட மன்ற உறுப்பினர்கள் அவர்களது தொகுயிலுள்ள ஒன்றிய அலுவலகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஜீப் அல்லது வேன்களை தொகுதிச் சுற்றுப்பயணத்திற்காக மாதம் இருமுறை பயன்படுத்த அரசு ஆணை உள்ளது. ஆனால் நாங்கள் சுற்றுப் பயணம் செய்ய வாகனங்களைக் கேட்கும்போது, பழுதடைந்து விட்டது என்றும், குடும்பநல முகாம் சம்பந்தமான பணிகளுக்குச் சென்றுவிட்டதென்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகப் பணிக்காக சென்று விட்டதாகவும் சொல்லிவிடுகிறார்கள். இதனால் என்னைப்போன்ற பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் சொந்த பொறுப்பில் வாகனங்களை அமர்த்தி தொகுதி சுற்றுப் பயணம் செய்ய இயலாத காரணத்தால், பொதுமக்களை சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திக்க வருவதில்லை என்கிற குற்றச்சாட்டுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. எனவே



1986 ஏப்ரல் 16] [திருமதி பி. லட்சுமி]

இவைகளைப் பரிசீலனை செய்து சட்டமன்ற உறுப்பினர்களின் சுற்றுப்பயணத்திற்கு வாகனங்கள் கேட்கும்போது தவறாமல் கொடுக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மேலும் ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவைகளைப் புதுப்பித்து நல்ல தரமான வண்டிகளை தருமாறு, அரசு பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றியங்களில் பணியாற்றும் ஊர் நல அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கிராமங்களுக்கு பணி ஆற்ற சரிவர செல்வது கிடையாது. ஒன்றிய அலுவலகங்களில் அவர்கள் செல்லும் இடங்கள் பற்றி தகவலை முறையாக அறிவித்து விட்டு செல்லுவது இல்லை. இதனால் சம்பந்தப்பட்ட மக்கள் ஏதேனும் அவசர காரியங்களுக்காக ஊர் நல அலுவலரின் கையெழுத்துப் பெற வேண்டும் என்றால், 4, 5 முறை ஒன்றிய அலுவலகத்திற்கும் தங்களுடைய கிராமத்திற்கும் மாறி மாறி நடக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே இந்தக் குறையைப் போக்க ஒவ்வொரு ஊர் நல அலுவலரும் அந்த அந்த கிராமங்களில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்திலோ அல்லது பள்ளி சத்துணவு மையத்திலோ தினசரி சென்றுதங்கி தங்கள் பணிகளை தவறாமல் செய்வதோடு இவர்கள் வர இயலாத நாட்களில் அதற்கான காரணத்தை அவசர காரியமாக பொது மக்கள் சந்திக்க வேண்டும் என்றால் எங்கு வந்தால் பார்க்கலாம் என்பதையும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் அறிவிப்புப் பலகை வைத்து தெரியப்படுத்தி பொதுமக்களின் சிரமங்களை போக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் உள்ள குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க திருப்பூர் 2-வது குடிநீர் திட்டத்தை விரைவாக முடித்து திருப்பூர் குடிநீர் திட்டத்தின் மூலம் தற்போது கிடைக்கும் தண்ணீர் முழுவதையும் எனது தொகுதிக்கு உட்பட்ட அவினாசி, அன்னூர், திருமருங்கன்பூண்டி பேரூராட்சிகளும், தொகுதி முழுவதும் உள்ள கிராம பஞ்சாயத்துகளும் பயன்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேடடுக்கொள்கிறேன்.

மேலும் ஆதி திராவிட குடியிருப்புகளுக்கு தனித் தனியாக குடிநீர் திட்டம் நிறைவேற்றி அவர்கள் மேல் ஜாதிக்காரரின் நிர்பந்தத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் ஆளாகாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி பி. லட்சுமி] [1986 ஏப்ரல் 16

அதோடு அன்னூர் நகர அனைத்துக் கட்சி பிரமுகர்கள் ஒன்று கூடி ஏகோபித்த முடிவோடு தற்போது அன்னூர் நகரத்தில் பேரூராட்சியின் நிர்வாகத்தில் இருக்கிற பேருந்து நிலையம் மிகவும் நெருக்கடியில் இருப்பதால் அதை வார சந்தைக்கு மாற்றி அமைத்து விட்டு சந்தைப்பேட்டையில் பொதுப் பணித்துறையைச் சேர்ந்த பாசனம் அற்ற சுமார் 110 ஏக்கர் பரப்பளவுள்ள குளத்தில் 4 ஏக்கர் நிலம் எடுத்து பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும், கோரிக்கைகளை அனுப்பி வைத்து அனைத்து தரப்பு அதிகாரிகள் அன்னூருக்கு வருகை தந்தார்கள். சம்பந்தப்பட்ட இடத்தைப் மேற்பார்வை இட்ட போது மக்களும் அனைத்துக் கட்சியினரும் எடுத்துவைத்த கோரிக்கை நியாயமானது, சிறப்புடையது என்று சொல்லி விரைவில் திட்டத்தை நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதியைக் கொடுத்து விட்டுச் சென்றார்கள். ஆனால் சுமார் 4 ஆண்டுகள் ஆகியும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து இந்த ஆண்டிலாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அன்னூர் பேருந்து நிலையத்தை நவீன வசதியுடன் விரைவில் அமைத்துக் கொடுத்து பொதுமக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கோள்கிறேன்.

மேலும் அவினாசி ஒன்றியத்தில் 33 கிராம பஞ்சாயத்துக்கள் இருப்பதால் இதை இரண்டாக பிரித்து சேவூர் பிர்க்காவை தனியாக ஆக்கவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. இதைப் பரிசீலனை செய்து சேவூர் யூனியனை தனியாக அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பு வழங்கியதற்கு மாண்புமிகு துணைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டம் நகராட்சி நிர்வாகம் ஆகிய மானியங்கள் மீது ஜனதா கட்சியின் சார்பாக சில கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ப.உ.ச. அவர்களுடைய இந்த பதவி மிக மிக சிக்கலான பதவி. எப்படி வியாபாரிகள் அரிசி, உப்பு, புளி போன்ற பொருட்களை தினமும் மக்களுக்கு கொடுத்து அவர்கள் முகத்தில் விழிக்க வேண்டுமோ அதைப் போல அன்றாடம்



1986 ஏப்ரல் 16] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

குடிநீர் இல்லை, சுகாதாரம் இல்லை, ரோடு வசதி இல்லை என்று சொன்னால உள்ளாட்சித் துறை அமைச்சர் தான் அதற்கு பொறுப்பு என்ற காரணத்தால் மக்களுடைய பல குற்றச்சாட்டுக்களை தாங்கி இருப்பவர் மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. ப.உ.ச. அவர்கள் தான். இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது எத்தனையோ முறை தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தாலும் கூட உள்ளாட்சி மன்ற தேர்தலை தமிழ் நாடு முழுவதும் ஒரே நாளில் நடத்தி ஒரு சாதனையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நான் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

(நண்பகல் 12-00.)

அதே நேரத்தில், மாநகராட்சித் தேர்தலையும் அவர் நடத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். மாநகராட்சித் தேர்தலை நடத்துவதிலே அவருக்கு என்ன சிரமம் இருக்கின்றது என்று தெரியவில்லை. சட்டங்கள் முறையாக வந்தவுடன், தேர்தலை நடத்துவோம் என்று அவர் சொல்லிக் கொண்டே இருக்கிறார். மதுரை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் நீங்கள் ஏற்கனவே வெற்றி பெற்ற மாநகராட்சி. நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டியது இல்லை. இன்னும் சென்னை, கோயம்புத்தூர் மாநகராட்சிகள் இருக்கின்றன.

நகராட்சிகளிலே, 11 நகராட்சிகளில் தான் நீங்கள் வெற்றி பெற்று இருக்கிறீர்கள். அப்படி இருந்தும் கூட, ஒன்றும் அயராமல், பயப்படாமல் இருக்கும் நீங்கள், இந்த மூன்று மாநகராட்சிகளிலும், யார் ஆட்சிக்கு வந்தால் என்ன, அதைப் பற்றி ஏன் கவலைப் படுகிறீர்கள் என்று தெரியவில்லை. ஆகவே, மாநகராட்சித் தேர்தலை உடனடியாக நடத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் கடுமையான குடிநீர்ப் பஞ்சம் வர இருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறையாக அறிக்கைகள் அனுப்பவில்லை என்று தெரிகிறது. காமராஜர் மாவட்டத்தை பொறுத்த வரையில், வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று பல முறை சொல்லி விட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவரை நேரில் பார்த்தும் சொல்லியிருக்கிறேன். அவரும் முறையாக செய்திகளை சேகரித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாரே தவிர, அது இங்கே வந்து சேர்ந்ததா என்றோ, இங்கே வந்து, இங்கே கிடப்பிலே போடப்பட்டிருக்கிறதா என்றோ தெரியவில்லை. காமராஜர் மாவட்டத்தை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் என்று இங்கேயும் பல முறை கூறி இருக்கிறேன். இப்போதும் கூறுகிறேன். அந்த மாவட்டத்தை வறட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 16

அங்கே குடிதண்ணீர் பற்றாக்குறை மிகக் கடுமையாக இருக்கின்றது. விவசாயிகளுக்கு, போட்ட பொருள் திரும்ப எடுக்க முடியாத நிலை இருக்கிறது. அதே போல், கண்மாய்களும் பெருகவில்லை. இப்படி எல்லாம் இருக்கின்ற அந்தப் பகுதிகளிலே ஊராட்சி ஒன்றியங்களில், 300 குழாய்களுக்கு ஒரு ஃபிட்டர் தான் இருக்கிறார். அதை இரண்டாகவோ, மூன்றாகவோ, ஆக்க வேண்டும் என்று சொன்னால், செய்யப்படவில்லை.

நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் போய்ச் சொன்னால், இன்னும் எங்களுக்கு முறையாக உத்தரவு வரவில்லை என்று சொல்கிறார்கள். அதை விடுத்து, யாரிடம் கேட்க வேண்டுமென்றால், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லுங்கள் என்று சொல்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னால், பார்த்து ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்கிறாரே தவிர, அவருக்கு முறையாக உத்தரவு வருவதாகத் தெரியவில்லை.

ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த டி.ஆர்.டி. அலுவலகத்தில் இயக்குநரை, சென்னையில் வந்து பார்த்தால், அந்த அம்மையாருக்கு பேசக் கூட நேரம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது என்று சொல்லி திருப்பி அனுப்பி விடுகிறார். நான் சொல்லிக் கொள்ளவிரும்புவது, அரசாங்க இயந்திரம் முழுவதும் அதிகாரிகளிடம் தான் இருக்கின்றது. அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து கேட்கும் போது, சரியான பதில் கூறி, என்ன, என்ன குறைகள் என்று கேட்டு, அதை அவர்கள் நிவர்த்தி செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும்.

அது போல, டி.ஆர்.டி. ஊரக வளர்ச்சித் துறையினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளுக்கு அழைப்பதில் சட்டமன்ற உறுப்பினர்கள் பெயர்கள் விடுபட்டிருக்கின்றன. அழைக்கக் கூட மறந்து விடுகிறார்கள். வேறு கோட்டத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினரை அழைப்பவர்கள், அதே கோட்டத்திலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினரை அழைக்க, அழைப்பு அனுப்ப மறந்து விடுகிறார்கள் கேட்டால் அழைப்பு அனுப்ப உத்தரவு போட்டு இருக்கிறோம் என்று ஒரே வரியில் சொல்லி விடுகிறார்கள். இதற்கு என்ன காரணம் ? அது எங்கு நடந்தது, குறையைச் சொல்லுங்கள் என்று கூட கேட்பதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை. தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைச் சொல்ல வேண்டிய சூழ்நிலையிலே நான் இருக்கிறேன்.

விருதுநகரிலே புதிதாகக் கட்டப்பட்ட சத்துணவு மையங்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கென கட்டப்பட்ட வீடுகள், கால்நடை மருத்துவமனைகள், சுகாதார மையம், சர்க்கியூட் அவுஸ் ஆகியவை ஓராண்டுக்கும் மேலாகத் திறந்து வைக்கப்படாமல்



1986 ஏப்ரல் 16] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

இருக்கின்றன. 22—8-85ஆம் தேதி மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தேதி கொடுத்து, பிறகு ஒத்திவைக்கப்பட்டு இன்று வரை அவருக்கு திறப்பு விழாவிற்கு நேரம் கிடைக்கவில்லை. அதன் பிறகு மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து, மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் எல்லாம் வருகைதர அழைத்தும் அவர்கள் அங்கே வந்து திறந்து வைக்கிறோம் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்களே தவிர, திறந்து வைக்க வரவில்லை.

சில கட்டிடங்கள் திறந்து வைக்கப்படாமலேயே, பங்ஷன் பண்ண ஆரம்பித்து விட்டன. நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, எதிர்க் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தால், பெயர் பொறிக்கும் கல்லிலே எங்கள் பெயர் வந்து விடும் என்று அச்சப்படுகிறீர்களோ என்று தெரியவில்லை. ஒரு வருடத்திற்கு மேலாக கால் நடை மருத்துவமனை திறக்கப்படவில்லை. விருதுநகர் சர்க்கியூட் ஹவுஸ் திறக்கப்படாமல் இருக்கின்றது. கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு. இராமகிருஷ்ண ஹெக்டே அங்கு ஏழாவது மாதத்தில் வருகை தந்த போது, அதிலே தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள். ஆனால் இன்னும் அது திறப்பு விழா செய்யப்பட வில்லை. இதையெல்லாம் முறையாக நீங்கள் வந்து திறக்க நேரம் சௌகரியப்படவில்லை என்றால் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவரை வைத்து திறக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால் ஜில்லா மந்திரியைக் கேட்டுச் சொல்கிறேன் என்று சொல்கிறார். அதனால் பல காரியங்கள் தடங்கலாகிக் கொண்டு வருகின்றன.

அடுத்ததாக நியமன உறுப்பினருக்கு ஓட்டுரிமை இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அமைச்சரே சொன்னார்கள். சட்டமே அதற்கு இருக்கிறது என்று சொன்னார்கள். நீங்கள் சட்டம் போட்டு இருக்கலாம். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஊருக்குள்ளே வீதி வீதியாகப் போய் கும்பிட்டு தொண்டர்கள், மக்கள் காலில் விழுந்து கும்பிட்டு வோட்டு வாங்கி தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அப்படி வந்த உறுப்பினருக்கும் ஒரு ஓட்டு தான், நியமன உறுப்பினருக்கும் ஒரு ஓட்டுதான் என்று சொன்னால் பொருந்தாததாக இருக்கிறது. மற்ற நிறுவனங்களிலே எல்லாம் இப்படி கோ ஆப்ட் பண்ணியவர்களுக்கு வோட்டுரிமை இல்லை என்று நினைக்கிறேன். ஆகவே அதற்காகச் சட்டம் இருந்தாலும் தயவு செய்து அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 16

அடுத்தபடியாக நிதிப்பற்றாக்குறை காரணமாக கழிவுகள் அகற்றப்படுவதற்கு வாகனங்கள் புதிதாக வாங்கக்கூட அங்கே பணம் இல்லை என்று கொள்கை விளக்கக் குறிப்பிலேயே அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுடைய உள்ளம் உணர்த்தியிருக்கிற காரணத்தினால்தான் அதை அவர்கள் இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். வாகனங்கள் வாங்குவதற்குக்கூட பணம் கிடையாது. எங்கே பார்த்தாலும் குப்பைகள் குவிந்து கிடக்கின்றன. சுகாதாரக் கேடு மக்களுக்கு வந்துவிடுமோ, தொத்து நோய்கள் வந்துவிடுமோ என்று அச்சப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதை எல்லாம் போக்குவதற்கு என்ன வழி வைத்திருக்கிறீர்கள் என்பதைத் நான் கேட்க விரும்புகிறேன்.

அரசாங்கத்திடமிருந்து மானியங்களைக் கொடுக்காவிட்டால் நகராட்சிகளைச் சீர்திருத்த முடியாது என்பது என்னுடைய கருத்து. உங்களைக் கேட்டால் எங்களுக்குப் பற்றாக்குறை என்று சொல்கிறீர்கள். ஒரு வருடத்திற்கு மானியங்கள் கொடுத்தால்தான் அந்தச் சிரமங்களை நிவர்த்தி செய்ய முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

காமராஜர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விருதுநகரிலே மாவட்ட ஆட்சித் தலைவர் பேருந்து நிலையம் புதிதாகக் கட்டப்படும், நவீன அங்காடிகள் கட்டப்படும் என்றெல்லாம் அறிக்கைகள் கொடுத்து ஒரு வருடம் ஆகப்போகிறது. இன்னும் எந்தவிதமான கட்டுமானப் பணியும் நடைபெறவில்லை. கட்டுவதற்குத் திட்டம் இருப்பதாகவும் தெரியவில்லை. காமராஜர் மாவட்டத்திற்கு தலைமை அலுவலகத்திற்கு 71 இலட்ச ரூபாய்தான் ஒதுக்கீடு வந்தது. அதற்குப் பிறகு ஒதுக்கீடே வரவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறார். ஆனால் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலே அங்கே உள்ள கட்டடங்கள் எல்லாம் அநேகமாக பூர்த்தியாகிவிட்டது என்று கேள்விப்படுகிறேன்.

அங்கே எஸ். பி. குடியிருப்புகள் கட்டப்பட்டுவிட்டன. ஆனால் இங்கே காமராஜர் மாவட்டத்திலே எஸ். பி. வாடகை வீட்டில்தான் குடியிருக்கிறார். நீங்கள் புதிய புதிய மாவட்டங்களை உருவாக்குவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்திலே ஏற்கெனவே உருவாக்கப்பட்ட மாவட்டங்களுக்கு முறையாக நிதி ஒதுக்கீடு ஏன் செய்யாமல் இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. முறைப்படி நிதி ஒதுக்கீடுகள் செய்தால்தான் கட்டுமானப் பணிகளை முடிக்க முடியும். ஆயிரம் ரூபாய் வாடகை பெறுகின்ற வீட்டிற்கு அரசாங்க மதிப்பீடு இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய் என்று வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இது எல்லாம் யார் பணம்? மக்களுடைய வரிப் பணம்.



1986 ஏப்ரல் 16] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

கட்டுமானப் பணிகளைச் சீக்கிரமாக துவக்கினால்தான் மக்களுடைய பணம் நம்முடைய கையிலே இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள், டி.டி.சி. மீட்டிங்க்ஸ் இதுவரை நடைபெறவில்லை. 15–3–1985 அன்றைய தேதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே வந்துவிட்டார். அந்த மாவட்டம் துவங்கிவிட்டது. ஆனால், டி.டி.சி. கூட்டங்கள் நடைபெறவில்லை. கேட்டால் அதற்கான முறைப்படியான உத்தரவு வரவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறார். என்ன உத்தரவு என்று தெரியவில்லை. ஏதோ ஒரு கிராமத்திலே வார்டுகளைப் பிரிப்பதிலே சிரமம் இருப்பதாகச் சொல்கிறார். இராமநாதபுரம் மாவட்டம் 3 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. இப்படி சிறு சிறு பிரச்சினைகள் இருப்பதிலே என்ன தப்பு இருக்கிறது? ஒரு கிராமத்தில் மாறிவிட்டது என்பதால் சிரமம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களைக் கூட்டினால்தான் எங்களால் குறைகளைச் சொல்ல முடியும். அப்போதுதான் அதிகாரிகளை எங்களால் ஒருசேரப் பார்க்க முடியும். எங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல முடியும். ஆகவே, அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10).

உள்ளாட்சி மன்றங்களில் துணைத் தலைவர் தேர்தல் நடக்கின்ற பொழுது அங்குள்ள தலைவருக்கு வாக்களிப்பதற்கு உரிமை உண்டா என்பது பற்றி ஏற்கெனவே கேள்வி கேட்கப்பட்டு, அமைச்சரவர்களும் உண்டு என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அது சம்பந்தமான முறையான உத்தரவு போடுவதில் ஏன் தயக்கம்? விருதுநகரில் இப்பிரச்சினை ஏற்பட்டு, டி.எம்.ஏ.-விற்கு லைட்னிங் கால் போட்டுக் கேட்டால், நான் உத்தரவாதம் தரமுடியாது என்று சொல்லுகிறார்கள். இப்படியிருந்தால் எப்படி அந்தத் தேர்தலை நடத்த முடியும்? விருதுநகரில் துணைத் தலைவர் தேர்தலில் 2 பேர் தேர்தலில் நின்று, இருவரும் சம வாக்குகள் பெற்று திருவுளச் சீட்டு போட்டு யார் வெற்றி பெற்றார்கள் என்று நிர்ணயிக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதற்குக் காரணம் உங்களுடைய உத்தரவை உடனே நீங்கள் அனுப்பாததுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்சிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களைப் பொறுத்தவரையில், 1984-85 ஆம் ஆண்டில் 39.6 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே, 52.8 சதவிகித மக்கள் என்று இருந்தது இப்படிக் குறைந்து விட்டது என்று

சொல்கிறீர்கள். இது வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால், இதை எப்படி சொல்கிறீர்கள் என்பது தெரியவில்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களைக் குறைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இது ஏட்டிலேதான் இருக்கிறது. இதற்காகச் செலவழிக்கப்படும் பணம் அனைத்தும் எங்கெங்கோ செல்கிறது. வசதி படைத்தவர்கள், பல பெயர்களில் எடுத்துக் கொள்கிறார்கள். அரசியல் செல்வாக்கு தலையிடுகிறது. பல உதாரணங்களைக் காட்ட முடியும். ஆனால், இவையெல்லாம் உங்களுக்கும் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி அமைக்க வேண்டும். அதை எந்த முறையில் மாற்றுவது என்று சொல்லத் தெரியவில்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழை மக்கள் மனுக் கொடுக்கக் கூட முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே, நாமாகவே அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கான நடவடிக்கையை எடுத்தால்தான் அவர்களின் வாழ்க்கையைச் சீர் தூக்க முடியும். அவர்களை மனிதர்களாக ஆக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏழைகளுக்கு என்று மானியமோ, கடனோ கொடுக்கப்படுவதில் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. 'மாவட்ட தொழில் மையங்களிலிருந்து சிபாரிசு செய்து அனுப்பப்பட்ட பல பேப்பர்களும் வங்கிகளால் திருப்பி அனுப்பப்படுகின்றன. ஊரகத் தொழில் துறை அமைச்சரவர்களிடத்தில் நேரடியாக நானே கொடுத்திருக்கின்றேன். ஏன் என்று கேட்டால் கோட்டா முடித்து விட்டது என்று சொல்கிறார்கள். மாவட்ட தொழில் மையத்தில் இருந்து சிபாரிசு பெறுவதே மிகவும் கடினமாக இருக்கிறது. மதுரையிலேதான் அந்த மையம் இன்னும் இருக்கிறது. இன்னும் காமராஜ் மாவட்டத்திற்கு என்று விருதுநகருக்கு வரவில்லை. இப்படி மதுரைக்குச் சென்று சிபாரிசு செய்து அனுப்பச் செய்வதிலேயே பெரும் சிரமங்கள் இருக்கின்றன. அப்படிக் கஷ்டப்பட்டு சிபாரிசு வாங்கி வந்தும், இங்கே இல்லை என்று சொன்னால் ஏழைகள் என்ன செய்வார்கள். எனவே, சிபாரிசு செய்து அனுப்பப்பட்டவைகளுக்கு உடனடியாகக் கடன் கொடுக்கின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.இ.பி., போன்ற திட்டங்களில் போடப்பட்டுள்ள ரோடுகள் அப்படியே கிடக்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால், அந்த நெடுஞ்சாலைகள் பேருந்துகள் செல்லக்கூடிய அளவிற்குப் புதுப்பிக்கப்படவில்லை. அதனால் பேருந்துகளே செல்வதில்லை. பேருந்துகள் சென்றால்தானே என். ஆர். இ. பி. போன்ற திட்டங்களின் மூலம் போடப்பட்ட ரோடுகளில் மக்கள் நடந்து செல்வார்கள். தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு (மணியடிக்கப்பட்டது) மணியும் அடிக்கப்பட்டு விட்டதாலும், அதிகம் பேர் பேச வேண்டியிருப்பதாலும், வாய்ப்புக்கு நன்றி கூறி, இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.



*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சமுதாய நலவளர்ச்சி திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற மானியக் கோரிக்கையின் மீது சுருக்மாகச் சில கருத்துக்களைச் சொல்வதற்கு விழைகிறேன்.

உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள், 1970-ஆம் ஆண்டு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபொழுது தமிழகத்தில் ஊராட்சிகளுக்குத் தேர்தல் நடந்தது. அன்றைக்கு உள்ளாட்சித் துறைக்கு அமைச்சராக இருந்த அவரே இன்றைக்கும் உள்ளாட்சித்துறை அமைச்சராக வந்த பிறகு, 16 ஆண்டுகளுக்குப் பிறகு, பல்வேறு நெருக்கடிகளுக்கும், இயக்கங்களுக்கும் இடையில் தேர்தலை நடத்தி, இன்றைக்கு உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்காக அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மன்னார்குடியில் கோட்ட வளர்ச்சி அலுவலகம் இருக்கிறது. ஆறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் அவர் பணியாற்ற வேண்டியிருக்கிறது. ஆனால் மூன்றாண்டுகளுக்கு முன்னால் ஜீப் டி.டி.ஓ. விற்கு அனுப்பப்பட்டது. அந்த ஜீப் நாகப்பட்டணத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. இப்பொழுது மன்னார்குடி கோட்ட வளர்ச்சி அலுவலர் ஆறு ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்று கடமையைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதுவும், தஞ்சை கிழக்கு பகுதி அதிகமான வேலை உள்ள பகுதி. அந்தப் பணிகள் சிறப்பாக நடத்தப்பட வேண்டும். தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஜீப்பைக் கொடுத்து விடுவதால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் வேலையிலும் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, கோட்ட வளர்ச்சி அலுவலருக்கு இந்த ஆண்டு ஒரு ஜீப்பைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேர்தல் முடிந்து விட்டது. இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேவையான நிதி இல்லை. ஏழெட்டு, பத்து ஆண்டுகளாக வீட்டு வரி, நில வரி போன்ற வரிகள் பாதிக்கப்பட்டு விட்டன. இதனால் அரசாங்கம் கொடுக்கக் கூடிய அந்த நிதியும் குறைந்துவிட்டது. அதனால், இப்பொழுது எந்த வேலையும் செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. எனவே, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக நிதி வழங்க வேண்டும்.

அதேபோல், ஊராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றையும் பார்த்தால், ரூ. 7, ரூ. 3 தான் இருக்கிறது இப்பொழுது. பணமே கிடையாது. ஊராட்சி மன்றத்தில் இன்றைக்குக் கை பம்ப் சீர் செய்யக்கூட நிதி கிடையாது. ஆகவே, அந்த நிலையைப் போக்க இதை எல்லாம் பரிசீலனை செய்து நிதி ஒதுக்க வேண்டும்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 16

இன்றைக்கு ஊராட்சிமன்றத்திற்கு பெரும்பகுதி அலுவலகம் கிடையாது. அநேகமாக, மரத்தடியிலேதான் ஊராட்சிமன்றக் கூட்டமே நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை போக வேண்டுமென்றால், விசேஷமாக நிதி ஒதுக்கி ஊராட்சிமன்ற அலுவலகம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிராமப் புறங்களில், குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் சிறிய வாய்க்கால்கள், அல்லது ஆறுகள் குறுக்கே ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் இணைப்பு கொடுக்க வேண்டும். அதனால் பள்ளிக்குச் செல்லக்கூடிய மாணவர்கள், பல்வேறு துறைகளுக்குச் செல்ல வேண்டியவர்கள், பாலங்கள் இல்லாததால், மழைக் காலத்தில், கஷ்டப்படுகிறார்கள். அப்பேர்ப்பட்ட இடங்களில் பாலங்கள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அதே போல, சமூகக் காடுகள் வளர்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக, காடுகள் வளர்ப்பதற்கு பல்வேறு கன்றுகள் நடப்படுகின்றன. நடப்படுகிறதே தவிர, மறுபடியும் அதற்கு ஒரு ஆள் போட்டு, பாதுகாத்து, காடாக உருவாக்குகின்ற நிலை இல்லை. பாதுகாப்பற்ற நிலையிருக்கிறது. காடுகள் அதிகமாக வளர்த்தால்தான் இயற்கையான மழை கூட வருவதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தக் காடுகளைத் தமிழக அரசு வளர்க்க வேண்டியது மிக முக்கியம். அதை மேலும் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதே போல், சிறு பாசன வேலைகள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக, வாய்க்கால்கள் வெட்டுகிறார்கள், விவசாயிகளுக்கு வேலை அளிக்க. அந்த வாய்க்கால்கள் வெட்டும்போது, பாதி பணமாகவும், பாதி அரிசியாகவும் வழங்குகிறார்கள். ஆனால், தண்ணீர் விடுவதற்குச் சற்று முன்னதாகத்தான் வெட்ட ஆரம்பிக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், மே மாதத்திலேயே, அந்த விவசாயிகளுக்குப் பாசன வசதிக்காக, வாய்க்கால் வெட்டுவதற்கு, முன் கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், ஊரகச் சாலைகள். 1983 ஆம் ஆண்டு கடுமையான வெள்ளத்திற்குப் பிறகு, 2, 3 ஆண்டுக் காலத்தில், பெய்த மழையால், பெரும்பகுதி சாலைகள் இருப்பதாகவே தெரியவில்லை. கிராமப் புறத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1986 ஏப்ரல் 16] [திரு. பொ. உத்திராபதி]

பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்ப்பது பற்றி போடப்பட்டிருக்கிறது. ஆனால், பெரும்பாலான இடங்களில் இன்னமும் பள்ளிக் கட்டிடங்கள் இல்லாமல், பழைய கீத்துக் கொட்டகைகளில் பள்ளிக் கூடங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. மழைக் காலத்தில் பார்த்தால், குழந்தைகளும் அவஸ்தைப்படுகிறர்கள். ஆசிரியர்களும் வருவதற்கு அவஸ்தைப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்கி, கீற்றுக் கொட்டகைகள் முழுமையும் அகற்றப்பட்டு, பள்ளிக்கூடங்கள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும். இப்போது, பழைய கட்டிடங்களுக்கு வெள்ளை அடிப்பதே கிடையாது. கதவு, ஜன்னல்கள் இடிந்துவிட்டால்கூட, சீர் செய்வது கிடையாது. பள்ளிக்கூடங்கள் 40, 50 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டிய மாதிரித் தெரிகிறது. ஆகவே, அந்தப் பழைய பள்ளிக்கூடங்களுக்கு ஒரு ஆண்டுக்கு ஒரு முறையாவது வெள்ளை அடித்து, அவற்றைச் சரிவர பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரிசி கிடங்கு, சிமெண்ட் கிடங்கு பெரும் பகுதி இடங்களில் கட்டுவது கிடையாது. ஆனால், அதற்காக ஒதுக்கப்படுகிற பணத்தை அதற்காகவே செலவு செய்வது கிடையாது. திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரே ஒரு கிடங்குதான் இருக்கிறது. ஆயிரக்கணக்கான மூட்டைகள் அலுவலகத்தில் அடுக்கி வைக்கப்பட்டு, எதிர்காலத்தில் கூட அரிசி கொடுக்க முடியாத நிலைமைக்கு, பூச்சி, பொட்டுகள் பிடித்து, நாற்றம் எடுத்து உள்ளன.. ஆகவே, அரிசி வர வர வேலை கொடுக்க வேண்டும், சாலை போடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் கழிப்பறைகள் கட்டப்பட்டது. நான் இன்றைக்கு என்னுடைய கருத்தாகச் சொல்கிறேன். கிராமங்களில் கட்டப்பட்ட கழிப்பிடங்கள் இப்பொழுதும் வீணாக இருக்கின்றன. பணம் வீணாகச் செல்கிறது. அமைச்சர் அவர்கள் கூட தஞ்சை மாவட்டத்திற்கு வருகிற பொழுது, பல கழிப்பிடங்களை நேரில் பார்த்தால் தெரியும். அவை தேவையில்லாமல் கட்டப்பட்டிருக்கின்றன. பணம் வீணாகப் போகிறது. ஒன்று அவற்றை மாற்ற வேண்டும். அல்லது, அதே திட்டத்தை அமுல்படுத்தி, தண்ணீர் சப்ளை கொடுக்க வேண்டும். சுகாதார வசதியோடு இருக்கும் வகையில் செயல்படுத்த வேண்டும். அப்படியில்லாமல் அரசுப் பணம் வீணாகச் செல்கிறது. அந்தத் திட்டத்தை மாற்றிப் பள்ளிக் கட்டிடங்களுக்கு உபயோகிக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே போல், நகராட்சி, பேரூராட்சிகளுக்குத் தேவையான சுகாதாரத் தொழிலாளர்கள் கிடையாது. 10, 15 அண்டுகளுக்கு முன்பாக, நியமிக்கப்பட்ட தொழிலாளர்கள்தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். நகரத்தில் ஜனத்தொகை பெருகி வருகிறது.

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 16

அந்தப் பெருக்கத்திற்கு ஏற்றாற்போல், நகரசுத்தி, சுகாதாரத் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும், தற்போதுள்ள தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றத் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(பிற்பகல் 12-20)

என்னுடைய தொகுதியில் திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை என்று இரண்டு பேரூராட்சிகள் இருக்கின்றன. குறிப்பாக முத்துப்பேட்டை பேரூராட்சிக்கு வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறது. அதன் காரணமாக அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு சரியாக சம்பளம் கொடுக்க முடியவில்லை ; மற்ற தொழிலாளர்களுக்கும் சரியாக சம்பளம் கொடுக்க முடியவில்லை. இந்த நிலையைப் போக்க இப்படிப்பட்ட வருமானம் இல்லாத பேரூராட்சிகளுக்கு அதிகமாக நிதி ஒதுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டிக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அந்த ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளைக் கேட்பதில்லை. அவர்களுடைய விருப்பத்திற்கு ஒரு பக்கத்தில் கட்டி விடுகிறார்கள். அதனால் மக்களுக்கு பிரயோஜனம் இல்லை. கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் செருவாமணி கிராமத்தில் மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டி, அது அப்படியே நிற்கிறது. பைப் எல்லாம் போட்டிருக்கிறார்கள். தண்ணீர் இல்லை.

அதைப் போன்று திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் திருவலஞ்சுழி பஞ்சாயத்தில் மேல்நிலை தண்ணீர் தொட்டி கட்டி அப்படியே நின்று கொண்டிருக்கிறது. கம்பிகள் எல்லாம் கூட அப்படி, அப்படியே நீண்டு கொண்டிருக்கின்றன. மக்களுக்கு அது பயன்படவில்லை. இப்படி அரசு பணம் வீணாகிறது. ஆகவே மேல்நிலை தண்ணீர் தொட்டிகளைக் கட்டும்போது ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளை கலந்து, தகுந்த இடத்தில் கட்ட வேண்டும்.

ஏழு நாளில் கைப்பம்பு சீர் செய்யப்படும் என்று சொல்லி இருக்கிறீர்கள். அதற்கான உத்தரவு இருக்கிறது. ஆனால் அந்த நிலைமை இன்றைக்கு நடைமுறையில் இல்லை. பணம் இல்லாத காரணத்தால் பம்பு ரிப்பேர் செய்கிறவருக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை கூட இருக்கிறது. இந்தப் பணியிலே தேக்கம் இருக்கிறது. போடப்பட்டிருக்கிற உத்தரவுபடி உடனடியாக கைப்பம்புகளை பழுதுபார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப் போன்று மின்சார விளக்குகள் சரியாக எரியவில்லை. ஒரு சின்ன பல்புக்கு 3 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த வகையில் பார்த்தால் ஒவ்வொரு மாதமும்



1986 ஏப்ரல் 16] [திரு. பொ. உத்திராபதி]

ஊராட்சி ஒன்றியத்திற்கு வருகின்ற வருமானத்தில் 75 சதவீதம் மின்சார இலாகாவிற்கே போய் விடுகிறது. அப்படி இருந்தாலும் மின்சார இலாக்காவிற்குப் பணம் போகிறதே தவிர மின்சார விளக்குகள் சரியாக எரியவில்லை. ஆகவே, மீண்டும் உள்ளாட்சித் துறையே மின்விளக்குகளை பராமரிக்கின்ற முறையைக் கொண்டு வர வேண்டும் ; அந்த வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படியானால் தான் ஊராட்சி ஒன்றியங்களின் பணம் வீணாகாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திருப்பூர் நகராட்சியில் 8 வருடங்களாக மக்களுக்கு குடிநீர் வசதி இல்லாமல், அவர்களுக்கு குடிநீர் வழங்க வாடகை லாரியைப் பயன்படுத்துகிறார்கள். ஆண்டுக்கு 6 இலட்சம் ரூபாய் லாரி வாடகையாகப் போய்விடுகிறது. இது தேவைதானா லாரி மூலமாகத்தான் தண்ணீர் வழங்க வேண்டுமென்ற நிலை இருந்தால் ஏன் அந்த நகராட்சியே சொந்தமாக லாரிகளை வாங்கிக் கொள்ளக்கூடாது ? அப்படிச் செய்தால் நகராட்சிக்கு அது ஒரு மூலதனமாக இருக்கும் அல்லவா ? மக்களுடைய வரிப் பணமும் வீணாகப் போகாது. ஆகவே, இப்படி லாரி வாடகை கொடுப்பதற்கு என்ன காரணம் ? அதிகாரிகள் தவறு செய்வதாக இருந்தால் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1986-87 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், மலைஜாதி மக்களுக்கு 25 கோடி ரூபாயில் 25,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிற 10 இலட்சம் வீடுகளில் அடங்குமா அல்லது உள்ளாட்சித் துறையிலிருந்து தனியாக கட்டிக் கொடுக்கப்படுகின்றனவா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

ஏற்கனவே 4,800 ரூபாய், 6,000 ரூபாய் என்ற அளவில் ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டினார்கள். எங்கள் மாவட்டத்தில் 4,800 ரூபாயில் கட்டிய வீடுகள் எல்லாம் தரைமட்டத்திலே இருக்கின்றன. 6,000 ரூபாயில் கட்டிய வீடுகள் நில மட்டத்தில் இருக்கின்றன. அதற்குமேல் கட்டமுடியவில்லை. இந்த ஆண்டு அந்தத் தொகையை 10,000 ரூபாயாக உயர்த்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். கட்டி முடிக்கப்படாத அந்த வீடுகளுக்கும் இந்தத் தொகையைக் கொடுத்து முழுமையாக கட்டி முடிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காண்ட்ராக்ட்டில் விடாமல் அரசே கட்டிக் கொடுக்கவேண்டும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கறவை மாடுகள், வண்டி மாடுகள், தண்ணீர் இறைக்கும் என்ஜின்கள் வாங்குவதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. அதிலே 33⅓ சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது, ஊராட்சி ஒன்றியத்தி

[திரு. பொ. உத்திராபதி] [1986 ஏப்ரல் 16

விருந்து சிபாரிசு செய்து, வங்கிகளுக்கு அனுப்பி பல மாதங்கள் ஆனாலும் பணம் கிடைப்பதில்லை. மானியமாகக் கொடுக்கப் படுகின்ற 33½ சதவீதமும் அநேகமாக மாட்டை சரிபார்க்க வருகின்ற டாக்டர்கள், பணம் சாங்ஷன் செய்கின்ற பாங்க் மேனேஜர்கள் போன்றோர்களுக்கே சரியாகிவிடுகிறது. எந்த மக்களுக்காக நாம் மானியம் கொடுக்கிறோமோ அவர்களுக்குப் போய் சேரவில்லை. ஆகவே, இந்த உதவி அந்த மக்களுக்கு சுலபமாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு சத்துணவு மையத்தைப் பார்வையிட, தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்க, எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்திருக்கிறார் ; அமைச்சரும் அறிவித்திருக்கிறார். இன்றைக்கு சத்துணவு மையங்களில் எப்படி வேலை நடக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவது நல்ல திட்டம், வரவேற்கிறோம். ஆனால் அது அந்த குழந்தைகளுக்கு முழுமையாகப் போய்ச் சேரவில்லை. இந்தத் திட்டத்திற்காகக் கொடுக்கப்படுகின்ற காய்கறி, பருப்பு எண்ணெய் எல்லாம் 25 சதவீதம்தான் குழந்தைகளுக்குப் போகிறது ; 75 சதவீதம் இடையிலேயே போய்விடுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இதைப் பார்த்து மதுரையிலே சொல்லியிருக்கிறார்கள். பணம் வீணாகாமல் நாம் ஒதுக்குகின்ற பணம் முழுமையாக அந்தக் குழந்தைகளுக்குப் போய்ச் சேர வேண்டுமென்றால், தவறு செய்கின்றவர்கள்மீது ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லை என்றாலும், தவறுகளைக் கண்டுபிடித்து கண்டிக்கின்ற அதிகாரத்தையாவது அவர்களுக்கு வழங்க வேண்டும். அப்படியானால்தான் சத்துணவுத் திட்டம் ஒழுங்காக நடக்கும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்காலத்திலாவது இதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறுமை ஒழிப்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில் 3,500 ரூபாய் வருமானம் உள்ளவர்களை எல்லாம் பாதுகாத்ததற்குப் பிறகுதான் 4,800 ரூபாய் ஆண்டு வருமானம் உள்ளவர்கள் பற்றிப் பரிசீலிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களைப் பொறுத்த வரையில் மாநில அரசு ஒரு புள்ளி விவரம் கொடுக்கிறது ; மத்திய அரசு ஒரு புள்ளி விவரத்தைக் கொடுக்கிறது. 49 சதவீதம் இந்த ஆண்டு என்று அவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நீங்கள் இங்கே சொல்கிறபோது 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றும் போது தற்போதுள்ள 48.2 சதவீதம் என்பது 23 சதவீதமாகக் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. எப்படி நீங்கள் 1990 ஆம் ஆண்டுக்குள் இதனை 23 சதவீதமாகக் குறைக்கப் போகிறீர்கள் ? தமிழகத்தில் ஒரு கோடி மக்கள் எந்த வித



1986 ஏப்ரல் 16] [திரு. பொ. உத்திராபதி]

மான காணி நிலமும் இல்லாமல் விவசாயிகளாக, விவசாயத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நிரந்தரமான வேலை, உரிய உத்தரவாதம் ஆகியவற்றைக் கொடுக்காமல் வறுமையை ஒழிப்பது என்பது சாத்தியமில்லை. எனவே ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான உத்தரவாதம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தனி அதிகாரிகள் மூலமாக பல ஆண்டுக்காலம் நிர்வாகம் நடத்தப்பட்டிருக்கிறது. இப்போது கணக்கு கொடுப்பதற்குக் கூட அவர்கள் மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பத்தாண்டுக் காலத்தில் அரசால் ஒதுக்கப்பட்ட பணம் முறையாக உரிய திட்டங்களுக்கு அவர்களால் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பொறுத்த வரையில் விசாரணை கமிஷன் அமைத்து விசாரணை செய்ய வேண்டும். அப்போதுதான் திட்டங்கள் உரிய வகையில் நிறைவேறி இருக்கின்றனவா என்பதை அறிய முடியும் அதிலே என்னென்ன தவறுகள் நடந்திருக்கின்றன என்பதைத் தெரிந்துக் கொண்டால்தான் எதிர்காலத்திலே தனி அதிகாரிகளிடத்திலே ஒப்படைக்கிறபோது ஜாக்கிரதையாக ஒப்படைக்க முடியும் ஏன்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டியைப் பொறுத்த வரையில் 1978 ஆம் ஆண்டு அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக அறிவித்துவிட்டார்கள். இன்றைக்கு வேளாண்மைத்துறை அமைச்சராக இருப்பவர்கள். அவர்களால் நகராட்சி என்று அறிவிக்கப்பட்ட பிறகும் அதாவது 5½, 6 லட்சம் ரூபாய் வருமானமும், 23,000 மக்கள் தொகையும் உள்ள நிலைமையிலும் நகராட்சியாக அதனைச் செயல்படுத்துவதில் காலம் கடந்துகொண்டு வருவதால் அந்த மக்களுக்குச் சர்க்கார் மூலமாகக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்காமல் போகின்றன. எனவே எதிர்காலத்திலாவது அதை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து முத்துப்பேட்டையிலும், திருத்துறைப்பூண்டியிலும் பேருந்து நிலையங்கள் அமைக்க வேண்டும் என்று அறிவித்து ஒவ்வொன்றுக்கும் 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கிய பிறகும் அது தேங்கி நிற்கிறது. அதை உடனடியாகச் செய்து கொடுக்கவேண்டும்.

என்னுடைய தொகுதியில் திருத்துறைப்பூண்டி யூனியனில் கோமல் கிராமத்திற்கு அருகில் அரிச்சந்திரா ஆற்றில் ஒரு வண்டிப் பாலம் கட்ட வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டு வருகிறேன். அதைச்செய்து தரவேண்டும்.

கோட்டூர் யூனியனில் பள்ளிவருத்தி கிராமத்திற்கு அருகில் அரிச்சந்திரா நதி ஆற்றில் ஒரு வண்டிப் பாலம் அமைத்துத்தர வேண்டும். அதே யூனியனில் ஓவர்ச்சரித்தோட்டம் என்ற இடத்தில் முள்ளியாற்றில் ஒரு வண்டிப்பாலம் கட்டித்தர வேண்டும்,

கறுப்புக்கிளார், கரம்பைக்குடி ஆகிய கிராமங்களை இணைக்க பொன்னுக்குண்டான் ஆற்றில் வண்டிப்பாலம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆலத்தம்பாடி பொன்னிறையிலிருந்து ஆவிவளம், முன்னியூர், நந்தமாங்குடி ஆகிய இடங்களின் வழியாக ஆலத்தூர் பாலம் வரை உள்ள அரிச்சந்திரா நதி ஆற்றின் தென் கரையில் உள்ள ரோட்டைப் பேருந்துச் சாலையாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 9 கிலோ மீட்டர் தூரம் வரையில் இருக்கின்ற அந்தச் சாலையை நல்ல முறையில் அமைத்துக் கொடுக்க வேண்டும். அந்தப் பகுதியில் இருக்கின்ற 30,000 மக்கள் 9 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் நடந்து சென்றுதான் பஸ் ஏறவேண்டி இருக்கிறது. சுதந்திரம் பெற்று 38 ஆண்டுகள் ஆனதற்குப் பிறகும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோட்டூர் யூனியனில் பூதமங்கலம்-பள்ளிவிருத்தி சாலையைத் தார் சாலையாக மாற்றித்தர வேண்டும். புழுதிக்குடி-விக்கிரவாண்டி சாலையை மேம்பாடு செய்ய வேண்டும். திருப்பத்தூரிலிருந்து மீனமநல்லூர் வழியாக எடையூர் செல்லுகின்ற சாலையில் பேருந்து சென்று கொண்டிருந்தது. 1983 டிசம்பரில் பெய்த மழையில் ஒரு சிறிய பாலம் உடைந்துவிட்டது. அதன் காரணத்தால் நான்காண்டுகளாகப் பேருந்து செல்லாமல் நின்றுவிட்டது. இதனால் அந்தப் பகுதி மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அந்தச் சாலையைச் சரிபார்த்துத் தர உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் குன்னூர், எக்கள் கடம்பவலாகம் சாலையையும், மேளப்பெருமழை சாலையையும் மேம்பாடு செய்யவேண்டுகிறேன்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஜீப் கொடுக்க வேண்டும் என்றும் அறை ஒதுக்கிக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நாங்கள் சென்று கேட்கிற நேரத்தில்தான் ஜீப்பினுடைய டையர் வெடித்துவிட்டது என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. எனவே பல மாதங்களாக அது கிடைக்காமலே போய் விடுகிறது. எனவே, எங்களுக்கு ஜீப்பு கொடுப்பதற்குப் பதிலாக எங்களுக்கு மாதத்திற்கு 50 லிட்டர் எண்ணெயைக் கொடுத்துவிட்டால் நாங்கள் வேறு கார்களைப் பயன்படுத்தி கொண்டு போய் எங்கள் கையிலேயிருந்து பாதிச் செலவைப் போட்டு தொகுதி மக்களைச் சென்று சந்திக்க முடியும். எனவே அதை அவசியம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் பெருந்தலைவர்கள் வெற்றி பெற்று வந்துவிட்டார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று வாரத்திற்கு இரண்டு தடவை கவுன்சில் நடக்கும் இடத்தை பொதுமக்களைச் சந்தியுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது,





(பிற்பகல் 12—30)

நான் கேட்டுக்கொள்வதெல்லாம் ஒரு தொகுயியில் 3 யூனியன்கள் இருந்தால் கூட, அதை திருத்துறைப்பூண்டி தொகுதி என்றுதான் சொல்லிவிடுகிறோம். உதாரணத்திற்காக திருத்துறைப்பூண்டி என்று சொன்னேன். அப்படி தொகுதியில் உள்ள யூனியன்களுக்கு சென்று பார்வையிட வெளியே போய்விட்டு வந்தால், தங்குவதற்கு அல்லது ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு, நிரந்தரமாக ஒரு சின்ன அறையானாலும் பரவாயில்லை. யூனியன்களுக்கு போய்விட்டு வந்து தங்குவதற்கு வசதியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் செய்து கொடுத்தால், தொகுதி மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை முழுமையாகச் செய்ய முடியும் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய ஒரு சில உணர்வுகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக சென்னை மாநகராட்சியில் புதிய வரிகள் போடாமல் மக்கள் நலனை பாதுகாப்பதற்கு இருக்கின்ற வருவாயை வைத்து இனிதே செய்திருப்பது, வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற அடிப்படையில் சென்னை மாநகர மக்களை பாதுகாக்கின்ற பணியில் மாநகராட்சி சிறப்போடும் செம்மையோடும் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை முதலிலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பிட்டு மின் வாரியத்தை தவிர என்று சொன்னாலும் அதுகூட ஓரளவுக்கு நல்ல முறையில்தான் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் மாநகராட்சியினுடைய ஒட்டுமொத்த நிர்வாகமும் சென்னை மாநகர மக்களுக்கு நல்ல முறையில் பணிபுரிந்துக் கொண்டிருப்பதற்காக, தனி அதிகாரி அவர்களையும், ஆணையாளர் அவர்களையும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களையும் நான் என் தொகுதி மக்களின் சார்பாக பாராட்டவும் வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை நகர அபிவிருத்திக்காக மேம்பாட்டுக் குழுவினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்படுத்தி அந்தக் குழுவில் சென்னை மாநகர மக்களின் நல்வாழ்விற்காக பல முடிவுகள் கொள்கை ரீதியாக எடுக்கப்பட்டது. அந்த முடிவுகளைத்தான் இந்த கொள்கை விளக்கக் குறிப்பிலே கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

அடுத்து சென்னை மாநகரத்திலே தனியார் சாலைகளாக விளங்கிக் கொண்டிருக்கிற பல பகுதிகள் இன்றைக்கு எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் இருந்துக் கொண்டு

இருக்கின்றன. அந்த நிலையை எண்ணி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த சாலைகளை வசதி செய்து கொடுத்து பராமரிப்பதற்கு முதலில் அவர்களிடம் 25 சதவீதம் பணம் பெறாமலேயே செய்து கொடுத்து விட்டு, பின்னர் தவணை முறையில் வசூலிக்க வேண்டிய கொள்கை குறிப்பினை இதிலே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக இந்தக் கொள்கை விளக்கத்திலே 5 கோடி ரூபாய் வழங்கப் படுவதற்கான குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாக சொல்லி இருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் மூலமாக கேட்டுக் கொள்வது, பரிசீலனையில் இருக்கிறது என்கிற அந்த செயற் குறிப்பை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவிப்பை இந்த அவையில் இன்றே அறிவிக்கும் வகையில் அவர்கள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களோடு கலந்து பேசி அந்த நல்ல முடிவை இறுதியில் அறிவிப்பார்களேயானால் சென்னை மாநகர மக்களின் நெஞ்சம் எல்லாம் நெகிழ்ந்து வாழ்த்துவார்கள் என்ற என் கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல கடந்த சட்டமன்ற தொடரில் சென்னை மாநகரில், காயலாங்கடைகள் எல்லாம் அகற்றப்பட வேண்டும். நகர்ப்புறங்களில் பொதுமக்கள் சாலைகளில் போகின்ற இடங்களில் எந்தவிதமான லாரி ரிப்பேர் செய்கிற கடைகளும் இருக்கக் கூடாது என்கிற ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்தோம். ஆனால் அது இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை, அதையும் விரைந்து நடைமுறைப்படுத்தி சென்னை மாநகர மக்கள் எந்த விதமான அபாயமோ தொந்திரவோ இல்லாமல் வசிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல விளம்பர பலகைகள் தடுப்புச்சட்டத்தை மாநகராட்சி ஏற்று நடத்த வேண்டும் என்ற கொள்கை அறிவிப்பு இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதையும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் எனது தொகுதிக்கு 21 லட்சம் ரூபாயை மழை நீர் வடிகால்களை அமைக்க ஒதுக்கித் தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கொள்கை குறிப்பில் 35 லட்சம், 25 லட்சம் என்று பல வகையில் பாலங்கள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பாலங்கள் கட்டுகின்ற பணிகளை தமிழ்நாடு கட்டுமான நிறுவனத்திடம் ஒப்படைத்தால் அது சரியாக இருக்கும் என்ற என் கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல மாநகராட்சியினுடைய சாலை பராமரிப்பிற்காக டெண்டர்கள் மூலம் தனியார்களுக்கு காண்டிராக்ட் விடுவதை விட, மாநகராட்சியிலேயே அதை ஒரு பிரிவாக உருவாக்கி சாலைகளை பராமரிக்கின்ற பணிகளை அவர்களே நிரந்தரமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.





அதேபோல இன்றைக்கு சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்குகின்ற துவக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளிகளில் எல்லாம் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின் இணைப்பு வசதி போன்ற சில அடிப்படை வசதிகளைப் பெறாமல் இன்றைக்கு இருந்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஜோன்ஸ் சாலையில் இருக்கின்ற மாந்தோப்பு பள்ளியில் அப்படிப்பட்ட வசதி இல்லாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டி, அவைகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, பள்ளிகளினுடைய வளாகங்களில் நிழல் தரும் மரங்களை அமைத்தால் அது மாணவர்களுக்கு மிக உதவியாக இருக்கும். எனவே எல்லா பள்ளிகளிலும் நிழல் தரும் மரங்களை நடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல மைலாப்பூர் தொகுதியில், அருமை சகோதரி வளர்மதி அவர்களின் தொகுதியில், மாநகராட்சி பள்ளிகளில் அந்த வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதியிலும் அந்த வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கோடைக்காலம். சாலைகளில் நிழல் தரும் மரங்களை வைத்தால் வெயில் காலத்தில் நிழல் தரும் மரங்களின் அருமை நன்றாகத் தெரியும். ஆகவே எங்கெங்கு சாலைகள் மக்கள் போக்குவரத்துடன் அகலமாக இருக்கிறதோ அங்கெல்லாம் சாலை ஓரங்களில் மரங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநகரத்தில் உள்ள அனைத்து சத்துணவுக் கூடங்களையும் புதுப்பிக்க வேண்டும். வேகமாக ஆரம்பித்து கட்டப்பட்ட அந்தச் சத்துணவுக் கூடங்கள் சில இடங்களில் பழுதடைந்து இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் சில இடங்களில் அப்படி இருக்கின்றன. ஏற்கெனவே மாநகராட்சி தனிஅதிகாரி அவர்களுக்கும், ஆணையாளர் அவர்களுக்கும் தெரிவித்து இருக்கிறேன். ஆகவே அந்தச் சத்துணவுக் கூடங்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநகராட்சியின் வருமானத்தைப் பெருக்க டெல்லியில் உள்ள பாலிகா பஜாரைப் போல நாம் கடற்கரை சாலையில் ஒரு சுரங்க கடை அமைப்பை ஏற்படுத்தினால் வருமானம் கிடைக்கும். எழில் மிக்க கடற்கரைக்கு மக்கள் வருவதற்கும், வந்து போகிற மக்கள் பொருள்களை வாங்கிச் செல்வதற்கும் வாய்ப்பாக இருக்கும். இதனையும் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநகராட்சியின் தேர்தலைப் பற்றி சொன்னார்கள். நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாக கேட்டுக் கொள்வது, தேர்தலை நடத்துங்கள். ஆனால் ஒரே ஒரு விண்ணப்பம், வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படாமல் தேர்தலை

[திரு. சைதை சா. துரைசாமி] [1986 ஏப்ரல் 16

நடத்தாதீர்கள், வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கவில்லையென்றால் கள்ள ஓட்டின் வாயிலாக எல்லோரையும் தோற்கடித்து விடுவார்கள். ஆகவே உண்மையான வாக்காளர்களின் உரிமையை பறித்து விடுவார்கள். சென்னை மாநகராட்சி தேர்தலை நடத்த வேண்டுமென்றால் வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு சுடுகாட்டில் ஈமச்சடங்கு செய்வதற்கு கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வதெல்லாம் ஈமச்சடங்கிற்காக வசூலிக்கப்படுகிற கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம். அதனை குறைத்துக் கொள்ளுங்கள். மாநகராட்சிக்கு வருமானத்தைப் பெருக்க எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. ஆகவே இந்தக் கட்டணத்தை குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நேரு விளையாட்டரங்கில் எல்லா விளையாட்டுப் போட்டிகளுக்கும் 10 சதவீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் குத்துச் சண்டைக்கு மாத்திரம், தமிழ் நாட்டின் வீர விளையாட்டாக கருதப்படுகிற குத்துச் சண்டைக்கு மாத்திரம் இந்தப் பத்து சதவீதம் கட்டணம் வழங்கப்படுவதில்லை. அதனை தர மறுக்கிறார்கள். ஆகவே மற்ற விளையாட்டுகளைப் போல குத்துச் சண்டைக்கும் 10 சதவீதம் கட்டணம் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் இருக்கிற பூங்காக்களைப் பொறுத்த வரையில் பூங்காக்கள் எல்லாம் சரியாக பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. நான் கடந்த முறை கூட சட்டமன்றத்தில் இதுபற்றி பலமுறை வலியுறுத்தி சொல்லியிருக்கிறேன். இந்தப் பூங்காக்களைப் பராமரிக்கிற பொறுப்பை ஒன்று மாநகராட்சி ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் தனியார் நிறுவனங்களுக்கு அந்தப் பொறுப்பை ஒப்படைத்து அவைகளை பராமரிக்கச் செய்ய வேண்டும். இன்றைக்கு பல நிறுவனங்கள், தொழிற்சாலைகள், இந்தியன் வங்கி போன்ற பல பிரிவினரும் பல இடங்களில் பூங்காக்களைப் பராமரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எழில் மிக்க சென்னை மாநகரத்தினுடைய பூங்காக்களை பராமரிக்கிற பொறுப்பை அவர்களுக்கு வழங்க வேண்டும். அந்த அழகிய பூங்காக்களில் தொலைக் காட்சி பெட்டிகளை வைத்துத் தந்தால் சென்னை மாநகரத்தின் மக்களை அது மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதற்கு அடுத்தப்படியாக குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினுடைய வீடுகள் கட்டுவதற்காக எனது தொகுதியில் ஆற்று மாநகருக்கு அருகில் ஒரு காலத்தில் பூங்காவாக இருந்த ரிச்சர்ஸ் பார்க் என்றழைக்கப்பட்ட அந்தப் பகுதி இன்றைக்கு



1986 ஏப்ரல் 16] [திரு. சைதை சா. துரைசாமி]

காலி இடமாக இருக்கிறது. எனவே அந்த இடத்தை, ஆற்றோரப் பகுதி மக்கள் மேடான பகுதிக்கு குடியமர்த்தப்பட வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் படி, குடிசைப் பகுதி மாற்று வாரியம் அந்த ரிச்சர்ஸ் பார்க் என்று சொல்லப்பட்ட அந்த இடத்தை வீடு கட்டுவதற்காக கேட்டு இருக்கிறார்கள். மாநகராட்சியினுடைய அதிகார வரம்புக்கு பூங்காக்களை ஒப்படைகின்ற அதிகாரம் இல்லை என்று சொன்னதினுடைய விளைவாக அரசு ஆணையைக் கேட்டு இருக்கிறார்களாம். எனவே விரைந்து அந்த அரசு ஆணையை வழங்கினால், அங்கே மாடி வீடுகள் எழுவதற்கும் ஏழைகள் பயன் பெறுவதற்கும் ஒரு முனைப்பான செயலாக இருக்கும் என்று சொல்லி, அந்தப் பணியை விரைந்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சென்னை நகரிலே தனியார் தெருக்களாக இருக்கின்ற தண்டாயுதபாணி நகர்ப் பகுதியில், நான் மாநகராட்சி தனி அதிகாரி அவர்களையும், ஆணையாளர் அவர்களையும் அழைத்து வந்து காட்டி, அந்தப் பகுதி வாழ் மக்கள் நலன் கருதி, அந்த இடத்தை பப்ளிக் இடமாக டிக்ளேர் செய்து, அந்தப் பகுதிக்கு அடிப்படை வசதிகளை வழங்கி இருக்கிறார்கள். ஆனால் இந்த இரண்டு தெருக்களுக்கும் வழங்கப்படாமல் இருக்கிறது. சாலை போடப்பட்டு இருக்கிறது. விளக்கு வசதி செய்து தரப்பட்டு இருக்கிறது. ஆனால் கழிவு நீர் அமைக்கின்ற பணி அருகாமையிலே நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. எனவே மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடி நீர் வழங்கு துறைக்கு, அது பப்ளிக் இடம் என்கிற அந்தக் கடிதத்தை வழங்கவேண்டும் என்று அரசிடம் கேட்டாவது, அல்லது தாங்களாவது உடனடியாக அதை வழங்கினால் அந்தப் பணி தொடங்கப்படும். எனவே அதையும் வலியுறுத்தி, இன்றைக்கு சென்னை மாநகராட்சியில் அனைத்து வசதிகளையும் பெருக்கித் தருகின்ற வகையில் பல்வேறு பணிகளுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு எழும்பூர் விளையாட்டுத் திடலில், பல விளையாட்டு வீரர்கள் பல்வேறு வகையான விளையாட்டுகளை விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே பல்வேறு விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற நிலைமை இருக்கிறது. எனவே விளையாட்டிலே ஆர்வம் கொண்டு இருக்கிற விளையாட்டுத் துறையிலே இருப்பவர்களை ஊக்குவிக்கின்ற வகையில், அதிலும் குறிப்பாக நெல்லை நண்பர்கள் கழகத்தின் சார்பாக அந்த விளையாட்டு அரங்கம் பராமரிக்கப்பட்டு, அங்கே பல விளையாட்டு வீரர்களை ஊக்குவித்துக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே உள்ள ஹாக்கி விளையாட்டு மைதானத்தில் இன்றைக்கு ஒரு கேலரி கட்டுவதற்காக சுமார் 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்து, 3 அடி ஆழமும், 3 அடி அகலமும் கொண்ட நாற்பதுக்கும் அதிகமான குழிகளைத் தோண்டி,

100 அடி உயரமும், 3 அடி அகலமும் கொண்ட மேடை அமைத்துவிட்டு, கேலரி கட்டப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. எனவே அந்தப் பணியையும் தொடங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கூடைப்பந்து விளையாட்டு மைதானம். இன்றைக்கு வேகமாக வளர்ந்து வருகின்ற விளையாட்டுகளில் அவ்வப்போது ஏற்படுகின்ற தரத்திற்கு ஏற்ப அந்த விளையாட்டு மைதானத்தினுடைய நிலையை மாற்றி அமைக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல் கபடி விளையாட்டு மைதானத்திற்கு மின் விளக்கு வசதிகளைச் செய்து தரவேண்டும். மேலும் டென்னிஸ், பேட்மின்டன் போன்ற அனைத்து விளையாட்டுகளும் அங்கே இருக்கின்றன. ஆனால் அந்தப் பகுதியை தனியார் ஒருவர் எடுத்துக்கொண்டு, இன்றைக்கு கொள்ளை லாபம் சம்பாதித்துக் கொண்டு இருப்பதாக புகார்கள் வந்து கொண்டு இருக்கின்றன. எனவே விளையாட்டுத் துறையில் ஆர்வத்தோடு, விளையாட்டு வீரர்களை உருவாக்குவதில் அதி தீவிரம் காட்டுகின்ற நெல்லை நண்பர்கள் கழகத்தின் சார்பாக அந்த நிலத்தை அவர்களுக்கு ஒப்படைத்து, மாநகராட்சி நிர்ணயிக்கின்ற கட்டணத்தை வசூலித்து, அதைப் பராமரிக்கின்ற பொறுப்பை அவர்களுக்கு விடவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் முதலிலே சில நேரங்களில் விளையாட்டுகளுக்கு வரி வசூலிக்காமல் இருந்தார்கள். ஆனால் இப்போது புதிதாகப் போட்டு இருக்கிறார்கள். அந்த விவரங்களை எல்லாம் நான் பின்னாலே தருகிறேன் என்று சொல்லி, சென்னை மாநகரத்தில் உள்ள விளையாட்டுத் திடல்களை எல்லாம் முழுமையாகப் பராமரிக்கவேண்டும். அதேபோல் சிறந்த இன்டோர் ஆடிட்டோரியம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் எனது தொகுதியில் உள்ள மரீந்தோப்புப் பள்ளியில் கூடைப் பந்து விளையாட்டுக்காக, அமைக்கப்பட்ட அந்தப் பணி நிறுத்தப்பட்டு இருக்கிறது. எனவே அந்தப் பணியைத் தொடங்கி விரைந்து அதை அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கடைசியாக ஒன்று டவுன் பஞ்சாயத்து என்கிற முறையில் இன்றைக்கு பல கிராம வளர்ச்சிக்காக மத்திய அரசாங்கத்தினுடைய மானியம் கிடைப்பதற்கு வழி இல்லாமல், டவுன் பஞ்சாயத்துக்கள் என்கிற பெயரைப் பெற்றிருக்கிற காரணத்தாலே, இன்றைக்கு அவைகள் எல்லாம் நிராகரிக்கப்படுகின்றன, எனவே டவுன் பஞ்சாயத்துக்கள் என்ற பகுதியை மேஜர் பஞ்சாயத்தாக மாற்றி, வருவாய் இல்லை என்று சொன்னால் அந்தப் பஞ்சாயத்துக்களை ஊராட்சிகளாக மாற்றி



நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு டைரக்டர் ஆப் டவுன் பஞ்சாயத்து மற்றும் டி.ஆர்.டி. என்கிற இரண்டு பிரிவுகள் இருந்து கொண்டு இருக்கின்றன. டி.ஆர்.டி. மட்டும் இருந்தால் போதும், டைரக்டர் ஆப் டவுன் பஞ்சாயத்து தேவையில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி.,என்.ஆர்.ஈ.பி.,ஆர்.எல்.ஈ.ஜி.பி., ஆகிய திட்டங்களை நிறைவேற்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் தலைமையில் கமிட்டி ஒன்றை அமைக்கவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இங்கே சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய உத்திராபதி அவர்கள் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் ஜீப் வழங்கப்படுவதாகவும், 50 லிட்டருக்கு பெட்ரோல் பணம் வழங்கப்படுவதாகவும், சென்னை மாநகரத்திலே இருக்கின்ற எங்களுக்கு, நாங்கள் யாரிடம் ஜீப் கேட்பது; எங்களுக்கு வசதிகள் இருக்கிறதா இல்லையா என்பதை அவர்கள் சொன்னபிறகுதான் எனக்கே தெரிகிறது. ஆகவே சென்னையிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாநகராட்சி மூலம் வழங்குவதற்கும், நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் நீங்கள் வழங்குகின்ற அவர்கள் சொன்னதைப் போல ஜீப் வழங்குவதைவிட மாதாமாதம் அவர்கள் உபயோகிக்கிற பெட்ரோலுக்கான சலுகையை கொடுத்தாலே போதும் என்கிற கருத்தையும் சொல்லி மாநகராட்சி இன்றைக்கு சிறப்பாகவும், செம்மையாகவும் நல்ல பல பணிகளை செய்துகொண்டிருக்கிறது. அப்படிச் செய்து கொண்டிருக்கிற பணிகளை ஊக்குவிக்கின்ற வகையில் சென்னை மாநகராட்சிக்கு அதிகமான மின் பணியாளர்களை நியமிக்கின்ற அந்த முடிவையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதையும் இன்றைக்கு சென்னை மாநகர் புதிதாக விரிந்து வந்திருக்கின்ற பகுதிகள் இணைந்து இருக்கின்றன. எனவே அப்படி சேர்க்கப்பட்ட பகுதிகளோடு இருக்கின்ற பணியாளர்கள் போதவில்லை; ஆகவே பணியாளர்களை நியமியுங்கள்.

கடைசியாக இன்னொன்று, சென்னை மாநகராட்சியில் ரோடு ஓர்க்கர் என்கின்ற, சாலைத் தொழிலாளிகளை நியமித்து இருக்கிறீர்கள். 58 வயதிலே ஒரு சாலை தொழிலாளி சாலையிலே நின்று கடப்பாறை எடுத்து தோண்ட முடியுமா? ஆகவே நாம் நடைமுறையில் சில விஷயங்களைப் பார்க்காமல் சட்டப்படி செய்து கொண்டிருக்கிறோம். எனவே சாலைத் தொழிலாளி என்பவர்கள் உடல் ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும், எதையும் செய்யக்கூடிய வல்லமையுடையவர்களாகவும் இருக்க வேண்டும். எனவே அதற்கு வயது வரம்பு பொருட்டாக இல்லாமல் தகுதி உள்ளவர்களை அந்தப் பணிக்கு அமர்த்தவேண்டும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சமுதாயம் மற்றும் சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி ஊராட்சி மன்றங்களுடைய மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்காக நன்றிகூறி இந்த நடைமுறையில் சமுதாய வளர்ச்சிக்கு என்று நல்லபல திட்டங்களை தீட்டி அதனால் நன்மைகளைப் பெற சாதாரண மக்களும், ஏழை எளிய மக்களும் பலன்பெற வாய்ப்பு ஏற்படுத்தி தந்திருப்பதற்காக இந்த அரசை, குறிப்பாக நமது புரட்சித் தலைவரை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. வேலைவாய்ப்பைப் பெருக்குவதிலும், வறுமையை ஒழிப்பதிலும், உணவு தானிய உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம், இன்னும் வேலைவாய்ப்புகள் அதிகரித்தல், குறிப்பாக வேலை வாய்ப்புக்குரிய திறனை உயர்த்துகின்ற கொள்கை, இவைகளை எல்லாம் நாம் பாராட்டுகிறோம். ஆனால் 1986–87 முதல் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களை, 3,500 ரூபாய் வருமானம் என்பதை 6,400 ரூபாய் என்ற அளவிற்கு மாற்றி இருப்பதை வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்திலே ரூபாய் 3,500 கூட கிடைக்காமல் இருப்பவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்யவேண்டும். அதன்பிறகு 3,500-க்கு மேல், 4,500 வரை உள்ளவர்களையும் அதற்குமேல் 6,400 வரை வருமானம் உள்ளவர்களுக்கும் வரிசைக்கிரமமாக உதவிகளைச் செய்வதை அமல் ஆக்கவேண்டுமென்று நான் கோருகிறேன். 48.2 சதவீதம் மக்களை, வறுமைக் கோட்டிற்குகீழே உள்ள மக்களை, 1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு 23 சதவீதமாகக் குறைப்பது பற்றி அடுத்த ஐந்தாண்டு காலத்தில் குறிக்கோள் வைத்திருப்பதை உளமாற வரவேற்கிறோம். இந்த 1985–86 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் சாதனை இலக்கை எவ்வித குறைபாடும் இன்றி தமிழக அரசு நிறைவேற்றி வருகிறது. 1986–87 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தில் அரசு ஒதுக்கியத் தொகை 2922 லட்சங்கள் ஆகும். இதனால் உதவி பெறக்கூடிய பல குடும்பங்கள் நன்மை பெறும் அளவிற்கு எந்த எந்த குடும்பங்கள் இரண்டாம் முறையாக ஏற்கனவே உதவி பெற்றவர்கள், இரண்டாம் முறையாக உதவி அளிக்கவேண்டுமென 1986 ஏப்ரல், மே மாதங்களில் ஒரு விரிவான ஆய்வு நடத்தி இருக்கிறதையும் நான் வரவேற்கிறேன்.

(பிற்பகல் 12-50)

1986–87ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிதாக உதவி அளிக்கப்படும் என்பதில் 80 ஆயிரம் குடும்பங்கள் அடங்கும்' என்பதை கேட்கும்போது அது மிகவும் இனிப்பாகவும், சுவையாகவும் இருக்கிறது. அதை செயல்முறையில் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கேஎனக்கு முன்னால்பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியது போல் ஐ.ஆர். டி.பி. ஆனாலும், ஆர்.எல் .இ.ஜி.பி. ஆனாலும்





இன்னும் எந்த கொள்கையின் அடிப்படையிலும் திட்டத்தின் அடிப்படையிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்களுக்கு உதவி செய்வதில், கடன் வழங்குவதில் ஊராட்சி ஒன்றியங்களை அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரை அல்லது அந்த மன்றத் தலைவரை மட்டும் நம்பி இராமல் அதற்கு ஒரு ஆலோசனைக் குழு ஏற்பாடு செய்து, அந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களை தலைமை வகிக்கச் செய்தும் எல்லாத் துறை அதிகாரிகளையும் அதில் வைத்து அந்தக் கமிட்டி முடிவு படி, சிபாரிசுபடி கடன் வழங்கவேண்டும். அப்படி கடன் பெறுவதற்கு ஒரு நார்ம்ஸ் தயாரித்து அந்த நார்மஸ்படி அவர்கள் அதற்கு தகுதி ஆளவர்களா என்றும் பார்க்கவேண்டும். அந்த ஐ.ஆர்.டி.பி. கடன் கொடுக்கும்போது அது ஒவ்வொரு பகுதிக்கும், எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும். குறிப்பாக நகரங்களில் இருப்பவர்களுக்கு அதிகமாக கடன் கிடைக்கிறது. ஆனால் கிராமப் பகுதியில் இருப்பவர்களுக்கு அந்த ஐ.ஆர்.டி.பி, கடன் போதுமான அளவுக்குக் கிடைப்பது இல்லை என்பதை பரிசீலனைச் செய்து அதிக அளவில் கூடுதலாக கிடைப்பதற்கு வழி வகை கண்டு ஆகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1986–87 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்கும் மலை ஜாதியினருக்கும் 35 கோடி ரூபாய் செலவில் 35 ஆயிரம் வீடுகள் கட்ட இருப்பதற்காக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து வரவேற்கிறேன். என்னுடைய நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே ஆதிவாசிகள், பணியர்கள் என்பவர்கள் கிட்டத்தட்ட 5 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அடுத்து இருளர்கள், குரும்பர்கள், கொதவர்கள், கோத்தர்கள், ஆகிய இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆங்காங்கு கணிசமான அளவுக்கு இருக்கிறார்கள். இவர்களுக்கும் அடுத்து அதிக அளவில் இருக்கும் ஆதி திராவிடர்களுக்கும் இவர்கள் எத்தனை பேர் குடியிருக்கிறார்களோ அத்தனைப் பேர்களுக்கு தகுந்த முறையில் அதிக அளவில் வீடுகள் கட்டுவதற்கு அதிக மானியத்தை ஒதிக்கி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நகராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் நீலகிரியில் நாம் உதகையை எடுத்துக் கொண்டால் தெற்கு ஏரிச் சாலையில் சோடியம் வேப்பர் விளக்குகள் மற்றும் கூடுதல் விளக்கு கம்பங்கள் அமைத்தல், ஏரியை சுற்றியுள்ள சாலைகள் மேம்பாடு செய்தால் குடிநீர் மேம்பாடு திட்டம், ஏரியினை சுற்றி கட்டிடம் கட்டுவதை ஒழுங்குப் படுத்துதல், நகரில் உள்ள அங்கீகரிக்கப் படாத ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றுதல், கலை அம்சம் பொருந்திய கட்டிடங்களை ஒழுங்கு முறைப்படுத்த உப விதிகளை சேர்த்தல், இளைஞர்களுக்கான விடுதி, கூடம் மற்றும் சாப்பாடு வசதிகளுடன் அமைத்தல், முதுமலையில் மேம்பாடு செய்தல், கல்லட்டி நீர் வீழ்ச்சி செல்லும் கூடலூர் சாலையை மேம்பாடு செய்தல், மான் பூங்காவை விரிவுபடுத்துதல், சுமார்

50 லட்சம் செலவில் மரம் வளர்த்தல், பூந்தோட்டம் அமைத்தல், மற்றும் புல்வெளிகள் அமைக்கும் திட்டம், நகராட்சியின் சுகாதாரத்தைப் பேணிகாக்க கூடுதல் சுகாதார தொழிலாளர்களை நியமித்தல் போன்ற நல்ல பல காரியங்களை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் செய்து இருப்பதை நான் மனதார பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உதகை ஒன்றியம் மிகப் பெரிய அளவில் பெரிய ஒன்றியமாக பரந்து இருக்கிறது. அந்த உதகை ஒன்றியத்தை பிரித்து குந்தா ஊராட்சி ஒன்றியம் என்று பிரிக்கவேண்டும். அதை இரண்டு ஊராட்சி ஒன்றியமாக மாற்றவேண்டும். ஒன்று உதகை ஊராட்சி ஒன்றியம் என்றும், குந்தா ஊராட்சி ஒன்றியம் என்றும் மாற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் உதகை நகரம் குறிப்பாக நீலகிரி மாவட்டம் அங்கே இப்போது கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு தண்ணீர் பற்றாக்குறை அதிகமாக இருக்கிறது. உதகை நகரத்தைப் பொறுத்த வரையில் 5 கோடி ரூபாய் அளவுக்கு பார்சன் வேலி இரண்டாவது குடிநீர் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். என்றால் அங்கே அதிகாரிகளை அதிக அளவில் இன்னும் நியமிக்கவில்லை என்று குறை இருக்கிறது. ஆகவே, இதற்கு உடனடியாக இந்த பார்சன் வேலி இரண்டாவது குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகைகளை காண வேண்டும் என்றும் அதிகாரிகளை அதிகமாக நியமிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கூடலூர் பேரூராட்சியைப் பொறுத்தவரையில், கடந்த பல ஆண்டுகளாகவே, குறிப்பாக இருந்துவரும் தண்ணீர் தட்டுப்பாட்டைத் தீர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன் ஹெலன் வாட்டர் சப்ளை அங்கே ஒரு கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் அது நடைமுறைப் படுத்தப்படவிருக்கிறது. ஆனால் அதை மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். இருந்தாலும் அங்கே கடுமையான வறட்சிஇருப்பதால் அங்கேகுடிப்பதற்கு தண்ணீரே இல்லை. என்ற நிலை இருக்கிறது.

கூடலூர் பேரூராட்சியைப் பொறுத்தவரையில் கடந்த 6 நாட்களாக அங்கே குடிப்பதற்குத் தண்ணீரே விடவில்லை. ஆனால் தண்ணீர் இல்லையோ என்ற அச்சம் ஒரு பக்கம் இருந்தாலும், நான் சொல்கிறேன், தண்ணீர் இருக்கிறது. அங்கே விநியோகம் செய்வதில் அரசியல் காழ்ப்புணர்வோடு அங்கே உள்ள பேரூராட்சித் தலைவர் இயங்கிக் கொண்டு இருக்கிறார் என்று சொல்வது என்னுடைய கடமை. அதன்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அதே போல், உதகை ஊராட்சி, குந்தா ஊராட்சி என்று பிரிப்பதைப் போல, கூடலூர் பேரூராட்சியையும் பந்தலூர் ஊராட்சி என்று பிரித்தாக வேண்டும். கூடலூர் ஊராட்சியும் கிட்டத்தட்ட 1 இலட்சத்து 42 ஆயிரம் வாக்காளப் பெருமக்களைக் கொண்டுள்ள ஒரு பகுதி, தமிழகத்திலேயே அது மிகப் பெரிய, இரண்டாவது மிகப் பெரிய தொகுதி என்று நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதையும் கூடலூர் ஊராட்சி ஒன்றியம், பந்தலூர் ஊராட்சி ஒன்றியம் என்று இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொல்வதுபோல், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தில் ஜீப்புகள் வழங்கப்படுவது அதிகமாக இல்லை என்றே கருதுகிறேன். காரணம், நாங்கள் அங்கே செல்லும்போது, விசாரிக்கும்போது, அவர்கள் சொல்வது போல், ஒன்று ஜீப் ஆர்.டி.ஓவுக்கோ ஏ.டி.க்கோ சென்று இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கே கமிஷனர்கள் காம்ப் சென்று இருப்பதாதாகச் சொல்கிறார்கள். மீறி எல்லோரும் இருந்தால், அந்த ஜீப் ரிப்பேர் என்று சொல்லப்படுகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

இந்த நிலையில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணியைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்றால், நல்ல வகையில் பணியாற்ற வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, சொல்லக்கூடிய அந்த 50 லிட்டர் பெற்ரோலை அவர்கள் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதற்கு இருக்கும்போது, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு கார் வாங்க வட்டி இல்லாத கடன் தரவேண்டும் என்று நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தக் காரில் அதற்கு ஆகக்கூடிய பெட்ரோலை ஊற்றி மக்களுக்குச் சேவை செய்ய அதன்மூலம் வாய்ப்பாக இருக்கும் என்று கூறி, கூடலூர் பேரூராட்சியையும், கோத்தகிரி பேரூராட்சியையும் முனிசிப்பாலிட்டிகளாக மாற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எனக்கு உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த சபாநாயகர் அவர்களுக்கு எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன். 10 ஆண்டுகளுக்குப் பிறகு உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்று இருக்கின்றன. இப்போது இந்த மானியக் கோரிக்கையில் பல்வேறு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமப் பஞ்சாயத்துக்களில் எந்த கிராமப் பஞ்சாயத்தாக இருந்தாலும், ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும், நிதி நிலைமை இருக்கக்கூடிய பஞ்சாயத்தில்தான் வேலைகள் நடைபெறுகின்றன. ஆனால், ஒரு யூனியனை எடுத்துக்கொண்டால் பல பஞ்சாயத்துக்களில் நிதி இல்லை. பல பஞ்சாயத்துக்களில் மொத்தமாகவே நிதி நிலைமை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அப்படிப் பட்ட பஞ்சாயத்துக்களில் எந்த விதமான வேலையும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட கிராம பஞ்சாயத்துக்களுக்கு அரசு துரிதமாக நிதி உதவி-வாய்க்கால் கட்டுவதற்கோ, குடிதண்ணீர் வசதிக்கோ, அல்லது கழிப்பறை வசதிக்கோ, இப்படி நல்ல பல திட்டங்களுக்கு அவற்றை செய்ய முடியாத சில கிராம பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவற்றிற்கு அளிக்க வேண்டும்.

ஒரு சில கிராமப் பஞ்சாயத்துக்களில் பலன் தரும் மரங்கள் நிறைந்திருக்கின்றன. பலன் தரும் மரங்கள் அந்தந்த கிராமப் பஞ்சாயத்துக்குட்பட்ட நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும் சரி, அல்லது ரெவினியூ புறம்போக்காக இருந்தாலும், சரி, அப்படிப்பட்டவற்றில் இருக்கக்கூடிய பலன் தரும் மரங்களை அந்தந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் ஏலம் விட்டு, அந்தப் பஞ்சாயத்துக்குரிய நிதியை பெறுவதற்கான வர்ய்ப்பினை உருவாக்க வேண்டும்.

(பிற்பகல் 1-00)

சில கிராமப் பஞ்சாயத்துக்களிலே ஹைவேஸ்லிருந்து பலன் தரும் மரங்களை நேரடியாக ஏலம் விடுகிறார்கள். அதைப் போன்றே ரெவின்யூப் புறம்போக்கிலே இருக்கிற மரங்களை அது புளியமரமாக இருந்தாலும் சரி, தென்னை மரமாக இருந்தாலும் சரி, நேரடியாக அவர்களே ஏலம் விட்டு கிராமப் பஞ்சாயத்திற்கு அந்த வருவாய் வராத சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். அதைப் போலவே உள்ளாட்சித் துறைக்கு உட்பட்ட குளங்களிலே உள்ள மீன்பாசிகளை தனியார்களே ஏலம் நேரிடையாக விட்டு லாபம் பெற்றுக்கொள்கிறார்கள். உள்ளாட்சிக்குட்பட்ட குளங்களைப் பராமரிக்கிற பணிக்கு ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்துதான் செலவு செய்யப்படுகிறது. அதே நேரத்திலே மீன் பாசிகளையெல்லாம், பலன்தரும் மரங்களையெல்லாம் தனியார்களே தங்களிடம் பத்திரங்கள் இருக்கின்றன என்று சொல்லியும், முன் அனுபவம் இருக்கிறது என்று சொல்லியும், அவைகளைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குவிடாமல், அவர்களே நேரிடையாக ஏலம் விட்டு, வருவாய் பெற்றுக்கொள்கிற நிலை இருக்கிறது.

யூனியன் சாலையாக இருந்தாலும், பஞ்சாயத்து நெடுஞ்சாலையாக இருந்தாலும், நிதிநிலை பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால் அந்தச் சாலைகளைப் பராமரிக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அவைகளைப் பராமரிப்பதற்காக, பாலங்களைக் கட்டுவதற்காக அரசு நிதியிலிருந்து நிதி ஒதுக்க வேண்டுமென்று





கேட்டுக் கொள்கிறேன். தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் இன்னும் சில வேலைகளைச் செய்யாமல் இருக்கிறார்கள். பல சாலைகள், பல பாலங்கள், செய்யாமல் விடப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் செய்வதற்காக அதிகப்படியான நிதியை ஒதுக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களிலே இருந்த ஆசிரியர்களை கல்வி இலாகாவிற்கு மாற்றிவிட்டார்கள். இன்றைக்குப் பள்ளிக்கூடக் கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அதைப் பராமரிப்பதற்கு யூனியன்களிலே நிதியில்லை. ஆகவே அதற்காக தனியாக நிதி ஒதுக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி, சுகாதாரம், விவசாயம் இந்த மூன்று அமைப்புகளும் இதற்கு முன்னாலே பஞ்சாயத்து யூனியன்களிடம் இருந்தது. இப்போது அந்த 3 பிரிவுகளும் பறிக்கப்பட்டுள்ளது. எப்படி அந்த யூனியன்களிடம் அவை முன்னாலே இருந்ததோ அதைப் போலவே திருப்பி அவைகளைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களிலே உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் பேரூராட்சித் தலைவர்களும் அந்தந்தப் பஞ்சாயத்து நிதியிலிருந்து நிதியைச் செலவிட்டு உடனடியாக அந்த வேலைகளைச் செய்வதற்கு அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய அனுமதியைப் பெறுவதற்கு 2, 3 மாதம் ஆகிறது. அந்த நிலையைப் போக்க அந்த அந்த ஊராட்சி ஒன்றியங்களே தங்கள் நிதியிலிருந்து அந்த வேலைகளைச் செய்வதற்கும் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு தொகுதியிலே இரண்டு ஒன்றியங்கள், ஒரு நகராட்சி இருக்கின்ற நிலை இருக்கிறது. அப்படி இருந்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கும்போது அவர்களுக்கு ஜீப் வாகனங்கள் கண்டிப்பாக இரண்டு ஒன்றியங்களும் கண்டிப்பாக கொடுக்க வேண்டுமென்று உத்திரவிடவேண்டும்.

நாங்கள் ஒரு நேரம் கேட்டால் பழுதடைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள் அல்லது டி.டி.ஓ.வுக்குக் கொடுத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ஒரு தொகுதியிலே இரண்டு யூனியன்கள், ஒரு நகராட்சி இப்படி மூன்று இருந்தால் சட்டமன்ற உறுப்பினர் அந்தத் தொகுதியைச் சுற்றிப் பார்ப்பதற்காக இரண்டு யூனியன்களிலிருந்தும் வாகனங்கள் கொடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் உத்திரவிடவேண்டும்.

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1986 ஏப்ரல் 16

ஊராட்சி ஒன்றியங்களிலே சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று அமர்வதற்கு இடம் கொடுக்கவேண்டும். மத்திய அரசு, மாநில அரசு நிதி கொடுக்கக்கூடிய வேலைகளைக் கண்காணிப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைகள் சொல்வதற்காக ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்னாலே தன்னிறைவுத் திட்டத்திலே பல வேலைகள் செய்யப்பட்டன. அதைக் கண்காணிக்கமுடியாத நிலை ஏற்பட்டது. எந்த எந்த வேலைகளுக்கு செலவு செய்யப்பட்டது என்று சொல்லமுடியவில்லையென்ற காரணத்தினாலே பல தவறுகள் நடந்திருக்கின்றன.

அதேவிதமான நிலைமைகளைப் போக்குதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முக்கியமான அந்த வேலைகளைக் கண்காணிப்பதற்கு உரிமை வழங்கப்பட வேண்டும். ஒரு குழு அமைத்தாவது கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த இடங்களில் போர்வெல்கள் நிறையப் போடப்பட்டிருக்கின்றன. அவைகள் 150, 200 அடி என்று சொல்லப்படுகிறது. இப்படி 150 அடி, 200 அடி என்று போடுவதாகச்சொல்லி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 200, 300 போர்வெல்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் சுமார் 20 சதவீதம் அல்லது 25 சதவீதம்தான் ஒழுங்காக இருக்கின்றன; பாக்கியுள்ள 75 சதவீதம் சரியாக இயங்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்றால், போர்வெல்களைப் போடுகின்றபொழுது 150 அடி என்று போட வேண்டுமென்றால் 100 அடி வரையில்தான் குழாயை இறக்கி மூடிவிடுகிறார்கள். மீதியுள்ள 50 அடிக்குத் தவறான கணக்கை வைத்திருப்பதால், அந்த அளவிற்கு மண் மூடிவிடுகிறது. ஆகவே, அவைகளையெல்லாம் நல்ல நிலைமையில் மாற்ற வேண்டும். குடிநீர்ப் பிரச்னை உள்ள ஒவ்வொரு கிராமத்திலேயும் கிணறு வெட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள துரைச்சாமிபுரத்தில் என்.ஆர்.இ.பி. திட்டத்தின்கீழ் வெட்டப்படும் கிணறு இரண்டாண்டுகள் ஆகியும்கூட இன்னும் அது பூர்த்தியாகக் கட்டப்படவில்லை. 1984 ஆம் ஆண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும்கூட இதுவரைக்கும் வேலை நடக்காமல் பாக்கி இருக்கிறது. சில காண்ட்ராக்டர்கள் மூலம் ஒப்பந்தம் செய்துவிட்டு இருக்கின்ற பணத்தை முன் பணமாக எடுத்து, சில அதிகாரிகள் பங்கு போடுகிறார்கள் ; ஒரு ஆணையாளர்கூட வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இன்னும்கூட அதற்கு மாற்று ஏற்பாடு செய்து நடவடிக்கை எடுக்காததன் காரணமாக அந்த வேலையில் காலதாமதம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 16] [திரு. ஆர். ஈஸ்வரன்]

இதற்கு முன்னால் ஊராட்சி மன்றங்களிலே பஞ்சாயத்து நிதி, யூனியன் ஜெனரல் ஃபண்ட் மூலம் சமுதாய நலக் கிணறுகள் கட்டுகின்ற திட்டம் இருந்தது. இதன்மூலம் 2 ஏக்கர், 5 ஏக்கர் வைத்துள்ள ஏழெட்டு விவசாயிகள் ஒன்று சேர்ந்து பயன் பெறும் வகையில் சமுதாய நலக் கிணறுகள் கட்டப்பட்டன. அதில் மோட்டார் அல்லது ஆயில் மெஷின் வைக்கும் திட்டம் இருந்தது. எனவே, அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்தால் ஒரு ஏக்கர், 2 ஏக்கர் வைத்துள்ள விவசாயிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற தெருக்களில் வார்கால் கட்டுவதற்குப் போதுமான நிதி இல்லை. பஞ்சாயத்துக்களிலே நிதி இல்லை. ஆகவே, அரசு உதவி செய்து, அங்கு வார்கால் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சத்துணவுக் கூடங்களைப் பராமரிப்பதற்கு ஆங்காங்கு இருக்கின்ற ஊராட்சி ஒன்றிய சேர்மன்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கண்டிப்பாக அனுமதி வழங்க வேண்டும். பல்வேறு தவறுகள் நடக்கின்றன. ஆகவே, அந்தச் சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தந்த சத்துணவுக் கூடங்களைக் கண்காணிக்கின்ற வகையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எஸ். வேணுகோபால் : பேரன்புமிக்க அவையின் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நகராட்சி நிர்வாகம் பற்றிய இந்த மானியத்தில் பேசுகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். நகராட்சிகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்குத் தேர்தல் நடத்தியிருக்கிறார்கள். தேர்தல் நடக்குமா, நடக்காதா என்று எண்ணிக் கொண்டிருந்த காலக் கட்டத்தில், எந்தவிதமான எதிர்ப்பு வந்தாலும் நடத்தியே தீருவோம் என்ற வகையில் நடத்திய இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் மாநகராட்சித் தேர்தலை நடத்துவதில் தாமதப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைய அறிவிப்பிலேயே, இந்த மாநகராட்சித் தேர்தலுக்கான தேதியை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் சொன்னதைப்போல, அடையாள அட்டைகளை சென்னை நகரத்தில் உள்ளவர்களுக்குக் கொடுத்த பிறகு தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 ஏப்ரல் 16

சென்னை மாநகராட்சி நிர்வாகத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், வழக்கமாக, வாடிக்கையாக ஒவ்வொரு முறையும் சொல்லியதைப்போல், மாநகராட்சி நிர்வாகம் சரியாக இல்லை; கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது என்பதையும், மின் விளக்கு எரியவில்லை என்பதையும், குப்பைகள் கோபுரமாக இருக்கிறது என்பதையும், சாலைகள் பராமரிக்கப்படவில்லை என்பதையும் சொல்லலாம். இதையெல்லாம் செய்வதில் அதிகாரிகள் சிறப்பாகச் செயல்படுகிறார்களா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது.

இன்னொரு வழக்கமான குற்றச்சாட்டு இருக்கிறது. குறிப்பாக வட சென்னை மக்கள் கேட்பாரற்று, நாதியற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-10)

இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். தமிழகத்திலே 24 அமைச்சர்கள் இருக்கிறார்கள். அந்த அமைச்சர்கள் சென்னையிலே ஒரே பகுதியிலே வீடு கட்டி, மிக சொகுசாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று என்னாலே சொல்ல முடியும்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, ஒரே பகுதியிலே வீடு கட்டி சொகுசாக வாழ்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. அரசு கொடுத்திருக்கிற வீடுகளிலே நாங்கள் இருக்கிறோம். அரசு குடிசையைக் கட்டினாலும் அங்கேயும் குடியிருக்கத் தயார்.

**திரு. எஸ். வேணுகோபால்:** அரசு சொகுசாகக் கட்டிக் கொடுத்திருக்கிறது என்றுதான் சொன்னேனே தவிர, உங்களுடைய சொந்தப் பணத்தில் கட்டிக் கொண்டீர்கள் என்று நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொகுசு பங்களாக்கள் என்றால் சொகுசு பங்களாக்கள் அல்ல, கொசு பங்களாக்கள்.

**திரு. எஸ். வேணுகோபால்:** ஆகவே, நான் முதல் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றுதான். தோழமையின் பெயராலே, உங்கள் தொண்டன் என்ற பெயராலே, உங்கள் பின்னாலே அடி வைத்து நிற்கிறோம் என்ற பெயராலே கேட்கிறேன், பாதி அமைச்சர்களை வட சென்னைக்கு அனுப்புங்கள். திராவிட பாரம்பரியமே வட சென்னையில் உருவாக்கப்பட்டது என்பதை திராவிட பாரம்பரியம் மறுக்க மாட்டார்கள். அந்தப் பாரம்பரியத்திலே இருக்கிற பாதி அமைச்சர்களை வட சென்னையிலே அமர்த்துவார்களானால், அங்கே சாலைகள் சீராக்கப்படும், குப்பைகள் அகற்றப்படும் என்று குறிப்பாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1986 ஏப்ரல் 16] [திரு. எஸ். வேணுகோபால்]

இன்னொன்றையும் சொல்வேன். இந்த அறிக்கையைப் பற்றி சொல்வதானால், பழைய மொந்தையிலே புதிய கள் என்ற நிலைமையில் தான் இருக்கிறது. 1985-86, 1986-87 அறிக்கைகள் இரண்டையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டும், அமைச்சர் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன், வரிக்கு வரி அப்படியே இருக்கிறது என்பதை என்னாலே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், முதல் அமைச்சர் ஆவதற்கு முன்னாலே ஒரு அழகான பாடலைச் சொல்லியிருக்கிறார், நெஞ்சு நிறைந்த பாடல்:

சொன்னதைச் செய்வேன்,
செய்ததைச் சொல்வேன்,

வேறொன்றும் எனக்குத் தெரியாது என்று சொல்லியிருக்கிறார். உண்மைதான். சொன்னதைச் செய்ய வேண்டுமென்று பாட்டுப்பாடியிருக்கிறார்......

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, கருத்து நல்ல கருத்து, அதுதான் எங்களுடைய தலைவருடைய கருத்து. பாடல் அவர் பாடியது அல்ல, சிவாஜி அவர்கள் பாடியது.

**திரு. எஸ். வேணுகோபால்:** தலைவர் அவர்களே, மக்களுக்கு யார் பாடினார்கள், யார் எழுதினார்கள் என்பது தெரிவதில்லை. வாயசைப்பிலே, புரட்சித் தலைவர், அங்கே வாயசைத்தால், அவர் பாடினார் என்றுதான் சொல்கிறார்களே தவிர, யார் எழுதினார்கள் என்று......................

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, வாயசைத்ததுதான் சிவாஜி அவர்கள்.

**திரு. எஸ். வேணுகோபால்:** தலைவர் அவர்களே, வாயசைத்தாலும் கருத்துக்கள் அவருடையதாகத் தானே சொல்லப்படுகிறது. சொன்னதைச் செய்வேன் என்று சொன்னவர்கள், சொன்னதைச் செய்தார்களா என்பதுதான் என்னுடைய கேள்வியாக இருக்கிறது. நான் இதைச் சொல்லும்போது, மிகத் தெளிவாகச் சொல்வேன். ஏனென்றால், நிதிநிலை அறிக்கையிலே, 1985-86-ஆம் ஆண்டு வருவாயிலே ரூ. 38.12 கோடி: திருத்தப்பட்டது ரூ. 39.62 கோடி என்று கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், 1986-87 ஆம் ஆண்டில் உத்தேசித்த வருவாய் 44.23 கோடி என்றுள்ளது, நான் பாராட்டுகிறேன். ஆனால், அடுத்த கட்டமாக வரும்போதுதான் ஆச்சரியமாக, விந்தையாக, வேடிக்கையாக இருக்கிறது. 1985—86 ஆம் ஆண்டு கேளிக்கை வரி மூலம் வருவாய் ரூ. 50 இலட்சம். ஆனால்,

[திரு எஸ். வேணுகோபால்] [1986 ஏப்ரல் 16

இந்த ஆண்டு, ரூ. 25 இலட்சம் மட்டும்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் குறைவுக்கு என்ன காரணம் என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

அடுத்து, விற்பனை வரி. 1985-86 ஆம் ஆண்டு விற்பனை வரி, மீதான கூடுதல் உபரி ரூ. 125 இலட்சம் என்று காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு ரூ. 25 இலட்சம் என்று போடப்பட்டிருக்கிறது. ஏன் இந்தக் குறைவு? யாரால் சொல்ல முடியும் என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்து சொத்து மாற்றம் மீதான தீர்வை வரி ரூ. 25 இலட்சம் என்று போடப்பட்டிருக்கிறது, சென்ற 1985-86-லே. ஆனால், 1986-87-லே, இந்த ஆண்டு ரூ. 5 இலட்சம் தான் போடப்பட்டிருக்கிறது. ஏன் இந்த குறைவு, என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்து, போக்குவரத்து (சாலைப் பணிகள்). பேருந்து வழித் தடச் சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் என்பதைப் பொறுத்தவரை, 1985-86 அறிக்கையிலே 36-வது பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அறிக்கையிலே 11-வது பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ரூ. 258.19 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு அதே தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே வேடிக்கை என்னவென்றால், அதே சாலைகள்தான், வேறு சாலைகள் இல்லை. அதே சாலைகள்தான் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியானால், போன ஆண்டு போடப்பட்ட சாலைகள் எங்கே? போன ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் எங்கே போயிற்று? அந்த ஆணை எப்படி மாற்றப்பட்டது என்பதை என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

முந்தைய பஞ்சாயத்து சாலைகள் மாற்றப்பட 1985-86-லே ரூ. 68 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆண்டு அதே 216 சாலைகள், ரூ. 70 இலட்சம் செலவில் அமைக்கப்பட இருக்கின்றன என்ற இந்த அறிக்கையைப் பார்க்கும்போது, மிக வேடிக்கையாக, விந்தையான காரியமாக இருக்கிறது என்றுதான் என்னால் சொல்ல முடியும். சென்ற ஆண்டும் 216 சாலைகள், இந்த ஆண்டும் 216 சாலைகள்.

பேருந்து வழித்தடச் சாலைகள் புதுப்பிக்கப்பட உள்ளவை என்று பார்க்கும்போது, கடந்த 1985-86-ல் கொடுக்கப்பட்ட அதே சாலைகள்தான் இப்பொழுதும் கொடுக்கப்பட்டுள்ளன. கொன்னூர் நெடுஞ்சாலை, இராஜாஜி சாலை, தங்கசாலை, டெய்லர்ஸ் சாலை, வேப்பேரி நெடுஞ்சாலை, தண்டையார் பேட்டை நெடுஞ்சாலை, சிமிட்ரிசாலை, வட டெர்மினல் சாலை, வில்லேஜ் சாலை, காவல் ஆணையர் அலுவலக சாலை, பீட்டர்ஸ் சாலை ஆக இவைதான் கொடுக்கப்பட்டிருக்கின்றன.



1986 ஏப்ரல் 16] [திரு. எஸ். வேணுகோபால்]

அதே சாலைகள்தான், அதே 275 இலட்சம் ரூபாய்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வரி கூட மாறவில்லை. வரி பிறழாமல் அப்படியே இருக்கிறது என்றால் என்ன அர்த்தம்? ஒரு வார்த்தை கூட மாறவில்லை. 1985—86-ல் என்ன எழுத்து போடப்பட்டிருந்ததோ அதே எழுத்துதான் 1986—87-லும் போடப்பட்டிருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

அடுத்து, முண்டக்கண்ணியம்மன் கோவில் தெருவிலுள்ள ஒரு பாலத்தை இடித்துக்கட்டுவதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். முந்தைய ஆண்டிலும் இதையே சொல்லியிருக்கிறார்கள். இப்போதும் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போன்று ரிசர்வ் வங்கி அருகிலுள்ள பாலம் பழுதுபார்க்கும் பணிக்கு இதற்கு முன்னால் 23 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்போது 50 இலட்சம் ரூபாய் அதற்கு ஒதுக்கப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். பாலம் பழுது பார்க்கும் வேலை இன்னும் ஆரம்பமாகவில்லை, அப்படியே இருக்கிறது.

தனியார் தெருக்களை பராமரிப்பதற்கு 5 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்கும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சமீபத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த சட்டமன்றத்தில் கூறும்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது யாரும் அதற்கு பணம் கட்ட வேண்டியதில்லை, என்று அறிவித்தார்கள். ஆனால் இந்த அறிக்கையில் சொத்து வரி தவணைகளுடன் 10 ஆண்டுகளில் வசூலித்துக் கொள்ளவும் இதற்காக 5 கோடி ரூபாய் நிதி உதவி வழங்க வேண்டுமென்று கேட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக ஆரம்பக் கல்வியைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். 1985—86-ல் 370 பள்ளிகள் இருந்ததாகவும் 1,69,600 மாணவர்கள் படித்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 1986—87 ஆம் ஆண்டில் 369 பள்ளிகள் நடத்தப்பட்டு வருவதாகவும், 1,56,500 மாணவர்கள் பயிலுவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, இந்த ஆண்டில் ஒரு பள்ளிக்கூடத்தை மூடியிருக்கிறார்கள். அதன் காரணமாக படிக்கின்ற மாணவர்களில் ஏறத்தாழ 13,000 பேர் குறைந்திருக்கிறார்கள். இந்த நிலை ஏன் வந்ததுஎன்றுஎன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு பள்ளிக்கூடத்தில் 13 ,000 மாணவர்கள் படித்தார்கள் என்று எடுத்துக் கொள்வதா அல்லது தவறான கணக்கைக் கொடுத்து இருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்வதா ? இந்த நிலை ஏன் வந்தது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெயரை அந்த மாவட்டத்திற்கு வைத்திருக்கிறோம். அது எல்லா வகைகளிலும் மிகவும் பின்தங்கிய பகுதி. இங்கே டைரக்டராக வந்து அமர்ந்திருக்கிறார்களே அவர்கள் சிறப்பான முறையுல் அங்கே பணியாற்றினார்கள். எனவே அவர்களுக்குத் தெரியும் அந்த விஷயம் பற்றி. தண்ணீர் இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு ஏனைய அமைச்சர்களும் கலந்து பேசி அண்ணா மாவட்டத்தை முழுமையாக வறட்சிப் பகுதி என்று அறிவிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் எல்லாம் அரிசன சமுதாயத்திலிருந்து வந்தவர்கள். தினசரி எங்களுக்கு வரக்கூடிய தபாலில் எங்களைத் திட்டி எழுதுகிறார்கள். தனித் தொகுதி இல்லாவிட்டால் நீங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்ற முடியுமா என்றும் அப்படி இருக்கின்ற நிலைமையில் அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறீர்களே, அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள், அதைப்பற்றி ஏன் வாதாடவில்லை என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இப்போது போனாலும் கூட, வரக்கூடிய காலத்திலாவது ஷெட்யூல்ட் காஸ்ட்-க்கு 18 சதவீதம் பெண்களுக்கு 15 சதவீதம் என்று ஏற்கனவே நிர்ணயித்தபடி மீண்டும் கொண்டு வந்து அந்த நிலைமையை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு இது வரையில் நகராட்சியே இல்லை. இந்த முறை தான் முனிசிபாலிடியாக வந்திருக்கிறது. அதுவும் பழனி முனிசிப்பாலீட்டி. அந்த முனிசிப்பாலிட்டியிலே எந்த வேலையைச் சொன்னாலும் கூட பணம் இல்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே வருவாயை முதலில் பெருக்க வேண்டும். வருவாயைப் பெருக்குவதற்கு உரிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கெல்லாம் இடங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் கடைகளைக் கட்டி வாடகைக்கு விட்டால் அவர்களுக்கு வருமானம் வரும். பழனியில் கோடிக் கணக்கான மக்கள் யாத்ரீகர்களாக வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மத்திய அரசினிடத்திலே அனுமதியைப் பெற்று இரயில்வே மூலமாக யாத்ரீகர் வரியை நிர்ணயம் செய்தால் அங்கே வருமானம் கிடைக்கும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

எங்களுடைய நகராட்சியைப் பொறுத்த வரையில் கடந்த வாரம் 154 வீடுகள்—அவ்வளவும் முஸ்லீம் வீடுகள்— எரிந்து சாம்பலாகப் போய் இருக்கின்றன. அந்த மக்கள் குடியிருக்க வழியில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த நகரசபையை அழகுபடுத்த வேண்டுமென்ற காரணத்தால் அங்கே புறம்போக்கு நிலத்திலும், ரோடு ஓரங்களிலும்





குடியிருந்த மக்களை எல்லாம் அப்புறப்படுத்தி விட்டார்கள். அவர்கள் என்னிடத்திலே வந்து அழுதார்கள். அப்போது நான் சொன்னேன், கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ளுங்கள் நம்முடைய அரசு செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் செய்யும் என்று சொல்லியிருக்கிறேன். எனவே அங்கே அப்புறப்படுத்தப்பட்டவர்களுக்கும், தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவுகின்ற வகையில்— இடம்பங்கோவில் பகுதியில் 8 ஏக்கர் நிலம் இருப்பதாக நான் அறிகிறேன். அந்த இடத்தைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து அந்த இடத்தை உடனடியாக அளந்து கொடுத்து ஆர்.எல்.இ.ஜி.பி: திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அந்த 154 குடும்பத்தினர் மட்டும் அல்லாது ஏற்கனவே உள்ள 200, 300 பேர்களுக்கும் சேர்த்து, அதாவது அவ்வளவு பேர்களுக்கும் என்று ஒரு புதிய திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் மிகவும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு ஆர்.எல்.இ.ஜி.பி. மூலம் கட்டப்படுகின்ற வீடு ஏதோ பன்றிக் குடிசை போன்று இருக்கிறது. அந்த அளவுக்குத் தான் அதைக் கட்டிக் கொடுக்கிறார்கள். இதை கொஞ்சம் பெரிது படுத்த வேண்டும். 16 அடி நீளம், 11 அடி அகலம் என்று உருவாக்கிக் கொடுக்க வேண்டும். 8 அடி, 6 அடி என்று தான் இப்போது இருக்கிறது. ஒரு தாய், தகப்பன், பிள்ளை, குட்டி என்று இருந்தால் அங்கே படுக்க முடியாது. மகனுக்கு அல்லது மகளுக்குக் கல்யாணம் செய்து விட்டால் அங்கே உட்காரக் கூட முடியாது. எனவே இதைச் சற்று விரிவுபடுத்தி, இந்த வீடு கட்டும் திட்டத்தினை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பழனியைப் பொறுத்தவரையில், அந்தத் தொகுதியில் ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டம் முடிவு பெறாமல் இருக்கின்றது. ஒதுக்கப்பட்ட 14 இலட்சம் ரூபாயில் இந்த ஆண்டில் முடிவடையும் தருவாயில் இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

அப்படி அந்தக் குறிப்பிலே இருப்பது உண்மைக்குப் புறம்பானதாகும் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே 1976 ஆம் ஆண்டு மத்திய அரசின் மானியத் தொகை 10 இலட்சம் ரூபாய் உதவிப் பணம் பெற்று இந்த பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அந்த பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதே தவிர அது பூர்த்தியாக்கப்படவில்லை. மீண்டும் அதற்கு 6 இலட்சம் ரூபாய் தேவை என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அப்படி அதற்குத் தேவையான 6 இலட்சத்தை நம்முடைய இந்தத்துறை மானியத்திலிருந்தாவது ஒதுக்கிக் கொடுத்து அந்தப் பாதாளச்

சாக்கடைத் திட்டத்தை விரைவிலே அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மெத்தப் பணிவோடு இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள நகராட்சிக்கு நான் ஓட்டுக் கேட்க சென்ற போதும் பிறகு நன்றி சொல்லச் சென்ற போதும் அந்த ஆண்டுக்கு இரண்டு முறைதான் செல்ல முடிந்தது. அங்கே பெருவாரியாக சொல்லப்பட்ட குறைகள், ரோடுகள் சரியாக இல்லை குடி தண்ணீர் சரியாக கிடைக்க வில்லை என்பது தான். மேட்டுப் பகுதியில் தண்ணீர் ஏற முடியாமல் தண்ணீர் கிடைப்பதில்லை. அங்கே பழனி கோவி லின் தேவஸ்தானத்திற்கு நிறைய பணம் பழனி முருகன் அரு ளால் அவன் மூலமாக நிறைய பணம் வருகிறது. நிறைய வருமானம் வருகிறது. ஆகவே அந்த தேவஸ்தானத்தின் மூலமாகவாவது இந்த குடிதண்ணீர் பிரச்சினை போன்ற அடிப் படை குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கழிப்பிடங்கள் கட்டுவது. 10 குடும்பங்களுக்கு ஒரு கழிப்பிடம் என்ற வகையில் கட்டப்படுவதாக கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. அப்படி உண்மையிலேயே இருந் தால் மிகமிக மகிழ்ச்சி. ஏனென்றால் கிராமப் புறங்களில் உள்ள பெண்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நானும் ஒரு பெண் என்ற முறையில் அவர்களுடைய கஷ்டம் எனக்கு நன்கு புரிகிறது என்ற முறையில் சொல்லிக் கொள்கிறேன். நான் கிராமப் புறங்களுக்கு செல்லும் போதெல்லாம் அவர்கள் என் னிடம் மிக முக்கியமாக கேட்பது குடி தண்ணீர் பிரச்சினையும், கக்கூஸ் வேண்டும் என்ற இரண்டும் தான் கேட்கிறார்கள். ஆகவே கிராமப்புறங்களில மட்டுமல்லாது நெருக்கடி மிகுந்த நகரங்களிலேயும் ஜனப் பெருக்கம் உள்ள பகுதிகளிலேயும், இந்த பாதாள சாக்கடைத் திட்டம் எப்படி மிக முக்கியமானதோ அதைப்போன்றே மிக முக்கியமான கழிப்பிடங்கள் கட்டும் பணி யையும் மேற் கொள்வதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் பஸ் நிலையம். சமீபத்திலே கூட என் னுடைய தொகுதியில் ஒரு பஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. ரொம்ப சின்னது. உள்ளே நுழையவே முடியவில்லை. பஸ் ஸிலே போகக் கூடிய எம்.எல்.ஏ. நான். அன்றாடம் டவுன் பஸ்ஸிலும் பயணம் செய்யக் கூடிய எம்.எல்.ஏ. நான். ஆகவே அந்த சிரமங்களை உணர்ந்து புரிந்து பேசுகிறேன். அந்த பஸ் நிலையத்தின் உள்ளே கூட நுழைய முடியவில்லை. அங்கே பக்கத்திலேயே நிறைய இடம் இருக்கிறது. பி.டபிள்யூ. டி.யைச் சார்ந்த நிலம் கண்மாய் இருக்கின்றது. இப்போது அந்த நிலத் திற்காக 12 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றது என நினைக்கிறேன். ஆகவே, மாண்புமிகு





அமைச்சர் அவர்களும், ரெவின்யூ அதிகாரிகளும், பி. டபிள்யூ.டி அதிகாரிகளும், நகராட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், தலை வரும், எல்லோரும் உட்கார்ந்து கலந்து பேசி வெகு விரைவிலே அந்த பஸ் ஸ்டாண்டை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே இது குறித்து பலமுறை நான் சட்ட மன்றத்திலேயே சொல்லியிருக் கிறேன். அமைச்சர் அவர்களிடமும் எழுதியும் கொடுத்திருக் கிறேன். ஆகவே அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு பெரிய தேசத் தலைவர் ஆஸாத் அவர்களின் பெயரால் இருந்த பூங்காவில்தான்—அந்த பூங்கா இருந்த இடத் தைத்தான்—பஸ் நிலையத்திற்கு எடுத்திருக்கிறோம் என அறி கிறேன். பெரிய தேசத் தலைவர் என்ற முறையில் எந்த வித மான வித்தியாசமும் இல்லாமல் ஆஸாத் பஸ் நிலையம் என்று அந்த நிலையத்திற்கு பெயர் வைக்குமாறு நான் இந்த நேரத்திலே அன்போடு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக் கொண்டால், சமீபத்தில்தான் அவைகளுக்கு தேர்தல் நடத்தி னோம். மிக சந்தோஷமான விஷயம். ஏதோ லோக்கலாகச் சொல்லிக் கொள்கிறார்கள். சில இடங்களில் கள்ள ஓட்டுக் களைப் போட்டு மிகமிக மோசடி செய்து ஜெயித்தார்கள் என் றெல்லாம் சொல்லிக் கொள்கிறார்கள். அது வேறு சமாச்சாரம். ஆனால் அவர்களுக்குள்ள அதிகாரங்கள் இருக்கிறதே, அந்த அதிகாரங்களை நாம் முழுமையாக எடுத்து விட்டோம் என்று தான் சொல்ல வேண்டும். அவர்களிடம் இப்போது எந்தவித மான அதிகாரமும் இல்லை. இதற்கு முன்பு அதாவது ரொம்ப நாட்களுக்கு முன்பு அவர்களிடம் கல்வித் துறை இருந்தது. அதில் ஆசிரியர்களை போடுவது, மாற்றுவது, குடி தண்ணீர் பிரச்சினையை மேற் கொள்ளுவது சுகாதாரத் துறையின் கீழ் சுகாதாரப் பணிகளை மேற் கொள்ளுவது, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவது போன்ற பல அதிகாரங்கள் அவர்களுடைய கையிலே இருந்தன. விவசாயம் கூட இருந்தது. இன்றைக்கு அந்த அதி காரங்ளைஅனேகமாக அத்தனையும் எடுத்திருக்கிறோம் என்று தான் சொல்ல வேண்டும். அப்படி அதிகாரங்களை எடுத்து விட்ட சூழ்நிலையில் அவர்களுக்கு அங்கே எந்த வேலை யும் இல்லை. அவர்கள் என்ன வேலைகளை அங்கு செய்யலாம். ரோடுகளைப் போடலாம். அதுகூட மண் ரோடுகளைத் தான் போட முடியும். மண்ணை வெட்டி ரோடு போடுவதைத் தவிர வேறு எந்த அதிகாரமும் அவர்களுக்கு இருப்பதாகத் தெரிய வில்லை.

ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைச்சரவை யில் உட்கார்ந்து இதுபற்றி பேசி முடிவு செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, பழையபடி அந்த அதி

காரங்களை அவர்களுக்கு கொடுக்க வழி வகை செய்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தன்னிறைவுத் திட்டம். இந்த தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பல வேலைகள் நடந்திருக்கின்றன. நான் ரொம்ப ரொம்ப பாராட்டுகிறேன். நான் போகிற பகுதிகளில் எல்லாம் அதைச் சொல்வேன். இந்த தன்னிறைவுத் திட்டம் மிக நல்ல திட்டம். அந்த திட்டத்தின் கீழ் ரோடு வசதி இல்லாத பகுதிகளோ, குடிதண்ணீரில்லாத பகுதிகளோ, பள்ளிக்கூடம் இல்லாத ஊர்களோ இருக்கவே முடியாது. அப்படி முழுமையாக அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய திட்டம் அது. அதை மாண்புமிகு நமது முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பாராட்டியது உண்டு. இன்றைக்கும் பாராட்டுகிறேன் ஆனால் அதற்கு 216 கோடி ரூபாயைச் செலவழித்திருக்கிறோம். ரோடுகளைப் போட்டிருக்கிறோம். அந்த 216 கோடி ரூபாயும் முழுமையாக ரோடு போடுவதற்காக மட்டும் தான் செலவழிக்கப்பட்டது என்று நான் சொல்லவில்லை. ஆனால் போட்ட ரோடுகளைப் பராமரிக்காத காரணத்தால், ரோடு போட்டோமே தவிர, இப்போது அங்கே ரோடுகளே இல்லாமல் பழுது பட்டு, இருபுறமும் முள் செடிகள் முளைத்து, புல் முளைத்து, அந்தப் பாதையில் நடந்து கூட செல்ல முடியாதநிலைமைஇருக்கிறது.

(பிற்பகல் 1—30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே, தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக போடப்பட்ட ரோடுகள் சீர் செய்ய பணம் அதிக அளவில் ஒதுக்கி, அதனை வைத்து அந்த ரோடுகளை மறுபடியும் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, குடிதண்ணீர் பிரச்னை. முன்பெல்லாம் கிராமப்புறங்களில் வாழ்பவர்களுக்கு வாட்டர் போர்டு என்றால் தெரியாது. அவர்களுக்கு தெரிந்த அதிகாரி பி.டி.ஓ. தான். அவர்கள் பி.டி.ஓ.விடம் சென்று தங்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எல்லாம் காம்பரஹென்சிவ் ஸ்கீமில் 10, 15 கிராமங்களை ஒருங்கிணைத்து குடிதண்ணீர் வழங்க வாட்டர் போர்டை வைத்துத் திட்டம் உருவாக்கப்படுமானால் அது சாலச் சிறந்ததாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அதிக பணத்தை ஒதுக்கி நீர்ப்பாசனத் திட்டங்களை செம்மையாகச் செய்தால் தான்

134473



600 00



குடிதண்ணீர் வழங்குகிற பணியைச் சிறப்பாகச் செய்ய முடியுமென்று தெரிவித்து, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்ததற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் நடந்து முடிந்ததற்காகவும், நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்ற பலருக்கும், வாக்காளர்களுக்கும் பல உறுப்பினர்கள் நன்றி தெரிவித்தார்கள். நானும் அவர்களோடு சேர்ந்து வெற்றி பெற்றிருக்கிற அனைத்து தலைவர்களுக்கும் அரசு சார்பில் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் நான் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றி பெற்று வந்தவர்கள் நிச்சயமாக நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் நலனுக்காக தங்கள் நேரத்தையும் காலத்தையும் செலவழிப்பார்கள் என்று மனதார நம்பியே என் வாழ்த்துக்களைக் கூறுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். சொல்லியிருக்கிற கருத்துக்கள் அத்தனையையும் அதிகாரிகள் குறிப்பெடுத்திருக்கிறார்கள். நான், அவற்றிற்கு பதில் சொல்லவிருக்கிறேன். ஏதாவது இடையில் விடப்பட்டிருந்தால் அது காலத்தைக் கருதி விடப்படுமே தவிர வேண்டுமென்றே விடப்படாது என்ற உறுதியைக் கூறுகிறேன். அப்படி தவறி ஏதாவது விடப்பட்டாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களை அரசாங்கம் நிச்சயம் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு ராமன் அவர்கள் பேசுகிறபொழுது இந்துப் பத்திரிகையில் வந்த ஒரு பெரிய கட்டுரையை எடுத்து வைத்து விரிவாகப் பேசினார்கள். அந்தக் கட்டுரையை நானும் படித்துப் பார்த்தேன். அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுத்தது. மத்திய அரசிடம் சிலபேர் புகார்கள் கொடுத்தர்கள். அந்தப் புகார்களின் மீது அங்கேயிருந்து ஒரு தூதுக் குழு வந்து விசாரணை நடத்தியிருக்கிறது. விசாரணை நடத்தி முடித்து சொல்லப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் அவ்வளவு பெரிய குற்றச்சாட்டுகள் நடக்கவில்லையென்றாலும், சில குற்றச்சாட்டுகள் நடந்திருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் மறுக்கவில்லை. இருந்தாலும் இந்துப் பத்திரிகையில் வந்த அளவு அது போன்ற பயங்கரமான குற்றச்சாட்டுகள் இல்லையென்பது தான் நாம் விசாரித்ததிலே நமக்குத் தெரிந்திருக்கிற உண்மையாகும்.

VRN 31
N86-2

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 16

மத்திய அரசு குழு கூட் தமிழக அரசைப் பொறுத்தவரையில் அதிலும் குறிப்பாக ஐ.ஆர்.டி.பி. கடனைப்பற்றி தான் குறிப்பிட்டார்கள். முழுமையாக பாராட்டி தான் மத்திய அரசு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் அதைப் படிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். தேவையென்றால் படித்துக் காட்ட தயாராக இருக்கிறேன். மத்திய அரசு தமிழக அரசை செய்திருக்கிற காரியங்களுக்கு பாராட்டிதான் இருக்கிறது. தவறுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடக்கலாம். இல்லையென்று சொல்ல முடியாது. தவறுகள் நடக்கிறபோது நான் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்வது தயவு செய்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். ஒரு வேளை அதிகாரிகள் நீங்கள் சொல்லியும் கேட்காமல் போனால் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவீர்களானால் நிச்சயமாக அதற்கான பரிகாரம் ஏற்படும், அதைச் செய்வோம் என்று நான் உறுதி கூறுகிறேன்.

இங்கே உறுப்பினர்கள் பல குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டார்கள். சைக்கிள்கள், கறவை மாடுகள் என்று அவற்றைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். அரசியல் குறுக்கீடுகள், இலஞ்சம் என்றெல்லாம் சொன்னார்கள். இவைகள் எல்லாம் உண்மையிலேயே விசாரிக்கப்பட வேண்டியவைகள். நான் முழுமையாக இல்லையென்று சொல்லவில்லை. தவறுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடந்திருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நான் தைரியமாகச் சொல்ல முடியும். ஐ.ஆர்.டி.பி. கடனில் குறிப்பிடப்பட்டிருக்கிற தவறுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக நடந்திருக்குமே தவிர, ஒட்டு மொத்தமாக பார்க்கும் பொழுது இந்தியத் துணைக் கண்டத்திலே நாம் பெருமைப் படத்தக்க அளவிற்கு பணிகளைச் செய்திருக்கிறோம் என்று பெருமையோடு நான் சொல்லிக் கொள்வேன்.

சில மாதங்களுக்கு முன்பு நான் தவறாக சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. மத்திய அமைச்சரே நாடாளுமன்றத்திலே குறிப்பிட்டார்கள். ஐ.ஆர்.டி.பி., கடனை வைத்துக்கொண்டு ஏர்கண்டிஷன் மிஷினை வாங்கியிருக்கிறார்கள். ஐ.ஆர்.டி.பி. கடனை வைத்துக் கொண்டு விஸ்கி பாட்டில்களை வாங்கியிருக்கிறார்கள் என்று மத்திய அமைச்சரே நாடாளுமன்றத்தில் சொன்னார்கள். அவ்வளவு பெரிய தவறுகள் தமிழ்நாட்டில் நடக்கவில்லை. எனவே, தமிழ்நாடு அந்த அளவுக்குப் பெருமைப்படலாம். இதிலே சாதாரணமாக சில தவறுகள் நடந்து இருக்கலாம். நான் இல்லை என்று மறுக்கவில்லை. ஆனால், அந்தத் தவறுகள் திருத்தப்படக் கூடிய தவறுகள். திருத்தப்பட வேண்டிய தவறுகள். தவறுகளை அதிகாரிகள் செய்திருந்தால், அவர்கள் எல்லாம் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை அரசின் கவனத்திற்குக்கொண்டு வந்தால், நிச்சயமாக கவனிக்கப்படும், தண்டிப்போம் என்ற உறுதியை நான் அளிக்கிறேன்.



1986 ஏப்ரல் 16] [திரு ப. உ. சண்முகம்]

சத்துணவு மையக் கூடங்களைப் பற்றி எல்லாம் பொதுவாகப் பேசப்பட்டது. காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கம் என்று ஏன் வைத்திருக்கிறீர்கள், அதைக் கலைத்து விடுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் ராமன் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். ஒட்டு மொத்தமாக அப்படிக் கலைத்துவிடுவதற்கு இல்லை. பல இடங்களில் நன்றாக நடக்கின்றது. துர்பாக்கியவசமாக அவர்கள் இருக்கின்ற இடத்தில் தவறாக நடக்கிறது போலும். அதைப் பற்றி அரசு குறிப்பு எடுத்துக் கொண்டு இருக்கிறது. அதைப் பற்றி விசாரிக்கும். தவறாக நடப்பவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வார்களானால், நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம். அவைகளை மாற்றி அமைக்கலாம் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவுக் கூடத்தில் யார் யார் எல்லாம் போய்ச் சோதனை போடுவது என்பதைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். சோதனை போடுவதைப் பற்றி அரசுக்கு எந்தவித பயமும் கிடையாது. ஆனால், சோதனை என்ற பெயரால் அங்கே நடைபெறுகின்ற வேலைகளுக்கு குந்தகம் ஏற்பட்டுவிடக் கூடாது. தடை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் முதல் அமைச்சர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னால் ஒரு ஆணையைப் பிறப்பித்து இருக்கிறார்கள், யார் யார் போய்ச் சோதனை போடலாம் என்று, இங்கே சொல்வதற்கு முன்பாகவே, ஆணை போடப்பட்டு இருக்கிறது. இன்னார் சோதனை போடலாம் என்ற அந்த அறிக்கையைத்தான் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி இருப்பார்களே தவிர, வேறு புதிதாக அவர்கள் எதுவும் அனுப்பி இருக்க் முடியாது. சோதனை போட வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கருதுவார்களானால், தாராளமாகப் போய் அங்கே தரப்படுகின்ற அரிசி, பரிமாறப்படுகிற சாப்பாடு எப்படி இருக்கிறது என்ற நல்ல எண்ணத்தோடு போய்ப் பார்த்து, அவைகளிலே ஏதேனும் குறைகள் இருக்குமானால், அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற பிரச்சனையைக் குறித்து தங்கள் மூலமாக—இது எல்லாருக்கும் பயன்படவேண்டும், என்று மக்கள் நலன் கருதி—விளக்கம் பெறுவதற்காக் கேட்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், அதைப்போலவே நகராட்சியினுடைய தலைவர்கள், சோதனையிடுவது என்பது நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அவைகளை செயல்படவிடாமல் தடுப்பதற்கோ, அல்லது குற்றம் கண்டுபிடித்தே தீர வேண்டும் என்ற நோக்கத்தோடோ அல்ல, சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான், இன்னும், சொல்லப்போனால், அதிலே பல்வேறு தவறுகள் நடைபெற்றுக்

கொண்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேற்று மதுரையிலே ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். ஆகையினாலே சட்டத்தைச் சொல்கிறார்கள் நம்முடைய அமைச்சர் அவர்கள், சட்டத்திலே அதற்கான அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். தாங்கள் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே நினைவுபடுத்த விரும்புகிறேன். அது கோர்ட்டிலே தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் என்றாலும், அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"If any animal, poultry or fish intended for food appears to the commissioner or to a person duly authorised by him. to be diseased or any food appears to him to be noxious or if any vessel or utensil used in manufacturing, preparing or containing any article of food appears to be of ,such kind or in such state as to render the article noxious he may cease or carry away or secure any such thing."

இதனுடைய பொருள் அவருக்குத் தெரியும். சானிடேசன் அடிப்படையிலே கமிஷனரோ, அல்லது ஆதரைஸ்டு செய்யப்பட்டவரோ, தயாரிக்கப்படுகிற அந்த உணவு டிசீசை உருவாக்கும் அல்லது தரமாக இல்லை, சுகாதாரக் கேடாக இருக்கிறது என்று சொன்னால், நேரடியாக அவருடைய கன்ட்ரோலுக்கு வந்து விடுகிறது. எனவே எப்படி அதிலே அவர்கள் தலையிட்டு சரிப்படுத்த முடியும் என்பதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் மறுத்தாலும் நீதிமன்றத்திலே அதைப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் சொல்வது போன்று, மடியிலே கனம் இல்லை என்று சொல்கிறபோது, வழியிலே பயம் இல்லை, ஆகவே சோதனை இடுவதற்கான வாய்ப்பு இல்லை என்றாலும் அதைத் தரவேண்டும்.......

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரச் சட்டத்தின் கீழ் உள்ள ஒரு பிரிவைப் படித்துக் காட்டினார்கள். சுகாதாரச் சட்டத்தின் கீழ் எனக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிற பிரிவின் கீழ் (குறுக்கீடு) முனிசிபல் சட்டத்தின் கீழ் சுகாதாரம் பற்றிய பிரிவு வருகிறது. அதை இல்லை என்று நான் சொல்லவில்லை. அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் என்னைத் தவறாக நினைக்கக்கூடாது, இது போன்ற தவறான ஒரு சட்டத்தை எடுத்து வைத்துக்கொண்டு, நடைபெறுகின்ற சத்துணவுக் கூடத்திற்கு போய், இடைஞ்சல் ஏற்படுத்தி விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் வேண்டாம் என்று சொல்கிறோமே தவிர, வேறு ஒன்றும் கிடையாது. எங்களுக்கு எந்தவிதமான பயமும் கிடையாது. சத்துணவுக் கூடத்திற்குப் போய், அந்தப் பச்சிளம் குழந்தைகள் சாப்பிடுகின்ற அந்தச் சாப்பாட்டைத் திருடுகின்றவர்களை, அதைக் கையாடுகின்றவர்களை, அவர்கள் யாராக இருந்தாலும் நான் மதவாதி என்ற முறையிலே சொல்ல வேண்டும்





என்றால், அப்படிப்பட்டவர்களை ஈரேழு ஜென்மத்திற்கும் அந்தப் பாவம் சும்மாவிடாது, நம்முடைய மொழியிலே சொல்ல வேண்டும் என்றால், அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், எவ்வளவு பெரிய சிபாரிசு உடையவர்களாக இருந்தாலும் நிச்சயமாகச் சொல்கிறேன், கடுமையாக அரசு நடவடிக்கை எடுக்கும், அதில் கொஞ்சம் கூட பின்வாங்க மாட்டோம் என்ற உறுதியைச் சொல்கிறேன்.

ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி உறுப்பினர்கள், ஒன்றியஉறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், இவர்கள் எல்லாம் போய், சோதனை போடலாம் என்று கேட்கிறபோது, என்ன ஆகிறது என்பதை அவர்கள் பல இடங்கள் பற்றிச் சொன்னார்கள். எங்களுக்கு, அரசுக்கு வந்திருக்கிற பல தகவல்கள் திருப்திகரமாக இல்லை.

(பிற்பகல் 1-40)

நான் கடினமான வார்த்தை, தடிப்பான வார்த்தை போட விரும்பவில்லை. எனவேதான் வேண்டியதில்லையென்று முடிவு எடுத்திருக்கிறோமே தவிர, வேறு ஒன்றும் கிடையாது என்பதை, பயத்திற்காக அல்ல, திருப்தியாக இல்லை என்று மட்டும்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தின் தலைவர் அவர்களே, சோதனை செய்வதிலே இடைஞ்சல் வந்துவிடும், அமல் நடத்துவதில் தவறுகள் நடந்துவிடும், இடையூறு வந்துவிடும் என்று சொல்கிறார்கள். உயர்மட்டக் குழுவில் ஒரு குறிப்பிட்ட கட்சியினுடைய உறுப்பினர்கள் மட்டும் அல்ல; உயர்மட்டக் குழு, சத்துணவு உயர்மட்டக் குழு என்று போட்டு அங்கு உறுப்பினர்கள் போய்ப் பார்க்கலாம்; அமைச்சர்கள் பார்க்கலாம் என்று சொல்கிறபோது, அமைச்சர் அவர்கள் இடையூறு விளைவிக்காமல் இருக்கலாம், ஆகையினாலே அது இருக்கலாம்; ஆனால் பஞ்சாயத்துத் தலைவர்களும், நகராட்சித் தலைவர்களும் சென்றால் அது இடையூறு. இது மக்களுடைய ஜனநாயகத்தை, மக்களுடைய பிரதிநிதிகளை............. (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் பதில் சொல்ல இருக்கிறேன். மக்கள் பிரதிநிதிகளை அவமதிக்க வேண்டுமென்கிற எண்ணமே எனக்குக் கிடையாது. ஆனால் சாதாரண சத்துணவு திட்டத்தில் போய், சோதனையிட்டால் இடைஞ்சல் ஏற்படும் என்று சொல்கிறபோது வருத்தப்படுகிறார். மக்கள் பிரதிநிதிதான் நமது துணைத் தலைவர் தொகுதியில் பள்ளிக்கூடத்திற்குக் கொடுத்த தண்ணீரை தடுத்து விட்டார். மக்களின் பிரதிநிதிதான் தடுத்திருக்கிறார், இது நாளையோ நாளை மறு தினமோ கால் அட்டேன்சனில் வரப் போகிறது; படிக்கப் போகிறோம். மக்கள் பிரதிநிதிதான்

ஏன் தடுத்தார்கள் என்று எனக்குப் புரியவில்லை. அவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதை இப்போது சொல்ல விரும்பவில்லை. அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஏன் இதைச் செய்கிறார்கள். ஏதோ ஒரு காரணத்துக்காக, தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பிறகு, 13 ஆண்டுகள், 14 ஆண்டுகளுக்குப் பிறகு உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடந்திருக்கிறது. நடந்த வேகத்தில் கொஞ்சம் காரம் அதிகமாக இருக்கும். அந்த வேகம் காலம் கொஞ்சம் போனால் தானாகக் குறைந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்னும் அந்த வேகம் குறையவில்லை ; காரம் குறையவில்லை. அதனால்தான் இப்போதைக்கு அது தேவையில்லை என்று அரசு தடுத்து வைத்திருக்கிறதே தவிர, வேறு எந்த நோக்கமும் கிடையாது என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல் குழப்பம்) (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** மன்னிக்கவும் ; மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். ஒரு நகராட்சியினுடைய அல்லது பஞ்சாயத்து ஒன்றியத்தினுடைய ஒரு தலைவர், குறிப்பாக நம்முடைய துணைத் தலைவர் அவர்களுடைய தொகுதி என்று சொல்லியிருக்கிறார்கள். வருகின்ற தண்ணீரைக் கூட தடுத்துவிட்டார்கள், அதுசம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகிறது என்று சொன்னார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் வரட்டும். உண்மையான தகவல்தானா, இல்லையா அல்லது தவறான செய்தியைச் சொல்லிவிட்டோம் என்று பழையபடி திருத்துகிற நிலை ஏற்படுகிறதா என்பது வேறு விவகாரம். ஆனால் ஒரு நபர் அப்படி தவறான காரியத்தை செய்துவிட்ட காரணத்தினாலேயே, நான் கேட்க விரும்புகிறேன். அது எல்லா ஊராட்சிமன்ற, ஒன்றிய, நகராட்சித் தலைவர்களுக்கும் பொருந்தும் என்று சொன்னால் ஆடிட்டர் ரிப்போர்ட்டிலே சத்துணவிலே ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால்; அதற்காக முழுமையும் ஊழல் என்று சொன்னால் எடுத்து விடுவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சருடைய மானியத்திலே கலந்துகொண்டு பல உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உறுப்பினர்கள் விளக்கங்களைப்பெறுவது அல்லது அவர்கள் சொல்கிற கருத்திலே, முன்னாலே சொல்லியிருந்தால் அந்தக் கருத்துக்களை அவையிலே பெறுவதுதான் வாடிக்கை, வழக்கம், எப்போதுமே, வாடிக்கையாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்





இந்த மன்றத்திலே அமைச்சர்கள் பதில் சொல்கிற நேரத்திலேயும், மற்ற நேரங்களிலேயும், அதிக நேரத்தை எடுத்துக்கொண்டு இடையிடையே, அவர் விவாதங்களிலே கலந்துகொள்ளாமல் இருக்கிறபோது குறுக்கிட்டு, குறுக்கிட்டு இந்த மன்றத்தினுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் இருக்கிற உறுப்பினர்களும் கடைசியாக இறுதியிலே அமைச்சர் பதில் அளித்துவிட்டு உறுப்பினர்கள் எல்லாம் உணவுக்குச் செல்லவேண்டிய நேரத்திலே அமைதியாக இருக்கிறபோது, ஏதாவது பெறவேண்டுமேயானால், கிளாரிபிகேஷன் என்கிற முறையிலாவது கடைசியாகப் பெறுவது நல்லது. உறுப்பினர் அவர்கள் சட்டம் படித்தவர்கள் ; எதையும் அறிந்திருக்கிறவர்கள் ; தெரிந்திருக்கின்றவர்கள். ஆகையால் அந்த முறையைக் கையாள்வது எங்களுக்கு சபையைப் பாதுகாத்துத் தருவது நம்முடைய......(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சந்தேகம் இருந்தால் இறுதியில் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, எனக்கு உள்ளபடியே வருத்தம் இல்லை, மகிழ்ச்சி. சத்துணவு திட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் இவ்வளவு அக்கறை எடுத்திருப்பதைக் கண்டு பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். இந்த அக்கறை துவக்கத்திலேயே இருந்திருக்குமேயானால் இந்தச் சந்தேகம் வந்திருக்காது. சத்துணவுத் திட்ட ஆரம்பக் காலத்தில் அவர்களுக்கு சந்தேகம் வந்து அது நடைபெற முடியாத அளவுக்கு பல சிக்கல்களை தோற்றுவித்த காரணத்தால் நான் எனக்கு சந்தேகமாக இருக்கிறதே தவிர வேறு காரணம் அல்ல. இது தான் உண்மை. வேறு உண்மை இல்லை. (கைத்தட்டல்) வேறு எந்தவிதமான பயமும் கிடையாது, அச்சமும் கிடையாது. குழந்தைகளுக்கு சத்துணவு போடுகிறோம். தவறு நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. தவறு நடக்கலாம் நடக்கும் இடங்களை சுட்டிக்காட்டலாம், அதைத் திருத்தலாம். தவறு நடக்கவில்லை சுத்தமாக இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. எங்காவது தவறு நடக்கும். 84 லட்சம் குழந்தைகள் சாப்பிடும் இடத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தவறு நடப்பது சர்வ சாதாரணம். அதைத் திருத்த வேண்டுமே தவிர, தவறுகளை சுட்டிக் காட்டி நிறுத்தி விடக் கூடாது என்பதை மட்டும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டதற்காக உள்ளபடியே நான் பெருமைப் படுகிறேன் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னச்சாமி அவர்கள் பேசும்போது சொன்னார்கள், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். அப்புறப்படுத்தி அவர்கள் கடைகள் கட்டுவதற்கு கொடுக்க வேண்டும் என்றும் இப்போது அங்கே பெரிய பெரிய வீடுகளை, கட்டிடங்களை கட்டியிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அரசு அதை தாராளமாக அப்புறப்படுத்தும். அப்படி அப்புறப்படுத்தும் நேரத்தில் அதை அரசியலாக ஆக்காமல் அரசோடு சேர்ந்து ஒத்துழைப்பீர்களானால் அவர்களுடைய இடங்களை எல்லாம் நிச்சயமாக நாம் அப்புறப்படுத்தி நகராட்சிக்கு சொந்தமான அந்த இடத்தை கொடுக்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலந்தூர் மோகனரங்கம் பெயரில் ஒரு கட்டிடத்திற்கு பெயர் வைப்பது பற்றி சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் விளக்கம் சொல்லிவிடுவது நலம் என்று கருதுகிறேன். ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஆணை வெளியிட்டு இருக்கிறார்கள். உயிரோடு இருக்கிறவர்கள பெயரை எந்த கட்டிடத்திற்கும் வைக்கக் கூடாது என்று ஆணை வெளியிட்டு இருக்கிறார்கள். அந்த ஆணை இன்னும் வாபஸ் பெறப்படவில்லை, அப்படியே அந்த ஆணை அமலில் இருக்கிறது. அது அப்படியே தான் இருக்கிறது. திரு. மோகனரங்கம் பெயரை ஒரு கட்டிடத்திற்கு இட வேண்டும் என்று சொல்லி முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி நான் தான் இந்த விழாவில் கலந்து கொண்டு சொன்னேன். ஆனால் இன்னும் அந்தக் கட்டிடத்திற்கு திரு. மோகனரங்கம் பெயரை வைக்கவில்லை. அதற்கு காரணம் திரு. மோகனரங்கம் அவர்கள் எங்களை காணும்போது எல்லாம் வேண்டியதில்லை என்று எழுதிக் கொடுத்து விடுகிறேன் என்று தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அரசு வைக்கவேண்டும் என்ற முடிவு எடுத்து விட்டதாலேயே ஜி.ஓ.வை ரத்து செய்து விட்டதாக கருதி விடக் கூடாது. ஜி. ஓ.வை ரத்து செய்து விட்டதாக கருதிக் கொண்டு சில பேர் தீர்மானமே போடுகிறார்கள். கல்யாண மண்டபத்திற்கு அவசரப்பட்டு யார் யார் பெயரையோ வைக்கிறார்கள். அதுவும் தவறான காரியம், செய்யக்கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மோகனரங்கம் பெயரை வைத்தோம் என்று சொல்லி ரொம்ப அவசர அவசரமாக அந்த ஆணையை எங்களுக்குச் சுட்டிக் காட்டியவர்கள் கல்யாண மண்டபங்களுக்கு அவர்கள் பெயரை வைப்பதையாவது தடுக்க வேண்டும். அல்லது இது போன்ற அலுவலகங்களில், நகராட்சி அலுவலகங்களில், ஊராட்சி ஒன்றியங்களில் யார், யார் படம் மாட்டி வைப்பது என்பது பற்றி ஏற்கெனவே அரசு ஆணை—இப்போது அல்ல—ஒரு ஆண்டுக்கு முன்பே ஆணை வெளியிடப்பட்டு இருக்கிறது. யார், யார் படம் மாட்டலாம் என்பது பற்றி.



ஆனால் அவசரப்பட்டு வெற்றிபெற்று உள்ளே போய்விட்ட உடனேயே தங்களுடைய தலைவருடைய படத்தைக் கொண்டு போய் வைக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறார்கள். அதுவும் தவறான காரியம். அப்படிச் செய்வதைப் பற்றிக் கவலையில்லை. அவசரம் அவசரமாக நகராட்சி மன்றத்திற்கும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் உள்ளே போனது அந்தப் படத்தைத் தூக்கிக் கொண்டு போவதற்காகப் போனார்கள் என்பது போல ஆகிவிடும். ஆகவே வேண்டாம், அதை மாற்றிக்கொள்வது என்று நான் அப்படி செய்கிற அந்த நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி சரோஜா அவர்கள் மலைஜாதி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை முறைப்படி அவர்கள் எழுதித் தருவார்களானால் டி.டி.சி.யிலே அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றினால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, நாங்கள் சென்று எப்படிப் பங்கு கொள்வது என்றெல்லாம் கேட்டார்கள். என்னிடம் பேசியவர்கள் பல பேர்கள் பல புகார்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகச் சொல்லிவிடுவது நல்லது என்று கருதுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம், எல்லாக் கூட்டங்களிலும் கலந்து கொள்வதற்கு அவர்கள் உரிமைபடைத்தவர்கள். தேர்தல் நடைபெறுகிறபோது கலந்து கொள்ளலாம். அப்படி அவர்கள் கலந்து கொள்வதில் தவறு இல்லை. அப்படிச் சொல்கிற நேரத்தில் அவர்களை கீழே போய் உட்காருங்கள் என்று சொல்லக் கூடாது. கீழே உட்கார வைக்க கூடாது. எந்த ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராவது கீழே போய் உட்காருங்கள் என்றோ, வெளியே போ என்றோ சொல்வார்களானால் அங்கே இருக்கிற அதிகாரிகள் அதைத் தடுத்து நிறுத்தி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை மேடையிலே நாற்காலி போட்டு உட்கார வைப்பதற்கு வசதியை அங்கே அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆனால் நான் வருத்தப்படுகிறேன். அச்சரப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் என்னிடத்திலே வந்து சொல்லிக் கண்ணீர் விட்டார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் தொகுதியிலிருந்து வந்த திரு. எத்திராஜ் என்ற உறுப்பினர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஆனால் அவர் போய் கலந்து கொண்ட ஒரு கூட்டத்திலே அங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் வெளியே போ என்று சொல்வதும் வெளியே அவரை அனுப்பி விட்டு கதவைப் பூட்டிக் கொள்வதும்

எவ்வளவு துர்பாக்கியமான நிலை, எவ்வளவு தாழ்ந்த மனப்பான்மையைக் காட்டுகிறது, தாழ்த்தப்பட்ட குடிமகன் என்பதற்காக அவ்வளவு கேவலமாக ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் வன்மையாகக் கண்டிக்கிறேன். அதிகாரிகள் அப்போதே தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். (குறுக்கீடு). என்ன காரணமோ தெரியவில்லை.

(பிற்பகல் 1-50)

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பேச்சிலே குறுக்கிடுவதற்காக வருந்துகிறேன். வேண்டுமென்றே குறுக்கிட வேண்டுமென்ற நோக்கமல்ல. அமைச்சரவர்களுடைய இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலையில் யார் மீது குற்றச்சாட்டு சாட்டுகிறாரோ அவர் இந்த அவையில் இல்லை........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தெரிந்துதான் நான் பெயரைச் சொல்லவில்லை.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, பொதுவாகப் பேசக்கூடாது என்று தலைவராகிய தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள்............

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் பொதுவாகவும் சொல்லவில்லை, பெயரையும் சொல்லவில்லை. அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் பெருந்தலைவராக இருப்பவர் என்றுதான் குறிப்பிடுகிறேன். அந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. எத்திராஜ், அவருக்கு ஏற்பட்டது. நான் கேட்கிறேன். சட்டமன்ற உறுப்பினருக்கு ஏற்பட்ட அந்த நிலையைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் வெட்கப்பட வேண்டாமா, இப்படி நடந்து விட்டதே என்று வருத்தப்பட வேண்டாமா? கண்டிக்க வேண்டாமா? அதுவும் ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகனைப் போய் வெளியே அனுப்பு என்று சொல்லிவிட்டார்களே அதற்காகவாவது கேட்கிறேன், ஜாதி மனப்பான்மையை வைத்துக் கொள்வதற்காகக் கண்டிக்க வேண்டாமா? அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என் மீது வருத்தப்படுவானேன்? அப்படி ஏன் செய்தார்கள் என்று கண்டிக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, ஜாதிக்கு விரோதமான உணர்வுகளைத் தூண்டுவது போல் ரொம்ப விளைவாக..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசியாகக் கேட்டுக் கொள்ளலாம்.





திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு கேட்க விரும்புகிறேன். அமைச்சர் ஊரைச் சொல்லி ஊராட்சி ஒன்றியத் தலைவரைச் சொன்னார்கள். எங்களுடைய உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் எழுந்து அவர் சபையில் விளக்கம் கொடுப்பதற்கு இல்லையே எப்படிப் பதில் சொல்லமுடியும் என்று கேட்டார்கள். நான் ஆளைச் சொல்லவில்லை, அச்சரப்பாக்கம் என்று தான் சொல்கிறேன் என்று சொன்னார்கள், அது சபைக் குறிப்பிலே இருக்கிறது. அச்சரப்பாக்கம் என்று சொல்லிவிட்டால் ஆள் யார், பெயர் என்ன என்று தெரியாதா? அது ஒன்று. இரண்டாவது சட்ட மன்ற உறுப்பினர்கள் மதிக்கப்பட வேண்டுமென்ற கருத்திலே யாருக்கும் வேறுபாடு கிடையாது. அது இந்தச் சபையினுடைய உரிமை, நாங்கள் வரவேற்கிறோம். மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு ஆதிதிராவிட மகனை என்று அதற்கு ஒரு அர்த்தம் கொடுத்து அந்த ஆதிதிராவிடர் சமுதாயத்திற்கு விரோதமான உணர்வுகளைப் பரப்புகிறார்களே நான் கேட்கிறேன் இங்கே இருக்கிற திரு. பாலனும், திரு. இளம்வழுதியும் அய்யங்கார் வகுப்பைச் சார்ந்தவர்களா? அந்த உணர்வைத் தூண்டுவது நல்லதல்ல, சபைக் குறிப்பிலிருந்து ......

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் வளர்ந்த விதம் எங்கேயிருந்துஅரசியல் கற்றுக்கொண்டேன், சமுதாய சீர்திருத்தம் கற்றுக் கொண்டேன் என்பதை நான் சொல்லி மாண்புமிகு உறுப்பினர் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை என்று கருதுகிறேன். நான் ஜாதி உணர்வை வேண்டுமென்றே தூண்டவில்லை, நான் உள்ளபடியே சொல்கிறேன், தவறாகக் கருதிவிடக் கூடாது, ஜாதி உணர்வை தூண்டி ஏதோ சச்சரவை உண்டாக்குகிறேன் என்று கருதக்கூடாது. அவர்கள் தவறாக நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அவர்கள் நடப்பது சரியல்ல, சட்டமன்ற உறுப்பினருக்கு....

திரு. பரிதி இளம்வழுதி : தலைவர் அவர்களே, (குறுக்கீடு) தாழ்த்தப்பட்டவர்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு இப்படி ஒரு கதி நேர்ந்து விட்டது என்று அதற்காக வருத்தப்பட வேண்டாமா என்று ரொம்ப ஆதங்கப்படுகிறார். ஆனால் அந்தத் தாழ்த்தப்பட்டவர்களின் ஒரு பெரும் தலைவரான டாக்டர் அம்பேத்காரின் சிலையை உடைத்திருக்கிறார்கள். அதைப்பற்றி (குறுக்கீடு) அதை அனுமதிக்கிறார்களா?....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற உரிமைகளைப் பற்றிச் சொல்கிறேன். அங்கே

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 16

ஜீப்புகள் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஜீப்புகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதத்தில் இரண்டு நாள், எப்போது தேவை என்பதை ஒரு வாரத்திற்குமுன்கூட்டியே ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு எழுதி அனுப்பினால் அவர்கள் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். கொடுக்கவேண்டும். கொடுத்தாக வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கும், என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், அங்கு தங்குவதற்கு இடம் கேட்கிறார்கள். ஏற்கனவே ஒரு இடம் இருந்தது. அது இப்போது தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்ததற்குப் பிறகு, அவருக்கு அந்த இடத்தைக் கொடுத்து விட்டார்கள். ஆனால், சில ஊராட்சி ஒன்றியங்களில் விசாரித்துப் பார்த்ததில், சட்டமன்ற உறுப்பினருக்கு என்று தனியாக ஒரு இடத்தை இன்னும் வைத்துக் கொண்டே இருக்கிறார்கள். இருக்கிற இடத்தை காலி செய்யச் சொல்லவில்லை. ஆனால், மேற்கொண்டு, இருப்பவர்களுக்கு இடத்தை கொடுக்கமுடியுமா என்று பார்க்கச் சொல்கிறேன். இடம் கொடுக்கமுடியும் என்றால் அவர்கள் சென்று தங்கள் அலுவலகத்தில் வேலை செய்ய அரசு உதவி புரியும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நியமன உறுப்பினர்கள் வாக்களிக்கலாமா, இல்லையா என்றும் நியமன உறுப்பினர்கள் வாக்களிப்பது எப்படி ஜனநாயகம் ஆகும் என்று ஜனதா கட்சியைச் சார்ந்த உறுப்பினர் கேட்டார். சட்டத்திலேயே ஏற்கனவே போட்டிருக்கிறோம். நியமன உறுப்பினர்கள் என்று யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்று போடவில்லை. தாழ்த்தப்பட்டவர் சமூகத்திலிருந்து இரண்டு பேரையும், பெண்களிலிருந்து 2 பேரையும்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நியமிப்பார்கள் என்று போட்டு, அதற்கான தகுதிகளை, விதிகளைப் போட்டு, நியமிக்கவேண்டும் என்றுதான் போட்டு இருக்கிறோமே தவிர யாரை வேண்டுமானாலும் நினைத்தபடி போட்டு விடமுடியாது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகித இட ஒதுக்கீடுபற்றி மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். பெண்களுக்கென்று 15 சதவிகித இட ஒதுக்கீடும் கொண்டு வந்தீர்களே, அவற்றை அப்படியே அமல் ஆக்கவேண்டும் கொண்டு வரவேண்டுமென்று, சொன்னார்கள். அதுதான் அரசின் நோக்கம். மரியாதைக்குரிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய லட்சியம், 18 சதவிகித இடங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கவேண்டும் என்பதுதான். 15 சதவிகித இடங்களை பெண்களுக்கு ஒதுக்கவேண்டும் என்பது தான். இடையிலே நீதிமன்றம் குறுக்கிட்ட காரணத்தினால், பழைய முறைப்படியாவது தேர்தலை நடத்தலாம் என்று சொல்லி தேர்தல் நடத்தினோமே தவிர, வேறு [illegible]ல.



1986 ஏப்ரல் 16] [திரு. ப. உ. சண்முகம்]

நியமன உறுப்பினர்களாக பெண்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும் தான் நியமிக்கலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது. யாரை வேண்டுமானாலும் போடலாம் என்று போடவில்லை. அரசு அபபடி நினைத்திருந்தால், இருக்கிற பலத்தை வைத்துக்கொண்டு, யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்று சட்டத்தை இயற்றி இருக்கமுடியும். ஆனால் இயற்றவில்லை. சட்டம் போடும்போது, அனைத்து உரிமையும் நியமன உறுப்பினருக்கும் உண்டு என்று சட்டத்திலே விதி வகுத்திருக்கிறோம். வாக்களிக்க உரிமை உண்டு என்று போட்டு இருக்கிறோம்.

அதே போல், சேர்க்கிற உரிமை, கோ-ஆப்ட் செய்கிற உரிமை ஒன்றியங்களுக்கு கொடுத்திருக்கிறோம். அதை வைத்து கோ-ஆப்ட் செய்து கொள்கிறார்கள். சில இடங்களில் அதைச் செய்யவில்லை. காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. அதுவும் எங்களுக்குத் தெரியும்.

சில இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நியமிக்கப்படுகிறவர்களுக்கு பதவிப் பிரமாணம் கூட செய்து வைக்கமுடியாது என்று ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் சொல்கிறார்கள். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் தான் பதவிப் பிரமாணம் செய்துவைக்க வேண்டும் என்று சட்டத்திலே இல்லை. பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றுதான் இருக்கிறது. அடுத்த மீட்டிங்கில் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. மீட்டிங் என்று சொன்னால் தேர்தலுக்காக கூட்டம் போட்டாலும் மீட்டிங்தான். தனியாக அவசரமாக வேறு எதற்காவது கூட்டினாலும் மீட்டிங் தான். அப்படி நடக்கும் கூட்டம் நடக்கிற நேரத்தில், ஆணையருக்கு எழுதிக் கொடுத்து விட்டு, அதைப் படித்து விட்டால் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டதாகக் கருதப்படும் அதற்கான அரசு ஆணை ஒன்று இன்று வெளியிடப்பட இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அப்படி எங்காவது புதிதாக பதவிப் பிரமாணம் எடுத்துக் கொணடு வாக்களிக்கமுடியாமல் தடுத்தால் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது. அதைத் தவிர்க்கவே இந்த வழிமுறையை வகுத்திருக்கிறோம் என்று உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். யாரும் தடுக்கவும் முடியாது. தடுக்கவும் கூடாது.

சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்கிற நேரங்களில் விவாதங்களில் கலந்துகொள்ளலாம். தவறு இல்லை. ஆனால் வாக்களிக்க மட்டும் உரிமை இல்லை. வாக்களிக்கக் கூடாது என்று சட்டத்திலே விதி வைத்து இருக்கிறோம். வாக்களிக்கவில்லை. ஜனதா கட்சி உறுப்பினர் ஏதோ நியமித்த உறுப்பினர்களுக்கு இப்படி வாக்களிக்க உரிமை கொடுத்து

இருப்பது ஜனநாயகமா என்று கேட்டார். கோ-ஆப்ட் செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அந்தச் சட்டத்திலே சில உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே உரிமையைத் தான் அவர்களுக்குக் கொடுத்தோமே தவிர, புதிதாக எந்த உரிமையும் கொடுக்கப்படவில்லை.

ஊராட்சிகளைப் போல், சட்டமன்ற உறுப்பினர்கள் நகர மன்றங்களிலும் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம் அந்தத் தொகுதியில். இதற்கான சட்டத் திருத்தம் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே வரவிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அதற்கும் சட்டத் திருத்தம் வருகிறது. வழி வகுக்கப்படும்.

(பிற்பகல் 2-00)

டி.டி.சி. கூட்டம் விருதுநகர் மாவட்டத்திற்கு இன்னும் ஏன் அமைக்கவில்லை என்று கேட்டார். அமைத்து, ஏற்கனவே ஆணை பிறப்பித்தாகிவிட்டது. மாவட்ட ஆட்சியாளர் அதைக் கூட்டாததற்கு அவர்கள் ஒரு காரணத்தைச் சொன்னார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி இரண்டு மாவட்டங்களிலே சென்று விட்டது. (குறுக்கீடு) இரண்டு இடங்களிலேயும் தொகுதி இருக்கின்ற காரணத்தினால் அரசு ஆணை செல்ல வேண்டியிருக்கிறது. அதற்காக டி.டி.சி. கூட்டத்தைத் தள்ளி வைக்க வேண்டாமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. டி. டி. சி. கூட்டம் விரைந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களை எப்படிக் கணக்கு எடுக்கிறீர்கள் என்று எல்லோரும் கேட்டார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்ற ஒரே பதில், மத்திய அரசாங்கம்தான் இதை எப்படிக் கணக்கெடுக்க வேண்டுமென்று சொல்கிறது; கணக்கு எடுக்கிறோம். 53 சதவீதம் என்கிறீர்கள், 37 சதவீதம் என்கிறீர்கள், 10 சதவிகிதம் என்கிறீர்கள்; ஜீரோவாக ஆக்கப்போகிறோம் என்று சொல்கிறீர்களே என்று சொன்னால் மத்திய அரசாங்கம் நமக்கு வகுத்துக் கொடுத்திருக்கின்ற கைட்லைன்ஸை வைத்துக் கொண்டு நாம் இதைப்போடுகிறோமே ஒழிய வேறொன்றுமில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ. ஆர். டி. பி. கடன் கொடுப்பதில் முறைகேடுகள் நடக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். இப்படி முறைகேடுகள் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் சட்டமன்ற உறுப்பினர்களைக்கூட, அந்த ஐ.ஆர்.டி.பி., கடன் பெறுகின்றவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற குழுவில் உறுப்பின





ராகச் சேர்க்கலாம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது. விரைவிலே அதற்கான ஆணை பிறப்பிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நகராட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம் என்றுதான் சொன்னேனே தவிர, வேறொன்றும் நான் சொல்லவில்லை. நகராட்சியிலே, ஐ.ஆர்.டி.பி., லோன் கிடையாது; என்.ஆர்.இ.பி. லோன் கிடையாது; ஆர்.எல்.இ.ஜி..பி, நகராட்சிக்குக் கிடையாது. ஆகவே, அந்தத் தகராறு அங்கே வரவில்லை. அது வரும்போது அதைப் பற்றி பார்க்கலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் பேசும்பொழுது சில தகவல்களைச் சொன்னார்கள். ஏதோ சொத்து வரிகளெல்லாம் குறைந்திருக்கின்றது என்று சொன்னார்கள். குறைவாக எதுவுமில்லை. அதிகமாக, கூடுதலாகத் தான் இருக்கிறது என்பதை மட்டும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சியைப் பொறுத்தவரையில் சில செய்திகளைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அவைகளையும் சேர்த்து நான் அறிவிக்கிறேன். ஆனால், மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சிக்கு ஒரு அட்வைசரி போர்டு அமைக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்—எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களும், சென்னை மாநகராட்சியில் தங்கி குடியிருக்கின்ற—நிரந்தரக் குடியாக இருக்கின்ற எம்.எல்.சி.க்கள்—மேலவை உறுப்பினர்களும், அதைப்போல நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாநிலங்களவை உறுப்பினர்களும்—தங்கி இங்கே நிரந்தரக் குடிகளாக இருக்கின்றவர்கள்—அதோடு கூட அரசு நியமிக்கின்ற 15 உறுப்பினர்களும் சேர்த்து, அட்வைசரி போர்டு நியமிக்கலாம் என்று இருக்கிறோம். அந்த அட்வைசரி போர்டு கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர்கள் மாநகராட்சி தனி அதிகாரியாக இருப்பார்கள். மாநகராட்சி ஆணையாளர் அதனுடைய செயலாளராக இருந்து பணி புரிவார்கள். ஏற்படுகின்ற குறைகளை அங்கே எடுத்துச் சொல்லலாம். அந்த உரிமையைக் கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சியில் இடம் வேண்டுமென்று கேட்டார்கள். மாநகராட்சியில் இடம் கொடுப்பதற்கு அங்கே இடம் இல்லை. இடம் கொடுக்க வேண்டுமென்றால் கவுன்சில்

ஹால்தான் இருக்கிறது. (குறுக்கீடு) டிவிஷனிலே கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். அதைப்பற்றிப் பிறகு யோசிப்போம். இப்பொழுது இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறொரு புகாரையும் திரு. ராமன் அவர்கள் எழுதிக் கொடுத்து இருக்கிறார்கள். இராஜபாளையம் ஒன்றியத்திலிருந்து 15,000 ரூபாய் அகில இந்தியப் பொருட்காட்சி நிதிக்காகவும், குடும்ப நிதி நலத்திட்டத்திற்கு 30,000 ரூபாயும் கொடுத்திருக்கிறார்கள், எப்படி என்று கேட்டிருக்கிறார்கள். எனக்கு விவரம் தெரியாது. திடீரென்று கேட்டு இருக்கிறார்கள். விசாரித்துச் சொல்கிறேன். அப்படிக் கொடுத்து இருந்தால் அதைப்பற்றி நிச்சயம் அரசு விசாரிக்கும். விசாரிக்கச் சொல்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு திரு. சைதை துரைசாமி அவர்கள் பேசும்போது, இடுகாடுகளில் பிணம் கொளுத்துகின்ற இடத்தில் வரியைக் கொஞ்சம் அதிகமாக ஆக்கியிருக்கிறீர்கள், 100 என்பது 185 ஆக ஆக்கப்பட்டு இருக்கிறது; 60 என்பது 90 ரூபாய் என்றும், 15 ரூபாய் என்பது 30 ரூபாய் என்றெல்லாம் ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். விலைகளெல்லாம் ஏறியிருக்கின்ற காரணத்தால் இதை செய்திருக்கிறோம். வெட்டியான்கள் தொல்லைகள் இருக்கத்தான் செய்கிறது. நண்பர் குறிப்பிட்டதை நான் மறுக்கவில்லை. அதை எந்த அளவிற்குக் குறைக்க முடியுமோ அந்த அளவிற்குக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். அதே நேரத்தில் மின்சாரத்தின் மூலம் எரிகின்ற அடுப்பு வைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். விரைந்து அதற்கான ஆணை பிறப்பிக்கப்படும். அந்த இடம் தேர்ந்தெடுப்பதிலே தகராறு இருக்கிறது. எங்கே போய்த் தேர்ந்தெடுத்தாலும் எங்கள் பகுதியில் வேண்டாம், எங்கள் பகுதியில் வேண்டாம் என்றுதான் சொல்கிறார்களே தவிர, வேண்டும் என்று சொல்பவர்கள் எந்தப் பகுதியிலேயும் இல்லை. இருந்தாலும், வற்புறுத்திச் சொல்லி, வைக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்றைச் சொன்னார்கள். என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., மூலம் கட்டப்பட்ட வீடுகள்—சென்ற ஆண்டு கட்டிய வீடுகளை கட்டி முடித்துக்கொண்டே இருக்கிறோம், முடிந்துவிடும் என்று நம்புகிறேன். 20,899 வீடுகள் சென்ற ஆண்டு மட்டும் கட்டப்பட்ட வீடுகளாகும். இந்த ஆண்டு 60,000 வீடுகள் கட்டுவது என்று முடிவு செய்திருக்கிறோம். எந்தக் கிராமத்தில் அந்த வீடுகளைக்





கட்டுவது என்று தேர்ந்தெடுத்துச் சொல்கின்ற உரிமை, சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரப்படும், அந்தக் குழுவில் அவர்களும் இடம் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.ஆர்.டி.பி. கடன் கொடுக்கும்போது, வங்கியில் இருக்கிற அதிகாரிகள் சரியாகக் கடன் கொடுப்பதில்லையென்று பலபேர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள். அந்த ஐ.ஆர்.டி.பி. குழுவில் வங்கி அதிகாரி ஒருவரையும் ஒரு உறுப்பினராகச் சேர்க்க இருக்கிறோம். எனவே, அந்தச் சிக்கலும் இருக்காது; இனி அதுவும் தீர்ந்து விடும், சீக்கிரமாகக் கடன் கொடுக்கின்ற முறையும் வரும் என்று நான் நம்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை. அதைமட்டும் விளக்கிச் சொல்லிவிடலாம் என்று கருதுகிறேன். நான் சில தலைவர்கள் பேச்சைப் பத்திரிகையில் படித்தேன், நானும் கேட்டேன். சில நகராட்சிகளிலே புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சித் தலைவர்கள் வந்ததற்குப் பிறகு, ஏலம் விட்டோம், இலட்சக்கணக்கிலே வருமானம் வந்திருக்கிறது. இப்பொழுது வந்த வருமானம் சென்ற ஆண்டு எங்கே போயிற்று? எந்த மந்திரிகள் பாக்கெட்டுக்குப் போயிற்று? யார், யார் கொள்ளை அடித்தார்கள் என்றெல்லாம், வேகவேகமாகப் பேசிய செய்தியை பத்திரிக்கையிலே நான் படித்தேன். இப்படி சில பேர்கள் பேசுகிறார்கள். அப்படிப் பேசுகின்றவர் உதாரணத்திற்குச் சொல்லியே பேசியிருக்கிறார். பழனி—மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய தொகுதி—நகராட்சியிலே ரூ. 16 இலட்சம் இந்த ஆண்டு வருமானம் வந்திருக்கிறது, சென்ற ஆண்டு ரூ. 2 இலட்சம் வருமானம் என்று சொன்னார்கள். இந்த ஆண்டு ரூ. 16 இலட்சம் வருமானம் வந்தது. சென்ற ஆண்டு அந்தப் பணம் வரவில்லை, யார் பாக்கெட்டுக்குப் போயிற்று? யார் அதை அடித்துக் கொண்டு போனார்கள் என்றெல்லாம் வேகமாக பேசியிருக்கிறார்கள். நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை; விரும்பினால் பெயரைச் சொல்கிறேன்; எங்கே வந்திருக்கிறது என்று கேட்டால், பத்திரிகையைக் கையில் வைத்திருக்கிறேன், படித்துக் காட்டத் தயாராக இருக்கிறேன், ஆனால் விவரத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு பேசவேண்டும். பெரிய தலைவர்கள் என்பதற்காக, உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியை, சுலபத்திலே, பொதுமக்கள் மத்தியிலே சொல்லிவிடக் கூடாது. நாங்கள் சாதாரணமான ஆட்களாக இருக்கலாம். எங்களை எல்லாம் பார்க்கும்போது அவர்கள் கண்களுக்கு இலஞ்சம் வாங்குபவர்களாகத் தெரிகிறது. என்ன செய்வது? மஞ்சள் காமாலை வந்து விட்டால், பார்ப்பதெல்லாம் மஞ்சளாகத்தான் தெரியும். நம்முடைய

[திரு. ப உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 16

குற்றம் அல்ல, அவருடைய கண்களுடைய குற்றம், அவ்வளவு தான் நான் சொல்ல முடியும், வேறொன்றும் சொல்வதற்கில்லை. ரூ. 2 இலட்சம், எப்படி ரூ. 16 இலட்சமாக ஆயிற்று? எனக்கே தூக்கி வாரிப் போட்டது. இப்படி வந்ததே, ஏன் என்று கேட்டு, முழு ரிப்போர்ட்டை வாங்கி வைத்திருக்கிறேன்..............

திரு. அ. ரகுமான்கான் ; மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதை என்னாலே புரிந்து கொள்ள முடிகிறது. பத்திரிக்கைகளில் வந்த செய்திகளை ஆதாரமாக வைத்து அவர் பேசியதைத் தாங்கள் அனுமதித்தது குறித்து எனக்கொன்றும் வருத்தம் இல்லை. தாராளமாக அதை ஏற்றுக்கொள்கிறேன். அந்தத் தலைவர் சொல்லிய குற்றச்சாட்டு என்ன என்பதைச் சொல்லிவிட்டு, அதன் அடிப்படையில், பழனி நகராட்சி வருமானம் தொடர்ந்து எவ்வளவு என்கிற விவரத்தையும், அரசாங்கத்தின் சார்பாக அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட் என்று வைப்பார்கள், அதையும் டேபிளிலே வைத்து, விவாதத்தை துவக்கலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் சொல்வதை முழுவதும் கேட்டிருந்தால், அவரே எழுந்திருக்க மாட்டார்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அந்தப் பேச்சை படித்துச் சொன்னால், என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று எங்களுக்கும் தெரியும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : சபாநாயகர் ஒருவர் இருக்கிறார் என்று அருமை அண்ணன் கோவை இராமநாதன் அவர்கள் நினைவு படுத்தியதற்கு நன்றி. ஆனால், சபாநாயகர் ஒருவரை உட்கார வைத்துவிட்டு, வேறு ஒருவரை வைத்து, சபை நடந்த காலமும் உண்டு. அதையும் மறந்து விடக் கூடாது. (குறுக்கீடுகள்).

(பிற்பகல் 2–10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எனக்கு கொஞ்சம் காது கேட்காதுதான்; ஆனால் கண் பார்வை நன்றாக இருக்கிறது; தங்களுடைய அனுமதியோடு இந்த பத்திரிகைச் செய்தியைப் படிக்கிறேன். (குறுக்கீடு) எந்த பத்திரிகை, என்ன செய்தி என்று கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் அதை இங்கே கொண்டுவந்திருக்கிறேன். இது முரசொலி பத்திரிகை-- வெளியிட்ட தேதி சென்னை 12— 4— 1986 சமீபக்கில் வெளியிட்ட செய்திதான். அதில் '' இதற்குப் பெயர் ஆட்சியா ?



1986 ஏப்ரல் 16] [திரு. ப. உ. சண்முகம்]

இப்படிப்பட்ட சர்க்கார், 10 ஆண்டு காலமாக ஊழல் நடத்துபவர்களின் உள்ளாட்சி மன்ற ஆட்சி இருக்கிறது. இதை பழனி நகரத்தில் நகராட்சிக் கடைகள் கடந்த ஆண்டு 2,60,000 ரூபாய்க்கு ஏலம் போனது இந்த ஆண்டு ஏறத்தாழ 15 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஏலம் போயிருக்கிறது. இவ்வளவு ஊழல் அந்த காலத்தில் நடந்திருக்கிறது '' என்று செய்தி போட்டிருக்கிறார்கள். இதைத்தான் நான் குறிப்பிட்டேன். (குறுக்கீடு). சென்ற ஆண்டு 2 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது இந்த ஆண்டு 15 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போயிருக்கிறது என்று போட்டிருக்கிறார்கள். அதுகூட தவறு, 16 இலட்சம் ரூபாய்க்கு போயிருக்கிறது. ஆக, இந்த ஆண்டு 16 இலட்சம் ரூபாய் வருமானம் வந்திருக்கிறது; இல்லை என்று சொல்லவில்லை.

இதிலே வேடிக்கை என்னவென்றால், 121 கடைகள் இப்போதுதான் கட்டப்பட்டு, இந்த ஆண்டில்தான் ஏலம் விடப்பட்டிருக்கின்றன. போன ஆண்டு இவ்வளவு கடைகள் இல்லையே! போன ஆண்டும் இவ்வளவு கடைகள் இருந்து, ஏலம் விடப்பட்டிருந்தால், ஏறத்தாழ இந்த அளவுக்கு தொகை வந்திருக்கும். கடையே இல்லை; ஏலம் எப்படி வரும் ? இதைச் சொல்லி, எங்களைப் பார்த்து கொள்ளையடித்தோம். லஞ்சம் வாங்கினோம் என்று சொல்வது பெருந்தன்மையாகாது. என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டால், மக்கள் எவ்வளவு காலம் நம்பப் போகிறார்கள் என்பதை நாம் பார்ப்போம். (திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்— குறுக்கீடு) உங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையே. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது கேட்க வேண்டுமென்றால் இறுதியில் கேட்கலாம். இப்போது எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கோபப்படுவதற்கு ஒன்றும் இல்லை. நான் இன்னொரு செய்தியையும் சொல்லப்போனால் ஆத்திரப்படுவார்கள். சொல்லத்தான் போகிறேன். கோபப்படக்கூடாது. நேரமும் ஆகிக் கொண்டிருக்கிறது ; அதையும் பார்த்துக்கொண்டு தான் சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதால் சொல்கிறேன்.

அதைப் போலவே இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். சேலம் நகரில் கடைகள் மூலம் நகராட்சிக்கு கிடைத்த வருமானம்— எழுத்து சரியாகத் தெரியவில்லை., ஒரு நகர மன்றத் தலைவரின் பெயரைச் சொல்லி— 35 இலட்சம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றிய முழு விவரத்தையும் நான் வாங்கி வைத்திருக்கிறேன். சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் முழு விவரத்தையும்

தந்திருக்கிறார்; அதையும் ரிக்கார்டாக வைத்திருக்கிறேன். வேண்டுமென்றால் அவைத் தலைவரிடம் தந்துவிடுகிறேன். சேலம் நகர மன்ற ஆணையர் அறிக்கை இதில் இருக்கிறது. யாருக்கு சந்தேகம் என்றாலும் தங்கள் அலுவலகத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு ஒரு உத்தரவு போட்டார்கள். கடைகள் எல்லாம் வைத்திருப் பவர்கள் 30 சதவீதம் அதிகமாக வாடகை கொடுத்துவிட்டு 31—3—1986 வரையில் வைத்திருக்கலாம். 1–4–1986-க்குப் பிறகு அத்தனை நகராட்சிக் கடைகளும் ஏலத்தில் விடப்படும். பின்னால் புதுப்பிக்க முடியாது. ஏலத்தில் விட வேண்டுமென்று, எழுதிவிட்டு, பின்னால், தொடர்ந்து அவர்களே எழுதி இருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு ஆண்டு 15 சதவீதம் கூடுதலாக வாடகையை உயர்த்தி, இரண்டு ஆண்டுகள் கொடுக்க வேண்டும். இரண்டு தடவைகளுக்குமேல் ஒருவர் ஏலம் எடுக்கக்கூடாது என்ற நிபந்தனையையும் விதித் திருக்கிறார்கள். அதையும் மீறி நீதி மன்றம் போய் தடை வாங்கியிருக்கிறார்கள் ; அது வேறு விவகாரம்.

சேலம் நகராட்சியைப் பொறுத்த மட்டில் என்ன நடந்திருக் கிறது என்று கேட்டால், முதல் உத்தரவு 21-ந் தேதி என்று நினைக்கிறேன். கடைகளை ஏலத்திற்கு விடலாம் என்று நகர மன்றத் தலைவர் குறிப்பு எழுதியிருக்கிறார். அவரே 31–ந் தேதி வேறொடு குறிப்பை எழுதியிருக்கிறார். ஏலம் விட்டால் ஏற்கனவே இருக்கிற கடைக்காரர்கள் குடும்பங்கள் கெட்டுவிடும், அழிந்து விடும். எனவே ஏலத்திற்கு விடுவதைவிட நாம் நிர்ணயிக்கிற தொகைக்கு அவர்களுக்கு விட்டுவிடலாம் என்று ஒரு குறிப்பு எழுதி, அவராகவே அந்தக் கடைக்காரர் களிடம் சென்று, அவர்களிடம் ஒரு ரேட் பேசி— தவறு செய்தார் என்று சொல்லவில்லை. யாரும் குறுக்கிட வேண்டிய அவசியம் இல்லை— அதற்கு ஒத்துக்கொள்கிறோம். என்று எழுதிக் கொடுங்கள் என்று கேட்டு, எழுதி வாங்கியிருக்கிறார். பழைய பாக்கியோடு புதிய தொகையையும் வசூல் செய்து, 8 இலட்சம் ரூபாய் வங்கியில் போட்டிருக்கிறார்.

ஆனால் நகரமன்ற ஆணையர் என்ன எழுதியிருக்கிறார் என்றால், இப்படி நான் நேரடியாக சென்று தனிப்பட்டவர் களிடம் ரேட் பேசி, வாங்குவது முறையல்ல. அரசு உத்தரவுப்படி பொது ஏலம் தான் விட வேண்டுமென்று ஆணையர் குறிப்பு எழுதியிருக்கிறார்.

அதுவும் இருக்கிறது. வேண்டுமென்றால் அதைத் தங்களுக்குத் தருகிறேன். ஆங்காங்கு இருப்பவர்கள் யாருக்காவது சந்தேகம் இருந்தால் படித்துப் பார்த்துக்கொள்ளலாம். நகராட்சி மன்ற ஆணையரின் அறிக்கையைக் கையிலே வைத்திருக்கிறேன்.



நான் கேட்கிறேன். இந்தச் சாதாரண சண்முகமோ அல்லது பக்கத்திலே இருக்கிற காளிமுத்துவோ இதைச் செய்திருந்தால் எவ்வளவு பெரிய குற்றச்சாட்டு வந்திருக்கும் ? எப்படி நீங்கள் நேரடியாகப் போய்ப் பேசலாம் ; ஏலத்திற்கு விடுவதை விட்டுவிட்டு, நேரடியாகப் போய், பேசி என்ன கையூட்டைப் பெற்றீர்கள் என்று கேட்டிருப்பார்கள். நான் அவசரப்பட வில்லை. நடந்திருக்கிறது. தவறு நடந்திருக்கிறது. இதை விட்டுவிட்டு எங்களைப் பார்த்துச் சொல்கிறார்கள், 35 இலட்சம் ரூபாய் சேலம் நகராட்சிக்கு வந்திருக்கிறது. இடையிலே பார்த்தீர்களா எவ்வளவோ பணம் கையூட்டாகப் பெற்றார்கள் என்று எங்களைப் பார்த்துக் கேட்கிறார்கள்.

நான் ஏன் இதைச் சொல்ல வந்தேன் என்று கேட்டால் நகராட்சிக்குப் புதிதாக வந்த தலைவர்கள் வருமானத்தைப் பெருக்குவதில் தவறு இல்லை. பெருக்க வேண்டியதுதான். அதில் எந்தத் தவறும் இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. அப்படி வருமானத்தைப் பெருக்குகிற அதே நேரத்தில் ஆட்சியிலே இருக்கின்ற அமைச்சர்கள் ஏதோ கொள்ளை அடித்துக்கொண்டிருப்பது போலவும், நகராட்சி மன்றத்திற்கும், ஊராட்சி மன்றத்திற்கும், அமைச்சருக்கும் ஏதோ தொடர்பு வைத்துக்கொண்டு, அன்றாடம் பணம் வாங்கிக்கொண்டு இருப்பது போலவும் கற்பனையை வரவழைத்துக்கொண்டு, அப்படி தங்களுக்குள் கற்பனையை வரவழைத்துக்கொள்வது மட்டு மல்லாமல் மக்களையும் தங்களுக்கு இருக்கிற சொல் திறமையின் காரணமாக நம்ப வைக்க முடியும் என்று நம்புவது முறையல்ல. ஆனால் நெடுநாட்கள் இது நடக்காது. என்றாவது ஒரு நாள் உண்மை உலகுக்குத் தெரிந்தே தீரும். உண்மை வெளி வந்தே தீரும் என்று நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பேசி முடிக்கப் போகிறார். எனவே அவர் பேசி முடித்ததற்குப் பிறகு ஏதேனும் கேட்க வேண்டி இருந்தால் கேட்கலாம். (குறுக் கீடுகள்).

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியில் கடைகளை ஏலம் விடுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் விருதுநகர் நகராட்சியில் உள்ள கழிப்பறை முன்பு 17,000 ரூபாய்க்குச் சென்றது. இந்த வருஷம் 60 ஆயிரம் ரூபாய்க்குச் சென்றிருக்கிறது. அதே போல் நகராட்சியில் உள்ள சைக்கிள் ஸ்டான்ட் 20,000 ரூபாய்க்கு முன்பு சென்றது. இப்போது 99,000 ரூபாய்க்குச் சென்றிருக்கிறது. அப்படி என்றால் அதற்குக் காரணம் என்ன என்பதை நீங்கள்தான் தெரிந்து கொள்ள வேண்டும். ...............

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதாக் கட்சித் தலைவர் திடீரென்று ஒரு செய்தியைச் சொன்னார்கள். இந்தத் தகவலை ஏற்கெனவே எனக்குத் தெரிவித்திருந்தால் விசாரித்துத் தகவல் கொடுத்திருக்க முடியும். இப்போதும் நான் விசாரிப்பேன். தவறு இருக்குமேயானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். 17,000 ரூபாய் என்றிருந்தது 60,000 ரூபாய் என்ற அளவுக்கு ஏறி இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி ஒன்றும் ஏறி இருக்க முடியாது. எப்படி அவ்வளவு தூரம் போய் இருக்கிறது என்று தெரியவில்லை.

Thiru A. RAHMANKHAN: Mr. Speaker Sir, my learned friend Thiru A. S. A. Arumugam has pointed out some allegations but our Hon. Minister has said that he will make an enquiry and after that, he will explain the matter on the floor of the House. At the same time, நான் தங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டிற்கு விசாரித்துச் சொல்கிறேன் என்று சொன்னது போல், இது தொடர்பாகவும் விசாரித்துச் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டும்.

* * *

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்குப் புறம்பான செய்திகளைத் தூக்கி ஆட்சியின் மீது போடுகிற காரணத்தால்தான் நான் இதை எல்லாம் சொல்லவேண்டிவந்ததே தவிர, வேறல்ல.

ஜனதா கட்சி தலைவர் சொன்னாரே அதற்கு என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்கள். நான் இங்கே சொல்ல விரும்புவது, ஜனதா கட்சித் தலைவர் சொன்னது என்ன என்ற விவரம் என்னிடத்திலே திடீர் என்று எழுப்பியதால் கையிலே இல்லாததனால் தான் சொல்லவில்லையே தவிர...... (குறுக்கீடு)

(பிற்பகல் 2-20)

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது, * * *

ஆகவே அதை அவைக் குறிப்பிலே இருந்து எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, * * (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சேலத்திலும், பழனியிலும் நடைபெற்றிருக்கின்ற சில உண்மைகளை, சில குறைபாடுகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நகராட்சி ஆணையாளர்கள் வழங்கியிருக்கக்கூடிய அந்தக் கருத்துக்களை வைத்துக் கொண்டு, அவை பற்றி உங்களுடைய கட்சியின் தலைவர் வெளியிலே பேசியதை மறுத்து பேசுகிற வகையிலே சில உண்மை நிலவரங்களை இங்கே எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் * *

திரு. அ. ரகுமான்கான் : * * (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சி பற்றி பேசிய விவாதங்கள் விவரங்கள் எல்லாம், திரு. துரை கோவிந்தராசன் பேசியது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் வேறு சில விஷயங்கள் குறித்து முக்கியமான அறிவிப்புகள் செய்ய வேண்டியிருக்கிறது. அதைச் செய்து விடுகிறேன்.

தனியார் தெருக்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் கேட்டார்கள். ஏற்கெனவே இந்தச்சட்ட மன்றத்திலே நான் அறிவித்திருப்பது போல, தனியார் தெருக்களை அரசு ஏற்கும், மாநகராட்சியே ஏற்று முழு செலவும் செய்யும். ஆகின்ற செலவை அந்த மக்களிடத்திலே இருந்து வரியோடு சேர்த்து வசூலிக்கப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்புகளைப் பற்றி சொன்னார்கள். பல்புகள் சரியாக எரியவில்லை என்றும் சொன்னார்கள். (கூச்சல், குழப்பம், குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் அமைதியாக அமருங்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் மட்டும் தான் இப்போது பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1986 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மின்சார பல்புகளைப் போடுவதைப் பற்றிச் சொன்னார்கள். அந்த பல்புகளைப் போடுகின்ற உரிமை ஊராட்சி ஒன்றியத்திடம், நகராட்சி மன்றத்திடம், ஊராட்சிகளிடமும் ஒப்படைக்கப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் சொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தெரிவித்தும் கொள்கிறேன். அவர்களிடம் அது ஒப்படைக்கப்படும்.

மாநகராட்சி தேர்தலை நடத்துவதற்கு ஏன் பயப்படுகிறீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் அதைப் பற்றி பயப்படவில்லை. அதைப் பற்றி கவலைப்படவும் இல்லை. தாராளமாக நடத்தலாம்.

ஆனால், அரசு முடிவு செய்திருப்பது என்னவென்றால், ஒட்டுமொத்தமாக மாநகராட்சிக்கு ஒரு சட்டம் கொண்டு வரலாம் என்றும், மற்ற மாநகராட்சிகளில் என்ன சட்டம் இருக்கிறது என்பதையெல்லாம் பரிசீலித்து ஒரு சட்டம் கொண்டு வரலாம் என்றும் அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. இப்போது இருக்கின்ற சட்டத்தை வொயிட் பேப்பர் டிஸ்கஷன் என்ற முறையில் இந்த மன்றத்திலேயே வைத்து, மன்றத்தினுடைய செலக்ட் கமிட்டிக்கு அந்தச் சட்டத்தை அனுப்பி, புதியதாக என்னென்ன மாற்றங்கள் செய்யலாம், என்னென்ன திருத்தங்கள் கொண்டு வரலாம் என்பதைப் பற்றி யோசித்து, தீர ஒரு முடிவிற்கு வந்ததற்குப் பிறகு அந்த மாநகராட்சி சட்டத்தைக் கொண்டு வந்து, அது அவையிலே நிறைவேறிய பிறகு, மாநகராட்சிகளுக்கு தேர்தலை வைக்கலாம் என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மன்ற உறுப்பினர்கள் இவ்வளவு ஆர்வம் காட்டி உள்ளாட்சி மானியத்தின் மீது விவாதத்தில் கலந்துக் கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெறவேண்டும் என்று தங்கள் மூலமாக கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஒரு முக்கியமான விஷயத்தை இந்த மன்றத்திலே தெரிவித்தார்கள். அதனுடைய விளக்கத்திற்காக கேட்க விரும்புகிறேன் வேறு ஒன்றும் இல்லை. அதாவது துணை பேரவைத் தலைவருடைய தொகுதியில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற ஒன்றியத் தலைவரோ



1986 ஏப்ரல் 16] [திரு. மு. இராமநாதன்]

அல்லது நகராட்சி மன்றத் தலைவரோ அல்லது ஒன்றிய பெருந் தலைவரோ அல்லது ஊராட்சி ஒன்றியத் தலைவரோ, யாரோ ஒருவர், குடிதண்ணீரை தடுத்து விட்டார் என்று ஒரு குற்றாச் சாட்டு சொல்லி, அது சம்பந்தமாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இந்த மன்றத்திலே வரப்போகிறது என்று அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே குறிப்பிட்டார்கள். பேரவைத் தலைவர் ஆகிய தாங்கள் அனுமதித்ததன் பேரில் தான் கால் அட்டென்ஷன், அட்ஜார்ன்மென்ட் மோஷன் எதுவாக இருந்தாலும் அவைக்கு அறிவிக்கப்படுமே தவிர, அமைச்சர்கள் அவற்றை அறிவிப்பது சரியாகாது. ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த அறிவிப்பை தெரிவித்திருப்பது பேரவை விதிகளுக்கு முரணாகாதா என்று அறிய விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் இருக்கும் நிலைமையைச் சொல்கிறேன். நீங்கள் நோட்டீஸ் கொடுக்கிறீர்கள். நான் பார்த்து அது மாண்புமிகு அமைச்சருக்கு தான் போகிறது. (குறுக்கீடுகள்).

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அது வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லக் கூடாது. நீங்கள் அனுமதி கொடுக்கிறீர்களா இல்லையா என்பது அவருக்கு எப்படி தெரியும் ? (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். நடைமுறையிலே உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கிற பொழுது தாங்கள் அனுமதிக்கலாம் என்று அதை அனுமதிக்கின்ற உத்தரவை வழங்கிய பிறகு தான் துறைக்கு அனுப்பி, துறை தன்னுடைய பதிலை நம்முடைய செயலகத்திற்கு சமர்ப்பிக்கிறது. ஆகவே, இதிலே எந்தத் தவறும் இல்லை. தாங்கள் அனுமதித்ததற்குப் பிறகு தான் நடந்திருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்தீர்களா அல்லது துணைத் தலைவர் அவர்கள் அனுமதித்து விட்டார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைகள் எல்லாம் என் மூலமாகத் தான் போகும். (குறுக்கீடுகள்) அனுமதிக்கப்பட்டிருக்கிறதா என்று செயலக ரெக்கார்டுகளைப் பார்த்துச் சொல்லுகிறேன். அதுவரையில் இந்த சப்ஜெக்ட் வேண்டாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திரு. ரகுமான்கான் அவர்களுக்கு சட்டத்திலேதான் கோபம் வருகிறதே தவிர, அதை பிரச்சினையை மூடிமறைக்க பயன்படுத்தக் கூடாது. குழந்தைகளுக்கு தண்ணீர் கொடுப்பதைத் தடுப்பது பாவம். அதை அவர்கள் தலைவரிடம் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த கால் அட்டென் ஷன் நோட்டீஸ் அட்மிட் ஆகி நோட்டீஸ் கொடுத்து போயிருக் கிறது. ஆகவே அதை அமைச்சர் அவர்கள் ரெபர் செய்து சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமானால் பைல் இருக்கிறது. பார்த்துக் கொள்ளலாம்.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வது, சத்துணவு மையங் களைப் பார்வையிடுவது சம்பந்தமாக ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், நகராட்சி தலைவர் கள் ஏதோ ஒருசில இடத்தில் பார்வையிட்டதின் ஏற்பட்ட கோளாறினால் ஒட்டு மொத்தமாக நாம் நிராகரித்து விடக் கூடாது. மக்கள் வாக்களித்து வெற்றி பெற்ற பிரதிநிதிகள் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் பார்வையிடுவது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும். அப்படியிருந்தால் தான் நாம் ஜனநாயகத்தை மதிப்ப தாகும். சட்டமன்ற உறுப்பினர்கள் பார்க்கலாம். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள் பார்க்கக் கூடாது என்று சொல்வது என்பது சரியாகாது. அந்த முறையில் வித்தியாசமாக பார்க்கக் கூடாது என்று சொல்லி அமைச்சர் அவர்கள் இதனை மறு பரிசீலனை செய்து அவர்களும் பார்ப்பதற்கு அனுமதியளிக்க வேண்டும். அதனைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற சட்டத்தின்படி அவர்கள் பார்வையிட முடியாது. மேற்கொண்டு எந்த விளக்கமும் இப்போது என்னால் சொல்ல முடியாது.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்புமிக்க சென்னை மாநகரத்தின் மேம்பாட்டிற்காக தனியார் தெருக்களை அங்கீகாரம் செய்து பணி துவக்கப்பட எடுத்த நடவடிக்கைக்கு நன்றி. நான் தங்களிடம் கேட்டபோது மாநகராட்சியில் தேர்தல் நடத்த அனைத்து வாக்காளர்களையும் போட்டோ எடுக்க வேண்டுமென சொன்னேன். அதுபற்றி எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே, அந்த வாக்காளர் களுக்கு அடையாள அட்டை வழங்குகிற கொள்கை குறிப்பு அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இப்போது சட்டத்தை திருத்த வேண்டுமென்ற முடிவிலே இருக் கிறோம். சட்டத்தை திருத்துகிறபோது அதுபற்றி பரிசீலிக்க லாம்.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலை ஒட்டி சிறு விளக்கத்தைப் பெற முன்பே எழுந் தேன். அதற்குள் என்னை அனுமதிக்காமல் உட்கார வைத்து



விட்டீர்கள். ஊராட்சி, நகராட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில் சட்டமன்ற உறுப்பினர்கள் உரிமைகளைப் பற்றி தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதேபோல மாகநராட்சி மன்றத்திலே எங்களுடைய உரிமைகள் என்னவென்று கேட்ட பொழுது, அறைகள் ஒதுக்கப்படுமா என்றெல்லாம் கேட்ட கேள்விகளுக்கு, கவுன்சிலர்களுக்கு தான் இடம் இருக்கிறது. உங்களுக்கு இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் என்று மூன்று கட்சியைச் சேர்ந் தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இந்த மூன்று கட்சி உறுப்பினர் களுக்கும் கட்சி அலுவலகம் வைத்தால் நாங்கள் எங்கள் பணி களைச் செய்ய வசதியாக இருக்கும்.

(பிற்பகல் 2.30)

பேரவைத் தலைவர் அவர்களே, அதோடு இன்னொன்று. யார் தூய்மையானவர்கள் என்பதைப் பற்றி எல்லாம் சூடாக இங்கே விவாதித்தார்கள். பெரியவர் மரியாதைக்குரிய மாண்பு மிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய பாடல் ஒன்று என் நினைவிற்கு வருகிறது (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் வேண்டாம், உட்காருங்கள்.

திரு. கி. ராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, ராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து நன்கொடை வழங்கியது பற்றிய விவரம் இல்லை என்று சொன்னார்கள். அதாவது இன்று ராஜ பாளையத்தில் நடக்கும் கவுன்சில் கூட்டத்தில் இந்த இரண்டு பொருள்களும் அங்கீகரிப்பதற்காக வைக்கப்பட்டு இருக்கிறது. அதை நான் படிக்கிறேன். "கிராம நல இயக்குநரின் நேர்முகக் கடித எண். 117931/85/எச்., நாள் 24—12—1985-ன்படி அகில இந்திய சுற்றுலா பொருட்கண் காட்சிக்கு நன்கொடையாக அந்த ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறோம். இதன்படி, 13-வது அகில இந்திய சுற்றுலாப் பொருட் கண்காட்சிக்கு முன் அனுமதியின் பேரில் 15 ஆயிரம் ரூபாய் வழங்குவதை அங்கீகரித்து அனுமதித்து, மன்றம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது விளக்கம் வேண் டும் என்றால் தான் இப்போது கேட்க முடியும். கடிதம் ஏதாவது இருந்தால் அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவா அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஊராட்சி ஒன்றியத்தினுடைய அஜெண்டாவைப் படிக்கிறார் என்று நினைக்கிறேன். அதைப்

[திரு. ப. உ. சண்முகம்] [1986 ஏப்ரல் 16

பற்றிய விவரம் என் கையிலே இல்லை. அதைத்தான் நான் சொன்னேன், அப்படி இருக்குமானால் அதைப் பற்றி விசாரிக்கிறேன் என்று நான் சொன்னேன். ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதிநிலை சரியாக இல்லாமல் இருந்தால், அப்படிக் கொடுப்பது தவறு என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். சரியாக இல்லாமல் இருந்து கொடுத்திருப்பார்களானால், அரசு அந்த நிறுத்தும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியில் இருக்கிற தனியார் தெருக்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதைப்போன்று தனியார் தெருக்கள் நகராட்சிப் பகுதியில் இருந்தால், அதையும் எடுத்துக் கொள்கிற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதைப்பற்றி விளக்க வேண்டும் என்று தான் நான் நினைத்தேன். இப்போது நான் சொல்லிவிடுகிறேன். ரியல் எஸ்டேட்காரர்கள் பிளாட்டுக்களைப் போட்டு விற்றுவிட்டு, அதற்கான பாதை அமைக்கவோ, விளக்குப் போடவோ , குழாய்கள் போடுவதற்கான பணத்தை வசூலிக்காமலோ, அல்லது வசூலித்தும் அதைக் கட்டாமல் போய்விடுகிறார்கள். அந்தக் குற்றங்களை அரசாங்கம் ஊக்குவிப்பது போல் இந்தச் சட்டம் இருந்துவிடாது. இப்போது இருப்பதோடு சரி. இனிமேல் அப்படி யாராவது செய்தால், அதைப்பற்றி கடுமையாக தண்டனை கொடுப்பதற்கு சட்டம் இயற்றலாம் என்று அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநகராட்சியிலே இடம் ஒதுக்க முடியுமா என்று கேட்டார்கள். ஏற்கனவே பேரவைத் தலைவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கி இருக்கிறார்கள். இதைவிட்டு அங்கே போய் ஒரு இடத்தைக் கேட்பது அவ்வளவு சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எஸ். என். இராமசாமி, மற்றும் கோ. வீரய்யன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டு தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் கு. சுப்பராயன், மற்றும்எஸ். இராசாராமன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.



1986 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,77,32,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (17—4—1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

66. தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்:

93. கோரிக்கை எண். 28—சமுதாய நலவளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

94. கோரிக்கை எண். 28—நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

95. சமுதாய வளர்ச்சி கோரிக்கையைச் சார்ந்த செயலாக்க வரவு செலவுத் திட்டம், 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

96. பேரூராட்சி நிர்வாகம் சார்ந்த செயலாக்க வரவு செலவு திட்டம், 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

97. நகராட்சி நிர்வாகமும், மாநகராட்சிகளும் பற்றிய செயல்திறன் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

98. 'தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்' என்கிற புத்தகம்—1985–86 (தமிழ், ஆங்கிலம்).

99. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பற்றிய சிறு குறிப்பு 31–12–1985-ல் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

100. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

101. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் பற்றிய குறிப்பு, 1985–86 (தமிழ், ஆங்கிலம்).

102. உழவர்களின் உற்ற நண்பன் 'டான் பெட்—தமிழக உழவர்க்கு ஒரு கூட்டுறவு நிறுவனம்' என்கிற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).



இணைப்பு I.

(208ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 476 (3163) களின் விடையைக் காண்க.)

(அ) செயற்கை முறையில் முத்து தயாரிக்கும் திட்டம் எதுவும் தமிழ்நாடு அரசிடம் இல்லை. ஆனால் தற்போது தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும், தூத்துக்குடியில் உள்ள 'ஸ்பிக்' நிறுவனமும் இணைந்து, தமிழ்நாடு முத்து நிறுவனம் என்ற ஒரு கூட்டு நிறுவனத்தை 7–7–1983-ல் நிறுவி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தெற்கு மனப்பாட்டிலிருந்து வடக்கு வைப்பார் வரையிலுள்ள ஆளித்திடலில் செயற்கை முறையில் முத்து வளர்ப்பு திட்டமொன்றை மேற்கொண்டுள்ளன.

(ஆ) இத்திட்டத்திற்காக ரூ. 69 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ரூ. 10 இலட்சம் ஸ்பிக் நிறுவன மூலதனத்திற்காகவும், ரூ. 10 இலட்சம் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலதனத்திற்காகவும் செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) மறு முதலீட்டுத் திட்டத்தின்கீழ் (Re-finance Scheme) கனரா வங்கி மூலம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்குபங்குத் தொகையாக ரூ. 10 இலட்சம் முதலீடாக தமிழக அரசு கொடுத்து உதவியுள்ளது. தற்போதைய திட்டப்படி 1986 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள 60,000 கேரட் முத்துக்கள் தயாரிக்கப்படும். ஒவ்வொரு வருடமும் உற்பத்தித் திறனைகூட்டி 1989 ஆம் வருடம் முடிய ஆறு இலட்சம் கேரட் வரை உற்பத்தி செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை பெற்றுத்தர இயலும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இணைப்பு II.

(220ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

சட்ட மன்றப் பேரவை விதி 112-ன்கீழ் திருத்த அறிக்கை.

7–4–1986 அன்று 'நீதி நிர்வாகம்' என்ற மானியக் கோரிக்கை பற்றி பேசியபொழுது பேசிய—

''மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் பேசும் பொழுது'' என்று தொடங்கும் பகுதியிலிருந்து, 'அட்வோகேட் வெல் பேர் ஆக்ட்' என்று தொடங்கும் பத்திக்கு முன்பு உள்ள பத்தி வரையில் உள்ள எண் உரை, கீழ்க்கண்டவாறு திருத்திப் படிக்கப்பட வேண்டும் :—

''மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் பேசும் பொழுது ஒன்றைச் சொன்னார்கள். நீதிபதிகளுடைய தீர்ப்புகள் காலத்திற்கேற்ற கருத்துக்களே, சமுதாய மாற்றத்தை மனதில்

[1986 ஏப்ரல் 16

கொண்டு, குறிப்பாக, அடிமட்டத்தில் இருக்கிற மக்களின் நலன் கருதி இருக்க வேண்டுமென்ற கருத்தை அவர்களும் சொன்னார்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களும் சொன்னார்கள். அந்தக் கருத்தோடு இந்த அரசின் கொள்கையும் இணைகிறது. அதைப் பொறுத்த வரைக்கும் மைய அரசிலே, பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில், இந்தக் கருத்தினை விளக்கி, மாநில அரசின் சார்பிலே எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

நீதித் துறைகளைப் பொறுத்த வரையில் ஆங்காங்கு தவறுகள் நடைபெறுகிறபொழுது தட்டிக் கேட்கின்ற உரிமை மாநில அரசுக்கு இல்லையா என்று பல உறுப்பினர்கள் கேட்டார்கள். நீதித் துறையிலே தவறுகளே இல்லையென்று நான் சொல்லவில்லை. தவறுகள் ஆங்காங்கு நடைபெறலாம் ; ஆகவே, அதைப் பற்றிய தகவல்கள் எல்லாம் வழக்கறிஞர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்தும் அரசுக்கு அவ்வப்போது வருகின்றன. ஆனால், தற்போது இருக்கிற நிலைமைகளைப் பொறுத்த வரைக்கும் உயர்நீதிமன்றத்திற்கு அவற்றை அனுப்பி, கவனியுங்கள் என்று சொல்வதைத் தவிர். வேறு அதிகாரம் மாநில அரசிடம் இல்லை.

சபார்டினேட் ஜுடிஷியரி என்ற நிலையில் கூட அவர்கள் பணியில் அமர்த்தப்பட்டதற்குப் பிறகு the administration of the subordinate judiciary actually vests only with the High Court அதற்கு Judicial vigilance என்று இருக்கிறது. அதற்கு காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அனுப்பப்படுகிறார்கள். They also come under the direct administrative control of the High Court only. எனவே மாநில அரசைப் பொறுத்த வரையில் நேரடி நடவடிக்கை எதையும் எடுக்க முடியாத நிலையில், உயர்நீதிமன்றத்திற்கு அனுப்புகிறோம் ; நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கிறோம். நீதித்துறை, அரசியல் சட்டப்படி சுதந்திரத் தன்மை உடையதால், அரசால் இதற்குமேல் ஒன்றும் செய்ய முடியாது. ஏழை எளிய மக்கள் நிறைந்த இந்திய நாட்டில் அவர்கள் நலனைப் பேணியாக வேண்டும் ; அந்த வகையிலே கருத்துக்கள் அமைய வேண்டும் என்று மத்திய சட்ட அமைச்சர் அவர்கள் ஆலோசனை கேட்டார்கள். நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில் மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்கள் சொன்னதைப் போல அவர்களுடைய நடவடிக்கைகளை 'மானிட்டரி' செய்யக் கூடிய நடவடிக்கை மத்திய அரசில் கூட இல்லை என்ற முறையிலே நம்முடைய சட்டங்கள் இருக்கின்றன. டெல்லியில் 31–8–1985, 1–9–1985 நடந்த கூட்டத்தில் நீதித்துறையின் சுதந்திரத்தில் சிறிதும் தலையிடாமல், அதே நேரத்தில் நீதித் துறையை சீர்படுத்த என்னென்ன செய்ய வேண்டுமென்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அந்தக் கூட்டத்தில்—

"Decision for simplifying procedure (Civil and Criminal) in courts at all levels and to eliminate delay and red-tapism என்னும் பொருள் (Agenda item) பற்றி விவாதிக்கப்பட்டது.



1986 ஏப்ரல் 16]

அந்தப் பொருள்பற்றி நான் பேசியபொழுது நீதித் துறையில் பல மட்டங்களில் இருக்கின்ற (delay and red-tapism) ஆகியவைகளை நீக்க ஒருங்கிணைந்த செயல் திட்டங்களை மேற்கொள்வதற்கு உதவுகிற வகையில், 'Administrative control', உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களிடம் இருத்தல் நல்லது என்ற கருத்தைக் கூறினேன்.

அந்தக் கூட்டத்தில் 7-வது தீர்மானமாக கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது :—

"7. The provisions of the Civil and Criminai procedure Code need revision with a view to ensuriug speedy disposal of cases. The Chief Justice of India and the Union Law Minister will constitute a Working Group from amongst Chief Ministers and Chief Justices, with a view to advising the Judicial Reforms Commission, which is going to be set up by ihe Government of India in regard to these matters. நீதித் துறை சீரமைப்புக் குழு (Commission) என்று தனியாக அமைக்கப்படவில்லை. நீதித்துறை சீரமைப்பு பற்றி, ஆராய் ஒய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி திரு. டி. ஏ. தேசாய் அவர்கள் தலைமை வகிக்கும் லா கமிஷன் (Law Commission) உடைய பரிந்துரைக்கு மைய அரசால் அனுப்பப்பட்டுள்ளது.

The subject 'Judicial Reforms' has been referred to the Law Commission headed by Justice D. A. Desai, retired Judge of the Supreme Court, though resolution No. 7 refers to constitution of Judicial reforms Commission. 7-வது தீர்மானத்தில் முடிவு செய்யப்பட்ட செயற்பாட்டுக்குழு (Working group) இன்னும் அமைக்கப்படவில்லை. மானிடரிங் செல் என்று எதுவும் அந்தக் கூட்டத்திலோ, அதற்குப் பிறகோ உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்படவில்லை".

## இணைப்பு III.

(527ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

### 1. சமுதாய வளர்ச்சி.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உழலும் மக்கள் பத்து சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ளனர் என்பதை 1994-1995 ஆம் ஆண்டில் உறுதியோடு கூறத்தக்கவகையில், தனக்கென ஒரு தனி இலட்சியத்தைக் கொண்டது தான் " ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் " , தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஆறாவது திட்டத் தொடக்கத்தில் மொத்தம் 52.8 சதவிகித மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்தனர். ஆனால், 1984-85 ஆம் ஆண்டில்—அதாவது ஆறாவது திட்ட இறுதியில், இந்த சதவிகிதம் 39.6 ஆகக் குறைந்துவிட்டது. ஆறாவது திட்ட காலத்தில் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களை விரிவாகவும்,

விரைவாகவும், முனைப்புடனும் அரசு செயல்படுத்தியதன் விளைவே இது. 1989-90 ஆம் ஆண்டுக்குள்—அதாவது ஏழாவது திட்டத்தின் இறுதிக்குள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் சதவிகிதத்தை 23 ஆகக் குறைப்பது மட்டுமே நமது இலட்சியமல்ல. எட்டாவது திட்ட இறுதிக்குள் அதாவது 1994-95 ஆம் ஆண்டுக்குள் இந்த சதவிகிதத்தைப் பத்துக்கும் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதே நமது மாபெரும் இலட்சியம். இந்த இரு இலட்சியங்களை நிறைவேற்ற இந்த அரசும், அரசு அல்லாத சமூக நிறுவனங்களும் பல சவால்களைச் சந்தித்தாக வேண்டும். சமுதாயத்தின் பலதரப்பட்ட மக்கள் வாழ்வை அவர்களின் நிலைகளுக்கேற்ப பல்வேறு திட்டங்களின் மூலம்தான் அந்தச் சவால்களைச் சந்தித்தாக வேண்டும். சந்தித்து இலட்சியங்களை நிறைவேற்ற வேண்டும்.

நிலவும் வறுமையின் மீது இருமுனைத் தாக்குதல் நடத்தி அதை அறவே ஒழிப்பதுதான் நமது கொள்கை. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு சில பகுதியினர் வாழ்வில் நிலவும் வறுமையை ஒழிப்பது, எமது இருமுனை வறுமை ஒழிப்புப் போரில் முதல் போர்முனை, வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தில் ஊக்கம் காட்டி அதற்கு ஏற்ற திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றுவது, வறுமை ஒழிப்புப் போரின் இரண்டாவது போர்முனை, வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் முயற்சிக்கும் இடையில் உள்ள இணைப்பு இணையற்றதாக விளங்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறத் தேவையில்லை.

கிராமப்புறங்களில் தக்க வேலைவாய்ப்பு அளிக்கும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவை தொடர்ந்து நிறைவேற்றப்படும். சீரிய முறையில் திட்டமிடப்பட்டு, குறைபாடுகள் ஏற்படா வண்ணம் கண்காணிக்கப்பட்டு, முனைப்புடன் சிறந்த முறையில் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இத்திட்டங்களினால் பயன் பெறுவோர், அரசு அளிக்கும் உதவியை முழுமையாகப் பயன்படுத்தி வறுமையை உதறி வளமையை அடைய வழி ஏற்படுத்திக் கொடுக்கப்படும். தனி மனிதர்களின் வாழ்வு மேம்பாட்டிற்கென இப்போது அமைந்துள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு இனி ஆழத்தோடு மட்டுமின்றி சற்று அகலமாகவும் அடித்தளமிடப்படும். அதாவது தனி மனித கோட்பாட்டோடு, தேவைப்படும்போதெல்லாம், பல பகுதிகளுக்கு அல்லது பலருக்கு மொத்தமாக உதவி அளிக்கப்பட்டு, இத்திட்டத்தின் திறமை மேம்படுத்தப்படும். வேளாண்மை மற்றும் கிராமப்புற முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையிலும் அதன் மூலம் சிறுதொழில்



மேம்பாடும் ஏற்படும் வகையில், இத்திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படும். வேளாண்மை மற்றும் விவசாய வேலை அல்லாத இதர வேளாண்மை தொடர்பான கிராமப்புற தொழில்களையும் முன்னேற்றித்தான் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்கியாகவேண்டும். வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டங்களின் முழுப்பலனையும் பெற வேண்டுமென்றால், மக்களின் அறிவுத் திறமையைக் குறிப்பிடத் தக்க வகையில் முன்னேற்ற சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வாழ்க்கைக்கு, கல்வி உதவுகின்ற வகையிலும், புதுப்புது அறிவுத்திறமைகளை மக்கள் அடைகின்ற வகையிலும் அந்த முயற்சிகள் அமைய வேண்டும்.

இவ்வாறாக உணவு, வேலைவாய்ப்பு, உற்பத்திப் பெருக்கம் ஆகிய மூன்றும்தான் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன. இத்தகைய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்றால் வேளாண்மையை அதிகரித்தல், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், உற்பத்தித் திறனையும், உற்பத்தி செய்யப்படுபவைகளின் தரத்தினையும் மேம்படுத்துதல், தொழில்களில் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், குறைந்த முதலீடும் நிறைந்த உழைப்பும், தேவையான தொழில்களை மேம்படுத்துதல், முதலீடு செய்யும்போது, அதிகமாகத் தேவைப்படும் தொழில் இனங்களுக்கு முன்னுரிமை அளித்தல், வாழ்க்கை தரத்தை உயர்த்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவைகளை நாம் கவனத்தில்—கருத்தில்—கொள்ள வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், இனிவரும் ஆண்டுகளில் ஊரக வளர்ச்சித் துறையின் மாபெரும் கொள்கைகளும் குறிக்கோள்களும் கீழ்க்கண்டவாறு அமையும் :—

(அ) கிராமப்புறங்களின் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களைத் தேர்ந்தெடுத்து அரசு மான்யம் மற்றும் வங்கிக் கடன்களோடு இணைந்த உதவிகளை மொத்தமாக அளித்து—வறுமைக் கோடுகளை அழித்து—அக்கோடுகளின் கேடுகளில் இருந்து விடுவித்தல்.

(ஆ) நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி, வேலை இல்லாதோர்க்கும், போதிய அளவு வேலை இல்லாதவர்க்கும் — ஆண்களுக்கு மட்டுமின்றி பெண்களுக்கும் போதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் — சமுதாயப் பணிகள் மூலம் ஏற்படுத்திக் கொடுத்தல்.

(இ) கிராம சமுதாய அமைப்பைப் பலப்படுத்தும் வகையில், நிரந்தரமான உறுதியான சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல், அதன் மூலம் கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தி, கிராமப்புற ஏழைகளின் வருவாயைச் சீராக உயர்த்துதல்.

[1986 ஏப்ரல் 16

(ஈ) மாற்று எரிபொருளைக் கண்டுபிடித்து அதை மேம்படுத்த இந்திய நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் முயற்சியான சாண எரிவாயு அமைப்புகளை தனிப்பட்ட இல்லங்களில் மட்டுமின்றி சமுதாயம் முழுவதும் பயன்படுத்தும் வகையில் சமுதாய எரிவாயு அமைப்புகளையும் புகையில்லா அடுப்புகளையும் நிறுவுதல்.

(உ) சிறுபாசன வசதிக்காக கிணறுகள் தோண்டுதல், தற்போதுள்ள கிணறுகளைப் பழுதுபார்த்தல், நீர் இறைக்கும் எந்திரங்கள் நிறுவுதல், மண்வள மேம்பாடு போன்றவற்றிற்கு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியத்தோடு கூடிய கடன் வசதி அளித்தல்.

(ஊ) இந்தியா முழுமையிலும் நிறைவேற்றப்படும் சமூகக் காடுகள் அமைக்கும் தீவிரத் திட்டத்தில் தமிழகத்தின் பங்காக— ஒவ்வொரு வட்டாரத்திலும் இயன்ற அளவு எண்ணற்ற ஹெக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகளை வளர்த்தல் — அதாவது, இயற்கை சூழலைப் பாதுகாத்தல், அது கெட்டு விடாதபடி சம நிலையில் வைத்திருத்தல் ஆகிய இரு நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் சமூகக் காடுகள் அமைத்தல். ஆகிய இவைகளே ஊரக வளர்ச்சித் துறையின் உன்னதக் குறிக்கோள்கள்.

வளர்ச்சி, சமத்துவம், சமுதாய நீதி, தன்னம்பிக்கை, தளராத திறமை, மற்றும் உற்பத்தித் திறன் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கொள்கைகளும் கோட்பாடுகளும் தொடர்ந்து இருக்கும். சமூக நீதியை நிலைநாட்ட மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இந்தக் கட்டுக்கோப்பிற்குள் இயங்கும். வேலைவாய்ப்பைப் பெருக்குவதிலும் வறுமையை ஒழிப்பதிலும் அதிக நாட்டம் கண்டிப்பாக காட்டப்பட வேண்டும். எனவே, உணவு தானிய உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம், வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவைகளையும்—குறிப்பாக உற்பத்தித் திறனை உயர்த்துகின்ற கொள்கைகளையும் கோட்பாடுகளையும் ஏழாவது திட்டம் வலியுறுத்த வேண்டும்.

## 2. சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் மற்றும் ஊராட்சி நிர்வாகம்.

நம் மாநிலத்தில் மொத்தம் 384 சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன. கல்ராயன்மலை வட்டாரத்தைத் தவிர மற்ற எல்லா வட்டாரங்களிலும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப்பட்டு விட்டன. நிருவாகத் திறமை மேம்பட்டு விளங்கவும், அலுவலகங்களில் ஆற்றல் அதிகரிக்கவும் வேண்டி, ஐந்து வட்டாரங்கள் 1985-86 ஆம் ஆண்டு பிரித்து அமைக்கப்பட்டன. ஒவ்வொன்றிலும் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமான மக்கட் தொகை கொண்ட திருப்பத்தூர், குளித்தலை, ஆண்டிப்பட்டி, பாலக்கோடு மற்றும் ஊத்தங்கரை ஆகியவைகளே அந்த ஐந்து வட்டாரங்கள். இவைகளை விடுத்து, இராஜபாளையம், தளி, கடலூர், உதகமண்டலம் ஆகிய வட்டாரங்கள் ஒவ்வொன்றும் ஒண்ணேகால் இலட்சத்திற்கு மேலான மக்கட் தொகையைக் கொண்டுள்ளன. இவைகளும் பிரிக்கப்பட வேண்டியவைகள். இவைகளைப் பிரிக்கும் பணி படிப்படியாக நிறைவேற்றப்படும். இம்மாநிலத்தில் மொத்தம் 12,610 ஊராட்சிகள் உள்ளன.



1986 ஏப்ரல் 16]

## 3. ஊராட்சி தேர்தல்கள்.

ஊராட்சி அமைப்புகளை அமைப்பதன்மூலம்தான் மக்களை ஊராட்சி வளர்ச்சியில் முழுமையாக ஈடுபடுத்த முடியும் — அவர்களை ஈடுபாடு கொளளச் செய்ய முடியும் என்ற நோக்கத்தோடு 23-2-1986 அன்று ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதற்கு முன்பு 1970 ஆம் ஆண்டு ஊராட்சித் தேர்தல்கள் நடைபெற்றன. 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது ஊராட்சி மற்றும் பேரூராட்சியின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரை ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் உறுப்பினர்களாக அமைந்த ஊராட்சி தலைவர்கள், தேர்ந்தெடுத்தனர். இதற்குப் பிறகு, ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் வகையில் 1970 ஆம் ஆண்டில் "தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958" திருத்தி அமைக்கப்பட்டது.

23-2-1986 அன்று நடைபெற்ற தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் 3-3-1986 அன்று பதவி ஏற்றுக் கொண்ட வரையில், ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் முறையே 1977 மற்றும் 1979 ஆம் ஆண்டு முதல் சிறப்பு அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன.

தேர்தல் பணிகள் முழுவதும் அமைதியுடனும், திறமையுடனும் நடைபெற்றன. ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களை முதல் முறையாக வாக்காளர்களே நேரடியாகத் தேர்ந்தெடுத்தனர். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருக்கான தேர்தலும் பேரூராட்சி தலைவருக்கான தேர்தலும் கட்சி அடிப்படையில் நடத்தப்பட்டன. பேரூராட்சி உறுப்பினர்களுக்கான தேர்தலும், ஊராட்சித் தலைவர்களுக்கான தேர்தலும் கட்சி சார்பற்ற அடிப்படையில் நடத்தப்பட்டன. 1-1-1986 அன்று 18 வயது நிரம்பிய இளைய சமுதாயத்தினருக்கு முதன் முறையாக வாக்குரிமை அளிக்கப்பட்டது, கடந்த தேர்தலில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய அம்சம்.

[1986 ஏப்ரல் 16

4. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் :

கிராமப் பகுதிகளை முன்னேற்ற நாம் மேற்கொள்ளும் பலவிதமான முயற்சிகளில், கிராமப் பகுதிகளை விரைவில் முன்னேற்ற வேண்டும்; அங்குள்ள வறுமையை ஒழிக்க வேண்டும் ஆகிய இரு கூறுகளுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. சமூக நீதியை நிலை நாட்டி, ஏழைகளின் வருவாய் அளவை உயர்த்தி விடுதல் மட்டுமே பொருளாதார வளர்ச்சியில் புதிய அத்தியாயங்களை ஏற்படுத்தி விடாது என்பது இப்போது தெரிய வந்துள்ளது. வறுமையை நேரடியாகத் தாக்கி ஒழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த நேரடித் தாக்குதலை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நிறைவேற்றும் வகையில் முதன் முறையாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் உதவி அளிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த போதிலும் இத்திட்டத்தின் நிறைவேற்றம் சிக்கல் மிகுந்ததாக இருந்த போதிலும் இத்திட்டத்தின் வெற்றி பாராட்டப்பட வேண்டிய வகையில் அமைந்துள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், 1979–80 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டன. 1980–81 முதல், பின்வரும் இரு இலட்சியங்களை எய்துவதற்காக இத்திட்டம் எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்றப்பட்டது :—

(அ) சுய வேலை வாய்ப்பு வழிகளை அமைத்துத் தந்து மேம்படுத்தி, கிராமப்புறங்களில் நிலவும் வேலை இல்லா நிலையையும், போதிய வேலையில்லா குறையையும் களைதல்.

(ஆ) கிராமப்புறங்களில் மிக்க ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை பாராட்டத்தக்க வகையில் உயர்த்துதல்.

மானியமும் வங்கிக் கடனும் இணைந்த உதவியை கிராமப்புறங்களில் மிக ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களுக்கு, ஒட்டுமொத்தமாக அளித்து, வருவாய் தரும் சொத்துக்களை அவர்கள் பெறுவதன் மூலம், மேற்கூறிய இரு இலட்சியங்களையும் அடைய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் உதவுகிறது. இந்த உதவியில், மானியத் தொகை, மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கென தங்கள் வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யும் தொகையில் இருந்து அளிக்கப்படுகின்றன. கடன் தொகைகள் வங்கிகள் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்றன.



1986 ஏப்ரல் 16]

ஏழைகளுக்குள் ஏழைகளாக—அதாவது பரம ஏழைகளாக உள்ள குடும்பங்களை வறுமைக் கோட்டின் பிடியில் இருந்து விடுவிப்பதை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தனது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதால், இத்தகைய பரம ஏழைகளைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களின் குடும்ப வருமானமே அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. ஐந்து நபர்கள் கொண்டதும், ஆண்டு வருவாய், ரூ. 3,500-க்கும் மேற்படாததுமான குடும்பம் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பமாக ஆறாவது திட்டத்தில் கருதப்பட்டது. இதே கருத்துத் தான் ஏழாவது திட்டத்தின் முதல் ஆண்டில் அதாவது 1985–86 ஆம் ஆண்டும் பின்பற்றப்பட்டது.

ஆனால் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இப்போது அதாவது 1986–87 முதல் ' வறுமைக்கோடு ' என்பதற்கான வரையறையை மத்திய அரசு மாற்றி அமைத்துள்ளது. 1986–87 முதல் ' வறுமைக்கோடு ' என்பது என்ன என்பதற்கு மத்திய அரசு கீழ்க்காணும் புதியதோர் விளக்கத்தை அளித்துள்ளது—

" கிராமப்புறங்களில் ஆண்டுக்கு ரூ. 6,400 வருவாய் கொண்ட குடும்பங்கள் வறுமைக்கோட்டில் வாழும் குடும்பங்களாக ' ஏழாவது திட்டத்தில் ' கருதப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைப் பொறுத்தவரையில், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் அவர்களுக்கு உதவும்போது அவர்களின் வருவாய் வரம்பினை இதில் 75 சதவிகிதம் அதாவது ரூ. 4,800 என்ற அடிப்படையில் அவர்களுக்கு உதவ வேண்டும். எனினும், ஏழைகளுக்குள் ஏழைகளாக இருக்கும் பரம ஏழைகளுக்கு முதலில் உதவுவதற்காக, ஆண்டுக்கு 3,500 ரூபாய் வருவாய் கொண்ட குடும்பங்களுக்கு முதலில் உதவி அளிக்க வேண்டும். 3,500 ரூபாய் ஆண்டு வருவாய் கொண்ட குடும்பங்கள் முழுவதற்கும் உதவி அளிக்கப்பட்ட பின்பே, ரூ. 3,500 முதல் ரூ. 4,800 வரை ஆண்டு வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்படவேண்டும்".

இந்த ஆண்டு, அதாவது 1986–87 முதல், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் உதவி பெறுவதற்கான வருவாய் வரம்பு உயர்த்தப்பட்டிருந்தாலும் கூட, ஏழைகளுக்குள் ஏழைகளாக உள்ள பரம ஏழைகளுக்கு முதலில் உதவிடும் கொள்கை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒவ்வொரு வட்டாரத்திலும் ஆண்டுக்கு ரூ. 3,500-க்குக் குறைவாக வருவாய் கொண்ட குடும்பங்களுக்கு முதல் உரிமை அளிக்கப்பட்டு உதவி

[1986 ஏப்ரல் 16

செய்யப்படும். ரூ. 3,500 வருமானம் கொண்ட அனைத்துக் குடும்பங்களுக்கும உதவி அளிக்கப்பட்ட பின்பு, ரூ. 3,500 முதல் ரூ. 4,800 வரை ஆண்டு வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு படிப்படியாக உதவி அளிக்கப்படும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வட்டாரத்திலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்களைக் கணக்கிட்டு அவர்களுக்கு உதவுவதற்கென அமைந்த ஒட்டு மொத்தமான திட்டங்களை உள்ளடக்கி, 'வட்டாரத் திட்டம்' உருவாக்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதாவது 1–4–80 முதல் 31–3–1985 முடிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மொத்தம் 13 இலட்சத்து 96 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களுக்கு உதவியாக அளிக்கப்பட்ட தொகை ரூ. 14,661 இலட்சம்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை ஒருங்கிணைப்பது, ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முதல் குறிக்கோள். மேலும், ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் உதவிகள் அளிக்கப்பட்டும், பலவித காரணங்களால் வறுமைக் கோட்டின் கோரப் பிடியிலிருந்து விடுபட இயலாமல் போன குடும்பங்களுக்கு மீண்டும் உதவி அளிப்பது ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இரண்டாவது குறிக்கோள். இவ்வாறு மீண்டும் உதவி அளித்தும், முடிந்தவரை பல குடும்பங்களுக்கு முதல் முறையாக உதவி அளித்தல் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் அதாவது 31–3–1990-க்குள் தமிழ் நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் சதவிகிதமான 48.2ஐ, 23 சதவிகிதமாகக் குறைப்பதும் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தின் குறிக்கோள்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் அதாவது 1985–86 ஆம் ஆண்டில், ஏற்கனவே உதவி அளிக்கப்பட்ட 1 இலட்சத்து 18 ஆயிரம் குடும்பங்களுக்கும் (1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டு உதவி அளிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டில் இருந்து விடுபட இரண்டாவதாக உதவி பெற தகுதி உடைய குடும்பங்கள்) புதிதாக 78,279 குடும்பங்களுக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி வழங்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து இருந்தது.



1986 ஏப்ரல் 16

இதற்கென 1985–86 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு நிர்ணயித்து இருந்த ஒதுக்கீடு ரூ. 3,024.166 இலட்சம். இச்செலவை மாநில அரசும் மைய அரசும் சரிபாதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1985–86 ஆம் ஆண்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட சாதனை இலக்கையும் நிதி இலக்கையும், எவ்வித குறைபாடும் இன்றி தமிழ்நாடு அரசு, அடைந்து விட்டது என்பது உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தருவதாகும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளின் ஆதரவோடும் ஒத்துழைப்போடும் தான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பொதுவாக, அளிக்கப்படும் உதவியில் அதிகபட்சமாக, 333 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. மீதி வங்கிகளிலிருந்து கடனாக வழங்கப்படுகிறது. எனவே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேவைப்படும் உதவிகளை அளிப்பதில் நிதி நிறுவனங்கள் பெரும் பங்காற்றுகின்றன.

மிகவும், பின் தங்கிய உள் அமைந்த பகுதிகளில் ஏற்கனவே உள்ள அடிப்படைத் தேவை வசதிகளை வலுப்படுத்தலும் அவ் வசதிகள் இல்லாத இடங்களில் அவைகளை அமைத்துக் கொடுத்தலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு தக்க மருத்துவ பாதுகாப்பு அளிப்பதற்காக இயங்கும் கால்நடை மருத்துவ மனைகள் மற்றும் உறைவிந்து நிலையங்களும் அமைக்கப்பட்ட அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. 31–3–86 வரை 31 இயங்கும் கால்நடை மருத்துவ மனைகளும், 223 உறைவிந்து நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

வேளாண்மைப் பகுதியைப் பொறுத்த வரையில், சிறு மற்றும் குறு வேளாண்மை விவசாயிகளுக்கு உதவும் வகையில் ஏழு மாவட்டங்களில் ஏழு நடமாடும் மண் பரிசோதனைச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கிழ் பயன் பெறும் நெசவாளர்களுக்கு உதவும் நோக்கத்தோடு 21 மின் விசை தறி மையங்கள் ஏற்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

[1986 ஏப்ரல் 16

ஒருங்கிணைந்த ஊரகத் திட்டத்தின் கீழ் 1980–81 ஆம் ஆண்டு முதல் செலவிடப்பட்ட தொகை, உதவிகள் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்களைக் காட்டும் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | செலவு. | வழங்கப்பட்ட கடன் தொகை. | மொத்த செலவு. | உதவி வழங்கப்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. | உதவி வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | (ரூபாய் கோடியில்). | | | | |
| 1980–81 | 16.91 | 29.67 | 46.58 | 2,25,600 | 2,55,323 |
| 1981–82 | 28.10 | 47.36 | 75.46 | 2,25,600 | 2,58,225 |
| 1982–83 | 34.16 | 62.87 | 97.03 | 2,25,600 | 2,71,563 |
| 1983–84 | 33.69 | 59.75 | 93.44 | 2,26,650 | 2,77,641 |
| 1984–85 | 33.75 | 57.63 | 91.38 | 2,26,650 | 2,33,264 |
| 1985–86 | 30.24 | 58.89 | 89.13 | 1,96,239 | 1,98,257 |

1986–87 :

மத்திய அரசால் குறிப்பிட்டபடி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் 1986–87 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 2,922 லட்சம். 1986–87-ல் இரண்டு லட்சத்து எண்பத்தி ஐந்தாயிரம் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்படும் என மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதில் இதற்கு முன்னர் அதாவது 1982–83, 1983–84, 1984–85 ஆம் ஆண்டுகளில் உதவ்கள் வழங்கப்பட்ட 2 லட்சத்து 5 ஆயிரம் குடும்பங்களும் அடங்கும்.

மேலும் மத்திய அரசு அனுப்பியுள்ள அறிவுரைகளின்படி எந்தெந்த குடும்பங்களுக்கு இரண்டாவது தடவையாக உதவி அளிக்கப்பட வேண்டும் என 1986 ஏப்ரல்–மே மாதங்களில்



1986 ஏப்ரல் 16

ஓர் விரிவான ஆய்வு நடத்தப்பட உள்ளது. இந்த ஆய்வுக்குப் பின்னர் இரண்டாவது தடவை உதவி அளிக்கப்பட தேர்ந்தெடுக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கையும் இதில் அடங்கும். அத்தோடு 1986–87 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிதாக உதவி அளிக்கப்பட இருக்கும் 80,000 குடும்பங்களும் இதில் அடங்கும்.

கிராமப் புற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் (Tlrysem ) :

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஓர் நல்ல அம்சம் தான் இந்தத் திட்டம். தொழில் நுட்ப அறிவற்ற, நிலமில்லாத ஏழை இளைஞர்களுக்கு பயிற்சிகள் அளித்து, அந்தப் பயிறசிக்குப் பின்னர் தங்களுக்குத் தாங்களே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள வழி செய்கிறது இத்திட்டம். இத்தகைய பயிற்சிகளை அளிப்பதற்கான முழுச் செலவும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் இருந்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் மொத்தம் 1,66,102 பேர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இவர்களில் 1,39,392 நபர்களுக்கு நல்ல வருவாய் கிட்டும் வகையில் தக்க வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. அதாவது 94,921 பேர்கள் சொந்தத்தில் தொழில் தொடங்கி உள்ளனர். 44,471 பேர் ஊதிய அடிப்படையில் வேலைத் தேடிக் கொண்டனர்.

1985–86 ஆம் ஆண்டில் 13,670 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும் என்பது இலக்கு. 31—3—1986 முடிய 8,200 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய ஏறத்தாழ 6,000 பேர்களுக்கு தற்போது பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிகள் 1986 ஜுன் இறுதியில் முடிவடையும்.

ஆய்வுகள் :

எந்தவொரு திட்டமானாலும் சரி, அது நிறைவேற்றப்படும் பொழுதே, அதன் நிறைபெற்ற ஆய்வு செய்யப்பட்டால்தான், அந்தத்திட்டம் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறதா என்பதை கண்டுகொள்ள முடியும் ; கணக்கிடமுடியும். திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்ட பின்பு நடத்தப்படும் ஆய்வுகள் இறந்த பின்பு செய்யப்படும் பிணப் பரிசோதனையாகத் தான் அமையுமே தவிர, திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது ஏற்படும் குறைபாடுகளைக் களைய உதவாது. எனவேதான்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படும் பொழுதே, அதனை தேசிய அளவில் தக்க ஆய்வு செய்ய மத்திய அரசு முடிவு செய்தது. தமிழ்நாட்டில் இத்தகைய ஆய்வு 1985 அக்டோபர் திங்களில் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாதமும் ஏதாவது இரு மாவட்டங்களில், மாவட்டத்திற்கு இரண்டு வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட இந்த மதிப்பீடு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1985 அக்டோபர் மாதத்தில் தொடங்கி 1986 பிப்ரவரி முடிய 10 மாவட்டங்களில் அமைந்த 20 வட்டாரங்களில் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்தே அதன் நிறைவேற்றம் பற்றி ஆய்வுகளை மேற்கொள்வதில் தமிழ்நாடு அரசு அதிக ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழான இந்த ஆய்வை, கோயம்புத்தூர், அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை, மதுரை சமூகப்பணி நிலையம், சென்னை -86. மக்கள் வாழ்வியல் அமைப்பு, மதுரை காந்தி கிராமம், சுகாதாரம் மற்றும் குடும்ப நல வாழ்வு நிலைய அறக்கட்டளை சென்னை, பொருளாதார வல்லுநர் குழு ஆகியத் தனிப்பட்ட அமைப்புகள் இந்த ஆய்வுகளை நடத்த கோரப்பட்டன. இத்தோடு, எல்லா மாவட்டங்களிலும் பொருளாதார வல்லுநர் குழுவால் இந்த ஆய்வை நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது ஏற்படும் குறைபாடுகளைக் களைந்து அத்திட்டத்தை திறம்பட நிறைவேற்றுவதற்காகவே இந்த ஆய்வுகளைச் செய்ய அரசு ஆணையிட்டது. இந்த ஆய்வுகள் வெளிப்படுத்திய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

5. கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (DWCRA) :

எல்லா முன்னேற்றத் திட்டங்களிலும் கிராமப்புற பெண்கள் ஈடுபடுத்தப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும், திட்டம் தீட்டுவோர், பெண்களின் நலன்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை ; கண்டு கொள்வது இல்லை என தேசிய வேளாண்மைக் கமிஷன் ஓர் உண்மையை வெளிப்படுத்தியது. ஒருங்கிணைந்த ஊரகத் திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது நடுவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு, இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பெண்களின் எண்ணிக்கை மிகவும்குறைவே என்பதை உணர்த்திற்று. கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களை ஒட்டு மொத்தமாக உயர்த்தும் போது, ஒருங்கிணைந்த ஊரகத் திட்டத்தின் ஓர் அங்கமாக பெண்கள் முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்தப்பட





வேண்டியது அவசியம். இதன் அடிப்படையில் தான், ஒருங்கிணைந்த ஊரகத்திட்டத்தின் ஓர் அங்கமாக ''கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான முன்னேற்றத் திட்டம்'' (DWCRA) உருவாக்கப்பட்டது.

நல்ல சத்தான உணவையும், நல்ல கல்வியையும் குடும்பங்கள் பெறுவதற்கும் பெண்கள் சம்பாதிப்பதற்கும் ஓர் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. அது மட்டுமல்ல, பெண்கள் சம்பாதிக்கும் போது அவர்களுக்கென தனி மதிப்பும் குடும்பத்தில் ஏற்பட்டு விடுகிறது. எனவே நல்ல ஊதியத்தைப் பெண்கள் பெறும் வகையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது.

இந்த அவசியத்தில் உருவானது தான் ''கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்'', இது நான்கு குறிக்கோள்களைக் கொண்டது.

உழைப்பால் சமுதாயத்தில் ஓர் உன்னத நிலையைப் பெண்கள் அடைய வேண்டும் என்பது முதல் குறிக்கோள். நானும் சம்பாதிக்கிறேன் என்ற பெருமையை சமுதாயத்தில் பெண்கள் பெற வேண்டும் என்பது இரண்டாவது குறிக்கோள். நாட்டில் மட்டுமின்றி வீட்டிலும், வீட்டில் உள்ள வசதிகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்கள் பெற வேண்டும் என்பது மூன்றாவது குறிக்கோள். அன்புத் தாயாகவும் , நல்ல மனையாளாகவும் பெண்கள் திகழ வேண்டும் என்பது நான்காவது குறிக்கோள், இந்த நான்கு குறிக்கோள்களை எய்தி, பெண்களின் நிலையை சமுதாயத்தில உயரச் செய்ய வேண்டும் என்பதே கிராமப்புற பெண்கள் மறறும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் இலட்சியம்.

குடும்பத்திற்கு நல்ல சத்து மிகுந்த உணவு கிடைக்கவும், குடும்பத்தின் பொருளாதார நிலை உயரவும், அக்குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு வழிவகை செய்யும் வகையில், அவர்கள் சம்பாதிப்பதற்கு தக்க ஏறபாடுகளை, கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டம், ஒரு புறம் ஏற்படுத்தித் தருகிறது. மறுபுறம், அந்தந்தத் பகுதியில் கிடைக்கும் மூலப் பொருட்களை தான் சம்பாதிப்பதற்காகப் பயன்படுத்தி அந்தப் பெண்கள் தாங்கள் சார்ந்த பகுதிகளுக்கு சேவை செய்யவும் இத்திட்டம் உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 15 முதல் 20 வரை எண்ணிக்கை கொண்ட பெண்கள் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுத்தப்படுகிறது. ஒருவர் நலனை மற்றொருவர் பேணும் வகையில் இந்தக் குழுக்கள் செயல்பட வேண்டும். குழு அமைக்கப்படும் பொழுதே குழுவிற்கென ஓர்

அமைப்பாளர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவர் குழு பற்றிய வேலைகளைக் கவனித்துக் கொள்வார். இத்தகைய ஒவ்வொரு குழுவிற்கும் அளிக்கப்படும் உதவிகள் வருமாறு :—

(அ) ஒரே வேளையில் ரூ. 15,000 மான்யமாக வழங்கப் படுகிறது. இத்தோடு, இதே அளவு இன்னொரு தொகையை மத்திய, மாநில அரசுகளும், யுனிசெப் நிறுவனமும் சேர்ந்து அளிக் கும். இந்த இரண்டு தொகைகளும் பின்வருமாறு செலவிடப் படுகிறது.

(1) மூலப் பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவைகளுக்காக ''சுழல் நிதி'' ஏற்படுத்துதல் ;

(2) குழு அமைப்பாளருக்கு மதிப்பூதியம் வழங்கப்படுதல், இத்தொகை ஓராண்டுக்கு வழங்கப்படும். மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50-க்கு மேற்படாத வகையில் வழங்கப்படும் ;

(3) வருவாய் தரும் இனங்களுக்காக அடிப்படை தேவை வசதிகள் ஏற்படுத்துதல் (மூலதனம்);

(4) குழந்தை நலம் காக்க ஒரே வேளையில் செலவினம் ;

(ஆ) குழு அமைப்பாளருக்கு பயணப்படியாக ஆண்டுக்கு ரூ. 200.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு திட்ட உதவி அலுவலர் (மகளிர் முன்னேற்றம்) நியமிக்கப்பட்டுள்ளார். இவருடைய பணியில் 10 கிராம சேவகிகள் உதவுவர்.

பொருளாதார சிறப்புக்கான எல்லா பணிகளும் ''கிராம பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டத்தின் '' கீழ் மேற்கொள்ளப்படலாம். எந்தெந்தப் பணிகளைத் தேர்ந் தெடுப்பது என்பதைக் குழுவே முடிவு செய்யும். இந்த முடிவை எடுப்பதற்கு திட்ட உதவி அலுவலர் (மகளிர் முன்னேற்றம்) மற்றும் கிராம சேவகி ஆகியோர் உதவுவர்.

கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பெண்கள், ஒருங் கிணைந்த ஊரக திட்டத்தின்கீழ் பயன்பெற தேர்ந்தெடுக்கப் படுவோரைப் போலவே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இருந் தாலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவி தனிப்பட்டவர்களுக்கு செல்கிறது. ஆனால் கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் முன் னேற்றத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் உதவி பலர் இணைந்த குழுக்களுக்குச் செல்கிறது.





கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத் திட்டம், இந்தியா முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 50 மாவட்டங்களில், 1982–83 ஆம் ஆண்டு பரிசோதனை முறையில் தொடங்கப்பட்டது. இப்பரிசோதனை முறைக்கு, தமிழகத்தில் பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதி வரை பெரியார் மாவட்டத்தில் 102 குழுக்களும், தர்மபுரி மாவட்டத்தில் 160 குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. 31–3–1986 வரை, இத்திட்டத்தின்கீழ் பெரியார் மாவட் டத்தில் 1,995 பெண்களும், தர்மபுரி மாவட்டத்தில் 2,866 பெண்களும் பயன் பெற்றுள்ளனர்.

பல பணி சமுதாய மையங்களை (Multi-purpose Com-munity Centres) அமைக்கும் ஒரு திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதற்கேற்ப 1985–86 ஆம் ஆண்டில் தர்மபுரியிலும், பெரியார் மாவட்டத்திலும் தலா 4 பல–பணி சமுதாய மையங்கள் அமைக்க அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இதற்காகும் செலவு ரூ. 13.20 இலட்சம் (அதா வது ஒரு மையத்திற்கு ரூ. 1.65 இலட்சம்.)

1986–87ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் மொத்தம் ரூ. 24.75 இலட்சம் செலவில் (ஒரு மையத்திற்கு ரூ. 1.65 இலட்சம்) பெரியார் மாவட்டத்தில் 8 பலபணி சமுதாய மையங்கள் அமைக்கவும், தர்மபுரி மாவட்டத்தில் 7 பலபணி சமுதாய மையங்கள் அமைக்கவும் மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது.

6. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் உதவிடும் மாபெரும் திட்டம்.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவிடும் மாபெரும் திட்டம் தமிழ்நாட்டில் 1983–84 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது. புதிதாக பாசன வசதிகளை ஏற்படுத்துதல் அல்லது ஏற்கெனவே உள்ள பாசன வசதிகளை மேம்படுத்துதல், நிலங் களை சமப்படுத்துதல் போன்ற நில மேம்பாட்டு வேலைகளை செய்து முடித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுவதற்கு மானியத்தோடு கூடிய கடன்களை சிறு மற்றும் குறு விவசாயி களுக்கு வழங்கி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மானியமாக வழங்க ஒவ்வொரு வட்டா ரத்திற்கும் வழங்கப்பட்ட தொகை தலா ரூ. 5 இலட்சம். இத்திட்டத்திற்காகும் செலவினை மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் சரி பாதியாக ஏற்றுக் கொள்கின்றன.

கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்காக இத்திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது.

(1) சிறுபாசன கிணறுகள் மற்றும் பம்புகள் ;
(2) நில மேம்பாடு குறித்த பணிகள்.

1985–86 ஆம் ஆண்டு, இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ. 11.83 கோடி உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. சிறு பாசனங்களை மேம்படுத்த இத்திட்டத்தின் கீழ் 1985–86 ஆம் ஆண்டில் மொத்தம் 21,002 சிறு மற்றும் குறு விவசாயிகள் உதவி பெற்றுள்ளனர். நில மேம்பாடு வகையில் 1985–86 ஆம் ஆண்டு, 4,003 சிறு மற்றும் குறு விவசாயிகள் நிதி உதவி பெற்றுள்ளனர்.

1986–87 ஆம் ஆண்டுக்கென இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு :—

| பணி விவரம். (1) | 1986–87 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. சிறு பாசனம் .. .. .. .. | 896.00 |
| 2. நில மேம்பாடு .. .. .. .. | 148.84 |
| மொத்தம் .. | 1,044.84 |

7. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்—நோக்கங்கள்:

மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமான தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், தமிழ்நாட்டில் 1980 அக்டோபர் மாதம் முதல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காகும் செலவை மைய அரசும் மாநில அரசும் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்கின்றன.

இத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(1) கிராமப் பகுதிகளில் வேலை இன்றியும், போதிய வேலை இன்றியும் அல்லல்படும் ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் பயன்பெறும் வகையில் தக்க வேலை வாய்ப்புகளை அவர்களுக்கு அளித்தல்.



(2) கிராமங்களின் அடிப்படை வசதிகளை வலுப்படுத்தும் நோக்கத்தோடு சமுதாயத்திற்குப் பயன்படும் சொத்துக்களை உருவாக்குதல், அதன் மூலம் கிராமப் பொருளாதாரத்தை வேகமாக மேம்படுத்தி கிராமப்புற ஏழைகளின் வருவாயைச் சீராக உயர்த்துதல்.

(3) கிராம மக்களுக்கு சத்துமிக்க உணவு கிடைக்கச் செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

முதலீடு மற்றும் மனித உழைப்பு நாட்கள் :

இத்திட்டத்தின்கீழ் இடப்பட்ட முதலீடு பற்றிய விவரங்கள், உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்களைப் பற்றிய பட்டியல் வருமாறு :—

| ஆண்டு. (1) | முதலீட்டுத் தொகை. (2) (ரூபாய் கோடியில்.) | மனித உழைப்பு நாட்கள். (3) (இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1980–81 .. | 10.59 | 146.75 |
| 1981–82 .. .. .. | 34.54 | 448.15 |
| 1982–83 .. .. .. | 32.12 | 495.13 |
| 1983–84 .. .. .. | 35.82 | 341.29 |
| 1984–85 .. .. .. | 51.11 | 366.73 |
| 1985–86 .. .. .. | 41.00 | 252.59 |
| மொத்தம். | 205.18 | 2,050.64 |

சமூகக் காடுகள் வளர்த்தல், ஊருணிகளைப் புதுப்பித்தல், சிறு பாசன வேலைகளை சீராக செய்து முடித்தல், குடிநீர் கிணறுகள் அமைத்தல், ஊரக சாலைகள் இடுதல், பள்ளிக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், அரிசி கிடங்குகள் சிமெண்ட் கிடங்குகள், சிறு பாலங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவை கட்டுதல், கால்நடைகள் நீர்க் குடிப்

பதற்கு வசதிகள் அமைத்தல், ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினருக்கு மொத்தம் மொத்தமாக வீடுகள் கட்டுதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

1984–85 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினருக்காக இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 9,358 வீடுகள் கட்டப்பட்டன. 1985–86 ஆம் ஆண்டு 9,899 வீடுகள் கட்டப்பட அனுமதி வழங்கப்பட்டது. 1986 மார்ச் முடிய மொத்தம் 8,835 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய வீடுகள் 1986 ஏப்ரல் திங்கள் இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

1986–87-ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினருக்கு ஏறத்தாழ 25 கோடி ரூபாய் செலவில் 25 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க கருதப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சமூகக் காடுகள் வளர்த்தல் :—

நம் நாட்டில் காடுகள் மிகப் பயங்கரமான அளவில் அழிக்கப்படுவதால் இயற்கைச் சூழல் கெட்டு அதன் விளைவாக ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதாரச் சிக்கல்களை நாம் நேருக்கு நேர்சந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம் என 1985 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் ஐந்தாம் நாள் வானொலியில் உரையாற்றும்போது, நமது பாரதப் பிரதமர் அவர்கள் குறிப்பிட்டார்கள். விறகாகப் பயன்படும் மரங்களையும், உரமாகப் பயன்படும் செடிகளையும் ஆண்டுக்கு 5 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் வளர்க்கும் மாபெரும் திட்டத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதின் தேவையை அவர் வலியுறுத்தினார். இத்திட்ட நிறைவேற்றம் ஒரு மக்கள் இயக்கமாக அமைய வேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

அவர் 1985 ஜனவரியில் வெளியிட்ட இந்தக் கொள்கை அறிவிப்பை கருத்தில் கொண்டு, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சமூகக் காடுகள் வளர்க்க ஒதுக்கீடு செய்யப்படும் தொகையை மத்திய அரசு 1985–86 முதல் 20 சதவீதம் உயர்த்தியது. 1985–86 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சமூகக் காடுகள் வளர்ப்புக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 7.80 கோடியில், 1986 மார்ச் 31 முடிய ரூ. 5 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 949 இலட்சம் மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டன. 1985–86-இல் ஏறத்தாழ 10,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டன.

1986–87 முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழான சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்கான ஒட்டுமொத்தமான ஒதுக்கீட்டை 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக மைய அரசு உயர்த்தி உள்ளது. இதைக் கணக்கில்



கொண்டால் 1986–87 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சமூக் காடு வளர்ப்புக்கு மைய அரசு நிர்ணயித்துள்ள நிதி இலக்கு ரூ. 905.50 இலட்சம் எனக் கொள்ளலாம்.

1986–87 ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் :—

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1986–87 ஆம் ஆண்டுக்காக மைய அரசு நிர்ணயித்துள்ள தொகை ரூ 4,877 இலட்சம். இந்தச் செலவை மைய அரசும் நம் மாநில அரசும் சரி பாதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். 1986–87 இல் மொத்தம் 263 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என மைய அரசு சாதனை இலக்கு நிர்ணயித்துள்ளது. மேலும் 1986–87 ஆம் ஆண்டில் ரூ. 47.40 இலட்சம் செலவில், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 3,950 சுகாதாரக் கழிவறைகள் கட்ட மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

8. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் :

மத்திய அரசின் முழு மானியத்தோடு (100 சதவிகிதம்) கூடிய ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் 1983–84 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு :—

(அ) வேலை வாய்ப்பு இன்றி தவிக்கும் நிலமற்ற ஏழைக் குடும்பங்களில் குறைந்த பட்சம் ஒருவருக்கு ஓர் ஆண்டில் குறைந்தது நூறு நாட்கள், தக்க வேலை வாய்ப்புகள் அளித்தல்;

(ஆ) பிற்பட்ட நிலையில் உள்ள பகுதியில், நிலையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தல்.

1985–86 ஆம் ஆண்டில் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 44.95 கோடி. ஆனால், 31–3–1986 வரை ரூ. 45 கோடி செலவாகியுள்ளது. மேலும் 262.61 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது 1985–86 ஆம் ஆண்டுக்கான சாதனை இலக்கு. இந்தச் சாதனை இலக்கை 31–3–1986-க்குள் எய்தி, 1985–86-இல் மொத்தம் 263 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

[1986 ஏப்ரல் 16

1984–85 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் மலை சாதியினர் ஆகியவர்களுக்கு 1984–85 ஆம் ஆண்டில் மொத்தம் 20,000 வீடுகள் (கூட்டம் கூட்டமாக அமைந்தவை) கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த இருவகை மக்களுக்காக 1985–86 ஆம் ஆண்டில் 11,000 வீடுகள் கட்டிக் கொடுக்க அனுமதி வழங்கப்பட்டது. இதில், 31–3–1986 வரை மொத்தம் 9,464 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சிய வீடுகள் 1986 ஏப்ரல் இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

1986–87 ஆம் ஆண்டில், ஆதி திராவிடர் மற்றும் மலைச் சாதியினருக்கு ரூ. 35 கோடி செலவில் ஏறத்தாழ 35 ஆயிரம் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாடு முழுவதும் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டம் மாபெரும் அளவில் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என மாண்புமிகு தலைமை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட கொள்கை அறிவிப்பைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு சமூகக் காடு வளர்ப்புக்கென பெருந் தொகையை ஒதுக்கியுள்ளது. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் சமூகக் காடுகள் வளர்ப்புக்கென மத்திய அரசு 6.92 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் இது 20 சதவிகிதமாகும். 1985–86 ஆம் ஆண்டில் 31–3–1986 வரை 5,180 ஹெக்டேர் நிலப் பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டன. 1985–86-இல் மட்டும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழான சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 810 இலட்சம் மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டன.

கிராமப்புறங்களில் சுகாதார கழிப்பிடங்கள் கட்டும் சிறப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 47.40 இலட்சம் செலவில் 3,950 சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. இந்தத் தொகை 1986 பிப்ரவரியில் கிடைத்தது. எனவே 1986 ஜூன் மாதத்திற்குள் இந்த சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்படும்.

1986–87 ஆம் ஆண்டிலும், இத் திட்டத்தின் கீழ் ரூ. 47.40 இலட்சம் செலவில் 3,950 சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

1986–87 இல் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் 1986–87 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசு ஒதுக்கியுள்ள மொத்த தொகை ரூ. 46.92 கோடி. 1986–87 ஆம் ஆண்டில் மொத்தம் 242 லட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என மைய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.



1986 ஏப்ரல் 16]

இதுவரை, இத்திட்டத்தின் கீழான மொத்த ஒதுக்கீட்டில் 20 சதவிகிதம் சமூகக் காடுகள் வளர்ப்புக்கென மத்திய அரசு ஒதுக்கி இருந்தது. 1986–87 ஆம் ஆண்டு முதல் இது 25 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, 1986–87 ஆம் ஆண்டில் சமூகக் காடு வளர்ப்புக்கென கிடைக்கும் தொகை ரூ. 7.31 கோடியாக அமையும்.

9. புதிய எரிசக்தி மேம்பாட்டுத் திட்டங்கள் :

மாற்று எரிசக்தி வழிமுறைகளைக் கண்டறிந்து அவைகளை மேம்படுத்த இந்தியா முழுவதும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், கரிம வாயு மேம்பாட்டுத் திட்டமொன்றை தீட்டி, இந்தியா முழுவதும் முழுமானியம் அளித்து நிறைவேற்றி வருகிறது. மத்திய அரசின் ''புதிய எரிபொருள் வாயில்கள்'' துறை இத்திட்டம் தொடங்கப்பட்ட நாளில் இருந்தே தமிழ்நாடு இதைத் திறம்பட நிறைவேற்றி வந்துள்ளது, வருகிறது. ஆறாவது திட்ட காலத்தில் 21,500 சாண எரிவாயு அமைப்புகள் நிறுவ வேண்டும் என்பது இலக்கு. இதை மிஞ்சி நாம் நிறுவியதோ 30,270 அமைப்புகள் 1984–85 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் 10,000 சாண எரிவாயு அமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என்பது தமிழ் நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. இதை மிகவும் மிஞ்சும் வகையில் மொத்தம் 17,549 அமைப்புகளை நிறுவி சாண எரிவாயு அமைப்பதில் அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்தைத் தமிழ்நாடு பெற்றது.

1985–86-ல் நிறுவப்பட நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 13,000 சாண எரிவாயு அமைப்புகள், இந்த இலக்கை மிஞ்சி, 1986 மார்ச் இறுதிவரை மொத்தம் 17,673 சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

மதிப்பீடு :

தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட சாண எரிவாயு அமைப்புகளைப் பற்றி மதிப்பீடு ஆய்வு செய்யும் பொறுப்பு ''பெசன்ட் ராஜ் கன்சல்டன்ட் பிரைவேட் லிமிடெட்'' என்ற சென்னையைச் சார்ந்த ஓர் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பழுதுபட்ட சாண எரிவாயு அமைப்புகளை சீர்படுத்த இந்த நிறுவனம் அளித்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஊரக வளர்ச்சி

இயக்குநர் தக்க அறிவுரைகள் வழங்கி உள்ளார். தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட சாண எரிவாயு அமைப்புகளுள் மொத்தம் 13 சதவிகித அமைப்புகள் குறைபாடுகளோடு அமைக்கப்பட்டிருப்பதாக மேற்கூறிய தனியார் நிறுவனத்தின் ஆய்வு வெளிப்படுத்தியது.

சாண எரிவாயு அமைப்புகளில் ஏற்படும் குறைபாடுகளைத் தீர்க்க ''மூன்று அடுக்கு நிலை' ஏற்படுத்தப்பட்டு அக் குறைபாடுகள் தீர்க்கப்பட்டதால், மேற்கூறிய 13 சதவிகித குறைபாடு 0.6 சதவிகிதமாகக் குறைந்தது. சாண எரிவாயு அமைப்புகளில் ஏற்படும் பெரிய குறைபாடுகளைக் களைய, கோயம்புத்தூரிலும், பட்டுக்கோட்டையிலும் இரு பழுது பார்ப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பயிற்சி :

சாண எரிவாயு அமைப்புகளைக் கட்டுவதில் எண்ணற்றவர்கள் திறமை பெற்று விளங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கிராமப்புறங்களில் உள்ள கொத்தனார்களுக்குத் தக்க பயிற்சிகள் தீவிரமாக அளிக்கப்பட்டு வருகின்றன. 1985–86 ஆம் ஆண்டு ஒரு பயிற்சிக்கு 20 கொத்தனார்கள் வீதம் 50 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

இந்தப் பயிற்சிகள் ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களிலும், பவானிசாகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி நிலையத்திலும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சி திட்டத்தில் நற்சேவை நிறுவனங்களும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

சாணஎரிவாயு அடுப்புகளை மட்டுமின்றி, புகை இல்லா அடுப்புக்களையும் பயன்படுத்துவதில் கிராம மகளிர் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பது அரசின் ஓர் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை எய்த, கிராமப்புறங்களில் பெண்களுக்கென தனி முகாம்கள் நடத்தப்படுகின்றன. 1985–86 ஆம் ஆண்டு மட்டும், இத்தகைய 500 முகாம்கள் நடத்தப்பட்டன.

மேம்படுத்தப்பட்ட அடுப்பு :

விறகு பற்றாக்குறை, அதற்காக பெருமளவில் காடுகள் அழிக்கப்படுதல் ஆகியவைகளைச் கருத்தில் கொண்டு, மேம்படுத்தப்பட்ட அடுப்புகள் பற்றி செய்முறை விளக்கங்களை நாடு முழுவதும் நடத்திக்காட்ட மத்திய அரசு ஒரு திட்டம் தீட்டி உள்ளது. இந்தத் திட்டத்தின்படி 25 சதவீதமும் அதற்கு அதிகமாகவும் எரி சக்தியை மிச்சப்படுத்தக் கூடிய, மேம்படுத்தப்பட்ட அடுப்புகளின் (நிலையான, மற்றும் எடுத்துச் செல்லத்தக்க அடுப்புகள்) பல



மாதிரிகள் குறித்து தமிழ்நாடு முழுவதிலும் செய்முறை விளக்கங்கள் நடத்தப்பட்டு அந்த அடுப்புகள் தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்டன. 1985–86 இல் மொத்தம் 85,000 அடுப்புகள் நிறுவப்பட வேண்டும் என்ற இலக்கை 31—3—1986-க்குள் தமிழ்நாடு மிஞ்சிவிட்டது.

இத்தகைய அடுப்புகளை நிறுவுவதற்காக வகை செய்வதற்காக, தன்னிறைவு இயக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு, மேம்படுத்தப்பட்ட அடுப்புகளை செய்வதற்கும் நிறுவுவதற்கும் கிராமப் பகுதியில் உள்ள குயவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 1985–86 ஆம் ஆண்டில் இத்தகைய குயவர்களுக்கென 50 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

10. ஊரகத் தகவல் தொடர்பு மேம்பாட்டுத் திட்டங்கள்.

புதிய யோசனைகளை, சிந்தனைகளை மக்களுக்குத் திறம்பட அறிவிப்பதிலும், அந்த யோசனைகளை, சிந்தனைகளை உள்ளமைந்த கிராமப்பகுதி மக்கள் எப்படி ஏற்றுக் கொள்கிறார்கள். எத்தகைய வரவேற்பை அவர்கள் அளிக்கிறார்கள் என்று அறிந்து அதற்கேற்ப பின் நடவடிக்கைகள் எடுப்பதில் நமக்குச் சில சிக்கல்கள் உள்ளன. இந்தச் சிக்கல்கள் களைப்பட்டு, வறுமை ஒழிப்புத் திட்டங்களில் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியம், சுகாதார வாழ்வின் தேவை. குடிநீர் வசதி போன்றவற்றைப் பற்றிய விளக்கங்களும், செய்திகளும் மக்களை சென்றடைய ஏழாவது திட்டத்தில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். 1984–85 ஆம் ஆண்டுக்கு முன்பு 545 சமுதாயத் தொலைக் காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டிருந்தன. 1984–85 ஆம் ஆண்டில் 1,100 சமுதாய தொலைக் காட்சிப் பெட்டிகளும், 1985–86 ஆம் ஆண்டு 3,567 சமுதாயத் தொலைக் காட்சிப் பெட்டிகளும் நிறுவப்பட்டன. இவை அனைத்தும் கறுப்பு-வெள்ளைப் பெட்டிகள், 1986–87 ஆம் ஆண்டு முதல் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை மட்டுமே நிறுவ கருதப்பட்டுள்ளது. இதைத் தவிர, கிராமங்களில் வீடியோ கேசட் பிளேயர்கள் நிறுவவும் கருதப்பட்டுள்ளது.

சமூகக் கல்வி மானியம் :

12,823 சமூகக் கல்வி மையங்களுக்கும், 378 தகவல் நிலையங்களுக்கும் நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன. 1986–87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 16

11. ஊரகக் குடிநீர்த் திட்டங்களைப் பராமரித்தல் :

கைப்பம்புகள் மற்றும் மின்விசைப் பம்புகளை பராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் மக்கள் ஒத்துழைப்போடு இவைகளை நன்முறையில் பராமரிக்கவும், இவைகளை நிறுவுவதில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அதிக அக்கறை செலுத்தும் வகையிலும் இந்த பராமரிப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் கைப்பம்பு மற்றும் மின்விசைப் பம்புகளை பராமரிக்கும் பணி ''மூன்று அடுக்கு நிர்வாகமுறையில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஊராட்சி ஒன்றிய அளவில் ஒரு மெக்கானிக்-பிட்டர் உள்ளார். இளநிலைப் பொறியாளர்/உதவிப் பொறியாளர் தலைமையில் அமைந்த ''நடமாடும் பம்புகள் பராமரிப்புக் குழு'' கோட்ட அளவில் இயங்கி வருகிறது. இந்தப் பராமரிப்புக் குழுவிற்கு வாகனங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இந்தப் பராமரிப்புப் பணிகளை நன்முறையில் மேற்பார்வையிட உதவி நிர்வாகப் பொறியாளர் தலைமையில் அமைந்த மேற்பார்வைப் பிரிவு மாவட்ட ஆட்சித்வர் அவர்களின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் கைப்பம்பு பாதுகாப்பாளர் நியமிக்கப்பட்டு உள்ளார். பம்புகள் பழுதுபட்டால், தனக்கு அளிக்கப்பட்டுள்ள அஞ்சலட்டையில் அதைப் பற்றிய விவரங்களை எழுதி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு இந்தப் பாதுகாப்பாளர் அறிவிப்பார். பம்புகள் பெரிய அளவில் பழுதுபட்டால், அத்தகைய பழுதுகளை நடமாடும் பம்பு பராமரிப்பு குழு சீர் செய்யும்.

ஊராட்சி ஒன்றியங்களில் ஏறத்தாழ 80,000 கைப்பம்புகளும், 10,000 மின்விசைப் பம்புகளும் பராமரிக்கப்பட உள்ளன. 1984–85 ஆம் ஆண்டில் இவைகளின் பராமரிப்பிற்கென ஒதுக்கப்பட்ட ரூ. 20,75 இலட்சம் போதுமானதாக இல்லை. எனவே, திட்டத்தில் சேராத இனமாக, இத்தொகை 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 50.00 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1986–87 ஆம் ஆண்டு நிதி மதிப்பீட்டில் ரூ. 75.00 இலட்சத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளன.

தங்குதடையின்றி எப்போதும் நல்ல குடிநீர் கிடைக்க வேண்டும் என்றால், கிராமங்களில் மட்டுமின்றி பேரூராட்சிப் பகுதிகளிலும் உள்ள கைப்பம்புகள் மற்றும் மின்விசைப் பம்புகள் நன்முறையில் பராமரிக்கப்பட வேண்டும். எந்தவொரு பம்பும் 7 நாட்களுக்கு மேல் பழுது பட்டு இருக்கக் கூடாது என அரசு ஆணை இட்டுள்ளது. கைப்பம்புகளையும், விசைப்பம்புகளையும் நன்முறையில் பராமரிக்க கூடுதல் நிதி தேவை. எனவே ''குறைந்த பட்ச தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தின் கீழ்'' ஊரக குடிநீர்த் திட்டங்களைப் பராமரிப்பதற்காக, 10 சதவிகிதம் வரை நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. குறைந்த பட்ச தேவைகளை தீர்க்கும் திட்டத்தின்



1986 ஏப்ரல் 16]

கீழ் 1985–86 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து ரூ. 1.5 கோடி, கைப்பம்புகளைப் பராமரிப்பதற்கென ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நீர் வராமல் நீர்வற்றிப்போன பம்பு இடங்களை புதுப்பிப்பதற்கும், துருபிடித்த இரும்பு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளைத் துருப்பிடிக்காத கான்கிரீட் கலன்களில் அமைப்பதற்கும் இந்தத் தொகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பேரூராட்சிகளில் நிறுவப்பட்டுள்ள 9,000 கைப்பம்புகள் மற்றும் விசைப் பம்புகளைப் பராமரிப்பதற்கென பேரூராட்சிகளின் இயக்குநருக்கு ரூ. 50.00 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழான, மின்விசைப் பம்புகள் மற்றும் கைப்பம்புகளைப் பராமரிப்பதற்கென குறைந்த பட்சத் தேவைத் திட்டத்தின் கீழான மொத்த ஒதுக்கீட்டில் 10 சதவிகிதம் அதாவது சுமார் 3 கோடி, 1986–87 ஆம் ஆண்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

பழுதுபட்டப் பம்புகளை செப்பனிடுவதால் ஏற்படும் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, தேவையான உதிரிப் பொருள்களை எப்போதும் தயாராக வைத்திருக்கும்படி மாவட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். 100 கைப்பம்புகளுக்கு மேற் கொண்ட வட்டாரங்களைப் பொறுத்தவரையில் கூலி அடிப்படையில் பிட்டர்களை நியமித்துக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பம்புகள் எங்கெங்கு அமைந்துள்ளன என்பதை எளிதில் கண்டு கொள்ளும் வகையில் ஒவ்வொரு வட்டாரத்திலும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பம்புகளை எளிதில் கண்டுபிடிப்பதற்காக அவைகளுக்கென தனிப்பட்ட எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பம்புகள் திறம்பட இயங்குவது பற்றி திடீர் சோதனைகள் நடத்தும்படியும் மாவட்ட அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். பம்புகள் பராமரிப்பை சீராகச் செய்வதற்கு உதவும் வகையில் அறிவுரைகள் அடங்கிய புத்தகத்தை களப்பணியாளர்கள் உருவாக்கி உள்ளனர்.

12. கிராமப்புறச் சுகாதாரம் :

நல்ல சுகாதார சூழ்நிலை மக்களுக்கு அவசியமாகத் தேவை. மேலும் நல்ல சுகாதாரமே சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டில் ஏற்படும் 80 சதவிகித நோய்கள் தண்ணீர் மூலமும், மலக் கழிவு மூலமும்தான் ஏற்படுகின்றன. இந்த நோய்கள் வந்த பின்பு அவைகளை நீக்க செலவழிப்பதைக் காட்டிலும், அவை வராமல் தடுக்க ஆகும் செலவு குறைவே. எனவே, நல்ல சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே இந்த நோய்கள் ஏற்படாமல் செய்ய முடியும். திறந்த வெளியில் இயற்கைக் கடன்களைக் கழிக்கும் வழக்கம் அதில் உள்ள ஆபத்துக்களை அறியாதவாறு நடைபெற்று வருகிறது. அதிகமான இறப்புக்கு குறிப்

பாக குழந்தையின் மரணத்திற்கு இந்த வழக்கமே காரணமாக அமைந்துவிடுகிறது. வயிற்றுப்போக்கு, காலரா, டைபாயிட், யானைக்கால் வியாதி, குடற்புழு வியாதி,வயிற்றுழைச்சல்போன்ற வியாதிகள் திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் பயங்கரமான வியாதிகள் ஆகும். சுகாதார கழிப்பிடங்கள் பயன்படுத்தப்பட்டால் இந்த வியாதிகளால் ஏற்படும் மரணத்தைத் தவிர்ப்பதோடு இந்த வியாதிகளையும் ஒழித்துக் கட்டி விடலாம். மனித மலத்தை சிறந்த முறையில் துப்புரவு செய்தால், இந்த வியாதிகளை, கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதோடு, தமிழ் நாடு முழுவதிலும் சுகாதார நிலையை மேம்படுத்தலாம். மேலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலால் ஏற்படும் பயன்களை தக்க சுகாதாரச் சூழ்நிலை இல்லாதபோது பெறமுடியாது என ஆய்வுகள் கூறுகின்றன. எனவே, தக்க சுகாதார கழிப்பறைகள் இல்லாவிடில், ஆரோக்கியத்திற்கு பெரும் ஆபத்து ஏற்படுகிறது. பெண்களைப் பொறுத்த வரையில் தக்க கழிப்பறைகள் இல்லாமல் இயற்கைக் கடன்கள் கழிக்க மறைவான இடம் இல்லாத இக்கட்டான நிலையும் நிலவுகிறது.

அகில உலக குடிநீர் மற்றும் சுகாதார பத்தாண்டுத் (1981–1990) திட்டத்தின் ஒரு பகுதியாக 1982–83 முதல் படிப்படியாக நிறைவேற்றும் வகையில் ரூ. 16.94 கோடி செலவில், பெண்களுக்கான 11,366 கழிவறைகள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. 1986 பிப்ரவரி மாதம் இறுதி வரை 10,952 கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இக்கழிவறைகள் அனைத்திலும் தண்ணீர் வசதி ஏற்படுத்தவும், இவைகளைப் பராமரிக்கவும் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. யூனிசெப் நிறுவனம் மத்திய அரசு மற்றும் உலக வங்கி ஒத்துழைப்போடு தனிப்பட்டவர்கள் வீடுகளில் குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம் பற்றிய செயல் விளக்கத் திட்டம் 1984–85 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், தனிப்பட்டவர்கள் வீடுகளில் 920 கழிவறைகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. 31–3–1986 முடிய இதில் 904 கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் குறைந்த செலவிலான 1335 கழிவறைகள் கட்டுவதற்கும் இத்திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்டது. இதில் மார்ச் 1986 முடிய 700 கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள கழிவறைகள் 1986 ஏப்ரல் இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும்.

வீடுகளில் அமைப்பதற்கென குறைந்த செலவிலான கழிப்பறைகள் கட்டுவதற்கு மாதிரி வடிவம் ஒன்று தயாரிக்கப்பட்டே இந்தக் கழிவறைகள் கட்டப்பட்டன. இந்த மாதிரி வடிவம் தயாரிக்கப்படும்போது சுகாதாரத்தோடு அமைந்து சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதிக்காதவாறு அது வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் தொழில் நுட்ப விஞ்ஞான அடிப்படையிலும் அமைந்த அது, மக்களால் ஏற்றுக் கொள்ளும் வகையில்





வடிவமைக்கப்பட்டது. அத்தோடு மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அதன் விலையும் குறைவாக இருக்கும்படியும் எளிதில் கட்டி, பராமரிக்கவும் எளிதாக இருக்கும்படி அது வடிவமைக்கப்பட்டுள்ளது.

13. கிராமப் பணித் திட்டங்கள் :

இத்திட்டத்தின்கீழ் இணைப்புச் சாலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேம்படுத்தும் பணி எடுத்தக்கொள்ளப்பட்டது. வாகனங்கள் செல்லும் வகையில் மண் பரப்பிய சாலைகளை சரளைக்கல் சாலைகளாக மாற்றுதலும், மேம்படுத்தலும் ஆகிய பணிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதி பயன்படுத்தப்படுகிறது. 1986–87 ஆம் ஆண்டு முதல் இணைப்புச் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் அனைத்தும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது.

பள்ளிக் கட்டிடங்கள் :

சொந்தக் கட்டிடங்கள் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை பயனபடுத்தப்படுகிறது. ஆரம்ப மற்றும் உயர் துவக்கப்பள்ளிகளுக்குத் தேவையான பள்ளிக் கட்டிடங்களும் இத்திட்டத்தின்கீழ் கட்டப்படுகின்றன. 1984–85 ஆம் ஆண்டில் முடிக்கப்படாத பணிகளை செய்து முடிப்பதற்காக 1985–86 ஆம் ஆண்டில் ரூ. 146.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கென இத்திட்டத்தின் கீழ் 1986–87 முதல் தொகை ஒதுக்கீடு செய்யபட வேண்டியதில்லை எனவும், இனி எல்லா பள்ளிக் கட்டிடங்களையும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டவும் அரசு முடிவு செய்துள்ளது.

14. சிறுபாசனம் :

சிறுபாசன ஆதாரங்களைப் பாதுகாத்து பாராமரிக்கும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்தது ஆகும். மொத்தம் 100 ஏக்கருக்கும் குறைவாக உள்ள நிலங்களுக்கு நீர் அளிக்கும் சிறு பாசன ஆதாரங்களை "சுழல் முறை" (cycle system படி ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. மொத்தம் 3,28,076 ஹெக்டேர் நிலப்பரப்புக்கு நீர் அளிக்கும் 23,761 சிறு பாசன குளங்களை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. ஐந்தாண்டு சுழல் திட்டத்தைப் பின்பற்றி, எல்லா சிறுபாசனக் குளங்களையும் ஊராட்சி ஒன்றியங்களே பராமரிக்கும் வகையிலான திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதற்காக 1986–87 ஆம் ஆண்டில் ரூ. 55.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**15. 1986—87 ஆம் ஆண்டுக்கான பயிற்சித் திட்டங்கள் :**

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பயிற்சித் திட்டங்கள் சிறப்பிடம் வகிக்கின்றன. தக்க பயிற்சிகள்தான், சிறந்த பணியாளர்களை உருவாக்கி நல்ல பலன்களைத் தரும் என்பதால் தான் பயிற்சித் திட்டங்களுக்கு இத்தகைய சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துறையில் பணியாளர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை அளிப்பதற்காக ஊரக வளர்ச்சி இயக்குநரின்கீழ் கீழ்க்காணும் ஆறு பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன :—

(1) மாநில ஊரக வளர்ச்சி நிலையம் (தலைமை பயிற்சி நிலையம்) பவானிசாகர், பெரியார் மாவட்டம், இந்த நிலையம் விரைவில் சென்னை நகருக்கு வெளியே மாற்றப்பட உள்ளது.

(2) ஊரக விரிவாக்கப்பயிற்சி நிலையங்கள் (5 இடங்கள்):—

1. சத்யவிஜயநகரம்—வட ஆற்காடு மாவட்டம்.
2. தி. கல்லுப்பட்டி—மதுரை மாவட்டம்.
3. கிருஷ்ணகிரி—தர்மபுரி மாவட்டம்.
4. பட்டுக்கோட்டை—தஞ்சாவூர் மாவட்டம்.
5. பவானிசாகர்—பெரியார் மாவட்டம்.

இந்த பயிற்சி நிலையங்கள் அனைத்திலும் பட்டறைப் பிரிவுகள் உள்ளன. சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு பயிற்சியை (TRYSEM அளிப்பதில் இந்தப் பட்டறைப் பிரிவு பெரும் பங்காற்றி வருகின்றன. தி. கல்லுப்பட்டி மற்றும் சத்யவிஜயநகரம் ஆகியவற்றில் உள்ள ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில், மனை இயல் பிரிவு உள்ளது. இங்கே சமூக நலத் துறையைச் சார்ந்த பால சேவிகைகள் மற்றும் பெண் பணியாளர்கள் இங்கே பயிற்சி பெறுகின்றனர்.

பயிற்சி நிலையங்களின் தலைமை மையமாக விளங்கும் பவானிசாகர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையம் சென்னை நகருக்கு வெளியே விரைவில மாற்றப்பட உள்ளது. இந்த நிலையத்தில் கீழ்க்காணும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன:—

(1) வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான பணி பயிற்சி—1 மாதம்.

(2) விரிவாக்க அலுவலர் (தொழில்) பணி பயிற்சி—1 மாதம்.

(3) ஊரக வளர்ச்சித்துறை மாவட்ட நிலை அதிகாரிகள் மற்றும் இதர அதிகாரிகளுக்கான பயிற்சி—15 நாட்கள்.



(4) ஊராட்சி, கல்வி, சமூக நலம் ஆகிய வெவ்வேறு விரிவாக்க அலுவலர்களுக்கும், ஊராட்சி நிர்வாகம் அலுவலர்களுக்குமான சிறப்புப் பயிற்சி—15 நாட்கள்.

(5) இதர பயிற்சிகள்.

தி. கல்லுப்பட்டி மற்றும் சத்ய விஜயநகர ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையத்தில் உள்ள மனை இயல்பிரிவு பெண் பணியாளர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை அளித்து வருகிறது.

ஒரே பணி விதிகளின்கீழ் ( Single service Rules ) இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள், தட்டச்சர்கள் ஆகியோருக்கு 2 மாதகால பயிற்சியும், முதல் மற்றும் இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்களுக்கு ஒரு மாதப் பயிற்சியும் எல்லா ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்கூறிய பணி பயிற்சி வகுப்புகளைத்தவிர, ''கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ்'' மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் அனுப்பும் இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. இந்தப் பயிற்சிகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியின்போது பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை மற்றும் பயிற்சி நடத்த ஆகும் செலவு ஆகியவைகளை அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் தங்கள் நிதியிலிருந்து ஏற்றுக்கொள்கின்றன. பயிற்சி அளிக்கப்படும் தொழிலைப் பொறுத்து இந்தப் பயிற்சி வகுப்புகள் 3 முதல் 8 மாத காலம் வரை நடத்தப்படுகின்றன.

(1) ஆயில் எஞ்ஜின், மின்சார மோட்டார் செப்பனிடுதல், பராமரித்தல்.

(2) தெளிப்பான் அமைப்பு மற்றும் பயிர் பாதுகாப்பு, தொழில் நுட்பம்.

(3) மாட்டுவண்டி மற்றும் பண்ணைகளுக்குத் தேவையான பொருட்களை வடிவமைத்தல்.

(4) மின்சாரம் மற்றும் வாயு மூலம் உலோகங்களைப் பற்ற வைத்தல்.

(5) பம்பு வேலைகள்.

(6) மின்சார மோட்டார்களுக்கு கம்பி சுற்றுதல், மின் இணைப்பு தருதல்.

(7) கயிறு திரித்தல், பாய் முடைதல்.

(8) ஆட்டோ அமைப்பு மற்றும் ஓட்டுதல்.

(9) வானொலி, டிரான்ஸிஸ்டர் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி செப்பனிடுதல், பராமரித்தல்.

(10) தகர வேலைகள்.

(11) சைக்கிள் பழுது பார்த்தல்.

31–12–1985 முடிய 1,100 கிராமப்புற இளைஞர்கள் "சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்" (TRYSEM) ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

திருநெல்வேலியில் ஒரு ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம் அமைக்கக் கருதப்பட்டுள்ளது. ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்களின் தற்போதைய தேவையைக் கருத்தில் கொண்டு புதிய பயிற்சிகளை மேற்கொள்ள கொள்கை அளவில் அரசு முயற்சி செய்துள்ளது. தற்போதைய ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களை பலப்படுத்தும் நோக்கத்தோடு எல்லா ஊரக விரிவாக்கப்பயிற்சி நிலையங்களிலும் உள்ள பணியாளர் அமைப்பை மாற்றி அமைக்க அரசு திட்டம் தீட்டி உள்ளது. பவானிசாகர், தி. கல்லுப்பட்டி, கிருஷ்ணகிரி அணைக்கட்டு, சத்ய விஜய நகரம் ஆகிய இடங்களில் உள்ள நான்கு ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கென அரசு ரூ. 5 லட்சம் ஒதுக்கி உள்ளது. வட்டார வளர்ச்சி அதிகாரி நிலைக்குக் கீழ்ப்பட்ட அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க, ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் பயன்படுத்தப்படும். வட்டார வளர்ச்சி அதிகாரி மற்றும் அவருடைய நிலைக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கும் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையம் பயன்படுத்தப்படும்.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் :

தமிழ்நாட்டில் மொத்தம் 364 ஒன்றிய மருந்தகங்களும், 490 ஊரக மருந்தகங்களும் இயங்கி வருகின்றன. நவீன மருத்துவம், ஆயுர்வேதம், சித்த வைத்தியம் மற்றும் யுனானி வைத்தியம் கீழான சிகிச்சைகள் இந்த மருந்தகங்கள் மூலம் கிராம மக்களுக்கு கிடைக்கின்றன.

மேற்கூறிய இரு மருந்தகங்களையும் ஊராட்சி ஒன்றியங்களே பராமரித்து வருகின்றன, ஒன்றிய மருந்தகங்களைப் பொறுத்தவரையில் ஓர் ஒன்றியத்தில் ஒரு மருந்தகத்திற்கு ஆண்டுக்கு ரூ. 5,400 என்ற விகிதத்தில் அரசு மானியம் அளித்து வருகிறது.

மருந்தகங்கள் திறப்பதை முன்னிட்டு ஏற்படும் தொடர் செலவுகளை (Running Exependiture) அரசே ஏற்றுக் கொள்வதென்றும், இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும் தொகை ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலையைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் அரசு முடிவு எடுத்துள்ளது.





பேரூராட்சி நிர்வாகம் :

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் தான் தற்போதைய ஊராட்சி நிர்வாக முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவரை மாவட்டக் கழகங்களும், சமுதாய நல வட்டாரங்களும் தனித்தனி அமைப்புகளாக இயங்கி வந்தன. வளர்ச்சிப் பணிகளை சமுதாய நல வட்டாரங்கள் கவனிக்க இதர பணிகளை மாவட்டக் கழகங்கள் கவனித்துக் கொண்டன. 1958 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இந்த இரு அமைப்புகளையும் இணைத்தது. இந்த இருவகைப் பணிகளையும் நிறைவேற்ற ஊராட்சி ஒன்றியம் என்ற ஒரே அமைப்பை ஏற்படுத்த இச்சட்டம் வழி வகுத்தது. 1981 மே மாதம் வரை ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய நிர்வாகம் முழுவதும் ஊரக வளர்ச்சி இயக்குநரின்கீழ் இருந்தது. ஆனால், அதற்குப் பிறகு பேரூராட்சிகளுக்கென தனியாக ஓர் இயக்ககத்தை அரசு அமைத்தது. பேரூராட்சிகளின் நிர்வாகம் சிறப்புடனும், சீராகவும் விளங்குவதற்கு தூண்டுகோலாக அமையும் வண்ணம் பேரூராட்சிகளுக்கென தனி இயக்ககம் அரசால் அமைக்கப்பட்டது.

1. பேரூராட்சிகளின் வருவாய் விவரங்கள் :

பேரூராட்சிகள் ஆற்ற வேண்டிய பணிகளை, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958 பட்டியலிட்டுக் காட்டுகிறது. பேரூராட்சிகளால் நிறைவேற்றப்பட வேண்டுமென அரசு அறிவிக்கும் பணிகளோடு, பேரூராட்சிகள் கண்டிப்பாக மற்றும் தங்கள் விருப்பம் போல் ஆற்ற வேண்டிய பணிகளையும் இச்சட்டம் பட்டியலிட்டு உள்ளது. வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி போன்ற வரிகளை அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்புக்கு ஏற்ப, வரி விதிக்கும் அதிகாரம் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு வகைக்காக, வேளாண்மை நிலங்களின் மீதும் வரிவிதிக்க பேரூராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அங்காடி கட்டணம், வண்டி நிறுத்தும் இடங்களுக்கான கட்டணம், வருவாய் தரும் இனங்களின் மீதான கட்டணம், ஆபத்து மிகுந்த தொழில்களுக்கான உரிமக் கட்டணம், சொத்துக்களை கை மாற்றும்போது விதிக்கப்படும் தீர்வை, கேளிக்கை வரியில் இருந்து கிடைக்கும் பங்குத் தொகை ஆகியவை பேரூராட்சிக்கு வருவாய் தரும் வாயில்கள் ஆகும். ஊராட்சிகள் சட்டத்தின் 115 ஆவது பிரிவின்படி வசூலிக்கப்படும் உள்ளூர் செஸ் வரியில் ஒரு பங்கு பேரூராட்சிகளுக்கு உண்டு.

[1986 ஏப்ரல் 16

தமிழ்நாட்டில் மொத்தம் 645 பேரூராட்சிகள் உள்ளன. இந்தப் பேரூராட்சிப் பகுதியில் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் வாழ்கின்றனர். இந்த பேரூராட்சிகள் முதல் நிலை, இரண்டாம் நிலை, தேர்வு நிலை, நகரியங்கள் என பிரிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு :—

| | | பேரூராட்சிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | இரண்டாம் நிலை .. .. .. | 86 |
| 2. | முதல் நிலை .. .. .. | 280 |
| 3. | தேர்வு நிலை .. .. .. | 262 |
| 4. | நகரியங்கள் .. .. .. | 17 |
| | | 645 |

2. பேரூராட்சிகளுக்கு அளிக்கப்படும் நிதி உதவி :

பேரூராட்சிகளுக்கென தனி இயக்ககம் தொடங்கப்படும் முன்பு, அவைகளுக்கு மிகக் குறைந்த அளவில்தான் உதவித் தொகைகள் கிடைத்து வந்தன. ஆண்டுதோறும் வடிகால்கள் அமைப்பதற்காக (திட்டத்தில் சேராதது) ரூ. 0.45 இலட்சமும், சாலைகளில் கருங்கல் பரப்புவதற்கு (திட்டத்தில் சேராதது) ரூ. 15 இலட்சமும் மட்டுமே பேரூராட்சிகளுக்கு கிடைத்து வந்தன.

பொருளாதார நிலையைப் பொறுத்த வரையில் ஊராட்சிகளைப் போலவே உன்னத நிலையில் உள்ள பேரூராட்சிகளும் உண்டு. மிகவும் குறைந்த வருவாய் கொண்ட பேரூராட்சிகளும் உண்டு. 513 பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் தனி நபர் வருமானம் ரூ. 25-க்குக் கீழ்தான். 132 பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் தனிநபர் வருமானம் ரூ. 50-க்கும் கீழ்தான். அவ்வப்போது அகவிலைப் படிகள் உயர்த்தப்படுவதால், பேரூராட்சிகளின் நிர்வாகச் செலவு மிக அதிகமாகி அடிப்படை வசதிகளைக் கூட தம் பகுதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க இயலாத நிலையில் அவை உள்ளன.

3. தன்னிறைவுத் திட்டம்.

பேரூராட்சிப் பகுதிகள் பின்தங்கிய நிலையில் இருப்பதையும், அவைகளின் நிதி நிலை மிகக் குறைவாக இருப்பதையும் கருதி, தன்னிறைவுத் திட்டத்தை பேரூராட்சிகளிலும் அரசு நிறை



1986 ஏப்ரல் 16]

வேற்றியது. அடிப்படைத் தேவைகளைத் தீர்த்துவைக்கும் இந்தத் திட்டம் முழு மானியத்தோடு 1982-83 ஆம் ஆண்டு முதல் மூன்று கட்டங்களில் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன :—

(1) குடிநீர் வசதி.

(2) இணைப்புச் சாலைகள்.

(3) சிறுபாலங்கள்.

(4) வடிகால்கள்.

(5) ஆதி திராவிடர் மயானப் பாதை.

(6) துணி வெளுக்கும் இடங்கள் (தோபிகானா).

(7) தெரு விளக்குகள்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூன்று கட்டங்கள் பற்றிய விவரம் இதோ :—

(i). முதல் கட்டம் (1982—83) :

முதற் கட்டத்தில் ஒரு பேரூராட்சிக்கு ரூ. 3.42 இலட்சம் என்ற விகிதத்தில் மொத்தம் 146 பேரூராட்சிகளில் ரூ. 5.00 கோடி செலவில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதில் முடிக்கப்படாத வேலைகளைச் செய்து முடிப்பதற்காகவும் கண்ட்ரோல் விலை அல்லாத சிமிண்ட் வாங்கப்பட்டதால் ஏற்பட்ட செலவை ஈடுகட்டவும் கூடுதல் நிதியாக ரூ. 101.32 இலட்சம் அரசு வழங்கியது.

(ii). இரண்டாம் கட்டம் (1983—84) :

ஒரு பேரூராட்சிக்கு ரூபாய் இரண்டரை இலட்சம் வீதத்தில் 200 பேரூராட்சியில் மொத்தம் ரூ. 5 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதில் முடிக்கப்படாத வேலைகளைச் செய்து முடிக்க ரூ. 54.78 இலட்சம் கூடுதல் நிதியை அரசு வழங்கியுள்ளது.

(iii). மூன்றாவது கட்டம் (1984—85) :

ஒரு பேரூராட்சிக்கு ரூ. 2.92 இலட்சம் செலவில், 277 பேரூராட்சியில் மொத்தம் ரூ. 800.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

(iv) புதிதாக அமைக்கப்பட்ட பேரூராட்சிகள் (1985—86) :

1985—86 ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட 29 பேரூராட்சியில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காக ரூ. 84.68 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளித்தது.

மொத்தம் உள்ள எல்லா பேரூராட்சிகளிலும் சேர்ந்து தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைப் பற்றிய சாதனைப் பட்டியல் வருமாறு :—

1982—83 முதல் 1984—85 வரை மூன்று கட்டங்களாக பேரூராட்சியில் நிறைவேற்றப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தின் வெற்றி பற்றிய புள்ளி விவரங்கள்.

| வரிசை எண். | மேற்கொள்ளப் பட்ட பணி. | ஏற்படுத்தப் பட்ட சாதனை. (பணியின் எண்ணிக்கை.) | செலவிடப் பட்ட நிதி (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | குடிநீர் வழங்குதல் .. .. | 1,341 | 286.11 |
| 2 | இணைப்புச் சாலைகள் .. | 4,502 | 557.23 |
| 3 | சிறு பாலங்கள் .. .. | 2,469 | 238.60 |
| 4 | வடிகால்கள் .. .. | 5,418 | 952.32 |
| 5 | ஆதி திராவிடர் மயானப்பாதை | 184 | 18.26 |
| 6 | துணி வெளுக்கும் இடங்கள் (தோபிகானா). | 34 | 16.79 |
| 7 | தெருவிளக்குகள் .. | 297 | 2.19 |
| | | 14,245 | 2,071.50 |



பேரூராட்சிகளுக்கென தனி இயக்ககம் அமைக்கப்பட்ட பின்பு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க சாதனைகள் வருமாறு :—

4. (அ) ஊரக குடிநீர் வழங்குதல் :—

1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் 432 பேரூராட்சிகள் கிராமப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே கிராம ஊராட்சிகளைப் போல இப் பகுதிகளையும் கருதிய அரசு, முழு மானியத்தோடு கூடிய, ஊரக குடிநீர்த் திட்டத்தை இப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தியது.

4. (ஆ) குடிநீர் வழங்கலில் உலக வங்கியின் உதவி :

உலக வங்கி உதவியுடன் கூடிய ரூ. 42.84 கோடி மதிப்பீட்டிலான 72 குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் 63 திட்டங்கள் 75 சதவிகித மானியத்தையும், 9 திட்டங்கள் நூறு சதவிகித மானியத்தையும் பெறும்.

4. (இ) கை இறைப்பான் மற்றும் மின்விசை இறைப்பான் பராமரிப்பு :

12,492 கை இறைப்பான்களையும், 2,449 மின்விசை இறைப்பான்களையும் பேரூராட்சிகள் பராமரித்து வருகின்றன. இறைப்பான்களை பராமரிப்பதற்கும், நீர் வற்றிப்போன இறைப்பான்களுக்கு பதிலாக புதிய இறைப்பான்கள் அமைக்கவும், துருபிடித்த இரும்பு மேல்நிலை நீர் தொட்டிகளுக்குப் பதிலாக துருபிடிக்காத காங்கிரீட் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கும், 1982–86 ஆம் ஆண்டுகளில் அரசு ரூ. 50 இலட்சம் வழங்கி உள்ளது. 1986–87-ல் இவ்வகைகளுக்காக கூடுதலாக நிதி வழங்கப்படும்.

5. குறைந்த செலவில் நிறைந்த சுகாதாரம் :

(அ) மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட சிறு மற்றும் நடுத்தர நகர்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் (IDSMI):

இத் திட்டத்தின் கீழ் குறைந்த செலவில் நிறைந்த சுகாதார வசதிகளை அளிப்பதற்காக ஹோசூர் மற்றும் கள்ளக்குறிச்சி பேரூராட்சிகள் மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதற்கென மத்திய அரசு ரூ. 27.40 இலட்சத்திற்கு அனுமதியும் வழங்கி உள்ளது. இந்தத் தொகையில் ரூ. 14.60 இலட்சத்தை மத்திய அரசும், ரூ. 12.80 இலட்சத்தை மாநில அரசும் ஏற்றுக்கொள்ளும். இத் தொகை, 739 உலர் கழிவறைகளை சுகாதார கழிப்பிடங்களாக மாற்றவும், 2,200 புதிய கழிப்பறைகள் கட்டவும் பயன்படுத்தப்படும்.

[1986 ஏப்ரல் 16

(ஆ) மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1955—துப்புரவுப் பணியாளர்களுக்குத் தொல்லையில் இருந்து விடுதலை :—

இத் திட்டத்தை 3 பேரூராட்சியில் நிறைவேற்றுவதற்காக மத்திய அரசு 40.00 இலட்ச ரூபாய்க்கு அனுமதி வழங்கி உள்ளது. இச் செலவுத் தொகையை மத்திய அரசும் நம் மாநில அரசும் சரி பாதியாக ஏற்றுக் கொள்ளும். மலக் கழிவுகளைத் துப்புரவு செய்யும் பணியாளர்களுக்கு சமூகம் விதித்த கொடுங்கோன்மையிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுவார்கள். விடுவிக்கப்பட்டு வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். இத் திட்டத்தின் கீழ், பழைய உலர் கழிவறைகள், நவீன சுகாதார கழிவறைகளாக மாற்றப்படும்.

6. தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் :

1981 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின் போது கிராமப் பகுதிகளாகக் கருதப்பட்ட பேரூராட்சிகளுக்குத் தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்த, தொடர்ந்து வற்புறுத்திய பின்பு மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. 1981 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 432 பேரூராட்சிகள் கிராமப் பகுதியாக கருதப்பட்டுள்ளன. 1985–86 ஆம் ஆண்டில் 137 பேரூராட்சிப் பகுதியில் ரூ. 585.00 இலட்சம் செலவில் தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை நிறைவேற்ற அரசு அனுமதி வழங்கியுள்ளது. சாலைகள் மேம்பாடு, வடிகால் திட்டங்கள், சமூகக் காடு வளர்ப்பு, கிடங்குகள், சமூகக் கூடங்கள், அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்கும் பணிகள் இத் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டன.

7. நகரிய முன்னேற்றம் :

அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ; நகரங்களில் உள்ள பேருந்து நிலையம், அங்காடி வளாகம், சந்தைகள், திறந்தவெளி திரை அரங்குகள், தெரு விளக்குகள், குழந்தைகள் மனமகிழ் மன்றங்கள், கட்டணக் கழிப்பிடங்கள் ஆகியவைகள் அமைக்கும் பணியில், மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி நகரியங்களில் ரூ. 58.00 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

8. ஒருங்கிணைந்த நகர்ப்புற முன்னேற்ற திட்டம் :

(அ) மத்திய அரசின் பங்கு :

மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ''சிறு மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்'' தலா ரூ. 80.00 இலட்சம் மதிப்பீட்டில் ஹோசூர் மற்றும் கள்ளக்



1986 ஏப்ரல் 16]

குறிச்சி பேரூராட்சிப் பகுதியில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அங்காடி வளாகங்கள், ஆட்டுத் தொட்டி, மற்றும் பேருந்து நிலையங்கள் ஆகியவை இத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றன.

(ஆ) மாநில அரசின் பங்கு :

இத்திட்டத்தின் கீழ் மாநில அரசின் பங்கான 35 பேரூராட்சியில் சந்தைகள் மேம்பாடு, பேருந்து நிலையம், அங்காடி வளாகங்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| வரிசை எண். | திட்டம். | | வேலைகளின் எண்ணிக்கை. | மதிப்பீட்டுச் செலவு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1. | பேருந்து நிலையங்கள் | .. | 16 | 156.40 |
| 2. | சந்தை மற்றும் அங்காடி வளாகங்கள் கட்டுதல். | | 13 | 51.76 |
| 3. | கட்டணக் கழிப்பிடங்கள் | .. | 21 | 11.65 |
| | மொத்தம் | .. | 50 | 219.81 |

9. ஆதி திராவிடர் குடியிருப்பு மேம்பாடுகள் :

ஆதி திராவிடர் பகுதி ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சாலை வசதி, குடிநீர் வசதி, வடிகால் வசதி, தெரு விளக்கு போன்றவை ஏற்படுத்தப்பட ரூ. 10.00 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. இத்தொகை 1985–86 ஆம் ஆண்டில், ஒரு குடியிருப்புக்கு ரூ. 2 இலட்சம் வீதம் 5 குடியிருப்புகளில் செலவிடப்படும்.

10. ஒருங்கிணைந்த நகர்ப்புற முன்னேற்றத் திட்டம் (ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கியது):

(அ) மாநில அரசின் பங்கு :

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற 32 பேரூராட்சிகளை நகர் மற்றும் ஊரமைப்பு வாரியம் தேர்ந்தெடுத்துள்ளது. ஒரு பேரூராட்சிக்கு ரூ. 20 இலட்சம் வீதம் வழங்கப்பட்டு, பேருந்து நிலையம், சந்தைகள் போன்றவை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கட்டப்படும்.

[1986, ஏப்ரல் 16

(ஆ) மைய அரசின் பங்கு :

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் பங்காக நகர் மற்றும் ஊரமைப்பு வாரியம் தேர்ந்தெடுத்த 8 பேரூராட்சிகள் அடங்கிய பகுதியில் 5 திட்டங்கள் நிறைவேற்றப்படும். ஒரு திட்டத்திற்கு ரூ. 80.00 இலட்சம் வீதம் இத் திட்டம் ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிறைவேற்றப்படும்.

## இணைப்பு—IV.

(51ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க).

நகராட்சி நிர்வாகம்

கொள்கை விளக்கக் குறிப்பு

கோரிக்கை எண். 28

1986–87

98 நகராட்சிகளும், 8 நகரியங்களும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. அவைகளின் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண். | நகராட்சியின் நிலை. | நகராட்சிகளின் எண்ணிக்கை. | நகரியங்களின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | சிறப்பு நிலை .. .. | 8 | .. | 8 |
| 2 | தேர்வு நிலை .. .. | 11 | 5 | 16 |
| 3 | முதல் நிலை .. .. | 35 | 1 | 36 |
| 4 | இரண்டாம் நிலை .. | 31 | 2 | 33 |
| 5 | மூன்றாம் நிலை .. | 13 | .. | 13 |
| | மொத்தம் .. | 98 | 8 | 106 |



1986 ஏப்ரல் 16]

அண்மைக் காலமாக, நகரங்கள் பல்வகையில் வளர்ச்சியடைந்து வருவதால் கிராமங்களிலிருந்து பெருமளவில் மக்கள் நகரங்களுக்கு குடிபெயர்ந்து வருவது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதன் விளைவாக நகர்ப்புறங்களில் ஏற்படும் பிரச்சினைகளும் அதிகரித்து உள்ளன. இப்பிரச்சினைகளைத் தீர்த்து, பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை இன்றியமையா வசதிகளைச் செய்து தரும் பணி பெருமளவில் அதிகரிப்பது தவிர்க்க இயலாததாகும்.

நகர்ப்புறங்களில் மக்கட் தாகை பெருமளவில் பெருகிவருவது என்பதனை கீழ்க்காணும் குறிப்புகள் தெளிவாக்குகின்றன :

| | | |
|---|---|---|
| மக்கட்தொகை | 1961 கணக்கின்படி | 45,11,165 |
| மக்கட்தொகை | 1971 கணக்கின்படி | 57,13,328 |
| மக்கட்தொகை | 1981 கணக்கின்படி | 74,36,961 |
| மக்கட்தொகை | 1985 (உத்தேச மைய ஆண்டு மக்கட்தொகை) | 81,26,414 |

கடந்த சில ஆண்டுகளில் பொருட்களின் விலை ஏற்றத்தினாலும், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் ஏற்றமும், அரசு ஊழியர்களுக்கு இணையாக சம்பள விகிதங்களை திருத்தி அமைத்ததாலும், மேலும், அகவிலைப்படி உயர்வினாலும் ஏறக்குறைய அனைத்து நகராட்சி நிதி நிலைமைகளும் பற்றாக்குறையாகவே உள்ளது. இதன் விளைவாக அநேக நகராட்சிகளில் மக்களுக்குத் தேவையான இன்றியமையா அடிப்படை வசதிகளை அளிக்க இயலாத நிலைமையில் உள்ளன. இந்நிலைமையை சமாளிக்க அரசு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு பல்வேறு திட்டங்களைத் தீட்டியும், நகராட்சி நிதி நிலைமையை பெருக்க வருவாய் தரத்தக்க இனங்களின் கீழ் பல திட்டங்களை அறிமுகப்படுத்தியும், நகராட்சிகளின் நிர்வாக செயல் திறனை மேம்படுத்தி வருகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு ரூ. 3,505.64 இலட்சத்தில் கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1985–86 மற்றும் 1986–87 நிதி ஆண்டுகளில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்துள்ள விவரங்கள் பின்வருமாறு :—

"ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடும், செலவினமும் மற்றும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு

[1986 ஏப்ரல் 16

செய்யப்பட்டுள்ள விவரமும், மற்றும் 1985—86 மற்றும் 1986—87 ஆகிய நிதி ஆண்டுகளில் அரசின் நிதி உதவி விவரங்களும் பின் வருமாறு :

| பகுதி தலைப்பின் விபரம். | ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிதி செலவினம். | ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு. | நிதி ஒதுக்கீடு. 1985-86 | 1986-87 |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| **பகுதி—1. நகர மேம்பாடு—** | | | | | |
| 1 நகராட்சி ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளி கட்டிடங்கள் கட்ட நிதி உதவி. | 84.87 | 84.87 | 100.00 | 20.00 | 20.00 |
| 2 நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி கட்டிடங்கள் கட்ட நிதி உதவி. | 60.00 | 60.00 | 50.00 | 10.00 | 10.00 |
| 3 தனியார் தெருக்களை அபிவிருத்தி செய்யும் சுழல் நிதி திட்டம். | 25.00 | 25.00 | 50.00 | .. | .. |
| 4 நகராட்சி குடிசைப் பகுதிகளில் தொலைக்காட்சி பெட்டிகள் அமைத்தல். | .. | .. | 20.00 | 2.00 | 2.00 |
| 5 தன்னிறைவுத் திட்டம் | 1,347.50 | 1,366.49 | 1,500.00 | 500.00 | 0.01 |
| 6 தமிழ்நாடு நகர்ப்புறப் பயிற்சி நிலையத்திற்கு நிதி உதவி வழங்குதல். | 5.00 | 7.17 | .. | .. | 0.01 |
| 7 நகராட்சி ஊழியர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்குதல். | 50.00 | 14.00 | 220.00 | 50.00 | 50.00 |
| 8 விரைவுபடுத்தப்பட்ட குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 300.00 | 300.00 | 250.00 | 40.00 | 40.00 |
| 9 தமிழ்நாடு நகராட்சி நிதி உதவிக் கழகத்திற்கு நிதி உதவி. | .. | .. | 100.00 | .. | 0.01 |
| 10 பொதுசுகாதார லாரிகள் வாங்குதல். | .. | .. | .. | 99.65 | 0.01 |



1986 ஏப்ரல் 16]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| பகுதி 2. திட்டம் 1986-87ம் ஆண்டு. | | | | | |
| 1 பிற்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம். | 50.00 | 50.00 | 50.00 | .. | 10.00 |
| 2 மண்டல நகாரட்சி நிர்வாக இயக்கக கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி உதவி. | 8.00 | 8.00 | .. | 5.00 | 500 |
| 3 வடிகால்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு. | .. | .. | 50.00 | .. | 15.00 |
| 4 நகராட்சி மருந்தகங்களை அபிவிருத்தி செய்தல். | .. | .. | 50.00 | .. | 11.00 |
| 5 தாய்சேய் நல விடுதிகளின் முன்னேற்றத்திற்கு நிதி உதவி. | .. | .. | 50.00 | .. | 10.00 |
| 6 நகராட்சி துப்புரவு தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தல். | .. | .. | 150.00 | .. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்குப் பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளது. |
| புதிய திட்டங்கள் : | | | | | |
| 1 நலிவுற்ற நகராட்சிகளுக்கு அகவிலைப்படி அளிப்பதன் காரணமாக ஏற்படும் நிதி பளுவை சரிக்கட்ட மான்யம் வழங்குதல். | .. | .. | 160.00 | .. | .. |
| 2 நகரசுத்தி தொழிலாளர் எண்ணிக்கையை அதிகரித்தல். | .. | .. | 200.00 | .. | .. |
| மொத்தம் .. | 1,930.37 | 1,915.53 | 3,000.00 | 726.65 | 173.44 |
| பகுதி 2. சாலைகள் மற்றும் பாலங்கள் : | | | | | |
| 1 நகராட்சி சாலைகள் மற்றும் பாலங்கள் கட்ட நிதி உதவி வழங்கல். | 150.00 | 150.00 | 250.00 | 55.75 | 55.00 |
| பகுதி 3 மத்திய அரசு ஆதரவுடன் செயல்படுத்தும் திட்டங்கள் : | | | | | |
| 1 மத்திய அரசின் ,நகர்ப்புற குடிசைப்பகுதிகளின் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கல். | 102.06 | 102.06 | 200.00 | 57.00 | 57.00 |

1986 ஏப்ரல் 16

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 2 குறைந்த செலவிலான கழிவறை கட்டும் திட்டம் (4 நகராட்சிகளில் மத்திய அரசு செயல்படுத்தும் திட்டம்). | 54.77 | 54.77 | 55.64 | 55.64 | 0.01 |
| மொத்தம் .. | 156.83 | 156.83 | 255.64 | 112.64 | 57.01 |

சுருக்கம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பகுதி 1 நகர்ப்புறமேம்பாடு | 1930.37 | 1,915.53 | 3,000.00 | 726.65 | 173.04 |
| 2 பகுதி 2—சாலைகள் மற்றும் பாலங்கள். | 150.00 | 150.00 | 250.00 | 55.75 | 55.00 |
| 3 பகுதி 3 மத்திய அரசு ஆதரவுடன் செயல்படுத்தும் திட்டங்கள். | 156.83 | 156.83 | 255.64 | 112.64 | 57.01 |
| மொத்தம் .. | 2,237.20 | 2,222.36 | 3,505.64 | 895.04 | 285.05 |

நிதி பற்றாக்குறையினாலும், அநேக நகராட்சிகளில் நிதி வசதிக்கான ஆதாரங்கள் பெருகாமலிருப்பதாலும், நகராட்சிகள் பழைய கழிவுகளை அகற்றும் வண்டிகளுக்குப் பதிலாக புதிய லாரிகள் மற்றும் வண்டிகள் வாங்க முடியாமலிருக்கின்றன. இதனால் அநேக நகராட்சிகளில் துப்புரவுப்பணி சீர்கேடு அடைந்து மக்களின் கண்டனத்துக்கு உள்ளாகின்றன. நகர்ப்புற சுகாதாரத்தைச் சீராக வைக்கும் பொருட்டு துப்புரவு லாரிகள் வாங்க நிதியுதவி அளிக்க அரசு முன்வந்துள்ளது. இதற்காக, நடப்பு நிதியாண்டில் ரூ. 1,000 அடையாள ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட இழப்புகளுக்கு அரசின் உதவி
வெள்ள நிவாரணம்.

1985 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பழுதடைந்த சாலைகள், கட்டிடங்கள், குடிநீர் விநியோக உபகரணங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்து, புதுப்பிக்க 1985–1986-ல் அரசால் ரூ. 234.92 இலட்சங்கள் வழங்கப்பட்டது; அத்தொகையில் 734 சாலைப்பணிகள், 131 கட்டிடப் பணிகள், 44 குடிநீர் விநியோகப் பணிகள் ஆகியவை செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் மற்றும் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருவத்திபுரம் ஆகிய 28 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டது.



1986 ஏப்ரல் 16]

வறட்சி நிவாரணம் :

வறட்சி நிவாரணத்தின் கீழ் 1985–86-ல் ரூ. 62.80 இலட்சங்கள் 11 நகராட்சிகளுக்கு, லாரிகள் மூலம் குடிநீர் வழங்கவும் புதிய ஆழ்துளை குழாய்கள் அமைக்கவும், தற்போதுள்ள ஆழ்துளை குழாய்களை ஆழப்படுத்தவும், ஊரணிகளுக்கு பழுது பார்த்தல், தூர் எடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காகவும் அரசால் வழங்கப்பட்டது.

தன்னிறைவுத் திட்டம் :

பல நகராட்சிகளின் நிதி நிலைமை மிகவும் பற்றாக்குறையாக உள்ளதன் காரணமாக நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்க இயலாத நிலையினை அறிந்து அரசு இதன் பொருட்டு தன்னிறைவுத் திட்டம் என ஒரு புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. படிப்படியாக ஆண்டுதோறும் இத் திட்டம், தமிழ்நாட்டில் உள்ள 98 நகராட்சிகள் மற்றும் 8 நகரியங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அரசு வழங்கிய நிதி உதவி பின் வருமாறு :

| கட்டம் ஆண்டு. | | பயனடைந்த நகராட்சிகளின் எண்ணிக்கை. | மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை. | அரசு வழங்கிய தொகை |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | | (ரூபாய்) இலட்சத்தில். |
| 1. | 1982–83 .. | 20 | 1,492 | 500.00 |
| 2. | 1983–84 .. | 31 | 1,738 | 500.00 |
| 3. | 1984–85 .. | 30 | 1,560 | 500.00 |
| 4. | 1985–86 .. | 25 | 1,166 | 347.50 |
| | | 106 | 5,956 | 1,847.50 |

நடப்பு ஆண்டில் மூன்றாம் மற்றும் இறுதி தவணைத்தொகையாகிய ரூ. 152.50 இலட்சத்தை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 16

நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்துதர வேண்டிய தேவையை ஒப்பிடுகையில் இத் திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் நிதி உதவி குறைவு. எனவே, இத்திட்டத்தை மீண்டும் இரண்டாவது முறையாக அனைத்து நகராட்சிகளிலும் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இத் திட்டத்திற்கென அரசு ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 1,500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

நகர பஞ்சாயத்துக்களை மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்குதல் :

பல நகர பஞ்சாயத்துக்கள் மூன்றாம் நிலை நகராட்சிகளாக உருவாக்க அரசு நிர்ணயித்துள்ள நிதி அளவினை எட்டியுள்ளன. எனினும், அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற தலைவர்கள் பொறுப்பேற்றதும் இதனை பரிசீலனை செய்யலாம் என தீர்மானித்தது. தற்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் அமைக்கப்பட்டதால் தகுதியுடைய நகர பஞ்சாயத்துக்களை மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கும் திட்டத்தினை அரசு பரிசீலனை செய்ய உள்ளது.

நகராட்சி தேர்தல்கள் :

மொத்தம் உள்ள 98 நகராட்சிகளில் 97 நகராட்சிகளில் நகர்மன்றத் தலைவர் பதவிக்கும் நகரமன்ற உறுப்பினர் பதவிக்கும் தேர்தல்கள் அரசால் நடத்தப்பட்டன. மயிலாடுதுறை நகராட்சியைப் பொறுத்தவரையில் நகரமன்றத் தலைவர் பதவிக்கும் வார்டு எண். 1-க்கும் நீதிமன்றம் விதித்த தடையால் தேர்தல்கள் நடைபெறவில்லை. மேலும் சீர்காழி நகராட்சியில் வார்டு எண். 1-லும் மேலப்பாளையம் நகராட்சியில் வார்டு எண். 22-லும், சேலம் நகராட்சியில் வார்டு எண். 13-லும் தேவக்கோட்டை நகராட்சியில் வார்டு எண். 12-லும்தேர்தலுக்கு வேட்பு மனுதாக்கல் செய்த வேட்பாளர்கள் ஒரு சிலர் மரணமடைந்ததன் காரணமாக தேர்தல் மேற்கண்ட வார்டுகளில் ஒத்தி வைக்கப்பட்டது.

மயிலாடுதுறை நகராட்சியில் நகர மன்றத் துணைத் தலைவர் பதவிக்கும் நகரமன்ற உறுப்பினர் பதவிக்கும் நீதிமன்றம் விதித்த தடை நீக்கப்பட்டதும் தேர்தல் நடத்தப்படும். வேட்பாளர்கள் மரணமடைந்ததன் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட நகரமன்ற உறுப்பினர்களுக்காக தேர்தல் புதிதாக நடத்தப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றங்கள் அந்நகர்ப்புறங்களில் எல்லா வகை அபிவிருத்திகளையும் மேற்கொள்ளவும், ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் நகர மேம்பாட்டு தலைப்பின்கீழ் உள்ள அனைத்து திட்டங்களையும் நல்ல முறையில் செயல்படுத்தவும் அரசுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என நம்பப்படுகிறது.



1986 ஏப்ரல் 16]

நகராட்சிகளில் ஐந்தாண்டுக்கு ஒருமுறை சொத்துவரி முறைப்படுத்துதல் :

இதுவரை, நகராட்சிகளில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை சொத்துவரி திருத்தம் செய்வது தேர்ந்தெடுக்கப்பட்ட நகர் மன்றம் வரும் வரை ஒத்தி வைக்கப்பட்டது. தற்பொழுது அரசாணை எண். 280, ந.நி. மற்றும் கு.வ. துறை, நாள் : 3—3—1986ல் சொத்துவரி திருத்தம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சொத்துவரி திருத்தம் வெகு நாட்களாக செய்யாமல் நிலுவையாக உள்ளது. தற்சமயம் இதனை எடுத்துக் கொள்வதால் நகராட்சிகளின் வருமானம் கணிசமான அளவுக்கு உயரக்கூடும். அதே சமயம் வெவ்வேறு சமயங்களில் செய்யப்பட்ட சொத்துவரி விதிப்புகளில் உள்ள வேறுபாடுகளும் களையக்கூடும். ஆதலால் சொத்துவரி திருத்தம் வெகு விரைவில் எடுத்துக்கொள்ளப்பட்டு 1—10—1986 முதல் அமுல்படுத்தப்படும். இதனால் நகராட்சிகளின் வருமானத்தில் கூடுதலாக 50 சதவீதம் வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும், நகராட்சிகளின் நிதி நிலைமையை மேம்படுத்தவும் இயலும்.

## சென்னை மாநகராட்சி.

### முன்னுரை.

இந்தியாவின் பழம்பெரும் மாநகராட்சிகளுள் ஒன்றான சென்னை மாநகராட்சி கிழக்கிந்திய கம்பெனியால் பிறப்பிக்கப்பட்ட சட்டத்தின் கீழ் 29—9—1688-ல் நிறுவப்பட்டது. 1792ம் ஆண்டு பாராளுமன்ற சட்டம் சென்னை மாநகராட்சிக்கு சென்னையில் வரிகள் வசூலிக்கும் அதிகாரத்தினை வழங்கியது. 1919 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட (அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது) சென்னை மாநகராட்சி சட்டம் தற்பொழுது செயல் பட்டு வருகிறது.

### மக்கட்தொகை மற்றும் பரப்பளவு.

1978 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 12 பஞ்சாயத்துக்கள்இணைக்கப்பட்டதன் மூலம் சென்னை மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டராக பெருகியுள்ளது.

1. கொடுங்கையூர்.
2. வில்லிவாக்கம்.
3. கொளத்தூர்.
4. எருக்கஞ்சேரி.
5. விருகம்பாக்கம்,

6. சாலிகிராமம்.

7. கோடம்பாக்கம்.

8. வேளச்சேரி.

9. திருவான்மியூர்.

10. கனகம் தரமணி.

11. கோயம்பேடு.

12. திருமங்கலம்.

1961-ல் 17.2 இலட்சங்களாக இருந்த சென்னை மாநகராட்சியின் மக்கட் தொகை 1981-ல் 34 இலட்சங்களாக அதிகரித்துள்ளது. தற்பொழுதுள்ள ஜனத்தொகை ஏறத்தாழ 36 இலட்சங்களாகும். சென்னை நகருக்கு ஒவ்வொரு நாளும் வந்து போகும் ஜனத் தொகை 4 முதல் 5 இலட்சங்களாகும்.

## நிர்வாகம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் 1—12—1973-ல் கலைக்கப்பட்டு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். அவர் மன்றம் மற்றும் நிலைக் குழுக்களின் அதிகாரங்களை நிர்வகித்து வருகிறார். சென்னை மாநகராட்சியின் தலைமை நிர்வாக அதிகாரி ஆணையர் ஆவார்.

## நிதி நிலை.

தனி அதிகாரி—மன்றம் மற்றும் நிதி நிலைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டு 1986–87 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் பற்றிய விவரங்கள் வருமாறு :

| | வரவு. | செலவு. | பற்றாக் குறை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சங்களில்). | | |
| 1. பொது நிதி .. | 4,422.92 | 4,433.74 | (—) 10.82 |
| 2. மூலதன நிதி .. | 895.00 | 2,597.08 | * |

*முந்தைய ஆண்டுகளிலிருந்து நடைபெற்றுவரும் திட்டங்களும் சேர்த்து.



## வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

### பொது நிதி.

1986–87 ஆம் ஆண்டின் உத்தேச வருமானம் ரூ. 44.23 கோடியாகும். 1985–86 ஆம் ஆண்டில் வருமானம் திருத்தப்பட்ட மதிப்பிட்டின்படி, ரூ. 39·61 கோடி. ரூ. 4·62 கோடி அதிக வருமானம் கீழ்க்கண்ட இனங்களில் வசூல் மூலமாக எதிர் பார்க்கப்படுகிறது.

| | (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| 1. சொத்து வரி .. .. .. .. | 146.42 |
| 2. இதர வரிகள் .. .. .. .. | 51.50 |
| 3. விற்பனை வரியின் மீதான கூடுதல் உபரி வரி | 25.00 |
| 4. கேளிக்கை வரி .. .. .. .. | 25·00 |
| 5. சொத்து மாற்றத்தின் மீதான தீர்வை .. | 5.00 |
| 6. இதர இனங்கள் .. .. .. .. | 209·43 |

1986–87 ஆம் ஆண்டின் செலவினம் ரூ. 44·34 கோடியாக உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் செலவு ரூ. 41·86 கோடியாகும். 1986–87 ஆம் ஆண்டின் பற்றாக்குறை ரூ. 0·11 கோடியாகும். மாநகராட்சி சொத்துவரியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதோடு அதன் வருமானத்தைப் பெருக்கிட கடைகள், சந்தைகள், கட்டிடங்கள் வாடகையை அதிகரிப்பதோடு விளம்பர வரியையும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

பல ஆண்டுகளுக்கு முன் நிர்ணயிக்கப்பட்டு மரத் தீர்வையை அதிகரிக்கப்படுவதற்கு அரசு ஆணைக்காக இம்மாநகராட்சி அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சத்துணவுத் திட்டம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சத்துணவுத் திட்டம், சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 15–9–1982 முதல் செயல்படுத்தப்படுகிறது. 1.70 இலட்சம் மொத்தம் மாணவ மாணவிகளுள் 1,00,256 குழந்தைகளுக்கு சத்துணவு வழங்க, சத்துணவு தயாரிக்கும் பொருட்டு 336 சத்துணவு கூடங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

[1986 ஏப்ரல் 16

இச்சத்துணவுத் திட்டம் 14—9—1984 முதல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

சத்துணவு மையங்களில் பணியாற்றும், அமைப்பாளர்கள், சமையலர் மற்றும் உதவியாளர்கள், தற்போது பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை போன்ற தகவல்கள் கீழே தரப் பட்டுள்ளன.

வயது வரம்பு.

| | 5 முதல் 9 | 10 முதல் 15 | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. மொத்த சத்துணவு மையங்கள். | 330 | 35 | 365 |
| 2. பயன்பெறும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை. | 82,392 | 33,780 | 1,16,172 |
| 3. அமைப்பாளர்கள் .. | 330 | 35 | 365 |
| 4. சமையலர்கள் .. | 379 | 54 | 433 |
| 5. உதவியாளர்கள் .. | 379 | 54 | 433 |
| 6. 500க்கும் மேற்பட்ட வருக்கு உணவு தயார் செய்வதற்கான சமையல் கூடங்களின் எண்ணிக்கை. | 48 | 19 | 67 |
| 7. 500க்கும் கீழ் உள்ள வர்களுக்கு உணவு தயார் செய்வதற் கான சமையல் கூடங்களின் எண் ணிக்கை. | 282 | 16 | 298 |



1986 ஏப்ரல் 16]

போக்குவரத்து (சாலை பணிகள்) :

சென்னை மாநகராட்சியால் 1,570 கி.மீ. சாலைகள் பரா மரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 268 கி.மீ. பேருந்து சாலை களாகவும், 1,302 கி.மீ. ஏனைய சாலைகளாகவும் உள்ளன. பொதுவாக இச்சாலைகள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது புதுப்பிக்கப்பட வேண்டும். அதற்கு ஐந்தில் ஒரு பங்கு சாலை களை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க தற்போதைய விலைவாசி யைக் கருத்தில் கொண்டு சுமார் ரூ. 13.75 கோடி நிதி தேவைப் படுகிறது. ஆனால் கடந்த நான்கு ஆண்டுகளில் சராசரியாக, மாநகராட்சி சாலைகளுக்காக ரூ. 6.00 கோடி மட்டும் செல வழித்து வருகிறது. போக்கு வரத்தினால் சாதாரணமாக ஏற் படும் சீர்கேடுகளைத் தவிர, புயல் மழை போன்ற இயற்கை சீற்றங்களினாலும் சாலைகள் ஆண்டு தோறும் மிகவும் பாதிக்கப் படுகின்றன.

1978 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியில் 11 நகரப் பஞ்சாயத்துக்களும் ஒரு கிராமப் பஞ்சாயத்தும் இணைக்கப் பட்டன. இங்குள்ள பல சாலைகள் மிகவும் மோசமான மண் சாலைகளாகவே இருந்ததால் இதற்கெனத் தனி கவனம் செலுத் தப்பட்டு கடந்த ஆண்டில் ரூ. 175.00 இலட்சம் இச்சாலைகளுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டு பல சாலைகள் புதுப்பிக்கப்பட்டு உள்ளன. இப்பஞ்சாயத்துக்களில், சாலை புதுப்பிப்பதற்கு 1978 முதல், 1984–85 வரை ரூ. 317 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

அரசு, நடப்பு ஆண்டில் இதர சாலைகள் மேம்பாட்டிற்கு ரூ. 234.00 இலட்சங்களும் பேருந்து வழித்தட சாலைகள்மேம் பாட்டிற்கு ரூ. 131.50 இலட்சங்களும் வழங்கி உள்ளது.1985-ம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட சாலைகளைச் செப்பனிடுவதற்காக ரூ. 300.00 இலட்சங்கள் (இதர சாலைகள்) மற்றும் ரூ. 574.00 இலட்சங்கள் (பேருந்து வழித் தடச்சாலைகள்) அரசு மாநகராட்சிக்குவழங்கி உள்ளது. ரூ. 35.50 இலட்சங்கள் பேருந்து வழித்தடச் சாலைகளில் நடை பாதைகள் அமைப்பதற்காக, அரசு வழங்கி உள்ளது. சாலை களுக்காகச் செலவிடப்படும் நிதியைத் தவிர நடைபாதைகள் சீரமைப்பதற்காகவும், குண்டு குழிகளைச் சீர் செய்வதற்காகவும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 2000 கோடி வரை செலவழிக்கப் படுகிறது.

பஞ்சாயத்துகளிடமிருந்து சேர்த்து கொள்ளப்பட்ட சாலை களை மட்டும் ஐந்தாண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கவும், வருடந் தோறும் பராமரிக்கவும், ஆண்டொன்றுக்கு ரூ. 67.50 இலட்சம் செலவு செய்ய வேண்டியுள்ளது.

பேருந்து உட்புற சாலை மற்றும் இதர சாலைகளையும், குடிசைப் பகுதியிலுள்ள சாலைகளையும் பராமரிக்க 1986–87ம் ஆண்டிற்கு ரூ. 601,19 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 16

பேருந்து வழித்தடச் சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள்.

1986–87 ஆம் ஆண்டில் 54 பேருந்து வழித்தடச் சாலைகளை மேம்படுத்த ரூ. 258,19 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கீழ் குறிப்பிட்டுள்ள முக்கியமான பேருந்து வழித்தடச் சாலைகள் 1986-87 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட உள்ளன—

1. கொன்னூர் நெடுஞ்சாலை.
2. இராஜாஜி சாலை.
3. தங்கசாலை.
4. டெய்லர்ஸ் சாலை
5. வேப்பேரி நெடுஞ்சாலை.
6. தண்டையார் பேட்டை நெடுஞ்சாலை.
7. சிமிட்ரி சாலை.
8. வட டெர்மினஸ் சாலை (கோபதி நாராயண தெருவி லிருந்து).
9. வில்லேஜ் சாலை.
10. காவல் ஆணையர் அலுவலக சாலை.
11. பீட்டர்ஸ் சாலை.

மேலும் 654 உற்புறச் சாலைகளும் ரூ. 275 இலட்சம் செலவில் 1986–87ல்புதுக்பிக்கப்பட உள்ளன. ரிமிக்ஸ் தொழில் நுட்பத்தின் மூலம் சாலைகளை மேம்பாடு செய்தல் சென்னையில் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் ஒரே சீராகவும் சாலைகள் செப்பனிடுவதால் மேலும் மேலும் உயராமலும் சாலை பராமரிக்க இயலும்.

முந்தைய பஞ்சாயத்து சாலைகள் :

சென்னை மாநகருடன் 1978 ல் இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களில் உள்ள சாலைகள் பெருமபாலும் மண்சாலைகளாகவே உள்ளன. இவற்றிற்கு தனி கவனம் செலுத்தப்படுகிறது. 1986–87 ஆம் ஆண்டில் ரூ. 70 இலட்சம் செலவில் 216 சாலைகள் அமைக்கப்பட உள்ளன.

சாலை பராமரிப்பு :

சாலைகளைப் புதுப்பிப்பதுடன், சாலைகளின் நடைபாதைகள் போடுதல், பராமரிப்பு, சாலைகளில் தோண்டியவற்றை சீர் செய்தல் ஆகியவற்றிற்கு ரூ. 118 இலட்சம் 1986–87 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 16]

பாலங்கள் :

கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றின் மீது கட்டப்பட்டுள்ள பாலங்கள் மிகவும் குறுகலாக இருப்பதினால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. அவ்வாறே, போக்குவரத்து நெரிசல்களை தவிர்ப்பதற்காக சில இருப்புப்பாதையை கடக்குமிடங்களில் சுரங்கப் பாதை அமைக்க வேண்டியுள்ளது. பாலங்களை அகலப்படுத்துவதற்கு அரசின் அனுமதி கோரப் பட்டது. ரிசர்வ் வங்கி அருகிலுள்ள சுரங்கப் பாதையை பெரும் அளவில் பழுது பார்ப்பதற்கும் பக்கிங்காம் கால்வாய் மீது முண்டக் கண்ணி அம்மன் கோவில் தெருவிலுள்ள பழைய பாலத்தை இடித்துக் கட்டுவதற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப் பணிகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை முறையே ரூபாய் 23.00 இலட்சம், ரூ. 35.00 இலட்சமாகும்.

ரிசர்வ் வங்கி அருகிலுள்ள சுரங்கப்பாதையை பழுதுபார்க்கும் பணி மாநில அரசின் நெடுஞ்சாலை மற்றும் கிராமப்பணி துறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 40.00 இலட்சம் வைப்புத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. ரூ. 23.00 இலட்சங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், தற்போதைய மதிப்பீட்டுச் செலவு ரூ. 50.00 இலட்சத்திற்கும் அதிகமாகிவிடும் என கூறப்படுகின்றது. இந்தக் கூடுதல் தொகையை வழங்குமாறு அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் அனுமதியை எதிர்பார்த்து நெடுஞ்சாலை துறையினிடம் மாநகராட்சி ரூ. 40.00 இலட்சம் செலுத்தியுள்ளது.

முண்டகக்கண்ணி அம்மன் கோவில் தெருவிலுள்ள பாலத்தைக் கட்டும் பணி துவங்கியுள்ளது. இதுவரையில் ரூ. 17.96 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் நடந்து வருகிறது. மேலும், 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமடைந்துள்ள பாலங்கள், கால்வாய்கள், துணைவழிகள் முதலியவைகளை செப்பனிடவும், மேம்படுத்தவும் 19 பணிகள் ரூ. 85.32 லட்சம் அளவில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதற்கான தொகையை 1985–86ல் அரசு மான்யமாக அறிவித்து உள்ளது. பழுது பார்க்க எடுக்கப்பட்ட முக்கியமான பாலங்களாவன :

பாலங்கள்—

1. திரு. வி.க . பாலம்.
2. மன்ரோ பாலம்
3. பென்னி பாலம்

4. ஆண்டர்சன் பாலம்.

5. காமராஜர் பாலம்.

6. டாக்டர் நாயர் பாலம்.

7. காந்தி இர்வின் பாலம்.

8. ஆமில்டன் பாலம்.

தரைப்பாலங்கள் :

1. சூளை தரைப்பாலம்.

2. மடுவாங்கரை தரைப்பாலம்.

3. ஆலந்தூர் தரைப்பாலம்.

சுரங்கப்பாதை :

1. பெரம்பூர் சுரங்கப்பாதை.

1985–86 ஆம் ஆண்டில் மணிகார் சத்திரம் அருகில் ஓர் சுரங்கப் பாதையும் ஒட்டேரி ஓடை அருகே ஒரு பாலமும் அமைக்க அரசு ரூ. 15.00 லட்சம் வழங்கியுள்ளது.

தனியார் தெருக்கள் :

சென்னை மாநகராட்சியில் 1,543 தனியார் தெருக்கள் உள்ளன. அரசாணை எண். 1822, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, 27—11—1980 தேதி ஆணையின்படி இத்தெருக்களிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்கள், சாலைகள், தெருவிளக்குகள் வடிகால்கள் ஆகியவைகள் அமைப்பதற்கு ஆகும் செலவில் 25 சதவிகிதம் தொகையை செலுத்திய பின்னரே இத்தகைய வசதிகள் அவர்களுக்கு செய்து கொடுக்கப்படும். இப்பணிகளை நிறைவேற்றியபின் மீதமுள்ள 75 சதவிகிதம் தொகையை சுலபமான தவணைகளில் வசூலிக்கப்படும்.

தனியார் தெருக்களில் சாலை தெரு விளக்கு மற்றும் வடிகால் ஆகியவை அமைப்பதற்காகும் செலவில் 25 சதவிகிதம் தொகையை முன்பணமாக பெறாமலேயே இப்பணிகளை நிறைவேற்றவும் இப்பணிகளை நிறைவேற்றி முடித்த பின் இதற்கான செலவுகளை இத்தெருக்களிலுள்ள வீட்டுச் சொந்தக்காரர்களிடமிருந்து சொத்து வரி தவணைகளுடன் 10 ஆண்டுகளில் வசூலிக்கவும் அனுமதி வழங்குமாறு அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 5.00 கோடி நிதி உதவியை வழங்குமாறு கேட்டுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



குடிசைப்பகுதிகள் :

தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டபின், குடிசைப் பகுதிகள் அகற்றவும், குடிசை வாழ் மக்களை குடியேற்றுவதற்கும் பொருத்தமான பல பகுதிகளை குறிக்கப்பட்டன. நகரில் மூன்றில் ஒரு பகுதியினர் குடிசைகளில் வாழ்கின்றனர். இவர்களது எண்ணிக்கை சுமார் 13 இலட்சமாகும். இவர்கள் நகரில் சுமார் 1,700 குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். சென்னை நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 1-ன் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 52 குடிசைப் பகுதிகளும், திட்டம் 2-ன் கீழ் 65 குடிசைப் பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட குடிசைப் பகுதிகளை சிறந்த முறையில் பராமரிப்பதற்கு மாநகராட்சி சிறப்பாக நிதி ஒதுக்கியுள்ளது. உதாரணமாக குடிசைப் பகுதிகளில் துப்புரவு சாலைகளை பராமரித்தல், தெரு விளக்குகளமைத்தல் ஆகியவற்றிற்காக 1985–86 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சுமார் ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1986–87 ஆம் வருடத்திலும் அதே தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுக்கழிப்பிடங்கள் :

சென்னை நகரில் 8,943 இருக்கைகளுடன் கூடிய 894 பொது கழிப்பிடங்களை மாநகராட்சி பராமரித்து வருகின்றன. இவற்றில் 99 கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மீதியுள்ள 795ம் பொதுக் கழிப்பிடங்கள். இந்த 795 பொதுக் கழிப்பிடங்களில் 1,112 துப்புரவு பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். கட்டணம் வசூலிக்கப்படும் பொதுக் கழிப்பிடங்கள் மூலமாக சென்னை மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4.96 இலட்சம் வருவாய் கிடைக்கின்றது. பொது கழிப்பிடங்களை பராமரிப்பதற்கு மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்காகும் செலவு ரூ. 41.00 இலட்சமாகும்.

அநேகமாக எல்லா பொதுக் கழிப்பிடங்களிலும் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

பீகார் மாநிலத்திலுள்ள பாட்னா நகரில் புதிய வடிவமைப்புடன் கூடிய பொது கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்த வடிவமைப்பின்படி மிகக் குறைந்த அளவு நீரே தேவைப்படுகின்றது. மாநகராட்சியின் பரிந்துரைக்கிணங்க பின் வரும் 8 இடங்களில் இத்தகைய பொது கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அவையாவன :

1. லோன் சதுக்கம்.

2. கிருஷ்ண பிள்ளை தெரு, பெரம்பூர்.

3. பிராட்வே வெளியூர் பேருந்து நிலையம்.

4. வ. உ. சி. சாலை.

5. ஜி. என். சாலை.
6. கிரியப்பா சாலை
7. கால்வாய் சாலை.
8. மைலாப்பூர் குளம் அருகில்.

ஏற்கனவே உள்ள கழிப்பிடங்களை சீர் அமைக்கவும், புதிய பல இடங்களில் கழிப்பிடங்கள் கட்டுவதற்காகவும் அரசு ரூ. 100.00 இலட்சம் அளித்துள்ளது. இதற்கான ஆக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நகரம் முழுமையும் இணைக்கும்படியான மழை நீர் வடிகால் அமைப்பு சென்னையில் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் மழை காலங்களில் தாழ்வான பகுதிகளில் மழை நீர் பல நாட்கள் தேங்கி விடுகின்றது. இதனால் மக்கள் மிகவும் அவதிப்படு கின்றனர். தற்போதுள்ள மழை நீர் வடிகால்களின் மொத்த நீளம் 454.20 கி. மீட்டராகும். இது நகரிலுள்ள சாலைகளில் மொத்த நீளத்தில் நான்கில் ஒரு பகுதியாகும்.

ஏற்கனவே 1985–86ல் ஒதுக்கப்பட்ட ரூ. 259.00 இலட்சங் கள் தவிர தற்போதுள்ள மழை நீர் வடிகால்களை பழுது பார்க்க புதிய கால்வாய்கள் அமைக்க அரசு ரூ. 435 இலட்சம் வழங்கியுள்ளது.

8.3 கி. மீ. நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் ரூ. 84.00 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டு பழுது பார்க்கப்படும் 32.5 கி.மீ நீளமுள்ள புதிய மழைநீர் வடிகால்கள் நகரில் பல பகுதிகளில் குறிப்பாக, மழைநீர் தங்கும் இடங்களில் கட்டப்படும். புதிய மழைநீர்வடிகால்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்களும் அவற்றின் மதிப்பீடும் கீழே தரப்பட்டுள்ளன.

| வரிசை எண். | பகுதி. | மதிப்பீடு. (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | விருகம்பாக்கம் .. .. .. | 35.00 |
| 2 | அரும்பாக்கம் .. .. .. .. | 27.00 |
| 3 | திருவான்மியூர் .. .. .. | 30.78 |
| 4 | சாஸ்திரி நகர், பெசன்ட் நகர் .. | 39.12 |
| 5 | சைதாப்பேட்டை .. .. .. | 21.30 |
| 6 | சாலிகிராமம் .. .. .. .. | 41.32 |
| 7 | கொளத்தூர் .. .. .. .. | 41.63 |
| 8 | பெரியார் நகர், பாரதி நகர், அயனாவரம் வசந்தா காலனி, அண்ணாநகர் மற்றும் புளியந்தோப்பு .. .. .. | 89.39 |
| 9 | வில்லிவாக்கம் .. .. .. | 25.00 |



துப்புரவு :

சென்னை நகரில் 1,650 கி.மீ. நீளமுள்ள சாலைகளும் 1,700 குடிசைப் பகுதிகளும் உள்ளன. இப்பகுதிகளில் மாநக ராட்சி துப்புரவு பணிகளை செய்து வருகின்றது. தினமும் சுமார் 1,800 டன் குப்பைகள் சேருகின்றன. கொடுங்கையூர், கோயம் பேடு, நேசப்பாக்கம் ஆகிய இடங்களிலுள்ள மூன்று குப்பை கொட்டும் இடங்களில் இக்குப்பைகள் கொட்டப்படுகின்றன. கால்நடை நிலையங்களும் 796 குப்பை வண்டிகளும் குப்பை களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. 174 லாரிகள் குப்பை கொட்டுமிடங்களில் இக்குப்பைகளை கொண்டு கொட்டும் பணியில் ஈடுபட்டுள்ளன. 6,685 துப்புரவு பணியாளர்கள் இப்பணியினை கவனித்து வருகின்றனர். மேலும் துரிதமாக, குப்பை கூளங்களை சேமித்து வைத்த இடங் களிலிருந்து அவைகளை கடைசியாக கொட்டுமிடங்களுக்கு அகற்றுவதற்காக மாநராட்சி ஊர்திகளைத்தவிர தமிழ்நாடு பொருள் போக்குவரத்து கழக ஊர்திகளையும் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. மேலும் துப்புரவு பணிகளுக்காக லாரி கள் புதிதாக வாங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படும்.

குப்பைகளை சேகரித்து எடுத்துச் செல்வதற்கு தேவை யான ஊர்திகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுகின்றன. மேலும் இப்பணியை சீரிய முறையில் செய்ய, திறம் வாய்ந்த "மெக்கானிக்கல் ஸ்வீப்பர்". 'ஹைட்ரோகான் ரோல்ஆன் டிப்பர்' போன்ற சாதனங்களை ரூ. 21.00 இலட்சம் மதிப்பில் பயன்படுத்தப்படும். நெரிசல் அதிகமான இடங்களில் 'டம்பர்கள்' போன்ற சாதனங்கள் பயன்படுத்தப்படும்.

திடக்கழிவு மேலாளுகை :

1985–86-ஆம் ஆண்டுக்கு கழிவு மேலாளுகை திட்டத் திற்கு ரூ. 32.04 இலட்சம் அரசு உதவியளித்துள்ளது. மேற்கண்ட ஆண்டில் வழங்கிய நிதி உதவியுடன் இதுவரை இத்திட்டத்திற்கு அரசு ரூ. 157.04 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. இந்த தொகை (1) கை வண்டிகள் (2) குப்பைதொட்டிகள், (3) குறைந்த அளவு அகலமுள்ள வண்டிகள், (4) புல்டோசர், (5) குப்பை கொட்டும் நிலையங் கள் கட்டுதல், (6) லோடர் மற்றும் (7) டிப்பர் முதலியவை களை வாங்குவதற்கு செலவழிக்கப்படும்.

திடக்கழிவு மேலாளுகை மற்றும் மாநராட்சி பணிகளில் தரத்தினை உயர்த்துதல் பற்றி ஆலோசனை வழங்குவதற்காக ஆலோசனைக் குழுமம் நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழு மத்தில் ஏற்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் நகராட்சி பணிகளின் தரத்தை உயர்த்துவதற்கு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஆலோசனைக் குழுமத் திற்காக ரூ. 4.13 லட்சம் செலவிடப்படுள்ளது.

[1986 ஏப்ரல் 16

**தெரு விளக்குகள்:**

சென்னை நகரத்தில் தெரு விளக்குகள் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சென்னை நகர எல்லையில் மட்டும் 44,606 தெரு விளக்குகள் உள்ளன. மேலும் சென்னை மாநகராட்சி எல்லையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 12 பஞ்சாயத்து பகுதிகளில் 7,454 தெரு விளக்குகள் உள்ளன. தெரு விளக்குகளின் விவரம் பின் வருமாறு :—

| | |
|---|---|
| சோடியம் ஆவி விளக்குகள் | 3,799 |
| மெர்குரி ஆவி விளக்குகள் | 2.122 |
| குழல் விளக்குகள் | 37,057 |
| மிகு ஒளி விளக்குகள் மற்றும் இதர விளக்குகள். | 1,628 |
| நகருடன் இணைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துப் பகுதிகளில் உள்ள விளக்குகள். | 7,454 |
| மொத்தம் .. | 52,060 |

முன்னாள் பஞ்சாயத்து பகுதிகளிலுள்ள 7,454 விளக்குகளில் 6,478 விளக்குகள் தமிழ்நாடு மின்ரவாரிய மின் இணைப்பில் இருந்து, தமிழ்நாடு மின்வாரியம் பராமரித்து வருகிறது. மேற்கண்ட விளக்குகளுக்கு உண்டான பராமரிப்பு செலவு, மின்சார பயனீட்டளவு சென்னை மாநகராட்சியால் செலுத்தப்படுகின்றன. ஏற்கனவே மேற்படி 12 பஞ்சாயத்துக்களில் 976 தெரு விளக்குகள் சென்னை மாநகராட்சியின் தரத்திற்கேற்ப மாறுதல் செய்யப்பட்டு மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

புதைமின்கம்பிகள், நாட்பட்ட நிலையிலும் பழுதான நிலையிலும் அடிக்கடி தெரு விளக்குகள் பழுதடைந்து விடுவதை தடுத்திட பழைய புதை மின்கம்பிகள் வடங்கள், புதிய புதைமின் கம்பிகளாக படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளுக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியப் பகுதிகளுக்கும் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன.



1986 ஏப்ரல் 16]

அதிக வெளிச்சம் கொடுப்பதினாலும் மின் சக்தி மிச்சமாவதினாலும் போக்குவரத்து நெரிசல் உள்ள தெருக்களுக்கு சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு வருகின்றன. இதுவரை திட்டத் தட்ட 3,700 சோடியம் ஆவி விளக்குகள் மேற்கண்ட நெரிசல் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ளன. தெரு விளக்குகள் சென்னை நகரத்தில் பொதுக் கழிப்பிடங்கள் அருகாமையிலும் பொருத்தப்பட்டு வருகின்றன.

1986–87-ல், வரவு-செலவு திட்டத்தில் தெரு விளக்கு, சோடியம் வேப்பர் விளக்கு, புதைமின் கம்பிகளை மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்காக ரூ. 323.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1,000 சோடியம் வேப்பர் விளக்குகள் பொருத்தப்பட இருக்கின்ற முக்கிய இடங்கள் வருமாறு:

1. சாந்தோம் நெடுஞ்சாலை.
2. சர்தார் பட்டேல் சாலையில் ஒரு பகுதி.
3. ராஜ்பவன் சாலை.
4. அண்ணா நகர் அவின்யூ-இரண்டு, மூன்றாம் பகுதி.
5. எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை.
6. திருவொற்றியூர் நெடுஞ்சாலை.
7. பல்லவன் சாலை.
8. எஸ். என். செட்டி தெரு.
9. மேடவாக்கம் குளச்சாலை.

மேலும் 48 குடிசைப்பகுதிகளில் 658 மின் விளக்குகள் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் 1,150 விளக்குகள் பொருத்தப்படும்.

கட்டிடங்கள் கட்டுதல் :

மாநகர பள்ளிகள், மகப்பேறு நிலையங்கள், மாநகர அலுவலகங்கள், சலவைத்துறை, இடுகாடு, சுடுகாடு, கழிவறைகள், அங்காடிகள், ஆகியவைகளுக்கான கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் கட்டப்படுகின்றன. அடையாறில் மகளிர் தங்கும் விடுதி, மற்றும் நவீன கட்டணக்கழிப்பிடங்கள் போன்ற முக்கியமான வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அரசு வழங்கும் நிதியிலிருந்தும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் மூலமாகவும் இவ்வேலைகள்

[1986 ஏப்ரல் 16

மேற் கொள்ளப்படுகின்றன. ரூ. 216.54 இலட்சம் செலவில் 1986-87-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கட்டிட வேலைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | பள்ளிக் கட்டிடங்கள் (விஞ்ஞானக் கூடங்கள் சேர்த்து). | 10 |
| 2. | மருந்தகக் கட்டிடங்கள் | 4 |
| 3. | அங்காடிகள் | 6 |
| 4. | மகளிர் தங்கும் விடுதி | 1 |
| 5. | அலுவலகக் கட்டிடங்கள் | 4 |
| 6. | பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் | 3 |
| 7. | சலவைத் துறைகள் | 4 |
| 8. | இடுகாடு, சுடுகாடு | 3 |

கல்வி.

சென்னை நகரில் ஆரம்பக் கல்வி அளிப்பது மாநகராட்சியின் பொறுப்பாகும். தவிர, உயர்நிலை, மேல்நிலைக் கல்வியும் சென்னை மாநகராட்சியால் அளிக்கப்பட்டு வருகிறது.

ஆரம்பக் கல்வி

சென்னை மாநகராட்சி 369 ஆரம்பக் கல்விப் பள்ளிக் கூடங்களை நிர்வகித்து வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1,56,500 ஆகும். ஆசிரியர் மற்றும் மற்ற நிர்வாக ஊழியர்களின் எண்ணிக்கை 4,792. மேற்கண்ட 369 பள்ளிக் கூடங்களில் 28 பள்ளிக் கூடங்கள் தனியார் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. இப் பள்ளிக்கூடங்களை நாளடைவில் மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1985—86ஆம் ஆண்டிற்கு ரூ. 57.96 இலட்சம் அளவில் புது கட்டிடங்கள் கட்டவும் அதற்கான நிலம் வாங்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

உயர்நிலை, மேல்நிலைக் கல்வி

சென்னை மாநகராட்சி 25 உயர்நிலை, 10 மேல்நிலைப் பள்ளிக் கூடங்களை நிர்வகித்து வருகிறது. எல்லாப் பள்ளிக் கூடங்களும் மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களில் உள்ளன. இவற்றில் பயிலும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை 33,250. ஆசிரியர் மற்றும் இதர ஊழியர்களின் எண்ணிக்கை 1,529 ஆகும்.



1986 ஏப்ரல் 16]

பரிசுத் திட்டங்கள்:

மாநகராட்சிப் பள்ளிக்கூட மாணவர்களை அதிக மதிப்பெண்கள் பெற ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு பரிசுத் திட்டம் நடைமுறையில் உள்ளது.

பத்தாம் வகுப்பு ஆசிரியர்களின் செயல்திறனை சிறப்பிக்கவும் ரொக்கப்பரிசு வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசு வழங்குவதற்கு ரூபாய் 38,450 ஒதுக்கப் பட்டுள்ளது.

பொது சுகாதாரம்

மற்ற அலுவல்களுடன் சுகாதாரம், பராமரிப்பு, தொற்று நோய் தடுப்பு, பிறப்பு இறப்பு புள்ளி விவரங்கள் சேகரித்தல், மகப்பேறு நிலையங்கள் அமைத்தல், மற்றும் குடும்ப நலத் திட்ட நிலையங்கள் அமைத்தல் போன்ற வேலைகளையும் மாநகராட்சி நிறைவேற்றி வருகிறது.

கீழ்க்காணும் மருந்தகங்கள், மகப்பேறு நிலையங்கள், போன்றவைகள் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | மருந்தகங்கள் .. .. | 69 |
| 2. | மகப்பேறு நிலையங்கள் .. | 40 |
| 3. | குடும்ப நல நிலையங்கள் | 24 |
| 4. | குடும்ப நல அறுவைச் சிகிச்சை நிலையங்கள். | 4 |
| 5. | தொற்று நோய் மருத்துவ மனை. | 1 |
| 6. | காச நோய் மருந்தகம் | 2 |

சுகாதார மேம்பாடுகளுக்காக 1986—87-ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஒதுக்கப்பட்டுள்ளது:—

| | (1) | (ரூபாய் இலட்சங்களில்) (2) |
|---|---|---|
| 1. | மருந்துகள் .. .. .. | 50.00 |
| 2. | கொசுத் தொல்லை ஒழிக்க பூச்சி மருந்துகள் | 15.00 |
| 3. | குடும்ப நலத் திட்டம் .. .. | 10.00 |
| 4. | நோயாளிகள் உணவு .. .. | 1.36 |
| 5. | மற்ற மருந்தகச் செலவுகள் .. | 4.00 |
| 6. | நோய் பாதிக்கா நிலை உருவாக்கும் திட்டம் | 1.00 |

[1986 ஏப்ரல் 16

கூவம் நதி, அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகியவை நகரின் அனைத்துப் பகுதிகளிலும் நீர் நிலைகளைக் கொண்டு உள்ளதுதான் கொசுத் தொல்லைக்கான மூல காரணம் ஆகும். அந்நீரில் உள்ள நீர்த் தாமரைகள் கொசுத் தொல்லைகளைப் போக்கும் திட்டங்களுக்கு எதிரிகளாக உள்ளன. எனினும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளித்தல், 60 புகை கக்கும் இயந்திரங்கள் உபயோகித்தல் (1985-86-ல் வாங்கி தீவிரமாக பயன்படுத்தப்பட்டவை) தொடர்ந்து நடைபெறும். மாநில சுகாதார இயக்ககம் டி.டி.டி. தெளிப்பதற்குத் தேவையான மருந்தை சென்னை மாநகராட்சிக்கு அளித்துள்ளது. இதன் மூலம் குடிசை பகுதிகளிலும் தாழ்வான பகுதிகளிலும் மருந்து தெளித்தல் மேற்கொள்ளப்படும்.

1986-87-ஆம் ஆண்டிற்கான குடும்ப நலத் திட்டத்தில் குறியீடு 46,300 ஆகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை மாநகராட்சிக்கு நகர்ப்புறவளர்ச்சியின் கீழ் ரூ. 25 00 கோடி மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநில திட்டக் குழு அறிவித்த தொகையாகும். அவற்றின் விவரங்களாவன :—

| (1) | (ரூபாய் இலட்சங்களில்) (2) |
|---|---|
| 1. தெரு விளக்கு அபிவிருத்தி .. .. | 277.00 |
| 2. திடக்கழிவு மேலாளுகை (சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2). | 173.00 |
| 3. குடிசைப் பகுதிகள் அபிவிருத்தி .. .. | 50.00 |
| 4. பலவகைப்பட்ட மானியம் .. .. .. | 1,300.00 |
| 5. பொது மக்களிடமிருந்து பெறப்படும் கடன்கள் | 500.00 |
| 6. மழை நீர் வடிகால்கள் .. .. .. | 200.00 |
| மொத்தம் | 2,500.00 |



1986 ஏப்ரல் 16]

**1986-87 ஆம் ஆண்டுத் திட்டம் :**

1986-87-ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சிக்கான இரண்டாம் பகுதி திட்டத்தின்கீழ் பின்வரும் 3 திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன :—

| (1) | திட்டத்தின் மொத்த மதிப்பு. (2) | 1986-87 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சங்களில்) | |
| 1. துப்புரவுப் பணிகளுக்காக ரோல்-ஆன் டிப்பர்கள் மற்றும் டம்பர்கள் வாங்குதல். | 54.00 | 20.00 |
| 2. கூவம் ஆற்றின் மேல் உள்ள ஆண்டர்சன் பாலத்தை அகலப்படுத்துதல். | 70.00 | 10.00 |
| 3. நடைபாதை கடைக்காரர்களுக்காக மாநகராட்சிக்குச் சொந்தமான 36 இடங்களில் அங்காடிகள் கட்டுதல். | 157.00 | 20.00 |
| மொத்தம் | 281.00 | 50.00 |

மேற்கூறிய திட்டங்கள் பற்றிய முக்கியமான விவரங்கள் பின்வருமாறு :—

1. துப்புரவுப் பணிகளுக்காக ரோல் ஆன் டிப்பர்கள் மற்றும் டம்பர்கள் வாங்குதல்.

துப்புரவுப் பணியாளர்கள் குப்பையை கையினால் தொடுவதை தவிர்ப்பதற்காகவும் குப்பைகளை வண்டிகளில் கொண்டு செல்லும்போது வழியில் சிந்துவதைத் தடுப்பதற்காகவும் சென்னை மாநகராட்சி முதலில் ஒரு ரோல் ஆன் டிப்பர் வாங்கியது. இது மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுவதுடன் மிகவும் திருப்திகரமாக இயங்கி வருகிறது. எனவே, மேலும் 6 ரோல் ஆன் டிப்பர்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாட்டு வண்டிகளை படிப்படியாக அகற்றி துப்புரவுப் பணியினை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் 6 டம்பர்களை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 16

2. ஆண்டர்சன் பாலத்தை அகலப்படுத்துதல் :

பாந்தியன் சாலை, கமாண்டர்-இன்-சீப் சாலை, கிரீம்ஸ் சாலை, மூர்ஸ் சாலை, கல்லூரி சாலை ஆகிய சாலைகள் சந்திக்குமிடத்தில் கூவம் ஆற்றின் மேல் தற்போதுள்ள பாலம் மிகவும் குறுகலாக இருப்பதால் இப்பகுதியில் அடிக்கடி போக்கு வரத்து நெரிசல்கள் ஏற்படுகின்றன. எனவே, நடைபாதை மற்றும் சைக்கிள் செல்வதற்கான தனி வழியுடன் 4 வண்டிகள் ஒரே சமயத்தில் செல்லும் வகையில் இப்பாலத்தை அகலப் படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1986–87 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மொத்தம் ரூபாய் 70.00 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

3. நடைபாதை கடைக்காரர்களுக்காக மாநகராட்சிக்குச் சொந்தமான 36 இடங்களில் அங்காடிகள் கட்டுதல்.

சென்னை பெருநகரின் பல்வேறு முக்கியமான பகுதிகளில் போதுமான பொது அங்காடிகள் இல்லாத காரணத்தினாலேயே நடைபாதைக் கடைகள் தோன்றுகின்றன. இத்தகைய நடை பாதை கடைகளை தவிர்ப்பதற்காக மாநகராட்சிக்குச் சொந்த மான 36 இடங்களில் சுமார் 1,000 கடைகள் கட்ட உத்தேசிக் கப்பட்டு உள்ளது. இத்திட்டத்திற்கு மொத்தம் ரூபாய் 157 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநராட்சியில் வயர்லஸ் கருவிகள் அமைத்தல் :

வெள்ளம், விபத்து போன்ற பல சமயங்களில் பல்வேறு அலுவலர்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தின் போது பல்வேறு அலுவலர்களுக்கிடையே உடனடித் தொடர்பு கொள்ளும் வசதியில்லாதபடியினால் பல சிரமங்களை அனுபவிக்க நேர்ந்தது. சென்னை மாநகராட்சி, மக்களுக்கு மிகவும் தேவையான சாலைகள், துப்புரவு, தெரு விளக்குகள், சுகாதாரம் போன்ற அன்றாட தேவைகளை கவனிக்க உடனடியாக உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டியிருப் பதால் நவீன பொதுத் தொடர்பு வசதிகள் மிகவும் இன்றி யமையாததாகும். ஆவின், பல்லவன் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு மின்சார வாரியம் போன்ற இதர நிறுவனங்கள் வயர்லஸ் தொடர்பு வசதிகளைப் பெற்றிருக்கின்றன. எனவே, நகரின் முக்கியமான பகுதிகளிலும் , சோதனை வண்டிகளிலும் வயர்லஸ் கருவிகளை அமைப்பதின் மூலம் உடனடித் தொடர்பு கொள்ளும் வசதியை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு ரூபாய் 15.00 இலட்சம் செலவாகுமென மதிப் பிடப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 16]

கணக்குகளை கம்ப்யூட்டர் மயமாக்குதல் :

சென்னை மாநகராட்சியில், ஊதியக் கணக்கு, சொத்து வரி, மற்றும் இதர கணக்குகளை கம்ப்யூட்டர் மூலம் கணக்கு வைத் தல் வளர்ச்சியில் உள்ளது. தொழிற்கூடங்களில் உள்ள பொருட் களை கம்ப்யூட்டர் மூலம் சரிபார்த்தல் பின்பு எடுத்துக் கொள் ளப்படும். இதற்காகும் நிதி உதவியில் முதல் இரு பகுதிகளை உலக வங்கியும், பின்பு ஆகும் செலவினை சென்னை மாநக ராட்சியும் ஏற்றுக் கொள்ளும்.

சென்னை மாநகராட்சியின் நிர்வாக சீர்திருத்தம் :

சென்னை மாநகராட்சியில் நிர்வாகத்தை சீர் அமைத்து பொது மக்களுக்கு துரிதமாகவும் சிறந்த முறையிலும், சேவை செய்யும் நோக்கத்துடன், சென்னை மாநகராட்சியில் ஒரே இடத்தில் அமைந்துள்ள அனைத்து பொறுப்புகளையும், அப் பகுதி அலுவலரிடமே பிரித்துக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள் ளது. இதன் மூலம் அப்பகுதி மக்களின் அனைத்துத் தேவை களையும் அவரே சீராக முடிக்க இயலும்.

அரசின் நிதி உதவி :

சென்னை மாநகரிலுள்ள, பேருந்து வழித்தடச்சாலை களையும், மற்ற சாலைகளையும் மேம்படுத்துதல், மின் கம்பி களை புதுப்பித்தல், புது தெருவிளக்குகள் அமைத்தல், மழை நீர் வடிகால்கள் மற்றும் பாலங்கள் கட்டுதல் மற்றும் துப்புரவுப் பணி மேம்பாட்டிற்காகவும் ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு சென்னை மாநகராட்சிக்கு மானியமாகவும் கடனாகவும் நிதி உதவி அளித்து வருகிறது. 1986–87 ஆம் ஆண்டு மூலதனப் பணிகளுக்காக அரசு கீழ்க் குறிப்பிட்ட நிதி ஒதுக்கியுள்ளது:—

| தலைப்பு. | கடன். | மானியம். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சங்களில்) | | |
| 1 சென்னை நகர மேம்பாட்டு வேலைகள் (மழை நீர் வடி கால் அமைத்தல், மின் புதைக் கம்பிகள் மாற்றி அமைத்தல், சாலைகள் போடுதல் போன்றவற்றிற்கு உதவித் தொகை.) | 250.00 | 250.00 | 500.00 |
| 2 விற்பனை வரியின் மீதான உபரி வரியில் நிதி அளிப் பது. | .. | 350.00 | 350.00 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3 சென்னை நகர வளர்ச்சித் திட்டம்-2ன் கீழ் திடக் கழிவு மேலாளுகைத் திட்டத்திற்கு உதவித்தொகை. | .. | 25.00 | 25.00 |
| 4 பொதுக் கழிப்பிடங்களைப் பராமரிக்க. | .. | 5.76 | 5.76 |
| மொத்தம் .. | 250.00 | 630.76 | 880.76 |

இதர பணிகள்.

(1) பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டுத் திடல்கள், அங்காடிகள், சமூகக்கூடங்கள், சலவை நிலையங்கள் மற்றும் இடுகாடு, சுடுகாடு முதலியவற்றைப் பராமரிப்பதும் சென்னை மாநகராட்சியின் இதர பணிகளில் அடங்கும். தற்பொழுது சென்னை மாநகரில் அமைந்துள்ள அவற்றின் எண்ணிக்கை மற்றும் அவற்றைப் பராமரிக்க 1986–87 இல் ஒதுக்கியுள்ள தொகை விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| பெயர். | எண்ணிக்கை. | 1986–87 ஆம் ஆண்டின் செலவு மதிப்பீடு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சங்களில்) |
| 1 பூங்காக்கள் .. .. .. | 88 | 53.68 |
| 2 விளையாட்டு மைதானங்கள் .. | 80 | 12.90 |
| 3 விளையாட்டுத் திடல்கள் .. | 3 | 11.98 |
| 4 அங்காடிகள் .. .. .. | 14 | 8.45 |
| 5 சமூகநலக் கூடங்கள் .. .. | 10 | 4.33 |
| 6 சலவை நிலையங்கள் .. .. | 10 | 1.44 |
| 7 இடுகாடு, சுடுகாடு .. .. | 30 | 3.75 |





2. அகில இந்தியா சுற்றுலா பொருட்காட்சியில் பங்கேற்றல் :

அகில இந்தியா சுற்றுலா பொருட்காட்சியில் ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாநகராட்சி பங்கேற்று வருகிறது. இந்த ஆண்டும் அப்பொருட்காட்சியில் பங்கேற்றுள்ளது.

3. அறிஞர் அண்ணா வளைவு அமைத்தல் :

அறிஞர் அண்ணா வளைவு ஒன்று ரூ. 18.00 இலட்சங்கள் செலவில் அண்ணா நகர் நுழைவு வாயிலில் அறிஞர் அண்ணாவின் 75-வது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இதன் கட்டிட நுட்பங்கள் அனைத்தும் மாமல்லபுரம், அரசு கட்டிடக் கலை கல்லூரியால் அமைக்கப் பட்டன.

4. பலமாடிக் கட்டிடங்கள் அல்லி குளப்பகுதியில் கட்டுதல் :

பல மாடிக் கட்டிடங்களை அல்லி குளப் பகுதியில் கட்டும் திட்டத்தை சென்னை மாநகராட்சி மேற் கொண்டுள்ளது. இதன் மொத்த மதிப்பு ரூ. 5.93 கோடியாகும். தீயினால் கடைகளை இழந்த வியாபாரிகளுக்கு இக் கட்டிடத்தில் கடைகள் அமைக்கப்படும். அரசு இதற்காக ஒப்புதல் அளித்து ரூ. 1.40 கோடி நிதி உதவியும் அளித்துள்ளது.

5. நான்காவது ஊதியக் குழு :

நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தியதால் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 4.00 கோடி அதிகச் செலவாகும். பொங்கல் பரிசையும் சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது. இத் துணை செலவினங்களையும், சொத்து வரியின் மூலம் கிடைத்த அதிக வசூலின் மூலம் ஈடு செய்யப்பட்டுள்ளது.

6. இயற்கையின் சீற்றங்கள் :

1985-ம் ஆண்டு நவம்பர் திங்கள் பெரும்மழையில் வெள்ளப் பெருக்கு உண்டானது. சென்னையில் உள்ள சாலைகள், கட்டிடங்கள், மழைநீர் வடிகால்கள், தெரு விளக்குகள் பெரிதும் பழுதடைந்தன. மாநகராட்சி தனது அனைத்து துறைகளையும் முடுக்கிவிட்டு அனைத்துப் பணிகளையும் செய்தது.

வெள்ள நிவாரணப் பணிகளுக்காகவும், பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் கட்டிடங்கள் முதலியவற்றை பழுது பார்ப்பதற்காகவும் அரசு ரூ. 15.15 கோடியை மானியமாக வழங்கியுள்ளது.

[1986 ஏப்ரல் 16

அரசு ஆணை எண் 32, வருவாய்த்துறை, நாள் 8-1-1986-ல் ரூ. 1,515.44 இலட்சங்கள் மானியமாக சென்னை மாநகராட்சிக்கு வெள்ள நிவாரணப் பணிகளுக்காகவும், நவம்பர் 1985-ல் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட சாலைகள், கட்டிடங்கள், மழைநீர் வடிகால்கள், பாலங்கள் முதலியவற்றை பழுது பார்ப்பதற்காகவும், அரசு வழங்கியுள்ளது. அதுபற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| விவரம். (1) | தொகை. (2) (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| 1 இதர சாலைகள் .. .. .. .. | 300.00 |
| 2 பேருந்து வழித்தடச் சாலைகள் .. .. .. | 574.00 |
| 3 கட்டிடங்கள் .. .. .. .. .. | 40.00 |
| 4 மழைநீர் வடிகால்கள் .. .. .. | 435.26 |
| 5 தெரு விளக்குகள் .. .. .. .. | 75.00 |
| 6 பாலங்கள்/தரைப் பாலங்கள் .. .. .. | 85.32 |
| 7 குப்பைகள் அகற்றுதல் .. .. .. | 4.00 |
| 8 வெள்ள நிவாரணப் பணிகள் (மழை நீர் அகற்றல் உணவுப் பொட்டலங்கள் வழங்கல் முதலியன.) | 0.86 |
| 9 பூங்காக்கள் .. .. .. .. .. | 1.00 |
| மொத்தம் .. | 1,515.44 |

சத்துணவு மையங்கள் பழுது பார்ப்பதற்கும், குப்பைகளை அகற்றும் பணிக்காகவும், மற்றும் சுகாதாரத்திற்கும் ஒதுக்கப்பட்ட அனைத்து தொகையும் செலவிடப்பட்டு விட்டது. சாலைகளைப் பொறுத்தவரையில் ரூ. 566.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மற்றைய சாலைகளின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தெரு விளக்குகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 75.00 இலட்சங்களில் ரூ. 16.00 இலட்சங்கள் செலவிடப்பட்டுவிட்டன.

மேற் குறிப்பிட்ட பணிகளோடு கூட சென்னை மாநகராட்சி நிவாரணப் பணிகளை துரிதப்படுத்தி அனைத்து பணிகளையும் சரியான நேரத்தில் முடித்தது. வெள்ளத்தில் மூழ்கின மக்களுக்கு சென்னை மாநகராட்சி பள்ளிகளிலும், கல்யாண மண்டபங்களிலும் பாதுகாப்பு அளித்தது. 4 பெரிய கல்யாண மண்டபங்களிலும், வெள்ளப்பணி பகுதிகளிலும் துயர் துடைப்புப்



1986 ஏப்ரல் 16]

பணிகள் தொடர்ந்து 10 நாட்களாக நடைபெற்றன. தொடர்ந்து உணவு பொட்டலங்கள், பால் வழங்கல், மற்றும் சுகாதாரப் பணிகள் நடைபெற்றன. 14,10,651 உணவுப் பொட்டலங்கள் ரூ. 28.22 இலட்சங்கள் செலவில் வழங்கப்பட்டன. இவற்றுள் 68,610 ரொட்டிகளும் அடங்கும். வெள்ளம் பெருகின பகுதிகளிலிருந்து நீர் குழாய்கள் மூலம் வடிக்கப்பட்டது.

காலரா தடுப்பிற்காக சென்னை மாநகராட்சி மருந்தகங்களில் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. மருத்துவர்கள் சென்னை நகரம் முழுவதும் அனுப்பப்பட்டு துயர் துடைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

7. நான்கு கல்யாண மண்டபங்கள் கட்டுதல் :

மாநகராட்சியின் வருவாயினைப் பெருக்குவதற்காக வடசென்னையில் இரண்டும், தென் சென்னையில் இரண்டுமாக மொத்தம் நான்கு கல்யாண மண்டபங்கள ஒவ்வொன்றும் ரூ. 12 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை வளர்ந்து வரும் நகர மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும். இக்கல்யாண மண்டபங்கள் புதிய வசதிகளோடு கூடிய பொருட்களோடு அமைக்கப்பட்டிருக்கும்.

8. அனுமதியின்றி நடைபாதைகளில் அங்காடி வைப்பதைத் தவிர்த்தல் :

நடைபாதைகளில் அங்காடிகள் வைப்பதை தவிர்க்கும் பொருட்டு பெரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெரும்பாலான நடைபாதை கடைகள் அகற்றப்பட்டுவிட்டன. தொடர்ந்து இப்பணி மேலும் நடைபெற்று வருகின்றது.

9. மின்சார சுடுகாடு :

மின்சார சுடுகாடு வட சென்னையில் ஒன்றும் தென் சென்னையில் ஒன்றும், ஒவ்வொன்றும் ரூ. 10.00 இலட்சங்கள் செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. விளம்பரங்கள் செய்தல் :

பொது மக்களின் ஒத்துழைப்பின்றி நகரத்தை சுத்தமாக வைத்தல் இயலாது. எனவே, மக்கள் மனதில் பொது சுகாதாரம் குறித்து விழிப்புணர்ச்சி ஊட்டுவதற்காக சென்னை மாநகராட்சி திரைப்படக் காட்சிகள் மூலமாகவும், தொலைக்காட்சிகள் மூலமாகவும், துண்டு பிரசுரங்கள் மூலமாகவும் மற்றும் மின் விளக்கு கம்பங்கள், குப்பைத் தொட்டிகள் முதலியவற்றில் சுகாதாரம் குறித்த வார்த்தைகளை எழுதுவதன் மூலமாகவும் விளம்பரப்படுத்த உத்தேசித்துள்ளது.

[1986 ஏப்ரல் 16

## முடிவுரை.

நிர்வாகத் திறமையினை அபிவிருத்தி செய்ய பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாநகராட்சியின் பராமரிப்புப் பணியினை அபிவிருத்தி செய்வதற்கும், திடக்கழிவு மேலாளுகைத் திட்டத்திற்கும் ஆலோசனைக்குழுமத்தின் பணி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. பரிசீலனை முடிவடைந்ததும் பரிந்துரையின்படி நிர்வாகச் சீரமைப்பு மேற்கொள்ளப்படும். சொத்துவரி வருமானத்தைப் பெருக்கவும், சிறந்தமுறையில் சொத்து வரி வசூல் செய்யவும், ஒரு ஆலோசனைக் குழுமம் அமைக்கப்பட்டு, ஆரம்பக் கட்டப்பரிசீலனை முடிவடைந்துள்ளது. முழுமையான பரிசீலனை விரைவில் முடிவடையும். சொத்துவரி வசூல் மாநகராட்சியின் வரவு செலவுக் கணக்கு ஊழியர்களின் ஊதியக் கணக்கு இவைகளை 'கம்ப்யூட்டர்' மூலம் கணக்கு வைக்க அரசு அனுமதியளித்துள்ளது. இதன் ஆரம்பக்கட்டச் செலவை உலக வங்கி மேற்கொள்கிறது. பிறகு ஆகும் செலவை மாநகராட்சியே மேற்கொள்ளும்.

மாநகராட்சியின் சொத்து வரி, பிற வரிகள், வருமானங்களை பெருக்க மாநகராட்சி தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. ஆனாலும் இந்த அதிகரித்துள்ள வருமானம், அதிகரித்து வரும் நிர்வாகச் செலவு, பொருட்களின் விலை உயர்வு, முதலியவற்றுக்கு ஈடுகட்ட இயலாமையால் மாநகராட்சியின் நிதி நிலை பற்றாக்குறையாகவே உள்ளது. பராமரிப்புச் செலவு இனங்களைக் குறைத்துக் கொண்டு பற்றாக்குறை மிகக் குறைவான அளவிலேயே நிலை நிறுத்தப்பட்டு வருகிறது. மாநகராட்சியின் நிதி பற்றாக்குறையின் காரணமாக சாலைப் பராமரிப்பு, தெரு விளக்குப் பராமரிப்பு, துப்புரவுப் பணி ஆகிய இனங்களில் கூடுதலான ஊழியர்களை நியமிக்க முடியாத நிலை உள்ளது. பெருவாரியான மூலதனச் செலவினங்களுக்கு அரசின் நிதியுதவியையே மாநகராட்சி தொடர்ந்து நாடி வருகிறது. மாநகராட்சியின் நிதி நிலையை மேம்படுத்த அரசு ஆவன செய்து வருகிறது.

சென்னை பெருநகரின் தூய்மை, வளர்ச்சி தொடர்பான குறைகளை களைவதற்காகவும், மேம்பாட்டு பணிகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காகவும் சென்னை பெருநகர் மேம்பாட்டுக் குழு ஒன்று முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுமத்தில் மாநில அரசு உயர் அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். இந்தக் குழு மாதம் ஒரு முறை கூடி முக்கியமான தீர்மானங்களையும், சென்னை நகரின் முன்னேற்றத்திற்கான நல்ல பல திட்டங்களைப் பற்றியும் தக்க பரிந்துரைகள் செய்யும்.



1986 ஏப்ரல் 16]

## மதுரை மாநகராட்சி.

மதுரை நகராட்சி 1–5–1971-ல் மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. 1961-ம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்குப்படி 4,24,810 ஆக இருந்த மக்கள் தொகை 1985-ல் 9,03,140 ஆக உயர்ந்துள்ளது. (ஆண்கள் 4,56,988 ; பெண்கள் 4,46,152). இதில் புதிதாகச் சேர்க்கப்பட்ட 13 கிராமங்களில் உள்ள மக்கள் தொகையும் அடங்கும். எனவே, மக்கள் தொகைப் பெருக்கம் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. மாநகராட்சியின் மொத்தப் பரப்பளவு 51.85 ச. கிலோமீட்டர் ஆகும்,

தன்னுடைய குறைந்த வருமானத்தைக் கொண்டு, மதுரை மாநகராட்சியால் அபிவிருத்தித் திட்டங்களுக்கான செலவுகளையும் மக்களின் நலனுக்குரிய தேவைகளையும் ஈடு செய்ய இயலாமல் உள்ளது. பெரும் வளர்ச்சித் திட்டங்களை எடுத்துக்கொள்ள மாநில மற்றும் மத்திய அரசுகளின் நிதி உதவி தேவையாக உள்ளது.

## முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம்.

மதுரை நகருக்குள், அரசு முழு நிதி உதவியுடன், முதலமைச்சர் சத்துணவுத் திட்டம், மதுரை மாநகராட்சியால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## பயன் தரும் இனங்கள்.

1. சந்தைகள் மற்றும் அங்காடி மையங்கள் :

சொக்கிகுளம், பீபீகுளம் மற்றும் கிருஷ்ணாபுரம் காலனி பகுதி மக்களின் நலனுக்காக ரூ. 5 இலட்சம் செலவில், வருமான வரி அலுவலக சாலையில் உள்ள மாநகராட்சி இடத்தில் சந்தை ஒன்று கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கோரிப்பாளையம் தேவர் சிலை அருகில் ரூ. 5 இலட்சம் செலவில் கூடுதலாக அங்காடிகள் மையம் ஒன்றும் கட்டப்படும்.

2. பேருந்து நிலைய அபிவிருத்திப் பணிகள் :

ரூ. 43 இலட்சம் செலவில் அண்ணா பேருந்து நிலையத்தின் தென் பகுதியில் தரை தளத்தில் கடைகளும், முதல் தளத்தில் தங்கும் அறைகளும் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

[1986 ஏப்ரல் 16

கல்வி.

(அ) ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் :

மாநகராட்சியால் தற்சமயம் 58 ஆரம்பப் பள்ளிகளும், 12 நடுநிலைப் பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் சுமார் 30,719 மாணவர்கள் படிக்கிறார்கள். இந்த 70 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 21 ஆரம்பப் பள்ளிகள் வாடகைக் கட்டிடத்திலுள்ளன. பள்ளிகளின் சில வகுப்பறைகள் கீற்றுக்கூரை செட்டுகளிலும் உள்ளன. அரசு 1986-87-ம் வருட பகுதி 2 திட்டத்தின் மூலம் ஆரம்பப் பள்ளிகளுக்கு கூடுதல் இடங்கள் கட்டுவதற்கு ரூ. 10 இலட்சம் ஒப்பளிப்பு செய்ய உத்தேசித்துள்ளது.

(ஆ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி கட்டிடங்கள் கட்டுதல் :

பெரும்பாலான மாநகராட்சிப் பள்ளிகள் மிகப் பழமையான கட்டிடங்களில் உள்ளன. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாநகராட்சி நிதியிலிருந்து ரூ. 15 இலட்சம் செலவில் கூடுதலான கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரம்.

(அ) மகப்பேறு மனைகள் மற்றும் மருந்தகங்கள் :

வில்லாபுரம், பெத்தானியாபுரம், கீரைத்துறை மற்றும் புதூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக, அப்பகுதிகளில் மகப்பேறு மனைகள் கட்டுவதற்கு பிரேரணைகள் உள்ளன.

(ஆ) மின்மயானம் அமைத்தல் :

அரசு பொதுப்பணித்துறை வசம் ரூ. 25 இலட்சம் செலவில் மின்மயானம் கட்டும் பணி ஒப்படைக்கப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. இப்பணிக்காக அரசு ரூ. 10 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

சாலைகள் மற்றும் பாலங்கள்.

சாலைகள் :

மதுரை மாநகராட்சியால் தற்சமயம் 474.635 கிலோமீட்டர் நீளத்திற்குரிய சாலைகள் பின்வருமாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | சிமிண்ட் கான்கிரீட் சாலைகள் .. .. | 4.190 கி.மீ. |
| 2. | தார்ச் சாலைகள் .. .. .. | 238.364 கி.மீ. |



1986 ஏப்ரல் 16]

| | | |
|---|---|---|
| 3. | டபிள்யு.பி.எம். சாலைகள் .. | 83.276 கி.மீ. |
| 4. | செம்மண் சாலைகள் .. .. | 55.616 கி.மீ. |
| 5. | கல்தளம் பதிக்கப்பட்டுள்ள சந்துகள் | 51.739 கி.மீ. |
| 6. | கல்தளம் சிமின்ட் சதுரம் பதித்துள்ள பாதசாரிகளின் நடைமேடை. | 41.450 கி.மீ. |

மொத்தம் பராமரிக்கப்பட்டு வருகிற 474.63 கிலோ மீட்டர் சாலையில் மெட்டல் ரோடு மற்றும் செம்மண் சாலைகளில் 25 சதம் சாலைகளை தார்ச்சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகர்ப் பகுதியில் உள்ள தார்ச்சாலைகள் 1980 ஆம் வருடம் ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடந்த சமயம் செப்பனிடப்பட்டுள்ளன. மேற்படி சாலைகளைப் புதுப்பிக்கும் பணிகள் 1986—87-ல் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டிற்கு சாலை வேலைக்குரிய மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 50 லட்சமாகும். அரசு 1986—87 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசித்துள்ளது.

பாலங்கள்.—அரசினர் மீனாட்சி கலைக் கல்லூரியின் இரண்டு பகுதிகளையும் இணைக்கும் நடைபாதை மேம்பாலம் கட்டும் வேலை, பொதுப்பணித்துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு மதிப்பீட்டின் படி செலவு ரூ. 1.94 லட்சம் பொதுப்பணித்துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது.

குடிநீர் மற்றும் வடிகால்.

மதுரை வடபகுதி குடிநீர் வினியோகத் திட்டம்.

மதிப்பீட்டுத் தொகை ரூ. 96.50 லட்சம்.

ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 15.3 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வேலைகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

குடிநீர் வழங்கல்.—1985 ஆம் ஆண்டில், மதுரை நகரானது 9.03 லட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. அவர்களுக்கு வைகை நதி மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. தற்போது மதுரை மக்களுக்கு சராசரியாக ஒரு நாளைக்கு 450 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இது தற்போதைய ஒரு நாள் குடிநீர் தேவையான 900 லட்சம் லிட்டர் தேவையில் 50 சதவீதம் பூர்த்தி செய்யும். 900 லட்சம் லிட்டர் தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு

தற்போதுள்ள நீர் வழங்கும் திட்டத்தில் மேலும் 450 லட்சம் லிட்டர் அதிகமாகத் தேவைப்படுகிறது. மேற்படி குறைவான 450 லட்சம் லிட்டர் பூர்த்தி செய்திட ஒரு விரிவாக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நிறைவேற்ற ரூ. 32.52 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தொகையில் 80 சதவிகிதம் உலக வங்கியில் இருந்து 8.5 சத விகித வட்டி மற்றும் 25 வருடங்களில் திருப்பிக் கட்டப்பட வேண்டுமென்ற நிபந்தனையடன் கடன் பெற ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையை 5 வருடங்கள் கழித்து திருப்பிக் கட்ட ஆரம்பிக்கப்படும். மதிப்பீட்டின் எஞ்சிய 20 சதவிகிதம் மாநில அரசால் மான்யமாக வழங்கப்படும். இத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகவும், ஏற்கனவே உள்ள பழைய மற்றும் புதிய முறைகளுக்கு செயல் முறை மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு மாற்று முறைகளை நீண்ட கால அடிப்படையில் மேற்கொள்ளவும் உள்ளது.

மேற்படி திட்டத்தை நிறைவேற்ற உலக வங்கி கடன் வசதி பெறலாம் என்று குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ள பிரே ரணையின் மீது அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

உலக வங்கியால் சிபாரிசு செய்யப்பட்ட நிதிஉதவி அளிக்கும் மாதிரி திட்டம், தண்ணீர் விநியோக விலை விகிதத்தை உயர்த்து தல், மேற்படி திட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆலோசனைகளை 31—3—1983 தேதிய ஊர்வளர்ச்சி உள் ளாட்சித் துறையின் 483 நிர் ஆணை மூலம் ஏற்றுக் கொண்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டத்தின் உப விதிகளை மாநகராட்சி மன்றம் தனது 25—1—1984 தேதிய 491 நிர் தீர்மானத்தில் அங்கீகரித்துள்ளது.

தற்சமயம் பூர்வாங்கப் பணிகளைக் கவனிப்பதற்கு 1–1–1986 முதல் தனியாக ஒரு கணக்குப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### மாநகராட்சிப் பணிகள்.

1986—87 ஆம் ஆண்டில் மாநகராட்சியால் செய்யப்படவிருக்கும் குடிநீர் விநியோகப் பணிகள் விபரம் பின்வருமாறு :—

1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் மெயின் பதித்தல்.

நகரின் வெவ்வேறு பகுதிகளில் ரூ. 7.50 லட்சம் மதிப்பில் 10,000 மீட்டர் நீளத்திற்கு குடிநீர் விநியோக மெயின்கள் 1986—87 ஆம் ஆண்டில் பதிக்கப்படும்.





2. கிணற்று நீர் மெயின்கள் பதித்தல்.—

ரூ. 6. லட்சம் செலவில் 12,000 மீட்டர் நீளத்திற்கு கிணற்று நீர் விநியோக மெயின்கள் பதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. ஆழ் குழாய்க்கிணறுகள் அமைத்தல் :—

8 அங்குல ஆழ்குழாய்க் கிணறு 20-ம் மற்றும் 6 அங்குல ஆழ்குழாய்க் கிணறு 30-ம் ரூ. 19.50 லட்சம் மதிப்பில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. பொதுக் குழாய் மேடை கட்டுதல் :

இவ்வாண்டில் (1986–87) 500 பொதுக் குழாய்மேடைகள் கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### வடிகால்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. இஸ்மாயில்புரம் சாக்கடைத் திட்டம் :

உப பகுதி 1-ல் 25 மீட்டர் நீளத்திற்கு நில ஆர்ஜிதம் மற்றும் உப பகுதி 2-ல் 560 மீட்டர் நிளத்திற்கு பனையூர் வாய்க்கால் மற்றும் குறுகலான தெருக்களில் மெயின் அமைத்தல் ஆகியவை தவிர ஏனைய பணிகள் பெரும்பாலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் முடிக்கப்பட்டு உள்ளது. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. அவனியாபுரம் சாக்கடைத் திட்டம் :

உப்பங்கழி (Lagoons) கட்டுதல் மற்றும் பம்ப்செட் திறுவுதல் ஆகிய பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தினரால் இவ்வாண்டில் முடிக்கப்படும்.

சேர்க்கப்பட்ட மற்றும் விடுபட்ட பகுதிகளில் சாக்கடை திட்டத்தின் மூலம் கழிவுநீர் சம்பந்தப்பட்ட பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

நகரின் பல்வேறு பகுதிகளில் ரூ. 7.31 கோடி செலவில் கூடுத லான மழைநீர் வடிகால் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ் வேலைக்குரிய ஆய்வுப்பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாக்கடை.

மாநகராட்சியால் 1986–87 ஆம் ஆண்டில் பின்வரும் சாக்கடைப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. 20 லட்சம் செலவில் 10,000 மீட்டர் நீளத்திற்கு திறவை சாக்கடை கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

2. நகரின் விடுபட்ட பகுதிகளில் ரூ. 3 லட்சம் மதிப்பில் 1,500 மீட்டர் நீளத்திற்கு பாதாளச் சாக்கடை கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும்.

மின்சாரம்.

மாநகராட்சி மின் விநியோக உரிமையுள்ள பகுதிகளில் தற்சமயம் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் தெரு விளக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | சோடியம் ஆவி விளக்குகள் | 1,152 |
| 2. | மெர்குரி ஆவி விளக்குகள் | 1,852 |
| 3. | குழல் விளக்குகள் | 12,451 |
| 4. | மற்ற விளக்குகள் | 1,306 |
| | மொத்தம் | 16,761 |

இது தவிர 3,926 தெரு விளக்குகள் அருகில் உள்ள இணைக்கப்பட்ட பகுதிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

நகரின் முக்கியமான பகுதிகளின் பிரகாசத்தை மேம்படுத்த மேற்கொண்டு ரூ. 18 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் 50 சோடியம் ஆவி விளக்குகள், 300 மெர்குரி ஆவி விளக்குகள், 400 குழல் விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

மின் விநியோகத்தை மேம்படுத்த மேற்கொண்டு 20 டிரான்ஸ்பார்மர்கள் நிறுவவும், ஏற்கனவே உள்ள 25 டிரான்ஸ்பார்மர்களின் கொள்ளளவை உயர்த்தவும் உத்தேசம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இருக்கும் மேல்போக்கி மின் கடத்தி (over head line) மற்றும் பழைய பாதாள கேபிள்கள் ஆகியவற்றை மாற்றம் செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்திற்கு எதிர்பார்க்கும் செலவு ரூ. 36 லட்சமாகும். ஏற்கனவே உள்ள தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கு ரூ. 12 லட்சம் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.



கோவை மாநகராட்சி

1986–87-ம் ஆண்டிற்கான கோவை மாநகராட்சியின் பல்வேறு திட்டங்களின் கொள்கை விளக்க குறிப்பு.

(1) முன்னுரை.

1981-ம் ஆண்டு கோவை மாநகராட்சி சட்டத்தின்படி கோவை நகராட்சியானது 1–5–1981 முதல் மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது.

(2) ஆட்சி எல்லை.

இம்மாநகராட்சியானது, கோவை வருவாய் கிராமம் முழுவதும் அடங்கியதுடன், தெலுங்குபாளையம், இராமநாதபுரம், கிருஷ்ணராயபுரம், சங்கனூர், அனுப்பர்பாளையம், புலியகுளம், குமாரபாளையம், சௌரிபாளையம், கணபதி ஆகிய வருவாய் கிராமங்களின் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளதாகும்.

கூடுதலாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு முன்னர், கோவை நகரம் நகராட்சியாக இருந்தபொழுது, அதன் பரப்பு 23.5 ச. கிலோ மீட்டர் ஆகும்.

கீழ்க்கண்ட பகுதிகள் 1-12-1978 முதல் முன்னாள் கோவை நகராட்சியுடன் சேர்க்கப்பட்டது.

(1) சிங்காநல்லூர் நகராட்சி (முழுவதும்).

(2) குமாரபாளையம் பேரூராட்சி (முழுவதும்).

(3) தெலுங்குபாளையம் பேரூராட்சி (முழுவதும்).

(4) சங்கனூர் பேரூராட்சி (முழுவதும்).

(5) கோயம்புத்தூர் ரூரல் ஊராட்சி.

(6) வேலாங்குறிச்சி பேரூராட்சி (ஒரு பகுதி மட்டும்).

(7) கணபதி பேரூராட்சி (முழுவதும்).

இவ்விதமாக நகராட்சியின் எல்லை 23.5 சதுர கிலோ மீட்டரிலிருந்து 105.60 சதுர கிலோ மீட்டர்களாக அதிகரிக்கப்பட்டது.

[1986 ஏப்ரல் 16

(3) மக்கட் தொகை.

1971-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி பரப்பளவு அதிகரிப்பிற்கு முன்னர் மக்கள் தொகை 3,58,083 ஆக இருந்தது.

1981-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மாநகராட்சியின் மக்கள் தொகை 7,04,514 ஆகும்.

(4) நிர்வாகம்.

மாநகராட்சி தனி அதிகாரியினுடைய ஆட்சிக்குட்பட்டு ஆணையாளர் அவர்களின் நிர்வாக செயல்பாட்டின்கீழ் உள்ளது.

(5) நிதி.

புதிய பகுதிகளின் சேர்க்கையால் 4 மடங்கு பரப்பளவும் மற்றும் மக்கள் தொகையும் அதிகரித்த போதிலும் அதற்கேற்றவாறு நிதி வரவு பெருகவில்லை. இருப்பினும் இத்தகைய குறைந்த நிதி நிலையிலும் 1986—87-ம் ஆண்டில் கீழ்க்கண்ட நிர்வாக துறைகளில் மாநகராட்சி, நகர வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களை உருவாக்கி உள்ளது.

(6) முதலமைச்சரின் கல்வி—சத்துணவுத் திட்டம்.

முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமானது, 1982-ம் ஆண்டில் இருந்து 2 வயது முதல் 4 வயதிற்குள் இருக்கும் குழந்தைகளுக்கு அமுல் படுத்தப்பட்டுள்ளது. தினசரி இத்திட்டத்தின் கீழ் 27,218 குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். இம்மாநகராட்சியில் 396 சத்துணவு மையங்கள் உள்ளன. இந்த மையங்கள் இதற்கென மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் நடைபெறுகின்றன. இது தவிர இம்மையங்களினால் 928 முதியவர்களும் பயனடைகிறார்கள்.

இதுபோல் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் 5 வயது முதல் 9 வயது முடிய, மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கும் 10 வயது முதல் 14 வயதுவரை உள்ள மாணவர்கள் பயன் அடைகின்றனர். நகராட்சி இயக்குநர் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் இத்திட்டம் நடைபெறுகிறது. இத்திட்டத்தினால் 35,957 பள்ளி மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். இத்திட்டத்திற்காக மாநகராட்சியால் 95 மையக் கூடங்கள் கட்டப்பட்டு அதில் செயல்பட்டு வருகிறது.



1986 ஏப்ரல் 16]

(7) சாலைகள் :

கீழ்க்கண்ட வகைகளில் மாநகராட்சி 450.108 கிலோ மீட்டர் நீள சாலைகளைப் பராமரித்து வருகிறது.

| | | கி. மீ. |
|---|---|---|
| 1. | சி.சி. ரோடுகள் உட்பட பி.டி. சர்பேஸ் ரோடுகள் மற்றும் சந்துகள். | 387.227 |
| 2. | கல்ரோடுகள் .. .. .. .. | 55.563 |
| 3. | மண்ரோடுகள் மற்றும் கல்பதிக்காத ரோடுகள் | 7.318 |
| | மொத்தம் .. | 450.108 |

1986—87-ம் ஆண்டில் 100 கிலோ மீட்டர் நீளமுள்ள ரோடுகளை கல்ரோடுகளாகவும் தார் ரோடுகளாகவும் அமைத்து பராமரித்து வர திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1986—87 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் ரூ. 180.00 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சாலைகளை பராமரிக்க மேலும் அதிகத் தொகை தேவையாக இருப்பினும், குறிப்பாக புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகளில் பராமரிப்பு தேவைகள் அதிகமாக இருப்பினும், நிதி பற்றாக்குறையால் அதிகத் தொகை ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை உள்ளது.

மாநில 1986—87-ம் இரண்டாம் பகுதி திட்டத்தின்படி புதிதாக சேர்க்கப்பட்ட பேரூராட்சி பகுதிகளில் சாலைகள் அமைக்கும் பணிக்காக ரூ. 5.00 லட்சங்கள் கடனாக வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

தனியார் வீட்டு மனைப்பகுதிகளில் சாலைகள் மற்றும் சாக்கடைப் பணிகளின் வளர்ச்சிக்காக மாநகராட்சியால் அமைக்கப்பட்ட சுழல் நிதி, 1986—87-ம் நிதி ஆண்டிலும் தொடர்ந்து அமுல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ் சாதாரண காலங்களிலும், மழைக் காலங்களிலும் சாக்கடை பராமரிப்பு வசதி செய்வதோடு, ஆண்டுதோறும் சராசரி 15 கி. மீ. நீளமுள்ள சாலை அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

(8) கல்வி (ஆரம்பக் கல்வி) :

இம்மாநகராட்சி, வெவ்வெறு பகுதிகளில் தொடர்ந்து 63 ஆரம்பப்பள்ளிகள் மற்றும் 14 உயர் ஆரம்பப்பள்ளிகள் ஆகியவற்றை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் 42,090 மாணவ

மாணவிகள் படித்து வருகிறார்கள். 1986—87 ஆம் கல்வி ஆண்டில் கூடுதலாக மாணவர்கள் சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பள்ளிகளில் 1331 ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள்.

(2) 77 ஆரம்ப மற்றும் உயர் ஆரம்பப்பள்ளிகளில் 28 பள்ளிகளில் போதுமான இடவசதி இல்லை. 28 பள்ளிகளுக்கும் 207 கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. அரசு நிதி உதவி கிடைத்தால்தான் இக்கூடுதல் இடவசதி செய்ய முடியும். இருப்பினும், கூடுதல் இட வசதிக்காகவும், இருக்கும் கட்டிடங்களை பராமரிப்பதற்காகவும், 1986—87 மாநகராட்சி வரவு—செலவு திட்டத்தில் ரூ. 6 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) கல்வி வரி, அரசு மான்யம் மற்றும் பொது நிதியில் இருந்து பெறும் தொகை ஆகியவற்றில் இருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் 123.45 லட்சத்திலிருந்து, ஆசிரியர் மற்றும் பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் இதர படிகளுக்காகவும் மற்றும் சாதாரண செலவினங்களுக்காகவும், வரவு—செலவு திட்டத்தில் ரூ. 191.50 லட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆரம்பக்கல்வி நிதி கணக்கு ரூ. 191.50 லட்சம் பற்றாக்குறை தொகை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பற்றாக்குறை தொகை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அரசு ஆணை எண் 648, நாள் 31—3—1973-ன்படி அரசு பற்றாக்குறை மான்யம் அனுமதித்த பின்னர் சரிக்கட்டப்படும்.

9. கல்வி—உயர்நிலை மற்றும் மேல்நிலை :

இம்மாநகராட்சி 9 மேல் நிலைப்பள்ளிகள், 13 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு காது கேளாதோர் மற்றும் ஊமையர் பள்ளி ஆகியவற்றை நிர்வகிக்கிறது. மேல் நிலைப்பள்ளிகளில் 12,184 மாணவ, மாணவிகளும் உயர்நிலைப்பள்ளிகளில் 6,127 மாணவ மாணவிகளும் கல்வி பயின்று வருகின்றனர். ஊமையர் மற்றும் காது கேளாதோர் பள்ளியில் 200 மாணவர்களைக் கொண்ட ஒரு விடுதியை மாநகராட்சி நிர்வகித்து வருகிறது.

கோவை மாநகராட்சி பள்ளிகளில் 749 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். வரும் கல்வி ஆண்டில் கீழ்க்கண்ட நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(1) மரக்கார நஞ்சப்ப கவுண்டர் வீதி நடுநிலைப்பள்ளி.

(2) மசக்காளிபாளையம் நடுநிலைப்பள்ளி.



(2) மூன்று உயர்நிலைப்பள்ளிகளில் 24 கூடுதல் வகுப்பறைகளைக் கட்டுவதற்கும் மற்றும் எஸ்.ஆர்.பி. அம்மணி அம்மாள் மகளிர் உயர்நிலைப்பள்ளியிலும் இராமகிருஷ்ணாபுரம் மகளிர் மேல் நிலைப்பள்ளியிலும் அறிவியல் கூடங்களை கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 16.50 லட்சம். நிதி நிலையை அனுசரித்து இப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்காகவும், இருக்கும் பள்ளிக் கட்டிடங்களின் பராமரிப்பிற்காகவும் 1986-87 வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவசிய மேற்படின் 1986-87 திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அதிகத் தொகை ஒதுக்கப்படும்.

(3) மாநகராட்சிக்கு பிரிட்டிஷ் ஒலிபரப்பு நிறுவனம், தேசிய கல்விக் கழக ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மூலமாக இரண்டு கம்ப்யூட்டர்களை நன்கொடையாக அளித்துள்ளது. ஆர்.எஸ். புரம் ஆண்கள் மேல் நிலைப்பள்ளிக்கு இக்கம்ப்யூட்டர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பு ரூ. 2 லட்சம் ஆகும். இந்தக் கம்ப்யூட்டர்கள் 9—10-ம் வகுப்பு மாணவர்கள் மற்றும் +2 வகுப்பு மாணவர்கள் ஆகியோருக்கு பெரிதும் பயன்படுகின்றன.

நடப்புக் கல்வி ஆண்டில் ரூ. 367.81 லட்சங்கள் உயர்நிலை, மேல்நிலை மற்றும் காது கேளாதோர் பள்ளிகளுக்காக கட்டிடப் பணிகளைத் தவிர, செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. குடிநீர் விநியோகம் :

கோவையிலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் கேரள மாநிலத்தில் உள்ள சிறுவாணி ஆற்றிலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1934ம் ஆண்டு முதல் கோவைக்கு விநியோகம் செய்யப்படுகிறது. 1982, ஜூலை மாதம் வரை நாள் ஒன்றுக்கு அதிகபட்ச அளவு 340 லட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே முன்பிருந்த கோவை நகரத்திற்கு வழங்கப்பட்டது. தற்பொழுது, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ. 21.85 கோடி செலவில் நாள் ஒன்றுக்கு 630 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தேவையை அனுசரித்து நாள் ஒன்றுக்கு 1,014 லட்சம் லிட்டர் வரை அதிகரிக்கக்கூடிய நிலை உள்ளது. தற்பொழுது நீர்த்தேக்கத்தில் இருந்து எவ்வித இடையூறுமில்லாமல் ஜூன் 1986 இறுதிவரை நாள் ஒன்றுக்கு 630 லட்சம் லிட்டர் குடிநீர் வியோகிக்கப்படும். எதிர்பார்க்கப்படும் மழையால் நீர்தேக்க அபிவிருத்தி இருக்கக் கூடும். ஒரு வேளை மழை பெய்யாது மோசமான நிலை ஏற்பட்டாலும் கூட மேலும் ஒரு மாதத்திற்கு நீர்த்தேக்கத்தில் உள்ள நீர் இறைக்கப்பட்டு பருவ மழை பெய்யும் வரை நகரத்திற்கு வழங்க இயலும். குடிநீர் சுமார் 500 கி.மீ. நீளமுள்ள குழாய்கள் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது. குடிநீர் கிடைக்காத, தேவைப்படும் பகுதிகளில் மாநகராட்சி லாரிகள் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. மாநகராட்சியின் எல்லைக்குள் தற்போது

34,900 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புக் குழாய்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 784 பொதுக் குடிநீர்க் குழாய்களும் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவாணி குடிநீர் விநியோகம், ஸ்டீல் டேங்குகள் மூலமாக மாநகராட்சியினுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு, விநியோகம் செய்யப்படுகிறது. அல்லது எங்கெங்கு சாத்தியமோ அந்த இடங்களில் தற்காலிக பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் அளிக்கப்படுகிறது. கணபதி, சிங்காநல்லூர், பீளமேடு, ஒண்டிப்புதூர் வரதராஜபுரம், பாப்பநாயக்கன் புதூர், வேங்கட்டாபுரம், வேலாண்டிபாளையம், இரத்தினபுரி, குமாரபாளையம் பகுதிகளில் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளில் மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தப்பட்ட 250 ஆழ் குழாய் கிணறுகளும், திறந்த கிணறுகளும் உள்ளன. இவைகளில் போதுமான தண்ணீர் உள்ளது.

சிறுவாணித் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகத்தை அமுல்படுத்த, மாநகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகக் கடன் .. | 5,00,00,000 |
| அரசுக் கடன் .. .. .. | 14,17,00,000 |
| மொத்தம் .. | 19,17,00,000 |

மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்ற, தமிழ்நாடு குடிநீர் விநியோக வாரியத்தால் தொகை நேரடியாகப் பெறப்பட்டது. இப்பணிகளுடன், பராமரிப்பிற்காகவும், குடிநீர் விநியோக வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கடனுக்காகவும் உடனடியாக திட்டத்தை நிறைவேற்ற ரூ. 119.27 லட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசு மற்றொரு திட்டத்தின் கீழ் ரூ. 4,110.54 லட்ச செலவில் பவானி ஆற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்ய நிதி அளித்துள்ளது. உலக வங்கித் திட்டத்தின் கீழ் பெறப்படும் இத்தொகையில் ரூ. 17.80 கோடி கோவைக்கு உரியது. இது சம்பந்தமாக தொடக்க ஆய்வுப் பணி நடைபெறுகிறது. இப்புதிய திட்டம், பெருகி வரும் மக்கள் தொகையின் குடிநீர் தேவையை நிறைவு படுத்த சிறுவாணி குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு பேருதவியாக இருக்கும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரு திட்டங்களுடன், அரசு மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன் உதவியால் தமிழ் நாடு குடிநீர் வாரியம், குடிநீர் விநியோகத் திட்டத்தை சிங்காநல்லூர், கணபதி, குமாரபாளையம் மற்றும் சேர்க்கப்பட்ட மாநகராட்சி பகுதிகளுக்கு செயல்படுத்துகிறது.



11. வடிகால் திட்டம்:

கோவை மாநகராட்சி பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் சிறுவாணித் திட்டம் முன்னோடியாகத் திகழ்கிறது. நகருக்கு புதை சாக்கடைத் திட்டம் தேவைப்படுகிறது. இதற்கு கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

கோயம்புத்தூருக்கு 1979-ஆம் ஆண்டில் கழிவு நீர் அகற்றும் சாக்கடைத் திட்டம் உருவாக்கப்பட்டது. அச்சமயத்தில் நகரின் வளர்ச்சி பெற்ற பகுதியானது, தற்போதைய நகர பரப்பளவில் 1/3 பங்காக இருந்தது. கழிவு நீரை வெளியேற்றும் திட்டம் 1954-ஆம் ஆண்டிலிருந்து, கோயம்புத்தூர் நகரின் பழைய பகுதிகளான சுக்கிரவாரப்பேட்டை, உப்பிலிபாளையம், அரசு மருத்துவமனைப் பகுதி, சிதம்பரம் பூங்கா பகுதி, ஆட்சியாளர் அலுவலகத்தின் சுற்றுப்புறப் பகுதி, பெரிய கடைவீதி முதலியவற்றில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஸ்தல நிர்ணய எல்லை மற்றும் திட்டத்தை அமுல் படுத்தப்படுதல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு இப்பகுதி பிரிவு 1 என்று அழைக்கப்பட்டு வருகிறது.

(2) நகரின் வேகமான தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு ரூ. 597.51 லட்ச செலவில் சாக்கடை நீரை அப்புறப்படுத்த மிகப்பெரிய சாக்கடை திட்டமொன்றினை கோவை மாநகராட்சியில் அமுல்படுத்த நிதி அனுமதித்துள்ளது. மற்றும் கோவை நகரில் பிரிவு 2, பிரிவு 3 ஆகிய பகுதிகளில் சாக்கடை நீர் அப்புறப்படுத்தப்படும் வசதிகளை அளிப்பதற்காக ஆண்டுதோறும் ரூ. 18.75 லட்சம் அனுமதித்துள்ளது.

(3) மேலும் கோவை நகரில் சாக்கடை திட்டத்தில் விடுபட்டுள்ள வடகோயம்புத்தூர், இராமலிங்கம் காலனி, முருகன் மில் காலனி, எஸ்.ஆர்.பி. நகர், தபால் மற்றும் தந்தி குடியிருப்புகள், லாலி சாலை, தடாகம் சாலை, இராபர்ட்சன் சாலை, இராயப்பபுரம், பொன்னையாராஜபுரம் மற்றும் செல்வபுரம் ஆகிய பகுதிகளில் சாக்கடை நீர் அப்புறப்படுத்தும் திட்டம் சம்பந்தமாக தேவையான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டத்தில் ஏற்பட்ட மாறுதல் மற்றும் விலைவாசிகள் ஏற்றம் ஆகியவைகளை முன்னிட்டு மேலே குறிப்பிட்ட திட்டத்தை ரூ. 750 லட்சங்கள் மதிப்பீட்டில் திருத்தியமைக்கப்பட்டுள்ளதற்கு அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது.

(4) தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்யப்படும் உத்தேச செலவினத்துடன் கூடுதலாக மாநகராட்சியால் நேரடியாக தற்போது இருக்கக்கூடிய சாக்கடை பராமரிப்பு, புதியதாக சாக்கடை அமைத்தல் ஆகியவற்றின் செலவுக்காக 1986-87 ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 16

பிரிவுகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளது.

முதற் பிரிவு :—எல்லா வேலைகளும் முடிக்கப்பட்டு, திட்டம் இயங்கி வருகிறது. இப்பிரிவில் சுக்கிரவாரப்பேட்டை, உப்பிலிபாளையம், அரசு மருத்துவமனைப் பகுதி, சிதம்பரம் பூங்கா பகுதி, ஆட்சியாளர் அலுவலகத்தைச் சுற்றியுள்ள பகுதி, பெரிய கடைவீதி ஆகியவைகள் அடங்கியுள்ளன.

2வது பிரிவு :—திட்டத்தின் ஒரு பகுதி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

3வது பிரிவு :—குழாய் அமைப்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இணைக்கப்பட்ட பகுதிகள் :

இணைக்கப்பட்ட பகுதிகளில் புதை சாக்கடைத் திட்டம் ஏதும் இல்லை. இப்பகுதிகளில் திறந்த வெளி சாக்கடைகள்கூட இல்லை திறந்தவெளி சாக்கடை வசதி செய்ய ரூ. 600 இலட்சத் திற்கு குறையாமல் செலவு ஏற்படலாம். நிதிப் பற்றாக்குறை காரணமாக, இணைக்கப்பட்ட பகுதிகளில் திறந்த வெளி சாக்கடை திட்டம் பல நிலைகளில் அமுல்படுத்த முடியும்.

(5) 1-7-1979-லிருந்து சிறுவாணித் திட்டத்திற்காக, அரசு மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஆகியவைகளிலிருந்து பெற்ற கடன்களுக்கு அசலும், வட்டியும் செலுத்தப்படவில்லை. குடிநீர் விநியோகம் மற்றும் சாக்கடை வசதி நிதிநிலை மிக மோசமாக உள்ளது. இதைப்போலவே பொதுவாக மாநகராட்சியின் குடிநீர் விநியோகம் மற்றும் சாக்கடை வசதி நிதி நிலையானது மிகவும் மோசமாக இருப்பதால் 1-1-1983 முதல் சாக்கடை வசதிக்காக பெறப்பட்ட கடன்கள் ஆண்டு தோறும் செலுத்தப்படவில்லை, இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வடிகால் வாரியம் புதிய திட்டங்களை மேற்கொண்டுள்ளது. திட்டங்கள் முழுமையாக மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட காலத்திலிருந்து ஓர் ஆண்டு காலம் வரை கடன் தவணைகளை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க அரசினை வேண்டப்பட்டுள்ளது. இதனால் மாநகராட்சி இத்திட்டத்தினால் விளையும் பயன்களை அனுப விக்கும் நிலை ஏற்படும். பராமரிப்புச் செலவுகள் மற்றும் திருத்தி யமைக்கப்பட்ட செலவு விகிதத்தின்படி எல்லாக் கடன்களையும் ஆண்டு தோறும் திருப்பிச் செலுத்தும் நிதிநிலைமை ஏற்படும்.



1986 ஏப்ரல் 16]

12. நகரமைப்பு.

மாநகராட்சி 1986-87-ம் ஆண்டில் பல்வேறு பொது நோக்க திட்டங்களுக்காக கீழ்க்கண்டவாறு நில ஆர்ஜிதம் செய்ய உத் தேசித்துள்ளது.

| | |
|---|---|
| 1. பள்ளிகள் .. .. .. | 2 இனங்கள். |
| 2. சாலை மற்றும் சாலை அகலப் படுத்துதல். | 8 இனங்கள். |
| 3. வார்டு அலுவலகங்கள் .. .. | 1 இனம். |
| 4. இடுகாடு .. .. .. | 4 இனங்கள் |
| 5. உரம் தயாரிக்குமிடம் .. .. | 1 இனம். |
| 6. தினசரி மார்க்கட் .. .. .. | 2 இனங்கள் |
| 7. பொதுக் கழிப்பிடம் .. .. | 1 இனம். |
| 8. சாக்கடைகள் .. .. .. | 1 இனம். |
| மொத்தம் .. .. | 20 இனங்கள். |

பொது மக்களுக்கு முக்கியமான திட்டங்களாக இருந்த போதிலும் மாநகராட்சியின் மிக மோசமான நிதிநிலை காரண மாக அவைகளை நிறைவேற்ற முடிவதில்லை. இருப்பினும் நிதி நிலையை அனுசரித்து இத்திட்டங்கள் அமுல்படுத்தப்படும்.

நகர அமைப்புத் திட்டம் தொடர்பான செயல்கள் உள்ளூர் நகர அமைப்பு அதிகாரியால் கவனிக்கப்படுகிறது.

13. தெரு விளக்குகள் :

1. பழைய நகரப்பகுதி

மாநகராட்சி கீழ்க்கண்டவாறு 8,546 தெரு விளக்குகளை தொடர்ந்து பராமரித்து வருகிறது.

| | |
|---|---|
| 1. சோடியம் வேப்பர் விளக்கு .. | 1,031 |
| 2. மெர்க்குரி விளக்கு .. .. | 1,025 |
| 3. டியூப் லைட் (குழல் விளக்கு) .. | 6,361 |
| 4. இதரவகை விளக்குகள் .. | 129 |
| மொத்தம் .. .. | 8,546 |

[1986 ஏப்ரல் 16

[1986—87 ஆம் ஆண்டில் நகரின் முக்கிய பகுதிகளில் அதிகப் படியான விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985—86-ல் அமைக்க உத்தேசிக்கப்பட்ட 20 டிரான்ஸ்பார்மர்கள், முழுவதும் அமைக்க முடியவில்லை. இவைகள் 1986-87-ல் அமைக்கப்படும்.

1986—87 ஆம் ஆண்டில் மாநகராட்சி பகுதி முழுவதிலும் உள்ள தெரு விளக்குகளை பராமரிப்பதற்கு பொது வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இணைக்கப்பட்ட பகுதிகள் :

இம்மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதிகளிலுள்ள தெரு விளக்குகள் தமிழ்நாடு மின் வாரியத்தால் பராமரிக்கப் பட்டு வருகிறது. இதில் 5,058 தெருவிளக்குகள் உள்ளன. இதில் 1985—86-ல் ஒதுக்கப்பட்ட 396 விளக்குகள் அடங்கும்.

விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | சோடியம் வேப்பர் விளக்குகள் .. | 6 |
| 2. | மெர்க்குரி விளக்குகள் .. .. | 57 |
| 3. | டியூப்லைட் (குழல் விளக்கு) .. | 4,995 |
| | மொத்தம் .. .. | 5,058 |

நடப்பு ஆண்டில் கூடுதலாக 1,000 விளக்குகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

14. பொதுச் சுகாதாரம் :

மாநகராட்சியின் வருவாயில் பெரும் பகுதி பொதுச் சுகா தாரத்திற்கும் துப்புரவுப் பணிக்கும் செலவு செய்யப்படுகிறது. இதற்காக 1986—87 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ரூ. 328.54 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுச் சுகா தார துறையில், மருத்துவ அதிகாரிகள், மேற்பார்வைப் பணி யாளர்கள், மற்றும் 1,708 துப்புரவுப் பணியாளர்கள் உட்பட 2,026 பணியாளர்கள் உள்ளனர். இருப்பி னும், நகரத்தின் மிக அதிகமான மக்கள் தொகை மற்றும் அதிக பரப்பளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது நகரத்தை சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக் கொள்ள தற்போதுள்ள பணியாட்களின் எண்ணிக்கை போது மானதாக இல்லை. மாநகராட்சியின் மிகக் குறைந்த நிதி நிலை காரணமாக அதிகப்படியான நிதி இதற்கு ஒதுக்கப்பட முடிவதில்லை.



1986 ஏப்ரல் 16]

கொசுத் தொல்லையை ஒழிப்பதற்காக் ரூபாய் 16.70 இலட் சம் செலவில் கொசு ஒழிப்புத் திட்டத்தைத் திருத்தி அமைக்க மக்கள் நல்வாழ்வு மற்றும் தடுப்பு மருந்துகள் இயக்குநர் மூல மாக அரசிடம் செயல் திட்டங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

முன்னர் கண்ட பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 328.54 இலட்சத்துடன், மேலும் துப்புரவுப் பணியாளர் குடியிருப்புகள், கழிவிட வசதிகள் நவீனக் கழிவிடங்கள் கட்டுதல், பொதுச் சுகா தாரம் மற்றும் மருந்தக கட்டிடங்கள் பராமரிப்பு ஆகியவை களுக்காக ரூ. 15 இலட்சம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

1986—87-ல் பாப்பநாயக்கன்பாளையத்தில் ரூ. 16.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 'மின் தகனம்' (Electrical Crematorium) ஒன்று நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மின் தகனத்திற்கான பர்னர் (Burner) மற்ற கருவிகள் அனைத்தும் இலவசமாக வழங்க, நகரில் உள்ள அனைத்து சுழற் சங்கங்கள் (Rotary clubs) அன்புடன் இசைந்துள் ளனர். கட்டிடத்தின் கட்டுமானச் செலவு மட்டும் ரூ. 5.90 இலட்சம் ஆகும். இது மாநகராட்சி நிதியில் இருந்து செலவிடப்படும்.

மேலும் மாநிலத்திட்டம் பகுதி 2-ன் கீழ், 1985—86 ஆம் ஆண்டில் நொய்யல் ஆற்றங்கரையில் மின் தகனம் அமைக்க அரசு கடனாக ரூ. 10.00 இலட்சம் வழங்க அனுமதித்துள்ளது.

15. இதர அம்சங்கள் :

மாநகராட்சி, மறைமுக வரிகளின் மூலமாக தன் நிதி நிலை யைப் பெருக்கிக்கொள்ள, கீழ்க்கண்ட வருவாய்த் திட்டங் களை 1986—87 ஆம் ஆண்டில் செயல்படுத்த தன் சொந்த நிதியைப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

| | | |
|---|---|---|
| (1) | காந்திபுரம் நகரப் பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடம், கடைகள் அமைத்தல். | ரூ. 22.50 இலட்சம். |
| (2) | சிங்காநல்லூரில் தினசரி மார்க்கட் அமைத்தல். | ரூ. 3.20 இலட்சம். |

[1986 ஏப்ரல் 1(

(3) வரதராசபுரத்தில் திருமண மண்டபம் அமைத்தல். ரூ. 3.00 இலட்சம்.

(4) ஒப்பணக்கார வீதியில் கடை மையம் அமைத்தல். ரூ. 3.00 இலட்சம்.

மேலும் ரூ. 6.50 இலட்சம் செலவில் மேட்டுப்பாளையம் ரோடுக்கும் (மாநிலப் பெருவழி) சங்கனூர் பள்ளத்திற்கு அருகில் உள்ள கணபதி சங்கனூர் ரோடுக்கும் இடையில் ஓர் இணைப்பு பாதை அமைப்பதற்கும், ஒரு லெவல் கிராசிங் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை-600 008.
136473
V211,31 N86
N86;22-2,31

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.